# மார்க்கம்

## சமூக பொருளியல் பண்பாட்டு ஆய்வுச் சஞ்சிகை

### * அபிவிருத்தியும் சமூக நலனும் *


* இலங்கையில் சமூக நலனும் வளர்ச்சியும்
  எஸ். ஆர். ஒஸ்மானி

* ஆபிரிக்காவில் வளர்ச்சி
  ஜெவ்றி சக்ஸ்

* ஆசியாவின் பலசாலிகள்

* விஞ்ஞான சமூகவியல்
  சோ. சந்திரசேகரன்

* உலக மீன்பிடி : பரம்பலும், பாங்குகளும்
  எஸ். அன்ரனி நோபேட்

* தலைமைத்துவமும் தந்திரோபாயச் சிந்தனையும்
  நித்தியலக்ஷ்மி சண்முகம்

* அரசியல் பன்மை வாதம்
  அ. வெ. மணிவாசகர்

* யாழ்ப்பாண கலை, கைவினை
  ஏ. என். கிருஷ்ணவேணி



மார்கா நிறுவக வெளியீடு

மலர் 2, இதழ் - 4, 1996

# மார்க்கம்

சமூக பொருளியல் பண்பாட்டு ஆய்வுச் சஞ்சிகை

மலர்- 2, இதழ் 4, 1996

மார்கா ஆய்வு நிறுவகத்தின் ஆய்வுச் சஞ்சிகையான இது மூலச் சொல்லின் தமிழ் வடிவமாக "**மார்க்கம்**" எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. மார்க்கம் என்பது "**வழி**", "**பாதை**" யைச் சுட்டுவதாகும். "**மார்க**" என்னும் வடமொழியிற் சுட்டப்பெறும் பன்மைப் பொருள் "மார்க்கம்" என்னும் தமிழ் வடிவத்தினுள் தொக்கு நிற்கும். மார்க்கம் பால் பகா அஃறிணைப் பெயராகும். எனவே இங்கு நாம் ஒரு "**வழியை**" மாத்திரம் சுட்டாது உண்மையின் தேடலுக்கான பல்வேறு மார்க்கங்களையே சுட்டுகின்றோம். இந்தியக் கலை மரபில் "**மார்க்க**" என்பது செந்நெறிக் கலைகளைச் சுட்டும் என்பதையும் நாம் நாட்டிய சாஸ்திரம், சிலப்பதிகார உரைகள் வழியாக அறிகிறோம். மார்க்கத்தின் உள்ளடக்கம் இந்தச் செந்நெறிப்பாட்டை உறுதி செய்வதாக இருத்தல் வேண்டும். இது கட்டுரையாளர்களுக்கான கடமையாகவும் வாசகரின் உரிமையாகவும் அமைதல் வேண்டுமென்பது எமது அவா.

கட்டுரைகளில் காணப்படும் கருத்துக்கள் மார்கா நிறுவகத்தின் கருத்துக்கள் அல்ல,
அவை கட்டுரையாசிரியர்களின் கருத்துக்களே.

## வாசகர்களுடன் சில வார்த்தைகள்.....!

மார்க்கம் சஞ்சிகையின் முக்கிய நோக்கம் சமூக, அறிவியல் துறை சார்ந்த ஆய்வுரீதியான கட்டுரைகளைத் தமிழ் மொழியில் வழங்கி தமிழ் பேசும் மாணவர்களின் அறிவுசார் விருத்திக்கு உதவுவதே என்று பல தடவைகள் அழுத்திக் கூறி வந்துள்ளோம். நடைமுறையில் காணப்படும் பொருளாதார, அரசியல் ரீதியான முக்கிய விடயங்களைப் பற்றிய கட்டுரைகளையும் அவ்வப்போது வெளியிட்டு வருகின்றோம். எண்ணிக்கையினடிப்படையில் நோக்கின் இது ஏழாவது இதழாக மிளிர்கின்றதுடன் 1996 ஆம் ஆண்டுக்கான இறுதி இதழாகவும் விளங்குகின்றது. 1997 இல் மார்கா நிறுவகத்தின் புதிய நிறைவேற்றுப் பணிப்பாளராக கலாநிதி உஸ்வத்த – ஆராய்ச்சி பதவி ஏற்றுள்ளார். சர்வதேச ரீதியாக ஏற்பட்டு வரும் பொருளாதார, அரசியல், தொழில்நுட்ப மாற்றங்களை நமது மாணவர்களிடையே பரப்புவது அவசியம் என்பதில் உறுதியான நம்பிக்கை கொண்டவர். இதனால் இனி வரும் காலத்தில் மார்க்கம் புதிய பொலிவைப் பெறும் என எதிர்பார்க்கலாம்.

இவ்விதழில் பிரதான கட்டுரையாக எஸ்.ஆர். ஒஸ்மானி என்பவர் எழுதிய இலங்கையில் நலனியல் வாதத்திற்கும் வளர்ச்சிக்குமிடையில் முரண்பாடு தொடர்பான ஆய்வுக் கட்டுரை ஒன்று இடம்பெறுகின்றது. சமூகத் துறைகளில் தலையீடுகளுடன் கூடிய இலங்கையின் நீண்டகால அனுபவத்தை இக் கட்டுரை மீள் மதிப்பீடு செய்கின்றது. இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட சமூக நலன் தொடர்பான உபாயங்கள் பலரினால் வரவேற்கப்பட்டாலும் பல குறைபாடுகள் அண்மைக் காலங்களில் சுட்டிக் காட்டப்பட்டன. இவற்றுக்குப் பயன்படுத்தப்பட்ட வளங்களை வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கான முதலீடு நோக்கித் திசைதிருப்பியிருந்தால் இலங்கை மேன் நிலையை அடைந்திருக்கும் எனக் கூறப்பட்டது. இத்தகைய முரண்பாடான போக்கினை இக் கட்டுரை திறனாய்வு செய்கின்றது.

அடுத்த இரு கட்டுரைகள் ஆசியா, ஆபிரிக்கா தொடர்பான பொருளாதார மாற்றங்களை விபரிக்கின்றது. இவையிரண்டும் மொழி பெயர்ப்புக் கட்டுரைகளாக அமைந்துள்ளன. ஆபிரிக்க நாடுகளின் பொருளாதார வளர்ச்சியை எவ்வாறு ஒரு ஸ்திரமான முறையில் முன்னெடுக்கலாம் என்பது பற்றியும் அங்கு நிலவிய குறைபாடுகளையும் ஜெவ்றி சக்ஸ் என்பவர் மிக ஆழமாக ஆராய்கிறார். உலகப் பொருளாதாரத்தை ஆக்கிரமித்து நிற்கும் சில ஆசிய நாடுகளின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட அபரிதமான வளர்ச்சி பற்றி விபரிக்கும் கட்டுரை மாணவர்களுக்கு மிகப் பயனுடையது. விஞ்ஞானத்தின் சமூகவியல் பற்றி முக்கியமான ஒரு விடயத்தினைப் பற்றிய பேராசிரியர் சந்திரசேகரனின் கட்டுரை விஞ்ஞானமும் சமூகமும் தொடர்பான அறியப்படாத அரிய பல கருத்துக்களை முன்வைக்கின்றது. தலைமைத்துவமும் தந்திரோபாயச் சிந்தனையும் என்ற கட்டுரையில் தந்திரோபாய முகாமைத்துவச் செயன்முறைகள், தலைமைத்துவத்தின் முக்கியத்துவம் பற்றிய பிரதான அம்சங்களை நித்தியலக்ஷ்மி சண்முகம் முன்வைக்கிறார். அரசியல் பன்மைவாதம், உலக மீன்பிடி, யாழ்ப்பாண கலை, கைவினை பற்றிய கட்டுரைகளும் மாணவர்களுக்குப் பயன்தரக் கூடியவையாக இருக்கின்றன.

எனவே இத்தகைய பல்வேறு விடயங்களைச் சார்ந்த கட்டுரைகள் வாசகர்களின் அறிவுசார் விருத்தியில் சிறந்த பங்களிப்பைச் செய்யும் என எதிர்பார்க்கின்றோம். மார்க்கம் தொடர்பான உங்கள் அபிப்பிராயங்களை வரவேற்கின்றோம். அடுத்த இதழ் "காலநிலை மாற்றம்" பற்றிய தொனிப்பொருளைக் கொண்டதாக வெளிவரும்.

ஆசிரியர்

# MARKAM

A Journal for the study of Society, Economy and Culture

Vol. 2, No. 4, 1996

ADVISORY COMMITTEE

Dr. Godfrey Gunatilleke
Dr. Uswatte - Aratchi
Mr. Newton Fernando
Prof. K. Sivathamby
Prof. Sandarasegaran

EDITOR

S. Antony Norbert

TYPE SETTING

Unique Graphics
2/3, Plaza Complex
33, Galle Road
Colombo 6.

PRINTING

Unie Arts (PVT) Ltd.
48 B, Bloemendhal Road
Colombo 13.

PUBLICATION

Marga Institute
(Sri Lanka Center for Development Studies)
93/10 Dutugemunu Road
Colombo 6.

Tel : 828544 / 5

## Contents

| | | Page |
|---|---|---|
| ★ | Is there a conflict Between Growth and Welfarism? The Significance of the Sri Lanka Debate. *S.R. Osmani* | 4 |
| ★ | Growth in Africa *Jeffrey Sachs* | 22 |
| ★ | Asian Giants in world Economy | 26 |
| ★ | Science and Society : Some Aspects of Sociology of Science. *S.Sandarasegaran* | 28 |
| ★ | World Fishing : Distribution and Production Trends. *S. Antony Norbert* | 33 |
| ★ | Leadership and Strategic Thinking *Nithiyaluxmy Shanmugam* | 38 |
| ★ | Political Pluralism *A.V. Manivasagar* | 47 |
| ★ | An Introductory study on Arts and Crafts of Jaffna. *A. N. Krishnaveny* | 50 |

# மார்க்கம்

சமூக பொருளியல் பண்பாட்டு ஆய்வுச் சஞ்சிகை

மலர் 2, இதழ் - 4, 1996

**ஆலோசனைக் குழு**

கலாநிதி கொட்பிரே குணதிலக
கலாநிதி உஸ்வத்த - ஆராய்ச்சி
திரு. நியூட்டன் பெர்னாண்டோ
பேராசிரியர் கா. சிவத்தம்பி
பேராசிரியர் எஸ். சந்திரசேகரன்

**ஆசிரியர்**

எஸ். அன்ரனி நோபேட்

**கணனி அச்சமைப்பு**

யுனிக் கிராபிக்ஸ்
2/3 பிளாசா கட்டிடம்
33, காலி வீதி,
கொழும்பு - 6

**அச்சிடுதல்**

யுனி ஆர்ட்ஸ் (பிரைவேட்) லிமிடெட்
48 பி, புளுமெண்டால் வீதி,
கொழும்பு - 13

**வெளியீடு**

மார்கா நிறுவகம்
93/10 துட்டகைமுனு வீதி
கொழும்பு — 6

Tel : 828544 / 5

## பொருளடக்கம்

★ நலனியல் வாதத்திற்கும் வளர்ச்சிக்குமிடையில் முரண்பாடு ஒன்று உள்ளதா? இலங்கை விவாதத்தின் முக்கியத்துவம். — 4
எஸ்.ஆர். ஒஸ்மானி

★ ஆபிரிக்காவின் வளர்ச்சி — 22
ஜெவ்றி சக்ஸ்

★ உலகப் பொருளாதாரத்தை ஆக்கிரமித்த ஆசியாவின் பலசாலிகள் — 26

★ விஞ்ஞானமும் சமூகமும்: சில விஞ்ஞான சமூகவியல் கருத்துக்கள் — 28
சோ. சந்திரசேகரன்

★ உலக மீன்பிடி: பரம்பலும் உற்பத்திப் பாங்குகளும் — 33
எஸ். அன்ரனி நோபேட்

★ தலைமைத்துவமும், தந்திரோபாயச் சிந்தனையும் — 38
நித்தியலக்ஷ்மி சண்முகம்

★ அரசியல் பன்மை வாதம் — 47
அ.வெ. மணிவாசகர்

★ யாழ்ப்பாணத்துக் கலை, கைவினை பற்றிய ஓர் அறிமுக ஆய்வு — 50
ஏ.என். கிருஷ்ணவேணி

# நலனியல் வாதத்திற்கும் வளர்ச்சிக்கும் இடையில் முரண்பாடு ஒன்று உள்ளதா? இலங்கை விவாதத்தின் முக்கியத்துவம்

எஸ். ஆர். ஒஸ்மானி

நலனியல் வாதத்திற்கும் வளர்ச்சிக்குமிடையில் காணப்படும் தொடர்புகள் சார்பான சில பொதுவான பாடங்களை இக் கட்டுரை வெளிக் கொணர முயற்சிக்கின்றது. சமூகத் துறைகளில் தலையீடுகளுடன் கூடிய நீண்டகால இலங்கையின் அனுபவத்தை இக்கட்டுரை மீள்மதிப்பீடு செய்கின்றது. இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட நலனியல் உபாயங்கள் பலரினால் புகழ்ந்துரைக்கப்பட்டாலும் அண்மைக் காலங்களில் பல குறைபாடுகள் சுட்டிக் காட்டப்பட்டன. பொது நலன் தொடர்பான விடயங்களுக்கு திசைதிருப்பப்பட்ட வளங்களை வளர்ச்சிக்கான முதலீடு நோக்கித் திருப்பியிருந்தால் இலங்கை மேன்நிலையை அடைந்திருக்கும் என கூறப்பட்டது. இவர்கள் மேலும் குறிப்பிடுகையில் தலையீடுகள் (interventions) பயனுறுதி வாய்ந்ததாகக் காணப்படவில்லை. அத்துடன் வளர்ச்சியுடன் முரண்பாடான போக்கினையே நலனியல் வாதம் (welfarism) கொண்டிருந்தது. இக்கட்டுரை இத்தகைய திறனாய்வுகளை விவாதிப்பதுடன் இலங்கை அனுபவம் முரண்பாட்டிற்கு ஒரு பாடமாக அமைவது மட்டுமன்றி வளர்ச்சிக்கும், நலனியல் வாதத்திற்குமிடையிலான ஓர் இசைவாக்கத்திற்கும் சிறந்த பாடமாக அமைகின்றது என்பதையும் விவாதிக்கின்றது.

## 1. அறிமுகம்

1960களின் இறுதியில் இது வரையும் வளர்ச்சிக்குரிய உபாயங்களாக இருந்தவை, தமது முக்கியத்துவத்தை இழந்த போது அடிப்படை தேவைகளுக்கான உபாயம், மீள்பரம்பலுடன் கூடிய வளர்ச்சி உபாயம், மிக அண்மையில் முன் வைக்கப்படும் சிந்தனையான "உதவியுடன் கூடிய பாதுகாப்பு உபாயம்" (strategy of support- led security) (Dreze and sen, 1989), மானிட விருத்தி உபாயம் (UNDP,1991) போன்ற பல புதிய சிந்தனைகள் தோற்றம் பெற்றன. இச் சிந்தனைகள் யாவும் அரசின் நலனியற் (welfarist) தலையீடுகளை ஆதரிக்கின்றன. முக்கியமாக மக்களுக்கான ஆரம்ப சுகாதாரநலன், அடிப்படைக் கல்வி, உணவு, உறையுள் போன்ற இலவச அல்லது மானியமுறையிலான சலுகைகளின் வடிவில் இவற்றை வழங்க விரும்புகின்றன. இந்த ஒரு விடயம் இச் சிந்தனைகளில் பொதுவான அம்சமாக இருக்கின்றது.

புதிய உபாயங்களுக்குச் சார்பாக முன் வைக்கப்படும் உபாயங்களில் இரண்டு மிக முக்கியமானவை (1) நலனியல் தலையீடுகள் (welfarist interventions) மிகக்குறைந்த காலத்தில் மக்களின் வாழக்கைத் தரத்தினை மேம்படுத்தும். (2) வாழ்க்கைத்தரத்தில் விரைவான நன்மைகளை அடைந்து கொள்ளமுடியும். பொதுத்துறைத் தலையீடுகளின் மட்டமும், இயல்பும் மிகக் கவனமாகத் தெரிவு செய்யப்படுமிடத்து இவ்விடயத்தில் சிறிய அல்லது வளர்ச்சி இழப்பு காணப்பட மாட்டாது. இவையாவும் நலனியல் வழிகளை மிக உறுதியாக முன்னெடுக்க உதவும். வறுமை நிலையில் உள்ள மக்களுக்கு தலையீடுகள் விரைவான புனர்வாழ்வினைக் கொண்டுவருமாக இருந்தால், வளர்ச்சியைப் பலியிடாமல் இதனை மேற்கொள்ள முடியுமாக இருந்தால், இவ் உபாயத்துக்கு எதிராக என்ன முறையைத் தெரிவிக்க முடியும். ஐயுறவு வாதிகள் இதற்கு அதிக ஆதாரங்களைக் காட்ட முடியாது. இருப்பினும் கோட்பாடு மிகச் சிறந்தது. ஆனால் நலனியல் தலையீடுகளினூடாக வாழ்க்கைத் தரத்தில் விரைவான நன்மைகளை உருவாக்கிய நாடுகளின் உண்மையான அனுபவங்கள் ஏதும் உள்ளனவா? வளர்ச்சிக்குரிய உபாயம் தத்துவரீதியாகச் சிறந்ததாகக் காணப்படுகின்றது. வறுமையைக் குறைத்தல் தோல்வியடைந்ததின் காரணமாக தமது முக்கியத்துவத்தை இழந்தது. இதனால் மாற்று உபாயத்துக்கான சான்றுகள் எவை?

ஆரம்பகாலங்களைப் போலன்றி, ஒவ்வொரு நாடும் ஒன்றுக்குப் பின் ஒன்றாகத் திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சிப் பாதையில் அடியெடுத்து வைத்த பொழுது ஒருசில குறிப்பிட்ட நாடுகள் நலனியல்பாதையில் செல்ல முயற்சித்தன. உறுதியான ஒரு தீர்மானத்தைக் காட்டுவதற்கு மாதிரி மிகச் சிறியதாக உள்ளது. ஆனால் அதனிலும் பார்க்க பிரச்சினை மிக ஆழமானது. நலனியற் பாதையில் செல்ல முயற்சித்த அந்நாடுகளில் பெறப்பட்ட பாடங்களும் தெளிவற்றவையாகவே உள்ளன. இவ்விடயம் தொடர்பாக அதிகம் கலந்துரையாடப்பட்ட நாடு இலங்கையே. மிகக் கவனமாக நலனியற் பாதையைத் தெரிவுசெய்ததென்பதற்கு சிறந்த உதாரணமாக இலங்கை விளங்கினாலும் ஒரு சிலர் இடர்தரும் பாடமாகவே இதனைக் காண்கின்றனர்.

இக்கட்டுரையின் நோக்கம் இலங்கையின் அனுபவம் பற்றிய ஒரு புதிய பார்வையை வழங்குவதே. இம் மீள் மதிப்பீடு, இலங்கையின் நலனியல் உபாயம் ஒரு வெற்றிகரமான அம்சம் என்ற தீர்மானத்துக்கு இட்டுச் செல்லக் கூடும். இவ் வெற்றியானது முன்பு கூறப்பட்ட இரு அம்சங்களின் அடிப்படையில் வரையறை செய்யப்படும். அதாவது மிகக் குறுகிய காலத்தில், மிக விரைவாக வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான திறமை, மற்றையது நீண்டகால வளர்ச்சியைப் பலியிடாமலும் இதனைச் செய்ய வேண்டும்.

இலங்கையின் அனுபவம் பற்றிய கருத்து முரண்பாடுகள் பற்றிய சுருக்கமான பின்னணியும் இக்கட்டுரையில் தரப்படுகின்றதுடன் மூன்று வெவ்வேறுபட்ட வாதங்கள் ஆய்வுக்கு எடுக்கப்படுகிறது. இவ்வாதங்களைப் பின்வருமாறு சுருக்கமாக விபரிக்கலாம். அவை:

(1) **பொருத்தமற்ற பொது நலன் அளவீட்டுமுறை வாதம்** இவ் வாதத்தின் படி இலங்கை மக்களினால் அனுபவிக்கப்பெற்ற உயர் வாழ்க்கைத் தரங்களில் மிகச் சிறிய பகுதிக்கே நலனியல் முறைகள் பொறுப்பாக அமைந்தது.

(2) **குறுங்கால முன்னுரிமை வாதம் :** நலன் அளவுமுறைகளினால் எத்தகைய நன்மைகள் பெறப்பட்டாலும், மிகக் குறுகிய காலத்தில் வளர்ச்சிக்காக வளங்களை மீள் ஒதுக்கீடு செய்வதன் மூலம் அதிக நன்மைகளைப் பெறமுடியும்.

(3) **நீண்டகால முன்னுரிமை வாதம் :** குறுங்காலத்தில் எது நிகழ்ந்தாலும் இலங்கையின் நீண்டகால வளர்ச்சி செழிப்பு அந்நாட்டின் நலனியல் கொள்கைகளினால் மிகக் கடுமையாகப் பாதிக்கப்படும். இதனால் நீண்டகால நோக்கில் வாழ்க்கைத் தரத்தின் மீதான பாதிப்பு மிக மோசமாக இருக்கும்.

இது தொடர்பான ஒவ்வொரு வாதத்தினையும் இங்கு கவனத்தில் எடுத்து வளர்ச்சிக்கும் நலனியல் வாதத்திற்குமிடையிலான இணைப்பில் காணப்படுவதுபோன்று முரண்பாட்டில் முக்கியமான பாடமாக இலங்கையின் அனுபவம் காணப்படவில்லை என்ற நோக்கு முன்வைக்கப்படுகின்றது.

## 2. இலங்கை: தனியான ஒரு புறநிலை உதாரணம்

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் (UNDP) மானிட அபிவிருத்தி அறிக்கையினால் ஒவ்வொரு வருடமும் மானிட அபிவிருத்திச் சுட்டெண் கணிப்பிடப்படுகின்றதுடன் இது சுருக்கமாக HDI என அழைக்கப்படும். பல்வேறு நாடுகளிலும் வாழ்கின்ற மக்களின் வாழ்க்கைத் தரத்தை அளவிடுவதே இதன் நோக்கமாகும். இச் சுட்டெண் உண்மையில் தலா வருமானம் மற்றும் கல்வியறிவு, வாழ்வு எதிர்பார்ப்புக் காலம் போன்ற அடிப்படையான சில தகுதிகளின் சராசரி மதிப்பீட்டுப் பெறுமதியாகவே காணப்படும். 1991இல் வெளியான இதன் அறிக்கையில் உலகம் முழுவதிலும்இருந்து 160 நாடுகள் தலாவருமானம் மற்றும் HDI சுட்டெண் ஆகிய இரண்டினடிப்படையில் வரிசைப் படுத்தப்பட்டதுடன் இரு வரிசைகளுக்குமிடையிலான வேறுபாடும் ஒவ்வொரு நாட்டுக்கும் கணிப்பிடப்பட்டது. இதில் HDI வரிசைக்கும், வருமான வரிசைக்குமிடையிலான வேறுபாட்டில் இரண்டாவது பாரிய வேறுபாட்டை இலங்கை கொண்டிருந்தது. வருமானத்தினைத் தொடர்புபடுத்தும்போது வாழ்க்கைத்தரம் தொடர்பான இலங்கையின் முன்னேற்றம் எல்லா நாடுகளுடனும் ஒப்பிடும் போது சீனா ஒன்றைத் தவிர மிக முன்னேற்றகரமாக இருந்தது.

இலங்கையின் வாழ்கைத்தரம் பற்றிய விதிவிலக்கான அம்சம் தற்பொழுது கொஞ்சக் காலமாக உலக வங்கி (1978), Fields (1980), Isenman (1980), Sen (1981) ஆகியோரின் ஆய்வுகளின் ஊடாகப் பிரபல்யமாகி வருகிறது. Isenman (1980) என்பவர் 1975ஆம் ஆண்டுக்கான பல்வேறு நாடுகளின் தலாவருமானத்துடன் வாழ்க்கைத்தரத்தின் பல்வேறு அளவீடுகளை தொடர்படுத்தி நாடுகளுக்கிடையிலான பின்னூட்டு ஆய்வினை மேற்கொண்டார். நாடுகளுக்கிடையிலான இத் தொடர்புகள், தலாவருமானத்தின் அடிப்படையில் இலங்கையின் வாழ்க்கைத் தரத்தை எதிர்வு கூறுவதற்குப் பயன்படுத்துவதாக இருந்தால் எதிர்வு கூறப்படும் பெறுமதி, அவதானிக்கப்பட்ட பெறுமதியிலும் பார்க்க மிகக் குறைவாக இருக்க வேண்டும். இதனை வேறுவகையில் கூறுவதாக இருந்தால் இலங்கையின் வாழ்க்கைத் தரம் அதற்கு ஒத்த வருமான மட்டங்களைக் கொண்டிருக்கின்ற ஏனைய நாடுகளில் காணப்படுவதிலும் பார்க்க உயர்வாக உள்ளது.

இதனால்தான் வருமானம் மற்றும் வாழ்க்கைத்தர உயர்வுகளைப் பொறுத்தவரையில் நாடுகளுக்கிடையிலான தொடர்பில் இலங்கை தனியான, நேர் கணியமான புறநிலையான, தனித்த ஒரு இடத்தினை (outlier) வகிக்கின்றதென்பதைப் பொதுவாகக் கூறலாம். சர்வதேசரீதியான ஒப்பீட்டுப் புள்ளிவிபரங்களில் பல்வேறு குறைபாடுகள் காணப்படினும் இலங்கையின் தனியான புறநிலை அந்தஸ்து பற்றிய புள்ளிவிபர உண்மைகள் திருப்தியானவை. இங்கு கேள்விக்குரிய விடயம் இவ் உண்மையை விபரணப்படுத்துதல், விசேடமாக பொருளாதாரக் கொள்கையின் நடத்தையிலிருந்து பாடத்தை வெளிக்கொணர்தல் பற்றியதாகவே இருந்தது.

உணவு, சுகாதாரம், கல்வி போன்ற துறைகளில் நேரடித் தலையீடுகள் பற்றிய இலங்கையின் நீண்டகால வரலாறே இத்தகைய தனியான அந்தஸ்தை இலங்கை அடைவதற்குப் பங்களித்தது என ஆரம்பகால ஆய்வாளர் குறிப்பிட்டிருந்தனர். இரண்டாம் உலக யுத்தத்திலிருந்து 1970களின் இறுதிவரைக்கும் இலங்கையின் முழுச் சனத்தொகைக்கும் அரசாங்கத்தினால் மானிய முறையிலான உணவுப் பங்கீட்டு முறை அளிக்கப்பட்டு வந்தது. 1935இன் மலேரியா நோய் தாக்கத்தின் பின் மிக ஆரம்ப காலத்திலேயே அரசு சுகாதார நலத்துறைகளில் நேரடித் தலையீட்டைக் கொண்டிருந்தது. 1948இன் சுதந்திரத்திலிருந்து இலவசமான ஆரம்ப சுகாதார சேவை, விரிவான கிராமிய மருத்துவசேவை நிலையங்களினூடாக யாவருக்கும் வழங்கப்பட்டு வந்தது. கல்வியில் ஏற்பட்ட தலையீடுகள் குறிப்பாக இந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே ஏற்பட்டன. இதனது நோக்கம் நாடுபூராகவும் விரிவாக்கப்பட்டதுடன் சுதந்திரத்தின் பின் இலவசக் கல்வி, பல்கலைக்கழக கல்வியின் உயர் மட்டம் வரை யாவருக்கும் உரியதாக மாற்றப்பட்டது.

சுதந்திரத்தின் பின் இம் மூன்று துறைகளிலும் அரசாங்கத்தின் செலவீடு குறிப்பிடத்தக்க முறையில் அதிகரித்தது. கொரியச் செழிப்பினால் நாட்டின் முன்னணி ஏற்றுமதிப் பயிர்களிலிருந்து பெறப்பட்ட வரி வருமானம் அதிகரித்தமையே இதற்குக் காரணமாக இருந்தது. 1950களின் மத்தியிலிருந்து 1970களின் இறுதிவரை மொத்த பொது நலச் செலவீடு, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8 இலிருந்து 12 சத வீதமாக அதிகரித்திருந்தது. மொத்த அரசாங்கச் செலவீட்டில் இது 30-40 சத வீதமாகக் காணப்பட்டது. சென், ஐசென்மன் மற்றும் ஏனையோரும் விவாதிக்கையில், இலங்கையின் இத்தகைய நீண்ட வரலாறுதான் குறிப்பாக சமூகத் துறைகளில் பரந்தளவான வீச்சுக் கொண்ட தலையீடுகளின் காரணமாகவே இலங்கை மிக உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை அடைந்து கொள்ளக் காரணமாக இருந்தது எனக் குறிப்பிடுகின்றனர். இலங்கையை ஒத்த அல்லது அதனிலும் கூடிய உயர் வருமான மட்டங்களைக் கொண்ட வளர்முக

நாடுகளிலும் பார்க்க உயர்வாக இருந்தமைக்கு இதுவே காரணம் எனக் குறிப்பிட்டனர்.

சென் என்பவரின் அவதானிப்பின்படி இலங்கை தவிர, ஏனைய பலநாடுகளும் சீனா, கியூபா, வியட்னாம், சிலி, கோஸ்ராரிக்கா இன்னும் சில நாடுகள் இத்தகைய தனித்தன்மைக்கான அம்சங்களைக் கொண்டிருக்கின்றதுடன், (அவர்களது வருமான மட்டம் குறித்து எதிர்பார்க்கப்படுவதற்கு மேலாக வாழ்க்கைத் தரங்களைக் கொண்டுள்ளன) சமூகத் துறைகளில் நேரடித் தலையீடுகளிலும் மிக ஆர்வமாக உள்ளன. திரஸ்சி மற்றும் சென் (1989) ஆகியோரினால் விருத்தி செய்யப்பட்ட வரையறையின்படி, இவ் எல்லா நாடுகளும் உதவியுடன் கூடிய பாதுகாப்பு (growth- led security) உபாயத்தைப் பின்பற்றுகின்றன. இதற்கு எதிரானதாக ஏனைய சில நாடுகளினால் பல்வேறுமட்டங்களில் வெற்றிகண்டு வரும் வளர்ச்சியுடன் கூடிய பாதுகாப்பு உபாயம் மிகப் பொதுவாகப் பின்பற்றப்பட்டு வருகின்றது. இவற்றின் பொதுவான அனுபவங்களின்படி பொதுத்துறைத் தலையீடுகள் ஒரு நாட்டிலுள்ள மக்களின் அடிப்படைத் தகுதிகளில் விரைவான, குறிப்பிடத்தக்க மேம்பாட்டினைக் கொண்டுவர முடியும் என்பதை உறுதிசெய்வதாக அமைகின்றது. இந்தப் பாடத்தைத்தான் இலங்கையினதும் ஏனைய சில நாடுகளினதும் அனுபவத்திலிருந்து அறிய முடிகின்றது.

சிலர் இதற்கு எதிரான கருத்தைக் கொண்டுள்ளனர். வளர்ச்சியுடன் கூடிய பாதுகாப்பு உபாயத்தை ஏற்றுக் கொள்வதன் மூலம் இலங்கை மேலும் சிறப்பாகச் செய்திருக்க முடியும் என அவர்கள் விவாதிக்கின்றனர். இவர்களின் விவாதத்தின் உண்மையான இயல்பை ஏற்றுக்கொள்ளும் பொழுது மூன்று வகையான திறனாய்வுகளை வேறுபடுத்திப் பார்ப்பது மிகப் பயனுடையது.

(1) இலங்கையின் தனியான புறநிலை அந்தஸ்துக்குப் (outlier) பொது நலச் செலவீடு தவிர்ந்த ஏனைய காரணிகளே காரணமாக உள்ளன எனக் கூறப்படுகின்றன. ஏனைய நாடுகளுக்குக் கிடைக்காத சில விசேட இயல்புகள் இலங்கைக்கு உள்ளதுடன், அதுவே சாதகமாகவும் அமைந்துள்ளது. இது உண்மையாக இருப்பின் விதிவிலக்காக, உயர்மட்டத்திலான பொதுநலச் செலவீட்டினால் எதுவித பயனுமில்லை. அத்துடன் எல்லா வளங்களும் முதலீடு மற்றும் வளர்ச்சிக்கு ஒதுக்கப்பட்டிருப்பின் மக்கள் மிகச் சிறந்த வாழ்க்கைத்தரத்தை அடைந்திருப்பர். இதனை நாம் **"பொருத்தமற்ற நல அளவு முறைவிவாதம்"** என அழைக்கின்றோம்.

(2) சில தற்செயலான சூழ்நிலைகளால் அன்றி, பொது நலக் கொள்கைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் நிலை காணப்பட்டாலும் வளர்ச்சிநோக்கிய பாதுகாப்பு உபாயத்திலும் பார்க்க அதி சிறந்ததாக நலனியல் உபாயத்தை இலங்கை பின்பற்றவில்லை. நலனியல் விவாதத்தில் உண்மையில் குறைவான விருப்பத் தேர்வைக் கொண்டிருந்த பொழுது புறநிலை அந்தஸ்து தத்துவரீதியாகத் தோற்றம் பெற்றதைக் காணமுடிகின்றது. வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான நலனியல் அளவுமுறைகளில் செலவழிக்கப்பட்ட பணம் குறுங்காலத்தில் குறைவாகவே இருந்தது. இது இலங்கையைப் பொறுத்தளவில் உண்மையாக இருப்பின், நலனியல் வழியைப் பின்பற்றுவதன் மூலம் ஒரு நாடு என்றாவது நன்மையைப் பெறக் கூடும் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். வளர்ச்சியை நோக்கிய விருப்பின் மூலம் இதனை மேலும் நன்றாகச் செய்திருக்க முடியும். இதனை நாம் **"குறுங்கால முன்னுரிமை வாதம்"** என்றும் அழைக்கின்றோம்.

(3) குறுங்காலத்தில் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு வளர்ச்சி மீதான நலச் செலவீடுகளின் அதிமேன்மையான தன்மையை அந்தஸ்து பிரதிபலிப்பதாக உள்ளது என்பதை நாம் ஏற்றாலும் நலனியல் வாதத்தின் உபாயமானது நீண்டகால நலன் நோக்கில் இன்னமும் விமர்சிக்கப்பட்டு வருகின்றது. குறுங்கால அனுகூலங்கள் விரைவில் மறைந்துவிடும் என விவாதிக்கப்படுகின்றது. ஏனெனில் தியாகம் செய்யப்பட்ட வளர்ச்சியின் திரட்சியான தாக்கமானது உயர்மட்டத்திலான நலச் செலவீட்டினை நீடித்து நிலைக்கச் செய்வதைச் சாத்தியமற்றதாக்கி விடுகின்றது.

இந்த விடயத்தை மிக இலகுவாகக் கூறின் விரைவிலோ அல்லது சற்றுப் பின்னரோ பொது நலனுக்கு செலுத்துவதற்குப் பணம் காணப்படமாட்டாது. சனத்தொகை வளர்ச்சியுடன் செலவீட்டுமட்டம் அதிகரிப்பதினாலேயே இந்நிலை ஏற்படும். அதேவேளை ஏனைய நாடுகளில், வளர்ச்சியை முன்தேவையாகத் தெரிவு செய்யாத நாடுகள் வாழ்க்கைத் தரத்தில் பொதுவான முன்னேற்றங்களைக் குறுங்காலத்தில் ஏற்றுக் கொண்டுள்ளன. தனியார் வருமானத்தின் உயர் மட்டங்கள் மாத்திரம் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை நேரடியாக விருத்தி செய்யமாட்டாது. அவர்களின் அரசாங்கங்களும் தேவைகருதி எடுக்கப்படுகின்ற நலனியல் தலையீடுகளுக்கு அதிக வளங்களைக் கொண்டிருக்க வேண்டும். இதற்கு "முயலும் ஆமையும்" கதையைக் கூற முடியும். இதில் ஆமை வெற்றி பெற்றது. மிகவும் சாதாரணமாக இதனை **"நீண்டகால முன்னுரிமை வாதம்"** என அழைக்கின்றோம். இம் மூன்று வகையான விவாதங்களும், இலங்கையின் அனுபவம் பற்றிய மரபு ரீதியான விபரணப்படுத்தல் பற்றிய திறனாய்வில் முன்வைக்கப்படுகின்றது.

## 3. பொது நலன் அளவு முறைகளின் பொருத்தமின்மை வாதம்

### புறநிலை அந்தஸ்தின் மரபுரீதியான விளக்கம்

இலங்கையின் புறநிலை அந்தஸ்து பற்றிய மரபுரீதியான விபரணத்தில் ஒரு சிறிய விளக்கத்துடன் ஆரம்பிப்பது பயனுடையது. ஐசென்மன் (1980) என்பவரினால் மேற்கொள்ளப்பட்ட நாடுகளுக்கான பிற்செலவு ஆய்வினைப் பின்வருமாறு எழுதலாம்,

$L_i = \alpha + \beta Y_i + e_i$ ........ (3.1)

$L_i$ - வாழ்க்கைத்தர அளவீடு (வாழ்வு எதிர்பார்ப்புக் காலம்)

$Y_i$ - i நாட்டின் தலாவருமானம்

s என்ற எழுத்தினை இலங்கைக்காகப் பயன்படுத்தும் பொழுது

வருமானம் தொடர்பாக அதன் வாழ்வு எதிர்பார்ப்புக் காலத்திற்கான மதிப்பீட்டுப் பெறுமதி பின்வருமாறு அமையும்.

$L_s = \alpha + \beta\ Y_s$ ........ (3.2)

இங்கு $L_s > L_s$ ஆக இருந்தது அவதானிக்கப்பட்டது. வேறுபாடு புள்ளிவிபரரீதியாக முக்கியத்துவத்தைக் கொண்டிருந்தது. அதாவது வழுப்பதம் ஏனைய நாடுகளிலும் பார்க்க ஒரு வருமானமட்டத்தில் இலங்கைக்கு அதிகமாக இருந்தது. இதுவே இலங்கை ஒரு புறநிலை என்பதை உறுதிப்படுத்துகின்றது.

இலங்கையை இந்நிலைக்குக் கொண்டு வந்தது யாது? அடுத்தடுத்து வந்த அரசாங்கங்களினால் மேற் கொள்ளப்பட்ட பாரிய அளவுத்திட்டத்திலான நலச் செலவீடுகளின் வரலாற்றையே மரபுரீதியான பதில் ஆக முன்வைக்கப்படுகின்றது. இப்பதிலுக்கு அடிப்படையான தர்க்கத்தினைப் பின்வருமாறு விளக்கலாம். வாழ்க்கைத்தரம் வருமானத்திலும், நலச் செலவீட்டிலும் தங்கியிருப்பதினால் உண்மையான சமன்பாடு பின்வருமாறு அமையும்.

$(L_i = \alpha + \beta Y_i + \gamma W_i + V_i$ ........ (3.3)

இங்கு $e_i$க்குப் பதிலாக வழு $V_i$ ஆக அமைகின்றதுடன் இரண்டும் தொடர்பு படுத்தப்படுகின்றது.

$e_i = \gamma w_z + V_i$ ........ (3.4)

இலங்கைக்கான வழு எதிர்பாராத விதமாக பெரியதாக இருந்ததினால் புறநிலை அந்தஸ்து வழங்கப்பட்டது என முன்பு குறிப்பிட்டோம். சராசரி W உடன் தொடர்புபடுத்திப் பார்க்கும் போது $W_s$ மிகப் பெரியதாக இருந்தமையே இதற்குக் காரணம் என்பதை சமன்பாடு 3.4 எடுத்துக் காட்டுகின்றது. (ஏனெனில் $V_i$ பூச்சிய சராசரியுடன் பரம்பியுள்ளது என கருதப்படுவதே) எனவேதான் இலங்கையின் புறநிலை அந்தஸ்து நலச் செலவீடுகளின் அடிப்படையில் விளக்கப்படுகின்றது.

Bhalla *(1988)* மற்றும் Bhalla and Glewwe *(1986)* ஆகியோர் இம் மரபுரீதியான விபரணத்தை அண்மையில் தவறு எனச் சுட்டிக் காட்டினர். இது தொடர்பான விவாதத்தில் Anand and Kanbur (1991), Anand and Ravallion (1993), Isenman(1987), Pyatt (1987), Ravallion (1986) and Sen (1988) ஆகியோர் தமது பங்களிப்புக்களைச் செய்துள்ளனர். மேலே கூறப்பட்ட சமன்பாடுகளின் அடிப்படையில் அவர்களின் மறுப்பு பின்வரும் ஆலோசனை மூலம் குறிப்பிடப்படுகின்றது. சமன்பாடு 3.3 உண்மையான தொடர்பை வெளிக்காட்டாவிட்டாலும், ஏனெனில் வருமானம், பொது நலச் செலவீடுகளுக்கு அப்பால் நாட்டிற்கேயுரிய சில விசேட அம்சங்கள் சிலவும் காணப்படுவதினால் அவையும் வாழ்க்கைத் தரத்தைப் பாதிப்பனவாக இருக்கும். நாட்டின் அத்தகைய விசேட அம்சத்தினை $\lambda_i$ ஆல் குறிப்பிட்டால் உண்மையான தொடர்பு பின்வருமாறு தரப்படும்.

$L_i = \alpha + \beta Y_i + \gamma W_i + \lambda_i + U_i$ ......... (3.5)

சமன்பாடு 3.1 உடன் 3.5 இனை ஒப்பிடும் போது வழு $e_i$க்கான பின்வரும் சமன்பாட்டை, சமன்பாடு 3.4 க்குப் பதிலாக நாம் பெறமுடியும்.

$e_i = \gamma W_i + \lambda_i = U_i$ ........... (3.6)

இச் சமன்பாடு எமக்குத் தெளிவாகக் காட்டுவது என்னவெனில், மரபுரீதியான வழிகளில் புறநிலை அந்தஸ்தை விளக்குவது தவறானது என்பதையே. உதாரணமாக குணகம் $\gamma$ பூச்சியமாக இருக்கக் கூடும். இந்நிலையில் பொது நலச் செலவீடுகள் வாழ்க்கைத்தரத்துடன் சேர்க்கப்படமாட்டாது. அத்துடன் இலங்கை $e$ பெறுமதியை மிகப் பெரிதாகக் கொண்டிருப்பதைக் காணமுடியும். ஏனெனில் பாரிய பெறுமதியுடையதாக உள்ளது. இலங்கையின் நலச் செலவீடுகள் விதிவிலக்காக பாரியதாக இருக்கின்றது என்பது உண்மை எனினும், இலங்கை ஒரு புறநிலை என்பதும் உண்மை எனினும் அவை இரண்டிற்குமிடையில் எந்தவிதமான காரணகாரிய தொடர்பும் காணப்படவில்லை.

இலங்கையின் விதிவிலக்கான வாழ்க்கைத் தரங்களுக்கான நலச் செலவீடுகளை முதன்மைப் படுத்தும் மரபுரீதியான நடைமுறைகளை இது சந்தேகத்துக்குரியதாக்குகின்றது. ஆனால் Bhalla - Glewwe என்போரின் கருத்தக்கள் இதனை விசேட அம்சமாகக் கருதுகின்றன. அவர்களது நோக்கில் பொது நலச் செலவீடுகள் அதிகமாக இடம் பெறுகின்றன எனக் குறிப்பிடுகின்றனர். இலங்கை தவிர்ந்த ஏனைய நாடுகளிலும் இந் நிலைமைகள் இடம் பெற்றிருக்கின்றதுடன் அந் நாடுகளின் சமூகநலனில் காணப்படும் விரிவான தலையீடுகளை அடிப்படையாகக் கொண்டே அவை வேறுப்படுத்தப்படுகின்றன. இருப்பினும் இங்கு இலங்கையின் விசேட விடயம் குறித்த Bhalla - Glewwe ஆகியோரின் விவாதத்தினைப் பரிசோதனை செய்வது மிகவும் சிறந்ததாக இருக்கும். இவர்களின் உபாயங்கள் இரு பகுதிகளைக் கொண்டது.

(1) இலங்கையில் நலச் செலவீடுகள் மிகவும் பயனற்றது என்பதைக் காட்டுவதற்கு அவர்கள் முயற்சித்தனர். அதாவது சமன்பாடு 3.6 இல் உள்ள குணகம் $\gamma$ பூச்சியத்திலிருந்து புள்ளிவிபரரீதியாக முக்கியத்துவத்தினைக் கொண்டிருக்கவில்லை.

(2) விசேட அம்சங்களை அவர்கள் அடையாளம் செய்கின்றனர். இலங்கையின் புறநிலை அந்தஸ்துக்கான மாற்று விளக்கத்தை அளிப்பதன் நோக்கத்திலேயே அது அமைந்துள்ளது.

## பயனுறுதியற்ற பொது நலச் செலவீடுகள்

உபாயத்தின் முதல் பகுதியில் நலச் செலவீடுகளின் பயனுறுதியற்ற தன்மையை எடுத்துக்காட்ட முயற்சிக்கப்படுகின்றது. இதனைக் காட்டுவதற்கு ஐசென்மன் என்பவரினால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நாடுகளுக்கான பிற்செலவு ஆய்வினை முன்வைக்கின்றனர். வழுவிலிருந்து விசேட அம்சத்தினை நீக்குவதற்காகவே பிற்செலவு ஆய்வினைச் (regression) செய்வதற்கான சிந்தனை காணப்பட்டது. ஏனெனில் நீக்கப்பட்ட பின்பும் இலங்கை ஒரு புறநிலை ஆகக் காணப்படுமாக இருந்தால், நலச் செலவீடுகள் பங்களிக்கின்றன என்ற முக்கியத்துவம் வெளிப்பட்டுவிடும். Bhalla என்பவர் ஒரு குறிப்பிட்ட காலத்தில் வாழ்க்கைத்தரத்தின் மட்டம் என்பதற்குப் பதிலாக வாழ்க்கைத் தரத்தின் மாற்றம் எனக் கருதியதினால் $\lambda_i$ என்பதை நீக்கினார். இதனால் சமன்பாடு 3.3, 3.5 என்பன மாற்றப்பட்டது.

$\Delta L_i = \beta\ .\ \Delta y_i + \Delta e_i$ ..... (3.7)

$\Delta L_i = \beta\ .\ \Delta y_i + \gamma . \Delta w_i + \Delta u_i$ ......... (3.8)

ஆகவே $\Delta e_i = \gamma.\Delta w_i + \Delta u_i$ ....... (3.9)

எனவே ஒரு நாடு பாரிய எச்சத்தினைக் (residual) கொண்டிருந்தால் அது புறநிலை அந்தஸ்தைக் கொண்டதாக மாறும். Bhalla (1988) இப் பிற் செலவு ஆய்வை 1960–1978 காலப் பகுதிக்கு மேற்கொண்ட பொழுது இலங்கை ஒரு புறநிலையான தனியிடத்தில் காணப்படவில்லை. அதாவது $\Delta e_s$ என்பது மிகவும் விலக்கின்றிக் காணப்பட்டது. இதிலிருந்து, இலங்கையின் உயர் வாழ்க்கைத் தரத்துக்கான காரணமாக நலச் செலவீட்டை அடையாளம் செய்வது மரபுரீதியான அறிவில் ஏற்பட்ட தவறு என்ற முடிவுக்கு வந்தார்.

இருப்பினும் இவ் விவாதத்தில் ஒரு தர்க்கரீதியான இடைவெளி காணப்படுகின்றது. நலச் செலவீடுகளின் பயனுறுதியின்மையை உறுதிப்படுத்துவதாக இருந்தால் குணகம் $\gamma$ (சமன்பாடு 3.6 இல்) பூச்சியத்திலிருந்து குறிப்பிடத்தக்க வகையில் வேறுபடவில்லை என்பதைக் காட்டுதல் வேண்டும். ஆனால் Bhalla வின் $\Delta e_s$ விலக்கற்றது என்ற விளக்கத்தில் சில மேலதிக தகவல்கள் இன்மையின் காரணமாக $\gamma$ என்பதைப் பற்றி எவரும் தெளிவாக விளங்க முடியவில்லை. சமன்பாடு 2.9 இல் விலக்கற்றதாக உள்ள $\Delta e_s$ (Unexceptional) என்பதன் கருத்தானது முதல் உதாரணத்தில் $\gamma.W_s$ என்பது விலக்கற்றது எனக் கருதப்பட்டது. ஆனால் பிந்தியது இரு வேறுபட்ட வழிகளில் வரமுடியும். ஏனெனில் (1) $\Delta W_s$ என்பது பெரியது, நேர்கணியமானது, ஆனால் $\gamma$ என்பது பூச்சியத்துக்கு கிட்டவாக இருக்கும். அல்லது ஏனெனில் (2) $\gamma$ என்பது பெரியது, நேர்கணியமானது, ஆனால் $\Delta w_s$ விலக்கற்றது. எனவே $\gamma$ இன் முக்கியத்துவமற்றது என்பதன் அனுமானமானது சில சுதந்திரமான தகவல்கள் இருந்தால் மாத்திரமே பின்பற்றப்படும். அதாவது $W_s$ என்பது விதி விலக்காக கவனத்தில் எடுக்கப்பட்ட காலத்தில் பெரியதாக இருந்தது.

Bhalla என்பவர் இத்தகைய தகவல்களை முன்வைக்கவில்லை. அவரது பிரதான கட்டுரையிலும் (Bhalla, 1988) இது குறிப்பிடப்படவில்லை. 1960–78 காலத்தில் இலங்கையின் நலச் செலவீடுகளில் ஏற்பட்ட மாற்றம் பற்றிய சான்றுகளே காணப்படுகின்றன. செலவீட்டு மட்டங்களுடன் தொடர்புபடுத்துவதற்கு இந்தச் சான்றுகளையே பயன்படுத்துகிறார். எனவே அவரது விபரத்தில் இலங்கையின் சமூக நலச் செலவீடுகள் சராசரியிலும் பார்க்கப் பெரியதாக இருந்தது எனக் கருதிக் கொள்ளப்படுகின்றது. முன்னைய கட்டுரையாளர்களினால் கூறப்பட்ட முடிவுக்கு மாறாக இலங்கையின் நலக் கொள்கைகளில் வேறுபாடான பார்வையை இம் முடிவுகள் எடுத்துக் காட்டுகின்றன.

சென் என்பவர் தெளிவாகக் குறிப்பிட்டது போன்று Bhalla என்பவர் படிநிலை – படிநிலை ஒப்பீடுகளில் (level - level comparison) மாற்றம் – மாற்ற தொடர்புகளைப் (Change-change relationship) பற்றிய அனுமானத்தைத் தெளிவாக நிறுவவில்லை. 1960 – 78 காலத்தில் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் பொழுது இலங்கையில் நலச் செலவீடுகளில் ஏற்பட்ட மாற்றம் விதிவிலக்காக அதிகமாக இருந்தது என்பதை உறுதிப்படுத்தியிருக்க வேண்டும். இக் குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலிறுப்பாக, Bhalla செலவீடுகளின் மாற்றங்களைப் பற்றிய சில சான்றுகளையே முன்வைக்க முயற்சித்தார். ஆனால் அது வெற்றியளிக்கவில்லை. உதாரணமாக 1950 களுக்கும் 1960 களுக்கும் இடையில் உண்மையான தலா வருமான பொது நலச் செலவீடுகள் 50 சத வீதத்துக்கு மேலாகச் சென்றது என்பதை அவதானித்தார். இதன் அடிப்படையில் தமது முன்னைய நிலையை, அதாவது சமூகநலச் செலவீட்டில் 1950 களுக்குப் பிந்திய ஆரவாரம் (Splurge) குறிப்பிடத்தக்க முறையில் பயனுறுதி வாய்ந்ததாக இருக்கவில்லை என்பதை மீள் மதிப்பீடு செய்தார்.

இருப்பினும் இது சரியாகக் காணப்படவில்லை. ஏனெனில் 1960க்குப் பின்னர் இலங்கையின் அதிகரித்த நலச் செலவீடுகளைக் காட்டுவதற்கு இது போதாததாக இருந்தது. ஏனைய நாடுகளிலும் பார்க்க இவ் அதிகரிப்பு குறிப்பிடத்தக்க முறையில் அதிகமாக இருந்தது என்பதை எடுத்துக் காட்ட வேண்டிய அவசியம் இருந்தது. இதனையே Bhalla நுணுக்கமாக எடுத்துக் காட்டவில்லை. உண்மையில் சென் என்பவர் வித்தியாசமான நோக்கினை எடுத்துக் காட்டினார். அதாவது இலங்கையில் 1960 க்குப் பிந்திய காலத்தில் நலச் செலவீடுகளில் ஏற்பட்ட மாற்றம் (Change) விலக்கற்றதாக இருந்தது. ஆனால் உண்மையில் ஆரம்பகாலத்திலேயே வழக்கத்துக்கு மாறான செலவீடுகள் காணப்பட்டன. அதனால் தான் 1960 இன் பின் வாழ்க்கைத்தரத்தில் இயல்புக்கு மீறிய மாற்றத்தினை எவரும் கண்டு பிடிக்கவில்லை.

இவ் விவாதத்தில் மிக முக்கியமான ஓர் அம்சம் என்னவெனில் 1970க்கு முந்திய காலத்தில் நலச் செலவீடுகள் பற்றிய தரவுகளைச் சர்வதேச ரீதியில் ஒப்பிடக்கூடிய நிலைமை காணப்படவில்லை. இவ்வரையறைகளின் பொருளை எவரும் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பதுடன் இலங்கையில் அல்லது ஏனைய நாடுகளிலும் நலச் செலவீட்டின் பயனை மதிப்பீடு செய்வதற்கு மாற்றம் – மாற்றத் தொடர்பினைப் பயன்படுத்த முடியாது. இதனால் Bhalla வின் உபாயத்தில் முதலாவது பகுதியானது இலங்கையின் நலச் செலவீடு பயனுறுதியற்றதாக இருந்தது. (1960 இன் பின்னர்) தோல்வியடைந்ததாகவே கருதமுடியும் என்பதைக் எடுத்துக்காட்ட முயற்சிக்கின்றது.

## விசேட அம்சத் தாக்கம் (The special feature effect)

உபாயத்தின் இரண்டாவது பகுதி, இலங்கையின் உயர் வாழ்க்கைத்தரமானது நாட்டின் சில விசேட அம்சங்களினால் ஏற்பட்டதென்பதை எடுத்துக் காட்டுகின்றதுடன் நலச் செலவீடுகளுடன் எவ்வித தொடர்பையும் கொண்டிருக்கவில்லை. இலங்கையின் புறநிலை அந்தஸ்து பற்றிய மரபுரீதியான விபரத்தினை இன்றும் சிலர் எதிர்ப்பதினால் இலங்கையின் விசேட அம்சமாக Bhalla வினால் எடுத்துக்கொள்ளப்பட்டதன் நம்பகத்தன்மையைக் கவனத்திற்கு கொள்வது மிக அவசியம்.

விசேட அம்சத்தாக்கம்" ஓர் ஆரம்ப நிலைமையாக 1960 –78 காலத்துக்கான அவரது மாற்றம் – மாற்ற பிற்செலவு ஆய்வில் அறிமுகம் செய்யப்பட்டது. 1960க்கு முன்னர் ஏனைய நாடுகளையும் விட இலங்கை கொண்டிருக்கக் கூடிய மேலான நிலைமையானது நலனியல் கொள்கைகளினாலன்றி விசேட அம்சங்களின் விளைவுகளினாலேயே ஏற்பட்டது என்ற கருத்தைக் கொண்டிருந்தது.

இந்த விசேட அம்சம் என்ன? ஆரம்ப நிலைமை பற்றிய பொதுவான விளக்கத்தை Bhalla பின்வருமாறு தருகிறார். $\lambda_1$

என்பது நாட்டுக்குரிய விசேட நிலையான தாக்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் காரணிகளாக அதன் காலநிலை, உணவு, தொழில்நுட்ப மாற்றம் (அதாவது 1946 இன் மலேரியா ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டம்) என்பன காணப்படுகின்றன. உணவு அல்லது காலநிலை தொடர்பாக இலங்கைக்கான குறிப்பிடத்தக்க அனுகூலங்களை அவர் குறிப்பிடவில்லையாயினும் 1946 இல் செயற்படுத்தப்பட்ட வெற்றிகரமான மலேரியா ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டத்தினைத்தான் அவர் விசேட அம்சமாக மனதில் கொண்டிருந்தார் என்பதை நாம் கருத முடியும். இலங்கையில் காணப்படும் குறைந்தளவான சிசுமரணவீதம், உயர்ந்த வாழ்வு எதிர்பார்ப்புக் காலம் என்பன நலனியல் கொள்கைகளின் விளைவால் ஏற்பட்டவை அல்ல. ஆனால் ஏறக்குறைய அரைநூற்றாண்டுக்கு முன்பு மலேரியா ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் காரணமாகவே ஏற்பட்டது.

இக்கட்டுரையாளரின் கருத்தின்படி இவ்விவாதம் இலங்கையின் நலனியல் கொள்கைகளை வெளிப்படுத்துவதற்குப் போதுமானவை அன்று. விசேட அம்சம் என்பது கடந்த காலத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நலக்கொள்கைகளின் விளைவினால் ஏற்பட்டது அல்லது அதன் ஒரு பகுதி என்பதை ஒருவர் எடுத்துக் காட்டவேண்டும். Bhalla என்பவரினால் தெரிவு செய்யப்பட்ட விசேட அம்சம் - 1946இன் மலேரியா ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டம் - ஒரு தொழில்நுட்ப மாற்றமாக இருந்தது. இந் நிகழ்ச்சித் திட்டமானது முற்றாக வெளியார்ந்த அம்சமாக மோட்சத்திலிருந்து விழுந்த ஒரு தொழில்நுட்ப மாற்றத்தினால் ஏற்படவில்லை. யாவருக்கும் சுகாதார வசதிகளை விரிவாக்க வேண்டுமென்ற இலங்கையின் தொடர்ச்சியான கொள்கையின் ஒரு பகுதியாகவே இது அமைந்திருந்ததுடன் ஏறக்குறைய ஒரு தசாப்தத்துக்கு முன்னரே அது ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. இதற்குப் பின்பு இந் நிகழ்ச்சித்திட்டத்துக்குப் பயன்படுத்தப்பட்ட தொழில்நுட்பம் இலங்கையர்களுக்கு மாத்திரமே உரிய ஒரு இரகசியம் அல்ல. இது ஒரு இலகு தொழில்நுட்பமாக இருந்ததுடன் மேற்கு நாடுகளில் விருத்தி செய்யப்பட்ட பூச்சிநாசினியான டி.டி.ரி.யின் பயன்பாட்டுடன் தொடர்புடையதாகவும் காணப்பட்டது. கட்டணம் செலுத்த விரும்பும் எந்த நாட்டுக்கும் இது கிடைக்கும். இதற்கு வெளியே இலங்கை ஏதாவது விசேட நன்மைகளைப் பெறக் கூடியதாக இருந்திருக்கும் என்றால் அது ஏலவே இடம் பெற்றுவரும் சுகாதார விரிவாக்கல் நிகழ்ச்சித் திட்டத்தினாலேயே ஏற்படமுடியும். நலக் கொள்கைகளில் இருந்து விசேட அம்சத் தாக்கத்தினைப் பிரித்துப் பார்க்க முடியாது என்பதற்கு வேறும் பல காரணங்கள் உள்ளன. மலேரியா ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டத்தினை ஒருவர் எப்படி நோக்குகின்றார் என்பதைவிட ஒருவர் 1960க்கு முன்னர் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கையின் மேலுயர்வான தன்மையை அடையாளம் செய்தலை இந்நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் வைத்து விளக்க முடியாது. ஒரு பெரிய வெற்றியாக இது இருந்தாலும், இந்நிகழ்ச்சித்திட்டம் இக்காலத்தில் இலங்கை மக்களின் சுகாதார நிலைமைகளில் சிறிதளவான முன்னேற்றங்களையே ஏற்படுத்தியது. நிகழ்ச்சித்திட்டம் பற்றி மிகக் கவனமாக மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் படி (Gray, 1974), 1936-45க்கும், 1956-60க்கும் இடையில் இடம்பெற்ற இறப்புவீதத்தில் 20-25 சத வீதமான முன்னேற்றங்களையே இதனால் ஏற்படுத்த முடிந்தது எனக் காட்டப்பட்டுள்ளது. உண்மையில் சுகாதாரம், கல்வி, உணவுவிநியோகக் கொள்கைகளை உள்ளடக்கிய முழு பொதுநலன் நிகழ்ச்சித்திட்டத்தினாலேயே இக்காலத்தில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் அடைந்து கொள்ளப்பட்டன.

ஆரம்ப நிலைமையாக, இலங்கையின் புறநிலை அந்தஸ்தை முன்வைப்பதற்கு நலக் கொள்கைகளின் மெய்த்தோற்றத்தை வெளிப்படுத்தும் உபாயம் அமைந்திருந்தாலும் பின்னர் இவ்வாரம்ப நிலைமையானது நலக் கொள்கைகளுடன் தொடர்பற்ற சில தொழில்நுட்ப மாற்றத்துடன் தொடர்புபடுத்தும் முயற்சி வெற்றியளிக்கவில்லை. முதலில், விசேட அம்சம் என அழைக்கப்பட்ட விடயம் இலங்கையின் நலனியல் வாத வரலாற்றில் ஒரு பகுதியாகிவிட்டது. இரண்டாவது, விசேட அம்சத்தின் தாக்கத்திலும் பார்க்க, இலங்கையின் ஆரம்பகால முன்னேற்றங்கள் மிக அதிகம். எனவே, 1960க்கு பிந்திய காலத்தின் நலக் கொள்கைகளின் தாக்கம் ஒரு முற்றுப் பெறாத அம்சம் என்பதை ஏற்றுக்கொண்டால், புறநிலை அந்தஸ்தை அடைவதற்கு இலங்கையின் நலனியல் வாதத்தின் நீண்டகால வரலாறுதான் காரணம் என்ற தீர்மானத்திலிருந்து ஒருவர் தப்பித்துக் கொள்ள முடியாது.

## 4. குறுங்கால முன்னுரிமை விவாதம்

அரசினால் அளிக்கப்படும் மிக உயர்ந்த மட்டத்திலான நலச் செலவீடுகள் தேவையற்ற, பயனற்ற ஒன்றாக இருக்கவில்லை என முன்னைய விவாதங்கள் நிலைநிறுத்துகின்றன. வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு இது பங்களித்தது. ஆனால் இன்னும் நிலைநிற்கும் கேள்வி என்னவெனில் நலச் செலவீடுகளிலிருந்து வளர்ச்சிக்கான முதலீட்டுக்கு வளங்களைத் திசைதிருப்புவதன் மூலம் இலங்கை நன்றாகச் செயற்படவில்லையா? என்பதே. இதற்குப் பதிலளிப்பதற்கு இருவகையான செலவீடுகளில் எதற்கு முன்னுரிமை (Trade-off) அளிக்கப்பட்டது என்பது பற்றி, வாழ்க்கைத்தரத்தில் அவற்றின் தாக்கம் பற்றி மதிப்பீடு செய்யவேண்டும். இக் கேள்வியை அறிமுகப்படுத்துவதற்கு முன்பு தவறான கற்பிதங்களைப் போக்குவது பயனுடையது. இலங்கையின் புறநிலையான அந்தஸ்து இக் கேள்வியை நலனியல் வாதத்துக்குச் சார்பாகவே உறுதி செய்கின்றது எனப் பொதுவாக நம்பப்பட்டது. இந்த விபரணத்தை அவசியம் பின்பற்ற வேண்டுமென்பதில்லை. நலக் கொள்கைகளின் ஈடுபாடு நாட்டினை முற்றிலும் வேறான வழியில் புறநிலை அந்தஸ்துக்கு இட்டுச் செல்லலாம். அவற்றில் ஒன்றைமட்டுமே நலனியல் வாதத்துக்குச் சார்பானதாக விபரிக்க முடியும்.

வழக்கமான விளக்கத்தின்படி பொதுநலனில் ஆர்வம் காட்டும் நாடு ஒரு புறநிலை அந்தஸ்துக்கு வரும் செயன்முறை பின்வருமாறு அமையும். நலச் செலவீடுகளினால் வாழ்க்கைத்தரத்தில் அதிக மாற்றங்கள் ஏற்படுகின்றன. ஏனைய நாடுகளிலும் பார்க்க சில நாடுகள் ஒரே வருமான மட்டங்களைக் கொண்டிருந்தாலும் சில நாடுகள் உயர் வாழ்க்கைத்தரத்தை அனுபவிக்கின்றன. வேறுவார்த்தையில் கூறுவதாயின் நலனியல் நாடு ஒன்று புறநிலை அந்தஸ்தை அடைகின்றது. ஏனெனில் நலச் செலவீடுகளுக்கும் வருமான வளர்ச்சிக்குமிடையில் குறுங்காலத்தில் எதைத் தெரிவுசெய்தல் என்பதில் முன்னையதற்கு மிகவும் சாதகமாக இருந்தது.

இருப்பினும், புறநிலை அம்சமானது நலச் செலவீட்டுக்குப் பாதகமாக, எதனைத் தெரிவு செய்தல் என்பதற்கு எதிரான

அம்சத்திலிருந்தே தோற்றம் பெறுகின்றது. இங்கு A, B, C ஆகிய மூன்று நாடுகள் ஆரம்பத்தில் ஒரே வீதத்தில் வளர்ச்சியடைகின்றன எனக் கொள்க. ஆனால் முதல் இரண்டு நாடுகளும் தலாவருமானம், பொதுநலச் செலவீடு, வாழ்க்கைத்தரம் ஆகியவற்றைப் பொறுத்து உயர்மட்டத்தில் காணப்படுகின்றது. இந்நிலையில் B, குறிப்பிட்ட காலத்தில் முதலீடு மற்றும் வளர்ச்சிக்குப் பதிலாக தனது நலச் செலவீட்டினை கணிசமான அளவு உயர்த்துவதற்குத் தீர்மானிக்கின்றது. ஆனால் A யும் B யும் தமது பழைய வளர்ச்சிப் பாதையையே தொடர்ந்து பேணுகின்றன. இதனை மேலும் கருத்திற் கொள்ளும் போது உயர்வான நலச் செலவீடுகள் வாழ்க்கைத்தர உயர்வை அதிகரிக்கும் வேளையில், மெதுவான வருமான வளர்ச்சியின் காரணமாக வாழ்க்கைத் தரத்தில் ஏற்படும் இழப்பிலும் பார்க்க அதில் ஏற்படும் படிப்படியான முன்னேற்றங்கள் சிறிது குறைவாகவே இருக்கும். அதாவது நலச் செலவீட்டுக்கும், வளர்ச்சிக்குமிடையில் (வாழ்க்கைத் தரத்தில் அவற்றின் குறுங்காலத் தாக்கம் காரணமாக) எதனை முக்கியத்துவப் படுத்தல் என்பதில் நலச் செலவீட்டுக்கு பாதகமான நிலை இருந்தது.

இப்பொது நிலைமையை அவதானித்தால், கால ஓட்டத்தின் பின் B யின் வருமானம் A, C யினது வருமானங்களிலும் பார்க்க மிக மெதுவாக வளர்ச்சியடைகின்றது. இதனால் C யைப் போன்று தாழ் வருமானம் பெறும் நாடுகளின் பிரிவினுள் சென்றுவிட்டது. அதே நேரம், நலச் செலவீட்டின் நிலைமை மோசமாக இருந்தது. B யின் வாழ்க்கைத்தரம் A யினதும் பார்க்க மிக மெதுவாக உயர்ந்தது. முன்னுரிமை மிகக் குறைந்த மோசமான நிலையில் உள்ளது எனக் கருதினால் B ஆனது வாழ்க்கைத் தரத்தைப் பொறுத்தவரையில் C உள்ள பிரிவிலும் பார்க்க உயர்ந்ததாகக் காணப்படும். இந்த வழியிலேயே நாடு B வருமான மட்டத்தைப் பொறுத்தளவில் C வகை நாடுகளுடன் சேர்ந்து கொள்ளும். அத்துடன் வாழ்க்கைத் தரத்தினைப் பொறுத்து அவற்றுக்கு மேலாகக் காணப்படும். ஐசென்மன் போன்றவர்களின் பிற்செலவு ஆய்வுகளில் B என்பது புறநிலையான அந்தஸ்தைப் பெற்றுவிடும்.

இப் புறநிலை அந்தஸ்தின் தோற்றமானது உயர்மட்ட நலச் செலவீடுகளின் அடிப்படையிலேயே விளக்கப்படுகின்றது. விசேட அம்சத் தாக்கம் எதுவும் காணப்படவில்லை. B யைப் பொறுத்தவகையில் புறநிலை அந்தஸ்து தொடர்ந்து நிலைத்திருக்கும் எனக் கூறமுடியாது. நலனியல் கொள்கைகளைப் பின்பற்றுவதாகத் தீர்மானிப்பதன் மூலம் இதனை இழக்க முடியும். இலங்கையின் வரலாறு இதுவென்றால் அது தனது புறநிலை அந்தஸ்தைப் பெருமையுடன் நோக்காது அனுதாபத்துக்குரியதாகவே பார்க்க வேண்டும்.

புறநிலை அந்தஸ்தின் சாதனை அருமையான வளங்களையும் மிகத் திறனுடன் ஒரு நாடு பயன்படுத்துகின்றது என்பதற்கான ஒரு குறியீடு அல்ல என்பது மிக முக்கியமான விடயம். இத்தகைய சாதனை நலச் செலவீட்டுக்கோ அல்லது வளர்ச்சிக்கோ சாதகமாக அல்லது பாதகமாகவோ நிலைத்திருக்கும். எனவே இரண்டில் எதனைத் தெரிவு செய்தல் என்பதன் இயல்புபற்றிய மதிப்பீடு இலங்கையின் நலனியல் கொள்கைகளுக்கு எதிரான எச்சரிக்கையாகவோ அல்லது விளம்பரமாகவோ விபரணப் படுத்துவதற்கான புறநிலை அந்தஸ்தைத் தீர்மானிப்பதற்கு மிகவும் அவசியமானது.

இரண்டில் எதனைத் தெரிவு செய்தல் என்பதை மதிப்பீடு செய்யும் பொழுது பின்வரும் எதிர்க்கருத்துக்களுக்கான கேள்விகளை கேட்கும் நிலை எழுகின்றது. நலனியல் செலவீடுகளினால் உறிஞ்சப்பட்ட வளங்கள் முதலீட்டு வளர்ச்சிக்குப் பயன்படுத்தப்பட்டால் இலங்கை இன்று கொண்டிருப்பது போன்ற வாழ்க்கைத்தர உயர்வை அடைவதற்கு எவ்வளவு காலம் எடுக்கும். சென் (1981) என்பவர் இக் கோள்வியை முன்வைத்து பதிலையும் அளித்தார். அவரது பதில் இதனை அடைந்து கொள்ள நீண்டகாலம் எடுக்கும்" என்பதே. இதிலிருந்து தெரிவதென்னவெனில் எதனைக் கவனத்திற் கொள்வதென்பதில் நலனியல் வழியில் செல்வதற்கே சாதக நிலை காணப்பட்டது. இங்கு எதிர் உண்மை ஆய்வுக்குப் பயன்படுத்தப்பட்ட நுட்பத்தைக் கவனத்திற் கொள்ளவேண்டும். முதலில், 1975 இல் மேற்கொள்ளப்பட ஐசென்மன் என்பவரின் நாடுகளுக்கான பிற் செலவு ஆய்வில் ஒரு நாடு 69 வருட வாழ்வு எதிர்பார்ப்புக் காலத்தை அடைவதற்கு வருடாந்த தலா வருமானமாக 2684 யு.எஸ் டொலர்களைக் கொண்டிருக்க வேண்டும். ஆனால் இலங்கை 130 யு.எஸ். டொலர்கள் தலா வருமானத்தினையே பெற்றிருந்தது. எனவே மீண்டும் கோள்வி எழுந்தது. இலங்கை 130 டொலர்களிலிருந்து 2684 டொலர்களை அடைவதற்கு வளர்ச்சி என்னும் மாற்றுவழியைத் தெரிவு செய்தால் எவ்வளவு காலம் எடுக்கும். வளங்களானது பொதுநலனிலிருந்து முதலீட்டுக்கு திசைதிருப்பப்பட்டால் எந்த வீதத்தில் இலங்கை வளர்ச்சியடையும் எனச் சில மாற்று மதிப்பீடுகள் செய்யப்பட்டன. அதன்படி 2684 யு.எஸ் டொலர் வருமான மட்டத்தை இலங்கை அடைவதற்கு 58-152 வருடங்கள் எடுக்கும் என மதிப்பிடப்பட்டது. நலனியல் பாதையுடன் ஒப்பிடும் போது மாற்று உபாயமான வளர்ச்சி என்பது ஒரு நீண்ட சுமை என்பதே சென் என்பவரின் முடிவாக இருந்தது.

1975 இல் இலங்கையின் வருமானம் 130 டொலர்களிலும் பார்க்க அதிகமாக இருந்திருக்கும். ஏனெனில் 1975க்கு முன்பு உள்ள காலத்தில் செலவழிக்கப்பட்ட பொது நலச் செலவீடுகள் முதலீட்டிற்கு திருப்பி விடப்பட்டிருக்கலாம் என்பதே இந்த எதிர் உண்மையில் குறிப்பிடப்படுகின்றது. ஆகவே 1975க்குப் பின்னர் ஏற்படவேண்டிய இடைவெளி, வளர்ச்சி மாற்று உபாயத்தின் மீது சென் குறிப்பிடுவதிலும் பார்க்க குறைவாக இருக்க வேண்டும். உண்மையில் இங்கு இடைவெளி காணப்படவில்லை. 1975இல் வருமானம் 2684 டொலருக்கு அதிகமாக இருந்திருக்கும். இந்த விடயத்தில் எடுக்கப்படவேண்டிய தீர்மானம் என்னவெனில் மாற்று உபாயமான வளர்ச்சியைப் பெற்றுக் கொண்டதா என்பதே. 1975க்கு முன்னரே 1975 இன் உண்மையான வாழ்க்கைத்தரத்தை" இலங்கை அடைந்து விட்டிருக்கும். எனவே எதனைத் தெரிவு செய்தல் என்பதிலான தீர்ப்பில் முற்றான பின்வாங்கல் காணப்படுகின்றது.

மாற்று வளர்ச்சிக்கான கால அனுகூலத்தினை மதிப்பிடுவதற்கு பிற்செலவு ஆய்வு மேற்கொள்ளப்பட்ட (1975) வருடத்தின் உண்மையான வருமானத்திற்குப் பதிலாக எதிர் உண்மை வருமானத்திலிருந்தே ஆரம்பித்திருக்க வேண்டும். இவ் எதிர் உண்மை வருமானத்தைக் கண்டுபிடிப்பதற்கு ஆரம்ப வருடத்தை" ஒருவர் கண்டுபிடிக்க வேண்டும். அதன்பின்புதான் அவ்வருடத்தினைப் பிரயோகிக்க வேண்டும். அதன் பின்புதான் அவ்வருடத்தின் உண்மையான தலா வருமானத்துக்கு எதிர் உண்மை வளர்ச்சி வீதத்தினைப் பிரயோகிக்க வேண்டும்.

தத்துவரீதியாக இதனைச் செய்ய முடியுமாயினும் அளவிட முடியாத தரவுப் பிரச்சினைகள் ஏற்படலாம். இலங்கையில் சமூகத் தலையீடுகளின் நீண்டகால வரலாற்றைக் கருத்திற் கொண்டு ஆரம்ப வருடத்தைக் கண்டுபிடிப்பதற்கு 1930களை நோக்குதல் அவசியம். அக்காலத்திற்கு அப்பால் இலங்கையின் தேசிய வருமானத் தரவுகள் காணப்படவில்லை. ஆரம்ப வருடத்தினைத் தெரிவு செய்வதில் ஒருவர் நம்பிக்கை கொள்ளவிரும்பினால் அவ்வருடத்துக்கும் நாடுகளுக்கிடையிலான பிற்செலவு ஆய்வினை மேற்கொள்ளுதல் பிரச்சினையாக உள்ளது. ஆனால் அக்காலப்பகுதிக்கான சர்வதேசத் தரவுகள் ஒப்பிடக்கூடியதாகக் காணப்படவில்லை. ஆரம்ப வருடமாக எதைக் கொள்வது என்ற பிரச்சினையும் டிரசி மற்றும் சென் (1989) என்பவர்களினால் விருத்தி செய்யப்பட்ட மாற்று முறையியலையும் குழப்பிவிட்டது. மாற்றீடான வளர்ச்சிக்குத் தேவையான மேலதிக காலம்" (extra time) என்பதனைக் கணிப்பிடுவதற்குப் பதிலாக, "மேலதிக வளர்ச்சி"யைக் கணிப்பிடுவதே ஒரு புறநிலை அந்தஸ்தை வகிக்கும் நாட்டுக்கு அதனால் நலனியல் பாதையைப் பின்பற்றாது அடையப்பெற்ற அதே வாழ்க்கைத்தரத்தைப் பெறுவதற்கு அவசியமானது. நலச் செலவீடுகளைப் பலியிடுவதன் மூலம் அடைந்து கொள்ளக் கூடியவற்றிலும் பார்க்க இதற்குத் தேவைப்படும் மேலதிக வளர்ச்சி அதிகமாக இருந்தால் ஒன்றினுக்காக இன்னொன்றைக் கைவிடும் பொழுது அது பொது நலனியல் பாதைக்கே சாதகமாக இருக்கும்.

தரவுகளின் தேவை குறைவாக இருக்கும் பொழுது ஒருவர் மாற்று முறையியலை மேற்கொள்ளலாம். ஆனந் மற்றும் கன்பூர் (1991) என்பவர்கள் அண்மையில் இதனை மேற்கொண்டுள்ளனர். இவர்கள் தலாவருமானம் (y) பொதுநலச் செலவீடுகள் (w) என்பவற்றினைப் பயன்படுத்தி 1960-78 காலத்துக்கான இலங்கையின் வாழ்க்கைத் தரத்துக்கான காலத் தொடர் பிற்செலவு (time series regression) ஆய்வினை மேற்கொண்டனர். இம்மாறிகளின் குணகங்கள் முன்னுரிமை விடயத்தின் இயல்பைப் பற்றிய சிந்தனையை எமக்கு அளிக்கின்றது. இவர்கள் எடுத்துக்காட்டுவதன்படி, உதாரணமாக சுகாதாரச் செலவீட்டில் செலவழிக்கப்படும் ஒரு ரூபாயினால் குறைக்கக் கூடிய சிசு மரணத்தை அதே அளவுக்கு வருமான வளர்ச்சிக்கான 33 ரூபாவினாலேயே குறைக்கமுடியும். எல்லை முதல் வெளியீட்டு விகிதம் 3:1 எனக் கருதின், மேலே உள்ள விபரங்களின்படி, சுகாதாரச் செலவீடுகளில் செலவழிக்கப்படும் ஒரு ரூபாவின் மூலம் சிசு மரணத்தைக் குறைப்பதற்கு முதலீடு மற்றும் வளர்ச்சியின் மீதான ஒரு ரூபாய் செலவீட்டிலும் பார்க்க 25 மடங்கு அதிகமாக அடைந்துகொள்ள முடியும். இத்தகைய மதிப்பீடுகள் இலங்கையில் பொதுநலனியல் பாதைக்கான சாதகமான நிலை காணப்பட்டதை உறுதிசெய்கின்றன. வேறுவிதமாகக் கூறின், இலங்கை தனது மக்களின் வாழ்க்கைத் தரத்தை மிக விரைவாக முன்னேற்றக் கூடியதாக இருக்கவில்லை. பொதுநலச் செலவீடுகளிலிருந்து வளங்களை முதலீடு மற்றும் வளர்ச்சிக்கு திசைதிருப்புவதன் மூலம் இதனை மேற்கொள்ளவில்லை.

## 5. நீண்டகால இரண்டில் எதனைத் தெரிவு செய்தல் என்பது பற்றிய விவாதம்

இங்கு இரு விளக்கங்கள் உறுதியானவையாக உள்ளன.

(1) சில தற்செயலான சூழ்நிலைகளில் வாழ்க்கைத்தரம் தொடர்பாக இலங்கையின் புறநிலை அந்தஸ்தை விளக்குகின்றதிலும் பார்க்க பொதுநலச் செலவீடுகளின் வரலாறோ இது என்பது ஒருவிடயம்.

(2) நடைமுறையில் இலங்கையின் புறநிலை அந்தஸ்து சாதகமான முறையில் பொதுநலனுக்கு அல்லது வருமான வளர்ச்சி என்ற ஏதாவது ஒன்றினையே பிரதிபலிக்கின்றது. இதில் இரண்டாவது அம்சம் முக்கிய செய்தியை வெளிப்படுத்துகின்றது. பொதுநலனியல் பாதையைப் பின்பற்றுவதன் மூலம் வறுமையான ஒரு நாடு தனது மக்களின் அடிப்படை வசதிகளை மிக விரைவாக மேம்படுத்த முடியும். வருமான வளர்ச்சியினூடாக அதே பெறுபேறுகளை அடைவதற்கு மிக நீண்டகாலம் எடுக்கும்.

குறுங்கால நன்மைகள் மிக அதிகமாக இருக்கலாம். ஆனால் நீண்டகால விளைவுகள் பாதகமாக இருக்கும். உத்தம வளர்ச்சி இலக்கியங்களின் நன்கு தெரிந்ததொரு தொனிப்பொருளாக இது காணப்படுகின்றது. தமது வளங்களை மிக அதிகமாக நுகர்வதன் மூலம் குறுங்காலத்தில் மிக உயர்ந்த பயன்பாட்டை அனுபவிப்பதற்கு ஒரு நாடு தீர்மானிக்கும் பொழுது, இன்னொரு நாட்டுடன் ஒப்பிடும் பொழுது அதிகமாக முதலிடவும், சேமிக்கவும் தீர்மானிக்கிறது. இதனால் ஒரு தாழ்நிலை வழியைப் பின்பற்றக்கூடும். இதே வாதத்தையே வாழ்க்கைத்தர வரையறைகளுக்குப் பரந்த ரீதியில் பிரயோகிக்க முடியும். சமூகத்தைப் பொறுத்தவரையில் வாழ்க்கைத் தரம் என்பது என்ன விடயம் என்பதல்ல, ஆனால் அடுத்தடுத்த சந்ததிகளின் மீதான வாழ்க்கைத்தர ஓட்டத்தின் தற்போதைய பெறுமானம் என்ன என்பதே முக்கியம். எனவே, எதிர்காலத்தில் வாழ்க்கைத் தரம் உயர்வாக இருக்கவேண்டும் என்ற ஆர்வம் உடனடி நன்மைகளுக்கான முயற்சியினால் தாமதப்படுத்தப்பட்டால், விளைவுகள் உத்தம நிலையைக் கொண்டிருக்கமாட்டாது.

இலங்கையின் அண்மைக்காலப் பொருளாதார வரலாற்றில் மிகவும் முக்கியமான கலந்துரையாடலுக்குட்பட்ட ஒரு அம்சமாக, 1970களின் மத்தியில் நிகழ்ந்த பொருளாதார வீழ்ச்சி என்ற விடயமே இடம் பெற்றது. இதன் பின்னரே 1977இல் இருந்து கொள்கை விடயங்களில் புதிய அணுகுமுறை பின்பற்றப்பட்டது. 1970களின் மத்தியில் நிகழ்ந்த இப் பொருளாதார முறிவு, இலங்கை தவிர்க்க முடியாமல் பொதுநலனில் விரைவான நன்மைகளைப் பெறவதற்கு வளர்ச்சியைப் புறக்கணித்து வந்ததிற்கு அளிக்கப்பட்ட விலையே இதுவெனப் பலர் குறிப்பிட்டனர். மாற்று உபாயமாக வளர்ச்சியைப் பின்பற்றுவதன் மூலம் என்னத்தை அடையாளம் என்பதற்கும் இம் முறிவின் பின்னரான மீள் எழுச்சி ஒரு சான்றாகும். ஆனால் 1970களின் இந்த நிகழ்ச்சி இலங்கையின் பொதுநலனியல் பாதையின் மீதான ஒரு குற்றத் தீர்ப்பாகக் கருத முடியாது.

## 1970 களில் வளர்ச்சியின் தகர்வு

இடதுசாரி அரசியல் கட்சிகளின் கூட்டுக்களுக்கு கிடைத்த தேர்தல் வெற்றியுடன் 1970களின் தசாப்தம் ஆரம்பமாகியது. தேர்தல் பிரசாரங்களின் போது முன்னைய அரசாங்கத்தினால் உணவு மானியத்தில் மேற்கொள்ளப்பட்ட வெட்டினைக் கண்டித்து கூட்டு முன்னணி பிரசாரத்தில் ஈடுபட்டது. இம்மானியம்

இலங்கையின் பொதுநல அரசின் தூண்களாக இருந்தது. அதிகாரத்தைக் கையேற்றதும் ஐக்கிய முன்னணி அரசாங்கம் இழந்த மானியங்களை மீண்டும் திரும்ப அளித்ததுடன், அதன் காரணமாக ஆழமான பிரச்சினைகளுக்குள் மாட்டிக் கொண்டது.

பொருளாதார வளர்ச்சி கீழ் நோக்கிச் செல்லத் தொடங்கியது. 1965-69இல் 4.8 சத வீதமாகக் காணப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வருடாந்த வளர்ச்சிவீதம் 1973-75 இல் 2.7 சத வீதமாக மிகத் தாழ்ந்த நிலையை அடைந்தது. மெதுவாகக் காணப்பட்ட இவ் வளர்ச்சியினால் பொதுநலச் செலவீடுகளை உயர்மட்டத்தில் வைத்துப் பேணுவது கடினமாக இருந்தது. மானியங்களின் அளவை உயர்த்துவதென்று முதலில் எடுக்கப்பட்ட சில முயற்சிகளிலிருந்து தடம் மாறுவதற்கு ஐக்கிய முன்னணி அரசாங்கம் நிர்பந்திக்கப்பட்டது. இத்தகைய மாற்றத்தினால் ஒட்டுமொத்தமான பின்னடைவு ஏற்பட்டதுடன் பிரச்சினை மிக ஆழமாகவும் மாறியது. 1974 இன் பின்னர் மிக மோசமான சென்மதிநிலுவைப் பிரச்சினைகள் தோன்றின. நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 1973இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1 சத வீதமாக இருந்து 1974 இல் 4 சத வீதமாக உயர்ந்தது. இறக்குமதி செய்யப்படும் அரிசி, கோதுமை என்பவற்றிலேயே மானிய முறையியலமைந்த உணவுப் பங்கீட்டு முறைமை தங்கியிருந்ததினால் இறக்குமதி அளவு மிக அதிகமாக இருந்தது. 1970-72 இல் ஏறக்குறைய காற்பங்காக இருந்தது. சீர்திருத்தப்படாத பங்கீட்டு முறையைத் தொடர்ந்து பேணுதல் சாத்தியமற்றதாகவும் மாறியது.

ஒன்றும் செய்யமுடியாத நிலையில் அரசாங்கம் அவசரகால மணியை அடித்தது. எல்லாப் பகுதிகளிலும் செலவீடுகளைக் கட்டுப்படுத்தியது. உணவு மானியத்தில் மட்டுமன்றி சுகாதாரம், கல்வி போன்ற துறைகளிலும் வெட்டு நிகழ்ந்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சமூகப் பொதுநலனுக்கு ஒதுக்கப்பட்டிருந்த பங்கு 1970-72 இல் காணப்பட்ட 11.2 சத வீதத்திலிருந்து அடுத்த ஐந்து வருடங்களில் 9 சத வீதமாக வீழ்ச்சியடைந்தது. உண்மையான விகிதங்களில் நோக்கின் இது மேலும் அதிகமாக இருக்கலாம். மானிய முறையிலான அரிசிப் பங்கீடு 1970இல் 4 இறாத்தல் (ஒரு நபருக்கு ஒரு கிழமைக்கு) என்ற உச்சத்திலிருந்து 1974 இல் ஓர் இறாத்தலாகக் குறைக்கப்பட்டது. கல்வி மீதான தலா மொத்தச் செலவீடு முன்னைய நான்கு வருடங்களுடன் ஒப்பிடும் போது சராசரியாக 23 சத வீதம் குறைவாகக் காணப்பட்டதுடன் சுகாதாரத்தில் இது 16 சத வீதமாக இருந்தது.

பொதுநலன் அரசுக்கெதிரான ஒரு தலைப்பட்சமான கருத்து நிலை ஏற்படும் வகையில் அரசாங்கத்தினால் பொதுநலச் செலவீடுகளில் அதிகளவான குறைப்புக்கள் கொண்டு வரப்பட்டன. சிறிய அளவினரான ஆளும் முன்னணியில் இடதுசாரி அங்கத்தவர்கள் கடந்த காலத்தில் இதற்கெதிராக வாதாடியிருந்ததுடன் வெற்றியும் கண்டிருந்தனர். பொதுநலனியல் பாதையிலிருந்து சிறியளவான விலகலைக் கூட தடுத்து நிறுத்தும்படி கோரியிருந்தனர். இப்பொழுது, ஏறக்குறைய அரைநூற்றாண்டாக எதிர்ப்பு அரசியலின் ஊடாக ஒரு பொதுநலன் அரசைக் கட்டியெழுப்புவதற்கு உதவிவந்த அதே விடயத்தை விருப்பத்துக்கு மாறாக படிப்படியாகக் குறைக்கும் நிலை ஏற்பட்டது.

1970 களின் பிரச்சினையினூடாக நலனியல் வாதம் ஒரு அரசியல் கருவியாகத் தோற்றம் பெற்றது. இதன் விளைவாக, சீர்திருத்தவாதிகளின் வலையில் வெகுவாகச் சிக்குண்டதுடன் வலது-மத்திய ஐக்கிய தேசியக் கட்சி 1977 இல் அறுதிப் பெரும்பான்மையுடன் அரசாங்கத்தை அமைத்தபோது அதிகார வழியினூடாக இது அள்ளிச்செல்லப்பட்டது. 1977 இல் இருந்த மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8 சத வீதமான பொதுநலச் செலவீடுகள் 1985 இல் 3 சத வீதமாக வீழ்ச்சியடைந்தது. இது 1970-77காலத்தில் 2.9 சத வீதத்திலிருந்து ஒப்பீட்டுரீதியான சிறந்த செயலாற்றமாக 1978-83 காலத்தில் வருடாந்தம் 6.0 சத வீதமாக உயர்ந்து காணப்பட்டது.

ஒரு வறிய நாட்டில் நீண்ட காலத்தில் பொதுநலக் கொள்கைகளின் மீதான அழுத்தம் சுய-தோல்வியையே அடைந்து கொள்ளும். ஏனெனில் பொருளாதாரத்தின் உயிர்நாடியைத் தளர்வடையச் செய்வதன் மூலம் பொதுநலச் செலவீடுகள் படிப்படியாக நிலைத்து நிற்க முடியாமற் போய்விடுகின்றது. இது தான் 1970களின் படிப்பினை எனில் இதனைப் பற்றித் தீர்வு கூறுவதற்கு இதன் வரலாற்று ரீதியான மூலத் தன்மைகளையும், பிரச்சினையின் இயல்புகளையும் மிகக் கவனமாக நோக்குதல் வேண்டும். 1970களில் மிகக் கடுமையான நெருக்கடி இருந்ததென்பதை மறுக்கமுடியாது. பொருளாதாரம் வளர்ச்சி குன்றிய நிலையில் காணப்பட்டதுடன் நலனியல் வாதம் முன்பிருந்த நிலையில் தழைக்க முடியாது போய்விட்டது என்பது வாதத்துக்கு அப்பாற்பட்டது. ஆனால் இதிலிருந்து இலங்கையின் பொதுநலனியல் நீண்டகாலத்தில் சுய தோல்வியைக் கொண்டதாக இருக்கும் என்பதைப் பின்பற்றவேண்டிய அவசியம் இல்லை. அத்தகையதொரு தீர்மானத்தைக் கொண்டிருக்க வேண்டுமானால், 1970களின் வளர்ச்சி நெருக்கடிக்கு நலனியல் வாதம்தான் பொறுப்பு என்பதைக் காட்டவேண்டும். எனவே ஒருவர் எத்தகைய காரணகாரியப் பொறிமுறையினூடாக நலனியல்வாதம் வளர்ச்சி நெருக்கடியை முன்நடத்திச் சென்றிருக்கக் கூடும்"? என்ற கேள்வியை எழுப்பலாம்.

இத்தகைய பல்வேறு பொறிமுறைகளைப் பற்றி பல திறனாய்வாளர்களினால் முன் வைக்கப்பட்ட கருத்துக்கள் இரு இடைவெளி மாதிரியில் (two-gab model) நியம வடிவமைப்பாக ஒழுங்குபடுத்தப் பட்டுள்ளது. சிலர் வளர்ச்சிக்குத் தடையாகக் காணப்படும் சேமிப்புக்கள் பற்றி வலியுறுத்தியுள்ளனர். சேமிப்பு மற்றும் முதலீட்டு விகிதத்தினைக் குறைப்பதன் மூலம் பொதுநலனியல் வாதம் வளர்ச்சி நெருக்கடிகளைத் தோற்றுவிக்கும். வெளிநாட்டு நாணயமாற்றுத் தடைகளை வலியுறுத்திய வேறுசிலர் பொதுநலன்வாதமானது மிகக் கடுமையான வெளிநாட்டு நாணய மாற்று நெருக்கடியைத் தூண்டுவதன் மூலம் வளர்ச்சியில் ஒரு தளர்வைக் கொண்டுவரும் என்றனர். நலனியல் கொள்கைகள் வெளிநாட்டு நாணய மாற்று நெருக்கடிக்கு எவ்வாறு காரணமாக அமைகின்றது என்பது பற்றியும் பல்வேறு கதைகள் காணப்படுகின்றன. இலங்கையின் வளர்ச்சிப் பின்னடைவுக்கு பொதுநலனின் மீதான குற்றச்சாட்டை உறுதிப்படுத்துவதற்கு இத்தகைய விவாதங்கள் போதுமானவையன்று.

### சேமிப்பு தடைகள்

இலங்கை, பொதுநலனுக்கு அதிகளவில் செலவழித்ததின் மூலம் வளர்ச்சி நெருக்கடியைத் தனது வாசலுக்கே

அழைத்துவிட்டது எனக் கூறப்படுகின்றது. சேமிப்பு, முதலீட்டுக்கு மிகச் சிறியளவே ஒதுக்கியது. இத்தகைய வளர்ச்சிப் பின்னடைவுக்குப் பொதுநலனைக் குறைகூறுவதில் ஓர் அடிப்படைப் பிரச்சினை காணப்படுகின்றது. இலங்கை பொதுநலன் கொள்கைகளைப் பின்பற்றிய பொழுது, அதனை ஒத்த வருமான மட்டங்களையுடைய ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் பொழுது சேமிப்புக்கள் மற்றும் முதலீட்டினைப் புறக்கணித்தது என்பதை உறுதிசெய்ய முடியவில்லை. உதாரணமாக, 1961 இல் இலங்கையின் சேமிப்பு வீதம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 12 சத வீதமாக இருந்தது. ஆனால் தாழ்வருமானம் கொண்ட வளர்முக நாடுகளில் சராசரியாக 11 சத வீதமாகக் காணப்பட்டது. 1960 கள் முழுவதும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான பொதுநலன் செலவீட்டு விகிதம் இலங்கையின் வரலாற்றிலேயே எந்தத் தசாப்தத்திலும் இல்லாது மிக உயர்வாகக் காணப்பட்டதுடன் சராசரி சேமிப்பு வீதம் அயல்நாடான இந்தியா (14.5%), பங்களாதேஷ் (7.0%) என்பவற்றுடன் ஒப்பிடும் போது 11.5% ஆக இருந்தது. எனவே சேமிப்புக்கள் புறக்கணிக்கப்பட்டன எனக் கூறுவதில் எந்தவித முக்கியத்துவமுமில்லை. ஆனால் பொதுநலனுக்கு ஒதுக்கப்பட்ட வளங்கள் முதலீட்டுக்கு திசைதிருப்பப்பட்டிருந்தது என்பதில் உண்மையிருப்பினும் அத்தகைய விட்டுக்கொடுப்பு, வளர்ச்சி நெருக்கடிக்கு அதிகம் ஆளாகக் கூடிய நிலையில் இலங்கை ஏன் இருந்திருக்கும் என்பதனை விளக்க முடியவில்லை. சேமிப்பின் "மிகையான" விட்டுக்கொடுப்பு பொறுப்பாக இருந்திருக்கக் கூடும். ஆனால் அத்தகைய "மேலதிக" விட்டுக் கொடுப்பு நிகழவில்லை.

இங்கு ஒரு முக்கிய கேள்வி எழுகின்றது. சேமிப்புக்காக, உண்மையில் விட்டுக் கொடுப்பு நிகழவில்லையெனில் பொதுநலச் செலவீடுகளில் சராசரி மட்டங்களுக்கு மேலாக இலங்கையினால் நிதியிடுவதற்கு எவ்வாறு முடிந்தது. பாதுகாப்பு மீதான செலவீடுகளே இதற்கான பதிலாக அமையும். 1970 கள் வரைக்கும், இலங்கை பாதுகாப்புக்காக மொத்தத் தேசிய உற்பத்தியில் 1-2 சத வீதத்தையே செலவிட்டது. ஒப்பீட்டு ரீதியாக நோக்கும் பொழுது 1960 இல் வளர்முக நாடுகள் மொத்தமாக தமது மொ.தே.உற்பத்தியில் 4.2 சத வீதத்தையே இராணுவச் செலவீடுகளுக்கு ஒதுக்கியிருந்தது. இலங்கை 1 சத வீதத்தை ஒதுக்கியிருந்தது. (UNDP, 1991) இது எதனைக் காட்டுகின்றதென்றால், ஒன்றுக்கு ஒன்றினை விட்டுக் கொடுக்க வேண்டியிருந்தால் அது பொதுநலனுக்கும், பாதுகாப்புக்குமிடையில் தான் நிகழ்ந்திருக்கும். பொதுநலனுக்கும், சேமிப்புகளுக்குமிடையில் நிகழ்ந்திருக்காது. 1977க்குப் பின்னரான காலத்தில் புதிய அரசின் பின் நிகழ்ந்த மாற்றங்கள் இதனை உறுதிசெய்வதாகக் காணப்படுகின்றன. 1977-1985 இடையில், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பொதுநலச் செலவீடுகளின் பங்கு 8.1 சத வீதத்திலிருந்து 3.1 சத வீதமாக வீழ்ச்சியடைந்தது. அதேவேளையில் இராணுவச் செலவீடுகள் 1.5 சத வீதத்திலிருந்து 5.5 சத வீதமாக உயர்வடைந்தது. மீண்டும் பொதுநலன் மற்றும் பாதுகாப்புக்கு இடையில் ஒன்றைத் தெரிவுசெய்ய வேண்டியநிலை. பொதுநலச் செலவீடுகளை வெட்டிக் குறைத்ததினால் சேமிக்கப்பட்ட வளங்கள் (பிரதானமாக உணவு மானியங்கள்) சேமிப்புக்களுக்குப் பதிலாக பாதுகாப்புக்குத் திசைதிருப்பி விடப்பட்டன. உண்மையில், 1978-1985 காலத்துக்கான உள்நாட்டு சேமிப்பு வீதம் (13.6%), அதற்கு முன்னைய 1970-1972 நெருக்கடி வருடங்களிலும் ஏறக்குறைய ஒரே அளவாகவே (13.4%) காணப்பட்டன. இருப்பினும் 1970-1977 உடன் ஒப்பிடும்போது 1978-85 காலத்தில் முதலீட்டு வீதம் இரு மடங்காகியது. பரந்தளவில் வெளிநாட்டு வளங்களின் பாச்சல் அதிகரித்ததினால் (பொதுநலச் செலவீடுகளைக் குறைப்பதன் மூலம் வெளிவிடப்படும் மேலதிக வளங்களின் கிடைக்கக்கூடிய தன்மையினாலன்றி) தேசிய வருமானத்தின் வளர்ச்சி வீதம் இரண்டு மடங்காகியது.

எனவே இலங்கையின் நெருக்கடிக்கு முன்னைய, பின்னரான வரலாறு வெவ்வேறான வழிகளில் சில முடிவுகளைத் தருகின்றது. அதாவது பொதுநலன் வாதம் சேமிப்பு மற்றும் வளர்ச்சியில் எதனைத் தெரிவு செய்தல் என்பது காணப்படவில்லை. நெருக்கடிக்கு முன்னரான வரலாறு இலங்கையில் சேமிப்பு வீதம் உயர் பொதுநலச் செலவீடுகள் இருந்தும் ஒரு "எடுத்துக் காட்டாக" இருந்தது என்பதைக் குறிப்பிடுகின்றது. நெருக்கடிக்குப் பின்னரான வரலாறு கூறுவதன்படி "பொதுநலச் செலவீடுகளின் குறைப்பு சேமிப்பு வீதத்தின் மீது எவ்வித அதிகரிப்பையும் ஏற்படுத்தவில்லை." ஒப்பீட்டு ரீதியாக, நெருக்கடிக்கு முன்னரும், பின்னும் எதனைத் தெரிவு செய்வதென்பது நலனியல் வாதத்திற்கும், இராணுவச் செலவீடுகளுக்கும் இடையிலேயே காணப்பட்டது. எனவே இலங்கையில் 1970 களின் வளர்ச்சிப் பின்னடைவை, பொது நலனின் மேலதிகச் செலவீடுகளினால் தான் சேமிப்பு கட்டுப்படுத்தப்பட்டதென்ற குற்றச்சாட்டுக்கு எவ்விதமான ஆதாரமும் இல்லை.

## வெளிநாட்டு நாணயமாற்று கட்டுப்பாடு

இலங்கையின் வளர்ச்சி நெருக்கடிக்கு பொதுநலன் வாதத்தினைக் குற்றம் சாட்டுவதற்கான மாற்றுவழி வெளிநாட்டு நாணயமாற்றினூடாகவே வருகின்றது. இவ்விவாதம் இருவிடயங்களை முன்வைக்கின்றது.

(1) வெளிநாட்டு நாணயமாற்றுக் கட்டுப்பாட்டுடன் இணைந்ததாகவே 1970களின் நெருக்கடி காணப்பட்டது.
(2) இலங்கையின் கடந்தகால பொதுநலன் வரலாற்றினூடாக, பக்கச்சார்பாகவே இக்கட்டுப்பாட்டு உருவாகியது.

சேமிப்புக்களிலும் பார்க்க வெளிநாட்டு நாணயமாற்றுக் கட்டுப்பாடு ஒரு பிரதான பிரச்சினைக்குரிய மூலமாக இருந்திருக்கும் என எவரும் நினைக்கக்கூடும். உள்நாட்டுச் சேமிப்புக்களின் வீதம் உண்மையில் 1970 களின் முதல் நான்கு வருடங்களில் சராசரியாக 15 சத வீதமாக அதிகரித்தது. அதற்கு பின்னைய 5 வருடங்களில் இது 11 சத வீதமாகவே காணப்பட்டது. இவ்விரு முக்கிய வருடங்களில் சேமிப்புவீதம் 8 சத வீதத்துக்கு குறிப்பிடத்தக்க வீழ்ச்சியை அடைந்தது. ஆனால், நெருக்கடியின் காரணமாக அல்லது அதற்குப் பொறுப்பானதென்றாகவே இதனைக் கருதுதல் வேண்டும். அதாவது இவ்வருட காலங்களில் நெருக்கடியின் முழுவேகத்தைத் தாங்குவதிலிருந்து நுகர்வைப் பாதுகாப்பதற்காக சேமிப்பு வீதம் தாழ்ந்த நிலையில் காணப்பட்டது. (Athukorala and Jayasuriya, 1991).

இந் நெருக்கடிக்குப் பல காலமாக விருத்தி பெற்றுவந்த வெளிநாட்டு நாணயமாற்றுப் பற்றாக் குறையும் காரணமாகியது. சென்மதி நிலுவையில் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 1970

இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஒரு சத வீதத்திலிருந்து 1974 இல் 4 சத வீதமாக உயர்ந்தது. இதனை மேலும் மோசமாக்கும் வகையில் பற்றாக்குறையை நிதிப்படுத்தும் பிரச்சினையையும் இலங்கை எதிர்நோக்கியது. இந் நிதிப்படுத்தல் பிரச்சினை இரு வேறுபட்ட மூலங்களிலிருந்து எழுந்தன.

(1) 1970 அளவில் நாடு தனது வெளிநாட்டுச் சொத்து இருப்புக்களை ஏலவே விரயமாக்கியது. 1968இன் சிறியளவான தாராளப்படுத்தலை அடுத்து இறக்குமதிச் செழிப்பு இதற்குக் காரணமாக இருந்தது.

(2) உலக வங்கியிடமிருந்து கடன்கள் கிடைக்கவில்லை. நுகர்வுப்பொருட்களின் மீதான மானியங்களை வெட்டும்படி தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்ததுடன் அதனைக் கடனுக்கான முன்நிபந்தனையாகவும் விதித்தது. புதிய இடதுசாரி அரசாங்கம் ஆரம்ப வருடங்களில் இதற்கு உடன்பாடு தெரிவிப்பதற்கு விருப்பமற்றுக் காணப்பட்டது.

இச் சூழ்நிலையில், மாற்று வழியில்லாத அரசாங்கம் கடுமையான இறக்குமதி அழுத்தங்களைப் பிரயோகிக்கத் தொடங்கியது. இதனைச் செய்வது இலகுவானதன்று. இலங்கையின் பொருளாதாரத்தில் முதல் இருதசாப்தத்தில் இறக்குமதிகளின் அமைப்பில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழ்ந்தன. அத்தியாவசியமற்ற நுகர்வுப் பொருட்களின் பங்கு 1950 களில் மொத்த இறக்குமதிச் செலவீட்டில் 20 சத வீதத்திலிருந்து 1970 களின் ஆரம்பத்தில் 5 சத வீதத்துக்கும் குறைவாக வீழ்ச்சியடைந்தது. மாறாக, நடுத்தர மற்றும் மூலதனப் பொருட்கள் (அபிவிருத்திக்குரிய இறக்குமதிகள் என அழைக்கப்படும்) 1950-51 இல் 28 சத வீதத்திலிருந்து 1970-72 இல் 52 சத வீதமாக உயர்வடைந்தது. மிகுதியை மானிய அடிப்படையிலான உணவுப் பங்கீட்டுமுறைக்கான அத்தியாவசிய உணவு இறக்குமதிகள் கொண்டிருந்தன. எனவே சார்பளவில் தேவையற்ற இறக்குமதிகளில் அழுத்தங்கள் குறைவாகவே காணப்பட்டன.

உணவுப் பங்கீட்டு அளவைக் கடுமையாகக் கட்டுப்படுத்துவதில் அரசாங்கம் முனைப்பாக இருந்ததென்பதை நாம் ஏலவே அவதானித்தோம். ஆனால் சமூக, அரசியல் விளைவுகளைத் தூண்டாமல் உணவுத் துறையின் மீது சீராக்கலின் முழுச் சுமைகளையும் விதிப்பது சாத்தியமற்றதொன்றாக இருந்தது. தவிர்க்கமுடியாதவாறு, அபிவிருத்திக்குரிய இறக்குமதிகள் என அழைக்கப்பட்டவை இறக்குமதிப் பட்டியலில் அரைவாசிக்கு மேல் காணப்பட்டன.

எனவே கடுமையான வெளிநாட்டு நாணயமாற்றுக் கட்டுப்பாடுகளினால் 1970 களின் வளர்ச்சி நெருக்கடி தூண்டப்பட்டதென்பது தெளிவானது. ஆனால் எவ்வாறு பொதுநலன் செலவீடுகள் இவ் எல்லாவற்றுக்கும் பொறுப்பானதாக இருந்தது? இதுபற்றி இரு கோட்பாடுகள் காணப்படுகின்றன.

(1) பெருந்தோட்டப் பொருளாதாரத்தினூடாகக் காணப்படும் தொடர்பு.
(2) இறக்குமதிப் பதிலீட்டுக் கைத்தொழிலாக்கத்தின் தோல்வி.

## (1) பொதுநலன் வாதமும் பெருந்தோட்டப் பொருளாதாரத்தின் நெருக்கடியும்

பொதுநலன் வாதத்திற்கும் வெளிநாட்டு நாணயமாற்று நெருக்கடிக்குமிடையில் காணப்படும் தொடர்புகளைப் பெருந் தோட்டப் பொருளாதாரம் பற்றிய கதை விளக்குகின்றது. இவைபற்றிய மேலும் பல விபரங்கள் Bhalla (1988) என்பவரது ஆய்வுகளில் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. புதிதாக சுதந்திரமடைந்த அரசாங்கத்தின் பொதுநலன் தொடர்பான விருத்திகள் 1950களிலேயே ஆரம்பிக்கப்பட்டன. அதிகரித்த செலவீடுகளை தேயிலை, றப்பர் போன்ற ஏற்றுமதிப் பயிர்களின் மீது வரிவிதிப்பதன் மூலம் நிதிப்படுத்தலாம் என இலங்கை அரசாங்கம் தீர்மானித்திருந்தது. உயர்வான ஏற்றுமதி வரிகள், பெருந்தோட்டத் துறையின் உற்பத்தியளவை விருத்தி செய்வதில் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தியது. இதனால் வெளிநாட்டு நாணயமாற்றைச் சம்பாதிப்பதிலான அதன் திறமை கால ஓட்டத்தில் குறைவடைந்தது. இதன் விளைவாக, பெருந்தோட்ட செல்வத்தின் மீது கட்டியெழுப்பப்பட்டிருந்த பொதுநல அரசின் அடித்தளம் தளர்வுறத் தொடங்கியது. இவற்றின் ஒட்டு மொத்தமான தாக்கம் இலங்கையின் பொருளாதாரத்தை நிலநெய் விலைகளின் உயர்வு பாதித்தபோது மிக அதிகமாக உயர்ந்தது. தனது சொந்த ஏற்றுமதிகளை விரிவாக்குவதன் மூலம் இதன் தாக்கத்தை எதிர்கொள்வதற்கு இலங்கையினால் இயலாமல் இருந்தது. ஏனெனில் ஏற்றுமதித் துறையின் முக்கிய அம்சமானது கடுமையான வரிச்சுமையினால் உறுதி குலைந்திருந்தது. இதனால் பொதுநலன் செலவீடுகளுக்கான நிதிப்படுத்தல் பாதிக்கப்பட்டது. எனவே, நீண்ட காலத்தில், இத்தகைய நிலைத்திருக்கக்கூடிய நிதிப்படுத்தல் சாத்தியமற்றதாக மாறியது. சுருக்கமாகக் கூறின் பொன்முட்டையிடும் வாத்தினைக் கொல்லும் பழைய கதையாகவே இருந்தது. இத்தகைய நீண்ட கதையை 3 கூறுகளாகப் பிரித்து நோக்க முடியும்.

(1) பொதுநலனுக்கு நிதியிடுவதற்கு ஏற்றுமதிகளின் உயர்வான வரிவிதிப்பு அவசியமானது.
(2) பெருந்தோட்டப் பொருளாதாரத்தின் மெதுவான வளர்ச்சிக்குப் பொறுப்பாக உயர்வான வரிகளைக் கொண்டிருத்தல்.
(3) 1970களின் வெளிநாட்டு நாணயமாற்று நெருக்கடிக்காக பெருந்தோட்டத்துறையின் மெதுவான வளர்ச்சியைக் குற்றம்சாட்டுதல்.

ஏற்றுமதிப் பயிர்களின் மீதான உயர் வரிவிதிப்பு மற்றும் பொதுநலன் நிதியீட்டம் என்பவற்றிற்கு இடையில் உள்ள தொடர்பு பற்றி நோக்கும்போது பிரதான பிரச்சினை என்னவெனில், ஏற்றுமதி வருமானம் பொதுநலன் செலவீடுகளுக்கு மட்டுமன்றி ஏனையவற்றிற்கும் பயன்படுத்தப்பட்டிருந்தாலும் பொதுவாகவே உயர் வரிகளுக்குப் பொறுப்பானது எனக் கூறப்படுவது ஏன்? சுதந்திரத்தின்பின் பெருந்தோட்டத்துறையின் பெருமளவிலான செல்வம் ஒரு சில பிரிவினரின் நன்மைக்காக மட்டுமன்றி நாட்டின் நன்மைக்கே பயன்படுத்தப்படவேண்டும் என்ற தீர்மானம் எடுக்கப்பட்டது. உயர்வான ஏற்றுமதி வரிகளும் இத்தகைய மீள்பரம்பலினை மனதிற் கொண்டே விதிக்கப்பட்டன. அரசாங்க வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு பொதுநலனில் உயர்வான செலவீட்டு

மட்டங்களுக்குக் காரணமாக இருந்தது. அத்துடன் ஏனைய வகைச் செலவீடுகளும் உயர்வான மட்டத்திற்கு உயர்ந்தன.

உயர்வான ஏற்றுமதி வரிகளுக்கு உணவு மானியங்களே பொறுப்பு என Bhalla (1988) விவாதித்திருந்தார். 1950களில் காணப்பட்ட அதிகரித்த உணவு மானியங்கள் இக்காலத்தில் காணப்பட்ட அதிகரித்த ஏற்றுமதி வரிகளில் ஏறக்குறைய அரைவாசியையே (55%) கொண்டிருந்தன. இருந்தாலும், ஏற்றுமதி வரிகள் மாத்திரமன்றி, இறக்குமதி வரிகள், நேரடிவரிகள் என்பனவும் இக்காலத்தில் அதிகரித்திருந்தன. வருமானத்தின் ஏனைய எல்லா மூலங்களும் ஏனைய செலவுகளுக்கு நிதியீட்டம் செய்ய, உணவு மானியங்களுக்கு மாத்திரம் ஏற்றுமதிவரிகள் நிதியீட்டம் செய்கின்றன என ஏன் கருதப்பட்டது. வேறுவழிகள் ஏன் காணப்படவில்லை. இதற்கு Bhalla வின்பதில் இலகுவானது. அரசியல்வாதிகளின் சிந்தனையும் அவ்வாறே இருந்தது. இதற்கு ஆதாரமாக 1951 இல் நிதிமந்திரியாக இருந்த ஜே.ஆர்.ஜெயவர்தனாவின் சில கூற்றுக்கள் தரப்படுகின்றன. இதில் ஏற்றுமதி வரிகளுடன் அரிசி மானியத்தின் அதிகரித்த செலவையும், அவர் தெளிவாகத் தொடர்புபடுத்தியிருந்தார். எனது 1950-51 மூல வரவு-செலவுத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கும் செலவு மதிப்பீடுகளை, செலவீடுகளில் காணப்படும் இத்தகைய அதிகரிப்புக்கள் கணிசமான அளவு உயர்த்தி விட்டன. இதனால் வருமானத்தில் அதிகரிப்பு அவசியத் தேவையாகும். அதன் பிரகாரம், பிரதான ஏற்றுமதிப் பண்டங்களின் மீதான ஏற்றுமதி வரிகள் மார்ச் 14 ஆம் திகதியிலிருந்து உயர்த்தப்படுகின்றன."

ஆனால் அரசியல்வாதிகள் உண்மையில் மனதில் எதனைக் கொண்டிருந்தனர் என்பதை அறிவது கடினம். ஒருசில பெருந்தோட்ட செல்வந்த உரிமையாளரின் (அவர்களின் பெரும்பாலானோர் வெளிநாட்டவர்கள்) இழப்பில் இலட்சக்கணக்கான சாதாரண நுகர்வோருக்கு உதவி வழங்குவதில் வாக்குகளை நோக்காகக் கொண்ட அரசியல்வாதிகள் முன்நிற்பர் என்பது எதிர்பார்க்கக் கூடியதே, ஆனால் உயர் ஏற்றுமதி வரிகள், உணவு மானியங்களை உயர்த்துவதற்கான தீர்மானத்தினால் தான் அறவிடப்பட்டதென்பதில் எந்தவித உட்கருத்தும் இல்லை. நிதிமந்திரி எங்கோ ஒரு இடத்தில் செலவீடுகளை வெட்டுவதற்கு அல்லது மாற்று வருமான மூலங்களைக் கண்டறிவதற்கு மானியச் செலவீட்டினை முக்கிய சில பிரிவினரின் மீது நகர்த்தினார். இவ்வாறு அவர் செய்யாவிட்டால் பெருந்தோட்ட உரிமையாளரிடமிருந்து பணம் பொறுவதிலும் பார்க்க ஏனைய பிரிவினரை வெறுப்படையச் செய்வதினால் ஏற்படும் அரசியல் செலவு மிக அதிகமாக இருக்கும். இதனாலேயே ஏற்றுமதி வரிகளை உயர்த்துவதற்கான தேவை எழுந்தது.

இத்தகைய கருத்துக்கு ஆதாரமாக Bhalla ஒரு சோதனையையும் மேற்கொண்டார். பல்வேறு காரணிகளின் மீது ஏற்றுமதிப் பயிர்களுக்கான உற்பத்தியாளனின் தேறிய விலையின் பிற் செலவு மதிப்பீட்டை மேற்கொண்டார். இக் காரணியின் குணகம் மிகப் பெரியதாகக் காணப்பட்டதுடன் குறிப்பிடத்தக்க வகையில் தேயிலைக்கு எதிர்கணியமாக (றப்பருக்கு இல்லை) காணப்பட்டது. இதிலிருந்து மானியங்களின் அமுக்கம் உயர்வான வரிகளின் காரணமாக உற்பத்தியாளனின் தேறிய விலைகளை அமுக்கி இருக்கவேண்டும் என்ற முடிவுக்கு வந்தார். இவ்வாறிருப்பினும் இது எதனையும் தீர்க்கவில்லை. வரவு-செலவுத்திட்டச் செலவீட்டில் ஏனைய எதாவது வகைகளும் உணவு மானியங்களுடன் நேர்கணிய தொடர்பைக் கொண்டிருந்தால் இத்தகைய முடிவினையே காட்டியிருக்கும். எனவே பிற்செலவுகள் உயர் ஏற்றுமதி வரிகளுடன் இணைந்துள்ள பொறுப்பான தன்மை எப்படி ஏற்பட்டது என்ற கேள்விக்குத் தீர்வாக அமையாது. சரிசமனான அளவே அடிப்படைப் பிரச்சினையாகக் காணப்படுகின்றது. ஒன்றுக்கு மேற்பட்ட மூலங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட வளங்களினால் ஒன்றுக்கு மேற்பட்ட செலவீட்டு வகைகள் நிதிப்படுத்தப்பட்டால் செலவீட்டின் ஒருவகையை, குறிப்பிட்ட வருமான மூலத்துடன் தொடர்புபடுத்துவது கருத்துள்ள வழிகாகக் காணப்படவில்லை.

தொடர்ச்சியான விவாதத்தில் இரண்டாவது படிமுறையை நோக்கினால் உணவு மானியங்கள் உயர்வான ஏற்றுமதி வரிகளுக்குப் பங்களித்தது எனக் கருதினால், பெருந்தோட்டத்துறையின் மிகக் குறைந்த வளர்ச்சியுடன் உயர்வான வரிகளைத் தொடர்புபடுத்திப் பார்க்க முடியாது. ஏனெனில் ஏனைய வலிமையான தூண்டுதல் அற்ற விடயங்களும் செயற்படுகின்றன. இதில் மிகமுக்கியமானது, வெளியீட்டு வர்த்தக மாற்றுவீதத்தில் ஏற்பட்ட விரைவான வீழ்ச்சியே. வளர்ச்சி நெருக்கடிக் காலத்தில் 1970 களில் ஆரம்பித்திருந்தது. 1955 இல் 201 ஆக இருந்த வர்த்தகமாற்றுவீதச் சுட்டெண் 1970 இல் 106 ஆக வீழ்ச்சியடைந்ததுடன் 1975 இல் மேலும் 58ஆக வீழ்ச்சிபெற்றது. என்ற நீடித்த அச்சுறுத்தலும் காணப்பட்டது.

இத்தகைய ஏனைய தடைகளுடன் ஏற்றுமதி வரி கொண்டுள்ள தொடர்பு எத்தகைய முக்கியத்துவத்தைக் கொண்டு இருந்தது. இவ்விடயம் தொடர்பாக சரியான அளவறியும் முறையிலான மதிப்பீட்டினை எவரும் மேற்கொள்ளவில்லை. ஏற்றுமதிவரிகளுடனோ அல்லது இல்லாமலோ முதலீட்டு வருமான வீதங்களின் ஒப்பீட்டுடன் தொடர்புடையதாக இது இருக்கக் கூடும். சினோட்கிறாஸ் (1966) என்பவர் பரும்படியான மதிப்பீட்டைத் தருவதற்கு முயற்சித்தார். 1946க்கும் 1960க்குமிடையில் வரிக்குப் பிந்திய எல்லை இலாபங்களை மதிப்பீடு செய்தார். எல்லை இலாபங்களில் கணிசமான அளவு குறைப்பு காணப்பட்டதை இவர் அவதானித்தார்.

மூன்று பயிர்களும் போருக்குப் பிந்திய காலத்தினூடாக உயர் இலாபம் தருபவையாக இருந்தன. போருக்கு முந்திய காலங்களில் செலுத்தியதைப் போன்றே உயர்ந்தளவான இலாப வீதங்களில் அரசாங்கமும் தலையிடவில்லை. இந்தக் காலத்திலும் உள்நாட்டு, வெளிநாட்டு பங்குடமையாளர்களுக்கும் செலவழிக்கக் கூடியதாக இருந்தது."

வேறுவார்த்தையில் கூறுவதாயின் 1960 வரைக்குமாவது, பெருந்தோட்டச் செல்வத்தின் மீள்பங்கீடானது அத் தோட்ட உரிமையாளர்களின் அதிகூடிய இலாபத்தை" (super profit) வெட்டுவதன் மூலம் அடைந்துகொள்ளப்பட்டது. அவர்களின் வியாபாரத்தினை இலாபமற்றதாக மாற்றவில்லை. 1960இல் இருந்து இலாப எல்லை மேலும் வீழ்ச்சியடைந்தது. ஆனால் 1970களின் இறுதிவரைக்கும் எல்லை விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியே இதற்கான முழுமையான காரணமாக இருந்தது. ஏற்றுமதிக்கான தீர்வையோ, உற்பத்திச் செலவோ எதுவும்

இக்காலத்தில் அதிகரிப்பைக் காட்டவில்லை. 1970களின் நெருக்கடிக்கு முன்பு ஏற்றுமதித் தீர்வைகள், பெருந்தோட்ட உரிமையாளரின் சலுகைகளைக் குறைப்பதற்கு பங்களித்தது என்பதில் தெளிவற்ற தன்மை காணப்படுகின்றது. மேலும் விலைத்தூண்டுதல்கள் (Price incentives) இலங்கையில் தாக்கம் உடையதாக இல்லை. தேயிலைக்கான நிரம்பல் பதிலிறுப்பு பற்றிய ஆய்வில் வெளியீட்டின் நீண்டகால விலை நெகிழ்ச்சி இலங்கையில் 0.1 ஆகவும் தன்சானியா, இந்தியாவுக்கு 0.4 ஆகவும், கெனியா மலாவிக்கு 1.0 - 1.3 ஆகவும் இருந்தது. (Ramanujam, 1986).

பெருந்தோட்டத் துறையின் பொதுவான வளர்ச்சி என்னதான் காரணமாக இருந்தாலும், 1970களின் நெருக்கடிக்கு இதன் பலவீனத் தன்மையைக் குற்றம் சாட்டுதல் தவறானது. இந் நெருக்கடி பற்றிய மிகக் கவனமான ஆய்வின்படி பிரச்சினையின் பிரதான பகுதி வெளியிலிருந்தே தோற்றம் பெற்றதைக் காணலாம். வர்த்தக மாற்றுவீதத்தின் வீழ்ச்சியின் ஒரு பகுதியாகவே இது தோன்றுகின்றதுடன் உள்நாட்டு விவசாயத்தில் நிரம்பல் அதிர்வுகளின் ஒரு பகுதியாகவும் காணப்படுகிறது. முன்னரே குறிப்பிட்டது போன்று வர்த்தக மாற்றுவீதமானது நெருக்கடிக்கு முன்னரே வீழ்ச்சியடையத் தொடங்கி விட்டது. 1955 இல் 201 ஆக இருந்த சுட்டெண் 1970 இல் 106 ஆக வீழ்ச்சி பெற்றது. 1973இன் நிலநெய் விலை அதிகரிப்புக்கு முன்பே 1970 - 72 காலத்தில் மேலும் 23 சத வீதம் வீழ்ச்சியடைந்தது. நிலநெய் விலை அதிர்ச்சிகளும் சேர்ந்து மேலும் வர்த்தக மாற்று வீதத்தில் வீழ்ச்சியை ஏற்படுத்தின. 1970 - 75 காலத்துக்குரிய 5 வருடங்களுக்கு மேல் மொத்த வீழ்ச்சி 50 சத வீதமாகக் காணப்பட்டது.

அதேநேரம் உள்நாட்டு விவசாயம், மோசமான அறுவடைகளினால் மேலும் பாதிக்கப்பட்டதுடன் அது ஏற்றுமதி, இறக்குமதி ஆகிய இருபக்கங்களிலுமிருந்து சென்மதி நிலுவைப் பிரச்சினையை மேலும் விரிவடையச் செய்தது. இறக்குமதிப் பக்கத்தில் பிரதான பிரச்சினை நெல் துறையிலேயே ஏற்பட்டது. 1970 இலிருந்து 1973 வரையான தொடர்ச்சியான வருடங்களில் நெல் அறுவடை மிகக் குறைவாக இருந்ததுடன் அரிசி, கோதுமை இறக்குமதியை அதிகரிக்க வேண்டிய தேவையும் எழுந்தது. இந்நேரத்தில் சர்வதேச சந்தையில் தானியங்களுக்கான விலை மிக உயர்வாகக் காணப்பட்டது. 1974 இல் தானியங்களுக்கான மேலதிக இறக்குமதிப்பட்டியல், நிலநெய் இறக்குமதியின் மேலதிக செலவுக்கு மேலாக அதிகரித்துக் காணப்பட்டது. ஏற்றுமதிப் பக்கத்தில், 1973 இல் பூச்சியின் கடுமையான பாதிப்பினால் தெங்கு உற்பத்தி மூன்றிலொன்றாகக் குறைந்தது. இது மூன்றாவது முக்கிய ஏற்றுமதிப்பயிராக விளங்கியது. இதற்கு அடுத்த வருடத்தில் தேயிலை ஏற்றுமதியும் வீழ்ச்சியடைந்தது. நிலச் சீர்திருத்தங்களினால் ஏற்பட்ட இடையீடுகளும் நிலநெய் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பினால் செயற்கை உரங்களின் செலவுகள் அதிகரித்திருந்தமையும் காரணமாக இருந்தது.

பெருந்தோட்டப் பயிர்களின் ஏற்றுமதி குறைந்திருந்தாலும் அது எப்படியாவது வெளிநாட்டு நாணய மாற்று நெருக்கடிக்கு பங்களித்திருக்கும். விலைத்தூண்டுதல்கள் இல்லாத காரணத்தினால் முடிவுப் பொருள் உற்பத்தியிலும் பார்க்க நிரம்பலிலேயே மறைமுக அதிர்வுகளை ஏற்படுத்தியிருக்கும்.

இங்கு என்ன முக்கியமென்றால், இக்காலத்தில் ஏற்றுமதி அளவுகள் முக்கிய பிரச்சினையாகக் காணப்படவில்லை. மதிப்பீடு செய்யப்பட்டதன்படி, ஏற்றுமதி வருமானங்களின் மொத்த இழப்பில், வர்த்தக மாற்றுவீதத்தின் காரணமாக ஏற்பட்ட இழப்புக்கும், வர்த்தகத்தின் அளவில் ஏற்பட்ட குறைப்பிற்கும் இடையிலான பிரிவு விகிதம் 1974 இல் 83 : 17 ஆகவும், 1975 இல் 87:13 ஆகவும் காணப்பட்டது. (Jeyatissa, 1982) இதனை நோக்கும் போழுது 1970களின் நெருக்கடிக்கு ஒரு தலைப்பட்சமான காரணமாக அல்லது கடுமையான தூண்டுதலுக்குப் பெருந்தோட்டத் துறையின் மெதுவான வளர்ச்சியே காரணம் எனக் குற்றம் சாட்டுதல் முடியாது.

## (2) பொதுநலன் வாதமும் இறக்குமதிப் பதிலீட்டு நெருக்கடியும்

1970களின் நெருக்கடியுடன் தொடர்புபடுகின்ற இரண்டாவது கோட்பாடு நெருக்கடியின் தோற்றம், இயல்பு பற்றி இத்தகைய தவறு எதனையும் விடவில்லை. வெளிநிலைக்காரணிகளாக வெளிநாட்டு நாணயமாற்று நெறுக்கடியை இது முழுதாக ஏற்றுக் கொள்கின்றது. பொதுநலனியல் வாதம் அந்நியச் செலாவணி நெருக்கடியை மட்டும் உருவாக்கவில்லை, வளர்ச்சி நெருக்கடியையும் தூண்டுகின்றது எனக் குற்றம் சுமத்தப்படுகிறது. அந்நியச் செலாவணிப் பற்றாக்குறையினாலேயே இது ஏற்படுகின்றது. இங்கு கலந்துரையாடப்படுகின்ற கோட்பாட்டின்படி பொதுநலன் வாதமே முற்றுமுழுதான காரணம். ஏனெனில் பொதுநலன் வாதமே இறக்குமதி அமைப்பின் உறுதித்தன்மைக்கு இட்டுச் செல்லக் கூடியது. இது பற்றித் தொடரான விவாதம் காணப்படுகின்றது. அவை:

(1) 1950களில் காணப்பட்ட மிகையான பொதுநலச் செலவீடுகள் வரவு-செலவுப் பற்றாக்குறையின் உயர்வான அதிகரிப்புக்குக் காரணமாகியதுடன் அதுவே சென்மதி நிலுவைப் பிரச்சினையை மோசமானநிலைக்கு இட்டுச் சென்றது.

(2) வர்த்தக மாற்றுவீதத்தின் வீழ்ச்சியின் காணமாக 1950களின் இறுதிப் பகுதியில் சென்மதிநிலுவை மேலும் பாதிப்படைந்தபோது செலவீட்டுப் பக்கத்தில் தேவையான சீராக்கலைச் செய்வது அரசாங்கத்துக்குக் கடினமாக இருந்தது. ஏனெனில் பொது நலக் கொள்கைகள் தொடர்பாக மீற முடியாத அரசியல் ஒப்புதலில் சிக்கியிருந்தது.

(3) செலவீடுகளைச் சரி செய்ய இயலாத நிலையில், 1960களின் ஆரம்பத்தில் இறக்குமதிக் கட்டுப்பாட்டு அளவுமுறைகளை ஏற்றுக்கொள்வதற்கு அரசாங்கம் பலவந்தப்படுத்தப்பட்டது. பொருளாதாரத்தை இறக்குமதிப் பதிலீட்டுக் கைத்தொழிலாக்கத்தின் பாதையில் இட்டுச் செல்ல பலவந்தமாக வலியுறுத்தப்பட்டது.

(4) இறக்குமதிப் பதிலீட்டுக் கைத்தொழிலாக்கத்தின் திறமையின்மையும், இறுக்கமும் (inefficiencies and rigidities) நெகிழ்சியற்ற இறக்குமதி அமைப்பை உருவாக்கியதுடன் 1970 களின் மத்தியில் அந்நியச் செலாவணி நெருக்கடி தாக்கிய பொழுது அதிகளவான பாதிப்புக்களை ஏற்படுத்தியது.

இவை எல்லாவற்றையும் இங்கு ஆராயப் போவதில்லை. முதல் இரண்டினையும் நுணுகி ஆராய்வதே பிரதான நோக்கமாகும். அதாவது 1960 களின் ஆரம்பத்தில் முன் வைக்கப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாடுகளுக்கும் பொதுநலச் செலவீடுகளுக்கும் இடையில் ஏதாவது தொடர்பு காணப்படுகின்றதா என்பதை மதிப்பிடுவதே நோக்கமாகும். இத்தொடர்பு பலவீனமாக இருக்கின்றது அல்லாவிட்டால் தொடர்பு இல்லை என விவாதித்தால் இக்கதை முழுவதையும் ஏற்றுக் கொள்ளாமல் விடலாம். விவாதத்தின் முதல் படி சென்மதி நிலுவைகளின் போலாக் மாதிரி (Pollak Model) யின் தர்க்கத்தின் மீது விளக்கப்படுகின்றது. சென்மதி நிலுவையில் ஏற்படும் சீரழிவு வரவு-செலவுப் பற்றாக்குறைகளில் நேரடியாகப் பாதிக்கும் என்பது இம்மாதிரியில் குறிப்பிடப்படுகின்றது. இக்கோட்பாட்டின் படி பெரியளவான வரவு-செலவுத்திட்டப் பற்றாக்குறை மொத்தக் கேள்வியை (aggregate demand) அதிகரிக்கும். அது இறக்குமதிகளுக்கான அதிகரித்த கேள்வியில் விரிவாக்கத்தை உருவாக்கும். ஒரே வீதத்தில் ஏற்றுமதிகள் உயர்ச்சியடையவில்லை எனின் குறுங்காலத்தில் சென்மதி நிலுவைகள் அமுக்கத்தின் கீழ் கொண்டுவரப்பட்டு விடும். இலங்கையின் மத்திய வங்கி 1950களின் இரண்டாவது அரைப்பகுதியில் இத் தொனிப் பொருள் பற்றித் தொடர்ச்சியாக அறிவுறுத்தி வந்துள்ளதுடன் 1960களிலேயே இறக்குமதிக் கட்டுப்பாட்டினை மேற்கொண்டது.

வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட இம் முயற்சிக்குப் போதிய காரணமும் இருந்தது. 1950 களின் முதல் அரைப்பகுதியில் அரசாங்க வருமானத்தின் பிரதான வருமான மூலமாகக் காணப்பட்ட ஏற்றுமதிப் பயிர்களின் வாய்ப்புக்களில் பெரிதும் தங்கியிருந்த வரவு-செலவுப் பற்றாக்குறை பெரிதும் பாதிக்கப்பட்டது. 1950 களின் நடுப்பகுதியில் முடிவுற்ற தேயிலை விலைச் செழிப்பு வரவு- செலவுப் பற்றாக்குறையில் உயர் போக்கினைத் தொடக்கிவிட்டது. விலை மற்றும் ஏற்றுமதி அளவுகளைப் பொறுத்தவரையில் ஏற்றுமதிப் பயிர்கள் இக் காலத்தில் தேக்க நிலையில் காணப்பட்டதினால் வருமானம் மிகச் சிறியளவே அதிகரித்தது. 1970களின் முதல் அரைப்பகுதியில் காணப்பட்ட அதிக ஏற்ற இறக்கமற்ற போக்குகளின் பின்னர், அதே தசாப்தத்தில் இரண்டாவது அரைப்பகுதியில் வரவு-செலவுக்குரிய செலவீடுகள் பெரும்பாலும் 50 சத வீதமாக (நடைமுறை விலைகளில்) திடீரென உயர்ந்தது. இதன் பிரதிபலிப்புக்களைச் சென்மதிநிலுவையின் மோசமாகிச் செல்லும் போக்கிலிருந்து அவதானிக்க முடிந்தது. ஏற்றுமதி வருமானங்கள் தேக்கநிலையில் இருந்தது. ஆனால் இறக்குமதிகள் 35 சத வீதத்தினால் அதிகரித்தது. 1950 களில் கொரிய யுத்தச் செழிப்பினால் போதியளவு வெளிநாட்டு நாணய இருப்புக்கள் திரட்சியடைந்திருந்தன. 1950 களின் மத்திய பகுதியில் ஏற்பட்ட தேயிலை விலைச் செழிப்பு அதிகரித்த இறக்குமதிகளுக்கு செலுத்தப்பட்டது. ஆனால் இருப்புக்கள் விரைவில் கரைந்துவிட்டதினால் மிகக் கடுமையான இறக்குமதிக் கட்டுப்பாடுகளை விதிப்பதற்கு அரசாங்கம் நிர்ப்பந்திக்கப்பட்டது.

எனவே வரவு-செலவுப் பற்றாக்குறையை இறக்குமதிப் பதிலீட்டு தொடக்கத்துடன் தொடர்புபடுத்தும் விடயம் போதியளவு நம்பத்தகுந்ததாகக் காணப்படவில்லை. ஆனால் அதிகரித்த வரவு-செலவுத்திட்டச் செலவீடுகளுக்கான பொறுப்பு பொதுநலச் செலவீடுகள் மீது சுமத்தப்படுவது ஏன் என்பது இன்னும் விளங்கவில்லை. இங்கே தொடர்பு மிகவும் பலவீனமாக உள்ளது. 1950களின் இரண்டாவது அரைப்பகுதியில் பொதுநலச் செலவீடுகள் மிக அதிக நிலைக்கு உயர்ந்தது என்பது உண்மையே. ஆனால் 1954 /55 இலிருந்து 1960 /61 வரை உயர்வான வரவு-செலவு பற்றாக்குறை (நடைமுறை விலைகளில் 581 மி.ரூபாய்) அதிகரித்த பொதுநலச் செலவீடுகளுக்கு (450 மி.ரூபா) மிக நெருங்கிய நிலையிலேயே காணப்பட்டது. எனவே அதிகரித்துச் செல்லும் வரவு-செலவுத்திட்டப் பற்றாக்குறைக்குப் பொதுநலச் செலவீடுகளைக் காரணமாகக் காட்ட முடியாது. இதே காலப்பகுதியில் அரசாங்கத்தின் மொத்தச் செலவீடு 908 மி.ரூபாவாக அதிகரித்தது. இவ் அதிகரித்த செலவீடுகளில் பொதுநலன் செலவீடுகள் அரைப் பங்குக்கு மட்டுமே காரணமாக உள்ளது என்பதைக் கருதுகின்றது. மிகுதி அரைவாசிச் செலவீடுகளை உயர்ந்து செல்லும் வரவு-செலவுத் திட்டப் பற்றாக்குறைக்கு காரணமானது என ஏன் கூறமுடியாது. அதாவது இவ் அரைவாசியைப் போலன்றி, பொதுநலச் செலவீடுகளின் பங்கு சமூகத்தைப் பொறுத்தவரை குறைவான பெறுமானத்தைக் கொண்டவை. இவற்றின் தாழ்ந்த நிலைபற்றி ஒருவர் முன்னுணர்வான எண்ணத்தைக் கொண்டிருந்தால் மாத்திரமே 1950களின் பொதுநலச் செலவீடுகள் 1970 களின் வளர்ச்சி நெருக்கடிக்கு காரணம் என்ற குற்றச்சாட்டைக் கொண்டிருக்கலாம். எனவே பொதுநலனின் மீதான இலங்கை அரசாங்கத்தின் விதிவிலக்கான ஈடுபாடு பொருளாதார வளர்ச்சியுடனான பிணக்கை ஏற்படுத்தியது என்பதற்கு ஆதாரமாக எவ்வித சான்றுகளும் காணப்படவில்லை.

## 6. வளர்ச்சி மற்றும் பொதுநலன் வாதத்துக்கு இடையிலான குறைநிரப்புத் தன்மைகள்

இலங்கையின் அனுபவமானது வளர்ச்சிக்கும், பொதுநலனுக்குமிடையிலான குறைநிரப்புத் தன்மையில் (complementarity) மிகச் சிறந்த படிப்பினையை அளிக்கின்றது. அடிப்படையில் குறைநிரப்புத் தன்மை பல வகையானவை. மனித முதல் பற்றிய இலக்கியங்களில் இதில் ஒருவகை நன்கு அறிமுகமானது. நன்கு நெறிப்படுத்தப்படும், (நிர்வகிக்கப்படும்) பொதுநலக் கொள்கைகள் வருமான வளர்ச்சி வீதமாகிய நலன்பயக்கும் தாக்கங்களை (beneficial effect) கொண்டிருக்கும். உணவு, சுகாதாரம், கல்விமீதான பொதுநலச் செலவீடுகள் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதுடன் ஆரோக்கியமான, கல்வியறிவு கொண்ட மக்களை அதாவது மிகப் பெறுமதியுள்ள மனித மூலதனத்தையும் கட்டியெழுப்பக் கூடியது. இது வருமான வளர்ச்சியின் உயர் வீதங்களை அடைந்து கொள்வதற்கு மிகச் சிறந்த பங்களிப்பை வழங்கும். இங்கே பொதுநலன் என்பது வளர்ச்சிக்கு ஆதாரமான ஒரு குறைநிரப்பு அம்சமாக வலியுறுத்தப்படுகின்றது.

இரண்டாவது வகையான குறைநிரப்புத்தன்மை எதிர்த்திசையில் செல்லும் காரணத் தன்மையின் அடிப்படையில் அமைந்துள்ளது. அதாவது உயர் வளர்ச்சியானது மிகத் தீவிரமான பொதுநலன் கொள்கைகளுக்கு ஆதரவாக இருக்கும். இவ்விடயத்தினை இலகுவாகக் கூறலாம். உயர்வான வளர்ச்சியானது, பொதுநலச் செலவீடுகளை உயர்மட்டத்தில் நிர்வகிப்பதற்குத் தேவையான வளங்களை திரட்டுவதற்கு அரசாங்கத்திற்கு வசதியாக இருக்கின்றது. நாணயத்தின் மறுபக்கத்தைப் பார்க்கின், மெதுவான வளர்ச்சி, பொதுநலன் வாதத்தினை நிலைபெறச் செய்யாது. வளர்ச்சியடைந்து வரும் சனத்தொகைக்குத் தேவையான

சேவைகளை அளிப்பதற்கான வளங்களைப் பெற்றுக் கொள்வது மிகக் கடினமானதாக இருக்கும்.

முதலாவது வகையான குறைநிரப்புத்தன்மையைப் போதுமான ஆதாரங்கள் மூலம் இலங்கையில் காட்டமுடியாது. ஆனால் இரண்டாவது வகைக்கான ஆதாரமாக 1970களின் பொருளாதார நெருக்கடியைக் குறிப்பிடலாம். பொதுநலனுக்கும், வளர்ச்சிக்குமிடையிலான பிணக்கினை ஒரு முக்கிய உதாரணமாய்ப் பார்க்க முடியும். பொதுநலன் கொள்கைகளில் காணப்பட்ட அதிகளவான முன்னீடுபாடே இந் நெருக்கடியை முன்நிலைக்கு கொண்டுவந்ததுடன் மிகப் பழைய முறையிலான பொதுநலன்வாதம் நிலைபெறுவது சாத்தியமற்றதாகவும் காணப்பட்டது. உயர் வளர்ச்சி வீதத்தை நிரிவகிப்பதில் காணப்பட்ட தோல்விகள் பற்றிய விடயங்கள் மேலதிக பொதுநலன் வாதத்தின் விளைவென்றே கூறவேண்டும். ஆனால் இலங்கைக்குரிய ஒரு விடயமாகக் காணப்பட்டிருக்கவில்லை. வளர்ச்சியின் நெருக்கடிகள் ஏனைய மூலங்களிலும் தமது தோற்றத்தைக் கொண்டிருந்தது. நெருக்கடி ஆழமாகிச் சென்றபொழுது பழைய முறையில் அதனைக் கொண்டு செல்வதற்குப் போதுமான வளங்கள் காணப்படவில்லை. இது எதைக் காட்டுகின்றதென்றால் நீண்டகாலத்துக்கு ஒரு தீவிரமான பொதுநலக் கொள்கையை வறுமையான ஒரு நாடு நிலைநிறுத்த முடியாது. வளர்ச்சி வீதம் மிக உயர்வாக இருந்தாலன்றி இது சாத்தியமாகாது.

இன்னுமொரு வகையான குறைநிரப்புத்தன்மை காணப்படுகின்றது. இலங்கையின் அனுபவத்திலிருந்து மிக முக்கிய அந்தப் படிப்பினையை ஒருவர் பெறமுடியும். மேலே விவாதிக்கப்பட்ட இரண்டாவது வகையான குறைநிரப்புத்தன்மை வளங்களில் காணப்படும் கட்டுப்பாடுகளை முதன்மைப்படுத்தியது. வளர்ச்சி பொதுநலனுக்கு மிக அத்தியாவசியமானது என்பதை இது கருதுகின்றது. ஏனெனில் தேவையான வளங்கள் இல்லாவிட்டால் பொதுநலச் செலவீடுகளைத் தொடர்ந்து பேண முடியாது. பொதுநலனுக்கு வளர்ச்சி ஏன் அவசியம் என்பதற்கு வளக் கட்டுப்பாடு மட்டும் ஒரு காரணமாகக் காணப்படவில்லை. இதுவும் அவசியமானது. ஏனெனில் மிகக் குறைந்த வளர்ச்சி மற்றும் ஆர்வம் மிக்க பொதுநலன் நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகியவற்றின் இணைந்த தன்மை சமூகரீதியாகப் பாதகமான விளைவுகளைக் கொண்டிருக்கக் கூடும். இலங்கையின் இளைஞர் வேலையின்மைப் பிரச்சினை-அதன் விளைவுகள்-இவ்விடயத்தை விபரிப்பதற்குப் போதுமானது.

இலங்கையின் வருமானத்தை ஒத்த நாடுகளுடன் ஒப்பிடும் பொழுது திறந்த வேலையின்மையினை உயர் மட்டங்களில் அதிகளவில் இலங்கை கொண்டிருக்கவில்லை. அந்நாடுகளில் ஒப்பீட்டு ரீதியாக, சாதாரண வருடங்களிலும் திறந்த வேலையின்மை வேலைப்படையில் 13–15 சத வீதத்திற்கும் இடையிலேயே காணப்படுகின்றது. உதாரனமாக, தென் ஆசிய நாடுகளில் வேலையின்மை 2–3 சத வீதமாகவே அவதானிக்கப்பட்டுள்ளது. இத் தோற்றப்பாட்டின் முக்கிய அம்சமாக வேலையற்றவர்களின் சமூக, குடிசனவியற் கூட்டே விளங்குகின்றது. வேலையற்றோரில் பெரும்பகுதியினர் இடைநிலைக் கல்வியை உடைய இளவயதினர். அதிக எண்ணிக்கை கொண்டோர் பெண்களே. 1985/86 இல் எடுக்கப்பட்ட தொழிற்படை மதிப்பீட்டின்படி வேலையற்றவர்களில் முன்றிலொரு பகுதியினர் 15–30 வயதுப் பிரிவினராக உள்ளனர். ஏறக்குறைய 80 சத வீதத்தினர் ஆகக் குறைந்தது 5ஆவது தரம் வரையும் கல்விகற்றவர்கள். வேலையின்மை வீதமானது கல்வித் தரமட்டத்துடன் பட்டதாரி மட்டத்துக்கு உயர்ந்து செல்கின்றது. தொழிற்படையில் காணப்படும் பெண்களின் எண்ணிக்கை ஆண்களின் எண்ணிக்கையில் அரைவாசியாக இருந்தாலும் பெண்களில் வேலையற்றவர்களின் எண்ணிக்கை ஆண்களின் வேலையற்றவர்களின் எண்ணிக்கைக்குச் சமனாகக் காணப்படுகின்றது (DCS, 1987). இதே வகையான பாங்குகளையே ஏனைய தொழிற்படை மதிப்பீடுகளும் எடுத்துக் காட்டுகின்றன. (Bandaranaike, 1987; Korale, 1984, 1985, 1986). இவை வேறு ஒரு முக்கிய அம்சத்தையும் எடுத்துக் காட்டின. பெரும்பாலன வேலையற்றவர்கள் தொழில்களைத் தேடித்திரிவதில் அதிகளவு நேரத்தைச் செலவிடுகின்றனர். இத் தொழில் தேடுதல் காலத்தில் தேவையான உதவிக்கு தமது வீட்டுடைமையாளரில் தங்கியிருக்க வேண்டிய நிலையிலும் காணப்படுகின்றனர்.

மதிப்பீடுகளில் உறுதிப்படுத்தப்பட்டது போன்று வறுமைப் பிரிவுக்கு மேற்பட்ட வீட்டுரிமையாளர்கள் வேலையற்றவர்களுக்கு மிக அதிகமாக, விகிதாசாரமற்ற முறையில் பங்களிக்க வேண்டியுள்ளது. வறுமைப் பிரச்சினைகளும், வேலையின்மையும் இலங்கையில் மிக அதிகமாக உள்ளதெனினும் அவை ஒரே பிரச்சினை அல்ல. அப்படியெனில் இது என்ன? இவை வேலையின்மைப் பிரச்சினையின் அடிநிலைமட்டத்தில் காணப்படுகின்றது. இதற்கான முக்கிய பதில் மிக வெற்றிகரமான பொதுநலக்கொள்கைகளுடன் இணைந்த முறையில் காணப்படும் குறைந்த வளர்ச்சியே எனக் குறிப்பிடலாம். சுகாதாரம், கல்வி, உணவுமானியங்கள் போன்ற பொதுநலனின் பிரதான கூறுகள் ஒவ்வொன்றும் தமது பங்கினைச் செலுத்தின.

மிக வெற்றிகரமான 1946 – 47 மலேரியா ஒழிப்புப் பிரசாரத்தின் பின்பும், அடிநிலைமட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட சுகாதார வசதிகளின் விரிவாக்கமும் சிசு மரணத்தைக் குறிப்பிடத்தக்களவு கீழ் மட்டத்திற்கு கொண்டுவந்தது. ஆனால் 1960 வரையும் கருவள வீதம் வீழ்ச்சிப் போக்கினைக் காட்டவில்லை. இடைப்பட்ட காலத்தில் ஏற்பட்ட அதிகரித்த சிசுக்கள் (baby - boom) அடுத்து வந்த தசாப்தத்திற்கான சனத் தொகையின் வயதமைப்பில் நிலையான தாக்கத்தைக் கொண்டிருந்தது. இதனால் இளவயதுச் சனத்தொகையில் விகிதாசாரமற்ற வளர்ச்சி அதிகரிப்பதற்கு வழிவகுத்தது. இதன் விளைவாக 1960களின் பின்பு புதிதாக வேலை தேடுவோரின் விகிதாசாரத்தில் துல்லியமான அதிகரிப்பு ஏற்பட்டது. அதேவேளை, இலவசக் கல்வி வேலை தேடுவோர்களின் எதிர்பார்ப்புக்களை ஓரளவு சரிப்படுத்தியது. எனினும் சந்தர்ப்பங்களின் அமைப்புடன் முற்றாகப் பொருத்தாத நிலையையும் கொண்டிருந்தது. கல்வியறிவு அற்றவர்கள் தற்காலிக வேலைகளைப் பெற்றுக் கொள்வதில் பிரச்சினை காணப்படவில்லை. இதனால் திறந்த வேலையின்மையின் அதிகளவான நிகழ்வுகள் தவிர்க்கப்பட்டது. ஆனால் கல்விபெற்ற இளைஞர்கள் தற்காலிக வேலைகளில் விருப்பமற்றவர்களாகக் காணப்பட்டனர். இந்தவகையில், இயந்திரமயமாக்கப்படாத வேலைகளே மிக வறிய, மரபுரீதியான இலங்கைப் பொருளாதாரத்தினால் குறிப்பிடத்தக்களவு வழங்கக் கூடியதாக இருந்தது (Gunatillake, 1988; Marga, 1977). உதாரணமாக 1981 / 82 இல் மேற்கொள்ளப்பட்ட தேசிய அளவிலான மதிப்பீட்டின்

படி 8 சத வீதமான வேலையற்றவர்களே நாட்டின் தொழிற்படையில் மிகப்பெரிய அளவை உள்வாங்குகின்ற, விவசாயத்தில் ஆர்வம் உள்ளவர்களாகக் காணப்பட்டனர். கைத்தொழிலில் 37 சத வீதத்தினர் வேலை தேடினர். ஆனால் வேலைவாய்ப்புப் பெற்ற சனத்தொகையில் நாலில் ஒரு பங்கினையே இத்துறை கொண்டிருந்தது. பெரும்பாலும் 44 சத வீதமானவர்கள் எழுதுவினைஞர், முகாமையாளர்கள், சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்கள் அரசாங்க வேலைவாய்ப்புக்களையே எதிர்பார்த்தனர். ஆனால் வேலைப்படையின் ஏறக்குறைய 10 சத வீதத்தையே இது உறிஞ்சிக் கொள்ளும் நிலை காணப்பட்டது. இவ் அருமையான, அரச உத்தியோகங்களில் பெண்களே அதிக ஆர்வமாக இருந்தனர். திறந்த வேலையின்மையினால் ஏற்பட்ட பாரிய சுமைகளை விகிதாசாரமற்ற முறையில் கல்வித் தகுதி பெற்ற பெண்கள் ஏன் தாங்குகின்றனர் என்பதே பிரதான காரணமாக உள்ளது.

எதிர்பார்ப்புக்களுக்கும், சந்தர்ப்பங்களுக்குமிடையிலான பொருத்தமின்மையின் காரணமாக, இப்பிரச்சினைகளைச் சமாளிப்பதற்கு அடுத்தடுத்துவந்த அரசாங்கங்கள் விசேட அளவீட்டுமுறைகளைப் பரீட்சித்தன. விவசாயத்தில் இயந்திரமயமாக்கலை ஊக்குவித்தல், அரசாங்க உத்தியோகம் என்ற (white - collar jobs) ஆவல்களைப் பூர்த்தி செய்வதற்காகப் பொதுத்துறையில் அதிகளவில் வேலைவாய்ப்புக்களை அளித்தல் போன்ற நடவடிக்கைகளை எடுத்தன. ஆனால் இம் முயற்சிகள் நீடித்த தீர்வுக்குப் பங்களிக்கவில்லை. இம் முயற்சிகள் அல்லது அளவீட்டு முறைகள் கைத்தொழில், சேவைத்துறைகளில் வேலை வாய்ப்புக்கான சந்தர்ப்பங்களை விரிவாக்கக் வடிய அமைப்புரீதியான உருமாற்றங்களுடன் (structural transformation) இணைந்து காணப்படும் விரைவான பொருளாதார வளர்ச்சியிலிருந்து வந்திருக்க வேண்டும்.

எதிர்பார்ப்புக்களுக்கும், சந்தர்ப்பங்களுக்குமிடையில் தொடர்ச்சியான பொருத்தமின்மைகளினால் விரக்திக்குள்ளாகும் வேலை தேடுவோர் கால ஓட்டத்தில் கீழ் உழைப்பிற்குள் நகர்ந்துவிடுவர் என்பது வழக்கமாக எதிர்பார்க்கப்படுவதுடன் அதனால் திறந்த வேலையின்மையின் அளவும் குறைக்கப்பட்டு விடும். இது நிகழவில்லை. மானிய முறையிலான உணவுப் பங்கீடு இருந்து வந்ததினால் வேலையற்ற இளைஞர்களின் குடும்பங்கள் மிகவும் குறைந்த வாழ்க்கைத் தரமட்டத்தில் இவர்களை ஆதரித்து வந்தன. இலங்கையின் பிரதான பகுதியான திறந்த வேலையின்மை இதனாலேயே ஒரு நீடித்த இயலாகக் காணப்படுகின்றது. தமது உயிர் வாழ்விற்கு குடும்ப வளங்களைப் பயன்படுத்தும் அதே வேளையில் கிடைக்காத வேலைகளுக்காக தேடிக்கொண்டிருக்கும் நிலையும் காணப்படுகின்றது.
இதனால், ஒரு பக்கத்தில் மெதுவான வளர்ச்சியும், மறுபக்கத்தில் சுகாதாரம், கல்வி, உணவு மற்றும் ஏனைய அம்சங்களில் காணப்பட்ட பொதுநலக் கொள்கைகளும் இணைந்து காணப்பட்டதினால் கல்வி அறிவு பெற்ற, வேலையற்ற இளைஞர்களின் தொகை அதிகளவு தேங்கிக் காணப்பட்டது. இது உண்மையில் மிகக் கடுமையான பிரச்சினையாகக் காணப்பட்டது. படித்த இளைஞர்களிடையே தொடர்ந்து காணப்பட்டுவரும் திறந்த வேலையின்மை சமூக அமைதியின் உள்ளார்ந்த மூலமாக எல்லா நாடுகளிலும் விளங்கியது. இலங்கையைப் பொறுத்தவரையில் இவ் விடயம் துரதிஷ்டவசமாகவே காணப்பட்டது. 1971 இல் ஏற்பட்ட இரத்தக் களரிக்கான எழுச்சியும், 1980களின் ஆரம்பத்திலிருந்து நாட்டை அழித்துவரும் இரத்தக் களரிமிக்க இனப் பிரச்சினையும் இத்தோற்றப்பாட்டின் விளைவுகளே. இச் சம்பவங்களுக்கு வேறு வகையான தோற்ற காரணங்களும் இருந்தன என்பது மறுப்பதற்கில்லை.

இலங்கையின் வாழ்வில் இனமுரண்பாடு ஒரு புதிய விடயம் அல்ல. 1920 களில் இருந்து நாட்டின் தேசியக் கொள்கைகளினால் தமிழ்-சிங்கள மக்களுக்கிடையில் விரிவு ஏற்படுத்தப்பட்டதிலிருந்து இது நிகழ்ந்து வந்திருக்கின்றது. 1950களில் இப் பிரச்சினை மிகத் துல்லியமான எழுச்சியைப் பெற்றது. இலங்கையின் சுதந்திரக் கட்சி, சிங்கள தேசியவாதத்தை தட்டி எழுப்பும் முயற்சிகளில் ஈடுபட்டிருந்தது. அரச உத்தியோகங்களிலும் ஏனைய சமூகரீதியாக முக்கிய நிலைகளில் பதவிவகிக்கும் தமிழர்களின் மேன்நிலைகளைக் காரணம் காட்டி அதற்கு எதிராக ஆரம்பநிலையிலிருந்த சிங்கள மக்களின் மனக்கசப்புக்களைத் தூண்டிவிட்டனர். அன்றிலிருந்து சமூகத்தில் காணப்பட்ட தமிழர்களின் சார்பளவிலான பங்கு தொடர்ச்சியாகக் குறையத் தொடங்கியது. ஆனால் 1980 களின் ஆரம்பப் பகுதிவரை இனரீதியான தொடர்புகளில் எந்த விதமான முக்கிய உடைவுகளும் ஏற்பட்டிருக்கவில்லை. இடையிடையே நிகழ்ந்த சிறு, சிறு சம்பவங்கள் இரண்டு பக்கங்களிலும் தீயை வளர்த்து வந்தன. இந்த குறித்த நேரத்தில் வெடிக்கும் குண்டு விரக்தி நிலைக்குட்பட்ட இளைஞர் அன்றி வேறல்ல. அவர்களது விரக்தி நிலையானது, முன்னர் குறிப்பிட்டது போன்று பற்றாக்குறையான பொருளாதார வளர்ச்சியுடன் இணைந்து காணப்பட்ட மிக வெற்றிகரமான பொதுநலன் கொள்கைகளே. இதற்கான ஆதாரம் இலங்கையில் இரத்தத்தினால் எழுதப்பட்டது. பொருளாதார வளர்ச்சிக்கும், பொதுநலன் கொள்கைகளுக்குமிடையிலான முக்கிய குறைநிரப்புத் தன்மையே இதுவாகும்.

## சுருக்கமும் முடிவுரையும்

பொதுநலனை நோக்காகக் கொண்ட தலையீட்டுக் கொள்கையினைக் கடைப்பிடிப்பதன் மூலம் இலங்கையிலிருந்து எத்தகைய படிப்பினையை நாம் பெறமுடியும் என்ற கேள்விக்குப் பதில் கூறப்பட்டுள்ளது. வேறுவழிகளினாலன்றி இக் கொள்கைகளினாலே மக்களின் வாழ்க்கைத் தரஉயர்வை அடைந்து கொள்ளமுடியும் என்ற தளத்திலேயே இக் கொள்கைகள் நியாயப் படுத்தப்படுகின்றன. அவை புத்திசாதுரியமான முறையில் தெரிவு செய்யப்பட்டிருப்பின் பொருளாதார வளர்ச்சியினைப் பலியிடக்கூடிய நிலையைத் தவிர்த்திருக்கும். இலங்கையின் அனுபவமானது இத்தகைய சிந்தனைகளுக்கு ஆதரவு அளிக்கின்றதா என்பதே முக்கியம்.

ஆனால் அநேக ஆய்வுகள் இது காணப்பட்டிருக்கவில்லை என்றே கூறுகின்றது. இலங்கை மக்களின் வாழ்க்கைத் தரத்தில் மிகக் குறைந்த தாக்கத்தையே பொதுநலன் கொள்கைகள் கொண்டிருக்கின்றன எனச் சிலர் தீவிரமாக வாதிக்கின்றனர். வேறுசிலர் இலங்கையின் புறநிலை அந்தஸ்து பொதுநலன் கொள்கைகளினாலேயே ஏற்பட்டது என்கின்றனர். பொதுநலன் கொள்கைகளுக்குப் பதிலாக உயர்வான வளர்ச்சி வீதத்தை

நோக்காகக் கொண்டிருந்தால் இன்னும் அதிகளவான வாழ்க்கைத் தரத்தை இலங்கை அடைந்திருக்கும் எனவும் அதனாலே இலங்கை பெருமை கொள்ளலாம் எனவும் கூறப்படுகின்றது. அதாவது பொதுநலச் செலவீடுகளினால் அனுகூலமான தாக்கங்கள் ஏற்பட்டிருக்கக் கூடும். குறுங்காலத்தில் பொதுநலச் செலவீடுகளுக்கும், முதலீட்டுக்குமிடையில் எதனைத் தெரிதல் என்ற விடயத்தில் முன்னையதற்கே பாதகநிலை காணப்பட்டது எனவும் வாதிடப்பட்டது. வளங்களானது பொதுநலச் செலவீடுகளுக்கு ஒதுக்கப்படாமல் வளர்ச்சிக்கான முதலீட்டுக்குப் பயன்படுத்தப்பட்டிருந்தால் இன்னும் அதிக பலன்களைப் பெற்றிருக்க முடியும்.

இறுதியான விவாதத்தினைப் பார்க்கும் போது குறுங்காலத் தெரிவுகளை மனதிற் கொள்ளாது நீண்டகால விளைவுகளைப் பற்றிப் பார்க்கும் போது பாதகநிலையே காணப்படும். ஏனெனில் பொதுநலன் வாதம் பல்வேறு வழிகளில் ஒரு குறைந்த வளர்ச்சியையே கொண்டிருக்கும். பழைய கொள்கைகளைக் கொண்டு நடத்துவதற்கு வளங்கள் காணப்படமாட்டாது. 1970களில் காணப்பட்ட இலங்கையின் வளர்ச்சி நெருக்கடியிலிருந்து இவ்விவாதத்துக்கான ஆதாரத்தைக் காட்டமுடியும்.

இவ் விவாதத்தின் ஒவ்வொரு அம்சத்தினையும் பரிசோதித்த பொழுது அவை குறைபாடு உடையதாகவே உள்ளன. முதலாவதும் மிகத்தீவிரமானதுமான விவாதத்தின் படி இலங்கையின் புறநிலை அந்தஸ்துக்கு அந் நாட்டின் பொதுநலக் கொள்கைகளே பங்களித்தன. தற்செயலான சூழ்நிலைகளினால் அல்ல. இதன் கருத்து என்னவெனில் பொதுநலனியல் வாதம் விதிவிலக்காக உயர் மட்டங்களில் இலங்கை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்குக் காரணமாக இருந்தது என்பதையே இது கருதுகின்றது. குறுங்காலத்தில் ஒன்றுக்குப் பதிலாக மற்றையதைத் தெரிதலில் பொதுநலன் கொள்கைகளுக்கே சாதகமான சூழ்நிலை காணப்பட்டது.

நீண்டகால விளைவுகளை நோக்கும் போது, 1970களின் வளர்ச்சி நெருக்கடி பழைய முறையிலான பொதுநலக் கொள்கைகளைப் பின்பற்றுவது சாத்தியமற்றது என்பதில் இணக்கத்தைக் கொண்டிருக்கிறது. ஆனால் இந்நெருக்கடி தோன்றக் காரணமாக இருந்தது என்பதற்கு பொதுநலனியலைக் குறைகூற முடியாது. இருவழியிலான விவாதம் முன்வைக்கப்படுகிறது. அவை:

(1) வளர்ச்சிக்கான சேமிப்புக் கட்டுப்பாடுகள்.
(2) வெளிநாட்டு நாணயக் கட்டுப்பாடுகள்.

பொதுநலன் இக்கட்டுப்பாடுகளில் இரண்டில் ஒன்றினாலேயே தூண்டப்பட்டது எனக் கருதப்படுகிறது. இதில் சேமிப்புக் கட்டுப்பாடுகள் முக்கிய பங்கினைக் கொண்டிருக்கவில்லை. ஏனெனில் பாதுகாப்புச் செலவீடுகளே தவிர்க்க முடியாதபடி உயர்மட்டங்களில் வைத்துப் பேணப்பட்டு வந்தன. அந்நியச் செலாவணிக் கட்டுப்பாடுகள் அதிக முக்கியத்துவத்தினைக் கொண்டிருக்கவில்லை. 1970களின் நெருக்கடியைத் தோன்றுவிப்பதில் அந்நியச் செலாவணிக் கட்டுப்பாடுகள் முக்கிய பங்கினை வகித்திருந்தது என்பது முக்கிய விடயமாகும். சுருக்கமாக, எஸ்.ஆர்.ஒஸ்மானி (கட்டுரையாசிரியர்) பின் வரும் வாதங்களை முன் வைக்கிறார்.

(1) இலங்கையின் வாழ்க்கைத்தரத்தில் ஏற்பட்ட முனைப்பான முன்னேற்றங்களுக்கு அதன் பொதுநலக் கொள்கைகளே காரணமாகும்.

(2) இம் முன்னேற்றங்கள் மிக விரைவாக நிறைவேற்றப் பட்டிருக்கலாம். வளர்ச்சிக்கான முதலீட்டில், பொதுநலச் செலவீடுகளுக்கு ஒதுக்கப்பட்ட வளங்கள் திசை திருப்பப்பட்டிருந்தால் அது சாத்தியமாகி இருந்திருக்கும்.

(3) வாழ்க்கைத் தர உயர்வில் அடையக்கூடிய விரைவான நன்மைகள் நீண்டகால வளர்ச்சிச் செழிப்பினைத் தியாகம் செய்வதில் ஒரு தடையாக இருக்க மாட்டாது. இதற்கான ஒரு காரணமாக, பொதுநலனுக்கான வளங்கள், சேமிப்பு மற்றும் முதலீட்டுச் செலவுகளுக்கு வழங்கப்படவில்லை, ஆனால் இராணுவச் செலவீடுகளுக்கே சென்றது.

எனவே இலங்கையின் அனுபவத்திலிருந்து ஒருவர் பொதுவான படிப்பினையைப் பெறமுடிகின்றது. ஒரு வறுமையான நாடுகூட தனது மக்களின் வாழ்க்கைத் தரத்தினை விரைவாக மேம்படுத்துவதற்குப் புத்திசாதுரியமாக வடிவமைக்கப்பட்ட பொதுநல உபாயங்களை ஏற்றுக் கொள்ளமுடியும். இந்தவகையில் பெறுகின்ற விரைவான நன்மைகள் வளர்ச்சியுடன் முரண்பாட்டினைக் கொண்டிருக்க வேண்டுமென்ற தேவை இல்லை. நீண்டகாலத்தில் பொதுநலன் இழப்பைக் குறைக்கவேண்டிய தேவையில்லை. ஆனால் இலங்கையின் அநுபவத்தைப் பொறுத்தவரை பிறிதொரு பரிமாணமும் காணப்படுகின்றது. பொதுநலனுக்குப் பதிலாக, திருப்திகரமான ஒரு பொருளாதார வளர்ச்சி வீதத்தினைப் பேணுவது எத்தகைய முக்கியத்துவமுடையது என்பதை இது காட்டுகின்றது. எத்தகைய காரணமாக இருந்தாலும் வளர்ச்சி குன்றியதாகவே இருக்கும். பொதுநலன் உபாயங்களுக்கு இது இடர்களையே தரும். இரண்டு காரணங்களுக்காக இது உண்மையாக இருக்கும்.

(1) விரைவிலோ அல்ல பிந்தியோ, பழைய முறையிலான பொதுநலச் செலவீடுகளைப் பேணுவதற்குப் போதுமான வளங்களைக் கண்டுபிடிப்பது மிகவும் கடினமாக இருக்கும். 1970களில் ஏற்பட்ட இலங்கையின் பொருளாதார நெருக்கடியில் இது உண்மையென நிரூபிக்கப்பட்டது.

(2) குறைவான வளர்ச்சியும், பேரார்வம் மிக்க பொதுநலனியலும் இணைந்து காணப்படுவது சமூக நோக்கில் அழிவுடையதாகவே இருக்கும். இலங்கையில் படித்த ஆனால் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களின் விரக்தி நிலையிலிருந்து தோற்றம் பெற்ற முடிவற்ற பிரச்சினைகள் இதற்கு ஆதாரமானது என நிரூபிக்கப்பட்டது.

எனவே இலங்கையிலிருந்து வளர்ச்சிக்கும் பொது நலனுக்கிடையிலும் காணப்படும் தொடர்பிலிருந்து என்ன படிப்பினையை நாம் பெற முடியும். (1) முரண்பாட்டிலொன்றாக இது இருக்கவேண்டியதில்லை. (2) ஒரு வழியில் அல்லது பல வழிகளில் பெரும்பாலும் குறைநிரப்புத்தன்மையின் ஒன்றாக இருப்பது விரும்பத்தக்கது.

**(எஸ்.ஆர்.ஒஸ்மானி, வடஅயர்லாந்தில் உள்ள அல்ஸ்ரர் பல்கலைக்கழகத்தின் அபிவிருத்திப் பொருளியல்**

பேராசிரியர், 'போஷாக்கும் வறுமையும்' என்ற விடயத்திலான இவரது கட்டுரை அண்மையில் வெளிவந்துள்ளது. தென் ஆசியாவில் வறுமை, வளர்ச்சி, கிழக்காசியாவில் வருமானப் பரம்பலுக்கும் வளர்ச்சிக்கும் இடையிலான தொடர்பு ஆகியவை இவரின் தற்போதைய முக்கிய ஆய்வாகக் காணப்படுகின்றது.)

**உசாத்துணைகள்**


Alailima, P.(1985): Evolution of Government Policies and Expenditure on Social Welfare in Sri Lanka during the 20th Century (Mimeo). Colombo : Ministry of Finance and Planning.

Anand, S.and R.Kanbur (1991) : 'Public Policy and Basic Needs Provision: Intervention and Achievement in Sri Lanka', in J. Dreze and A.Sen (eds) The Political Economy of Hunger: Vol III: Endemic Hunger, PP. 59-92. WIDER Studies in Development Economics. Oxford: Clarendon Press.

Anand, S.and M.Ravllion (1993): 'Human Development in Poor Countries: On the Role of Private Incomes and Public Services'. Journal of Economic Perspectives 1(7): 133-50.

Athukorala, P.and S.Jayasuriya (1991): 'Macroeconomic Policies, Crises and Growth in Sri Lanka, 1960-1990' (mimeo). Bundoora (Australia): La Trobe University.

Bandaranaike, A.D.(1987): 'The Generation of Gainful Employment: An Overview of Unemployment in Sri Lanka', Central Bank Staff Studies, Vol. 17.

Bhalla, S.S.(1988a): 'Is Sri Lanka an Exception? A comparative Study of living Standards', in T.N. Srinivasan and P.K.Bardhan (eds) Rural Poverty in South Asia, PP.89-117. New York: Columbia University Press.

Bhalla, S.S.(1988b): 'Sri Lanka's Achievements: Fact and Fancy', in T.N.Srinivasan and P.K.Bardhan (eds) Rural Poverty in South Asia, P.P. 557-65. New York: Columbia University Press.

Bhalla, S.S.(1988c) : 'The Politics and Economics of Agricultural Price Policies in Sri Lanka' (mimeo). New Delhi: The Policy Group.

Bhalla, S.S. and P.Glewwe (1986) : 'Growth and Equity in Developing Countries: A Reinterpretation of the Sri Lankan Experience', World Bank Economic Review 1 (1).

DCS (1987): Labour Force and Socio- Economic Survey - 1985/86. Colombo: Department of Census and Statistics, Government of Sri Lanka.

Dreze, J. and A. Sen (1989) : Hunger and Public Action. WIDER Studies in Development Economics. Oxford: Clarendon Press.

Fields, G.S.(1980): Poverty, Inequality and Development. Cambridge University Press.

Gray, R.H. (1974): The Decline of Mortality in Ceylon and the Demographic Effects of Malaria Control', Population Studies 28(2): 205-29.

Gunatillake, G.(1988): 'The Extent and Nature of Structural Mismatch in the Domestic Labour Market', Colombo: Marga Institute.

Isenman, P.(1980): 'Basic Needs: The Case of Sri Lanka', World Development 8(3): 237-58.

Isenman, P.(1987): 'A Comment on "Growth and Equity in Sri Lanka: A Reinterpretation of the Sri Lankan Experience" by Bhalla and Glewwe', World Bank Economic Review 1(3).

Jayatissa, R.A.(1982): 'Balance of Payments Adjustment to Exogenous Shocks: the Case of Sri Lanka', Central Bank of Ceylon Staff Papers 12(1).

Kappagoda, N. and S. Paine (1981): The Balance of Payments Adjustment Process: The Experience of Sri Lanka. Colombo: Marga Institute

Karunatilake, H.N.S. (1987): The Economy of Sri Lanka. Colombo: Centre for Demographic and Socio-Economic Studies.

Korale, R.B.M.(1984): 'Employment and the Labour Market in Sri Lanka' (mimeo). Colombo: Department of Census and Statistics.

Korale, R.B.M.(1985): 'Unemployment and Wages: A Case Study of Sri Lanka' (mimeo). Colombo: Department of Census and Statistics.

Korale, R.B.M.(1986):'Employment Trends' Sri Lanka Economic Journal 1 (1): 98-112.

Lakshman, W.D. (1985): 'The IMF - World Bank Intervention in Sri Lankan Economic Policy: Historical Trends and Patterns', Social Scientist 13(2): 3-29.

Marga (1977): Pattern of Job Expectations Among the Rural Youth. Colombo: Marga Institute.

Olson, R.S. (1977): 'Expropriation and International Economic Coercion: Ceylon and the "West", 1961-65', Journal of Developing Areas 11(2):205-25.

Pyatt, G.(1987): 'A Comment on "Growth and Equity in Sri Lanka: A Reinterpretation of the Sri Lankan Experience" by Bhalla and Glewwe', World bank Economic Review 1(3): 515-20.


52 ஆம் பக்கத்தில் தொடரும்....

# ஆபிரிக்காவில் வளர்ச்சி

**ஜெவ்றி சக்ஸ்**



*ஜெவ்றி சக்ஸ் என்பவர் சர்வதேச அபிவிருத்திக்கான ஹாவாட் நிறுவகத்தின் பணிப்பாளர். தற்பொழுது 20க்கு மேற்பட்ட ஆபிரிக்க நாடுகளில் ஆராய்ச்சி மற்றும் ஆலோசனை நிகழ்ச்சித் திட்டங்களில் பணியாற்றி வருகின்றார். பொலீவியா, போலந்து, ருஷியா மற்றும் ஏனைய அரசாங்கங்களுக்கு அந்நாடுகளின் பொருளாதாரக் கொள்கைகள் தொடர்பாக ஆலோசனை வழங்கியுள்ளார். சர்வதேச நாணய நிதியம் பற்றிய இவரது கருத்துக்கள் சீர்திருத்தங்களை மேற்கொண்டு வரும் நாடுகளுக்கான மேற்கு நாடுகளின் உதவி பற்றிய விவாதங்களில் முக்கியத்துவம் பெற்று வருகின்றன. அவரது சில கருத்துக்கள் இக்கட்டுரையில் இடம்பெறுகின்றன.*

பண்டைக் கால கதைகளில் ஒரு விவசாயி ஒரு கிறிஸ்தவ பாதிரியாரிடம் சென்று தனது இறந்து கொண்டிருக்கும் கோழிக் குஞ்சுகளைக் காப்பாற்றுவதற்கு அறிவுரை கேட்டான். ஜெபம் பண்ணும்படி பாதிரியார் கூறவே விவசாயியும் அப்படியே செய்தான். ஆனால் கோழிக் குஞ்சுகள் இறந்து கொண்டே இருந்தன. கோழிக் கூட்டில் சங்கீதத்தினை ஒலிபரப்பும்படி பாதிரியார் மீண்டும் அறிவுரை வழங்கினார். ஆனால் குஞ்சுகள் இறந்து கொண்டே இருந்தன. எனவே பாதிரியார் "கோழிக் கூட்டிற்கு மிகவும் பிரகாசமான வர்ணம் ஒன்றைப் பூசும் படி" பரிந்துரை செய்தார். ஆனால் வர்ணம் பூசிய பின் கோழிக் குஞ்சுகள் எல்லாம் இறந்து விட்டன. எத்தனையோ சிறந்த யோசனைகளை நான் மனதில் கொண்டிருந்தேன் என்று இறுதியில் பாதிரியார் கூறினார்.

ஆபிரிக்க நாடுகள் சுதந்திரத்திலிருந்து நிதிவழங்கும் நாடுகளையே நம்பியிருந்தன. தம் முன்னைய காலனித்துவ ஆட்சியாளர், சர்வதேச நிதி நிறுவனங்கள் என்பவற்றின் வழிகாட்டலிலேயே தமது வளர்ச்சியை முன்னெடுத்து வந்தன. 1980களில் ஆபிரிக்காவில் ஏற்பட்ட கடன் நெருக்கடிக்குப் (debt crisis) பின்னர் இவ்வழிகாட்டல்கள் எல்லாம் ஒருவகைப் பொருளாதார பெற்றுக் கொள்ளலாகவே மாறியது. சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, உதவி வழங்குவோர், கடன் கொடுப்போர் ஆகியோருடன் முடிவில்லாத வகையில் பல கூட்டங்களை நடத்தின. என்ன வெட்கக்கேடான விடயம். எத்தகைய சிறந்த யோசனைகள். ஆனால் விளைவுகள் மிகச் சிறியது. 1987 – 1989க்கும் இடையில் தலா ஒருவருக்கான வெளியீடு 0.7 சத வீதமாகவும், 1987 - 94 க்கு இடையில் 0.6 சத வீதமாகவும் வீழ்ச்சியடைந்தது. 1995 ஆம் ஆண்டுக்கான வளர்ச்சி 0.6 சத வீதமாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தாலும், விரைவான வளர்ச்சி கொண்ட வளர்முக நாடுகளின் வளர்ச்சியிலும் மிகக் குறைவாகவே இது இருந்தது. 1995 இல் ஆசியாவில் தலா ஒருவருக்கான வளர்ச்சி 7 சத வீதமாக இருந்தது. வளர்முக நாடுகளுக்கான வெளிநாட்டு நேரடி மூலதனத்தில் ஆபிரிக்கா 3 சத வீதத்தையே பெறுகின்றது. ஆனால் கிழக்கு ஆசியா, பசிபிக் நாடுகள் 40 சத வீதத்தைப் பெறுகின்றன என்பது ஆச்சரியத்துக்குரிய ஒரு விடயம்.

ஆபிரிக்காவின் ' ஆரோக்கியமற்ற அரசியல் சூழ்நிலைகளும் மோசமான பொருளாதார சிந்தனைகளும் தொடர்ச்சியான கண்டனத்துக்கு உட்பட்டு வந்தாலும், இதற்கான காரணங்கள் பெரும்பாலும் வெளியிலிருந்தே வந்தன. 1960 களில் உலக வங்கி மற்றும் பல உதவி வழங்கும் நாடுகளின் சிந்தனை "அபிவிருத்தித் திட்டமிடல்" என்பதாகவே இருந்தது. 1970 களில் இது "அடிப்படைத் தேவைகள்" என்பதாக மாற்றமடைந்தது. உலக வங்கியினால் முன்னெடுக்கப்பட்ட இக் கொள்கைகள் சோசலிச உபாயங்களைப் பிரதானமாகக் கொண்டிருந்ததுடன் தன்சானியா மற்றும் ஏனைய சந்தைப் பொருளாதாரத்தைக் கொண்டிராத நாடுகளை நெருக்கடி நிலைக்கு இட்டுச் சென்றது. 1980 களில் அடிப்படைத் தேவைகள் என்ற சிந்தனை மாற்றப்பட்டு "அமைப்பு ரீதியான சீர்திருத்தம்" (Structural a djustment) என்ற சந்தைகளை முதன்மைப்படுத்தும் கொள்கை பின்பற்றப்பட்டது. 1990 இல் விரக்தியின் விளைவாக இக் கொள்கை "சிறந்த ஆட்சியல்" (good governance) என மாற்றப்பட்டதுடன் இப்பொழுது உதவி வழங்கும் நாடுகள் ஆபிரிக்க அரசாங்கங்களை அவற்றின் சீர்திருத்தங்களுக்கான உடைமையுரிமையின் பற்றாக்குறை தொடர்பாகக் குற்றம் சாட்டுகின்றன. சீர்திருத்தங்கள் சர்வதேச நாணய நிதியத்தினாலும், உலக வங்கியினாலுமே கோரப்படுகின்றன.

அமைப்பு ரீதியான சீர்திருத்தங்கள் சில நன்மைகளை ஏற்படுத்தியுள்ளன. தலா ஒருவருக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி ஏறக்குறைய ஒரு தசாப்த கால வீழ்ச்சியின் பின் மீண்டும் உயர்ந்துள்ளது. ஐ.எம்.எவ். – உலக வங்கி செயற் திட்டங்களிலிருந்து ஒரு சில நாடுகளே விரைவான வளர்ச்சியைப் பெற்றுள்ளன. ஒவ்வொரு அம்சங்களிலும் வெற்றிகரமான நிலையைப் பெற்றது உகண்டா மட்டுமே. ஏனைய சில நாடுகளில் சனநாயகமயப்படுத்தலும் சந்தைச் சீர்திருத்தங்களும், மோசமடைந்து வரும் பொர்ருளாதார நிலைகளின் அழுக்கத்தினால் பின்நோக்கியதாக அமைந்திருந்தன. அமைப்புரீதியான சீர்திருத்தச் செயற்திட்டங்கள் மிகவும் குறைபாடு உடையனவாக உள்ளன. சர்வதேச நாணய நிதியம் விலை உறுதியில் கவனம்




கொண்டிருந்ததே தவிர வேறொன்றிலும் கவனம் செலுத்தவில்லை. மறுபக்கத்தில் உலக வங்கி பல நூறு சிறந்த உபாயங்களைக் கொண்டிருந்தது. ஆனால் முன்னுரிமைகளைக் கொண்டிருக்கவில்லை. ஸ்ரான்ரட் வங்கியின் பல செயற்றிட்டங்கள் - பெறுமதி கூட்டல் வரிகள், புதிய சுங்க நிர்வாகம், சிவில் சேவைச் சீர்திருத்தம், கட்டுமானங்களின் தனியார் மயமாக்கல், பொதுத்துறை நிர்வாகத்தைப் பரவலாக்கல் மற்றும் பல முக்கியமான அம்சங்கள் கடன் நிலையிலுள்ள அரசாங்கங்களினால் அறிமுகம் செய்யப்பட்டாலும் அவை பலவீனமாகவே காணப்பட்டன. கெனியாவின் "கொள்கை வடிவமைப்புப் பற்றிய அறிக்கையில்" இவ் வங்கியினால் 111 நிபந்தனைகள் விதிக்கப்பட்டன.

இத்தகைய முன் நிபந்தனைகளின் அளவற்ற தன்மை வங்கியின் சொந்த நிறுவனரீதியான பலவீனத்தையே பிரதிபலித்தது. முன்னைய வங்கித் தலைவர்களும் முக்கியமான முன்னுரிமைகளைத் தெரிவு செய்வதில் தவறிவிட்டனர். இவையெல்லாம் ஒரு காத்திரமான வளர்ச்சியை மேம்படுத்துவதற்கு அமைப்புரீதியான சீர்திருத்தக் கொள்கைகள் ஏன் தவறி விட்டன என்பதற்குப் போதிய சான்றுகளாக விளங்குகின்றன. முன்னுரிமைகள் எவை என்பதை அடையாளம் காணுகின்ற ஒரு நிர்வாக ரீதியான பிரச்சினையே புதிய தலைவரான ஜேம்ஸ் வொல்பன்சோன் என்பவர் எதிர்நோக்கும் பிரதான சவாலாகும்.

ஆபிரிக்காவில் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி ஆகியவற்றின் தோல்விக்கான சிறந்த சான்றுகள் அவற்றின் செயற்றிட்டங்களிலேயே காணப்படுகின்றன. நிறுவனங்கள் உண்மையில் ஆபிரிக்கா பூராகவும் தலா ஒருவருக்கான தாழ்மட்ட வளர்ச்சியினையே (வருடத்துக்கு 1-2 சத வீதம்) இலக்காகக் கொண்டிருந்தன. செல்வந்த நாடுகளிலும் பார்க்க சந்தையை மையமாகக் கொண்ட வறிய நாடுகள் விரைவாக வளர்ச்சியடைய முடியும் என்பதை உலக ரீதியான சான்றுகள் தெளிவாக காட்டின. அநேக தாழ் மற்றும் இடைநிலை வருமான நாடுகள் சராசரியான தலா வருமான வளர்ச்சியை வருடத்துக்கு 5 சத வீதத்துக்கு மேலாகக் கொண்டிருந்தன. ஆபிரிக்காவிலுள்ள 53 நாடுகளில் பொட்ஸ்வானா, மொறீசியஸ், உகண்டா ஆகிய நாடுகள் மாத்திரமே இச் சராசரிக்கு திட்டவாகக் காணப்பட்டன. ஏனையவை 1995 இல் தலா ஒருவருக்கு 5 சத வீதத்துக்கும் குறைவான வளர்ச்சியையே கொண்டிருந்தன.

உலகின் ஏனைய பகுதிகளில் காணப்படுவது போன்று ஆபிரிக்கா கட்டுமான ரீதியாக வளர்ச்சி வீதத்துக்கு தகுதியற்றதாக இருந்திருக்குமானால் அல்லது ஆபிரிக்கக் கண்டத்தின் மிகக் குறைந்த வளர்ச்சி அறியப்படமுடியாத ஒரு புதிராக இருக்குமானால் இம் மெதுவான வளர்ச்சிக்கான கூட்டுப் பொறுப்பிலிருந்து ஐ.எம்.எவ். மற்றும் உலக வங்கியை விலக்கி விடலாம். ஆனால் ஆபிரிக்காவின் வளர்ச்சி வீதங்கள் ஒரு புதிராகக் காணப்படவில்லை. பல்வேறு நாடுகளின் வளர்ச்சியை எடுத்துக்காட்டும் சான்றுகளை நோக்கும் பொழுது ஆபிரிக்காவின் தாழ்நிலை வளர்ச்சியானது தீர்வுக்கான கொள்கைகளுடன் இணைந்த நியம பொருளாதார மாறிகளுடன் விளக்கப்படக் கூடியதாக இருக்கின்றது. கிழக்கு ஆசியாவில் நன்கு செயற்பட்ட தீர்வுகள் பொருத்தமான மாற்றங்களுடன் ஆபிரிக்காவில் செயற்பட முடியும். மொறீசியஸ்சிலும், பொட்ஸ்வானாவில் குறிப்பிடத்தக்க முறையிலும், மிக அண்மையில் உகண்டாவிலும் முயற்சிக்கப்பட்டதினால் பெறப்பட்ட பெறுபேறுகள் கிழக்கு ஆசியாவின் வளர்ச்சி வீதங்களுக்குச் சமனாக இருந்ததைக் காண முடிகின்றது.



## ஆபிரிக்கா ஏன் தோல்வியடைந்தது?

பல நாடுகளின் வளர்ச்சி பற்றிய ஆய்வுகள் மூலம் தலா ஒருவருக்கான வளர்ச்சி பின்வரும் அம்சங்களுடன் தொடர்புபடுத்தப்படுகின்றது.

(1) மிக வறுமையான நாடுகளின் ஆரம்ப வருமான மட்டம் செல்வந்த நாடுகளினதும் பார்க்க மிக விரைவாக வளர்ச்சியடைகின்றது.

(2) வர்த்தகத்துக்கான திறந்த தன்மை, உள்நாட்டுச் சந்தையின் திறந்து விடப்பட்ட தன்மை, அரச உடைமையுரிமைக்குப் பதிலாகத் தனியார் உடைமையுரிமை, தனியார் சொத்துரிமைக்குப் பாதுகாப்பு, குறைந்த எல்லை வரிவிகிதங்கள் போன்ற பரவலான சந்தையை அடிப்படையாகக் கொண்ட அம்சங்கள்.

(3) அரசாங்கத்தின் சொந்த சேமிப்பு வீதத்தினால் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்ட தேசிய சேமிப்பு வீதம்.

(4) பொருளாதாரத்தின் புவியியல் மற்றும் வளக் கட்டுமானங்கள். நிலத்தினால் சூழப்பட்ட, வளங்களை நிறைவாகக் கொண்ட பொருளாதாரங்கள், கரையோர மற்றும் வளங்களைப் பற்றாக்குறையாகக் கொண்ட நாடுகளிலும் பார்க்க பின்தள்ளி நிற்கின்றன. இவற்றின் விளைவால் அமைப்புரீதியான சீர்திருத்த நிகழ்ச்சித் திட்டங்கள் ஆபிரிக்காவின் இவ் இரண்டாவது, மூன்றாவது பிரச்சினைகளை முன்னிலைப்படுத்துவதற்கு உதவியிருக்கின்றன.

இத்தகைய நான்கு காரணிகளும் ஆபிரிக்காவின் நீண்டகால வளர்ச்சிக்குப் பரந்தளவில் பங்களித்துள்ளன. ஏனைய வளர்முக நாடுகளைப் பார்க்கிலும் மிக விரைவாக வளர்ச்சியடைந்திருக்க வேண்டும். ஆனால் தலா ஒருவருக்கு சார்பளவில் மிகக் குறைந்த வருமானமே காணப்படுகின்றதினால், ஆபிரிக்கா மிகவும் மெதுவாகவே வளர்ச்சியடைந்தது. இதற்குப் பிரதானமாக மிக உயர்ந்த வர்த்தகத் தடைகள், மேலதிகமான வரி விகிதங்கள், குறைவான சேமிப்பு வீதங்கள், மோசமான கட்டுமான நிலைமைகள், கடற் போக்குவரத்துக்கான வசதிகள் இன்மை (53 நாடுகளில் 15 நாடுகள் நிலத்தினால் சூழப்பட்டவை) இயற்கை வளத்தினை அடிப்படையாகக் கொண்ட ஏற்றுமதிகளில் பெரிதும் தங்கியிருத்தல் ஆகிய காரணிகள் காரணமாக இருக்கின்றன.

புவியியல் மற்றும் வளநிலைமைகள் ஆபிரிக்காவின் வளர்ச்சி விழுக்காட்டில் முக்கிய பங்கினை வகிக்கின்றது. இதில் பாரிய

பங்கிவன திறந்ததன்மை இன்மை, சந்தைத் தூண்டுதல் காணப்படாமை, தேசிய சேமிப்பு குறைவு ஆகியன வகிக்கின்றது. மிக குறைந்த ஆரம்ப வருமானத்தின் காரணமாக 1970-89 இல் விரைவான வளர்ச்சி கொண்ட 8 வளர்முக நாடுகளின் மாதிரியிலும், பார்க்க மிக விரைவான 1.4 சத வீத புள்ளிகளைக் கொண்டதாக வளர்ந்திருக்க வேண்டும். உண்மையில் வளர்ச்சி மெதுவானதாக 3.1 சத வீத புள்ளியாக காணப்பட்டது. பொதுவான விழுக்காடு 4.5 புள்ளிகள். இதில், ஆய்வின் மூலம் எடுத்துக் காட்டப்பட்டதன்படி வர்த்தக திறந்ததன்மை இன்மை 1.8 புள்ளிகள், குறைந்த சேமிப்பு வீதம் 1.9 புள்ளிகள், அதிகளவில் திரிவுபட்ட உள்நாட்டு சந்தைகளுக்கு 0.9 புள்ளிகள் என வழங்கப்பட்டது. ஆபிரிக்காவின் நிலத்தினால் சூழப்பட்ட தன்மை, இயற்கை வளத்தில் தங்கியிருத்தல் என்பன மெதுவான வளர்ச்சியின் 0.5 புள்ளிகளை வகிக்கின்றது. இவ் எல்லாக் காரணிகளையும் கவனத்திற் கொள்ளும் பொழுது சிறியளவாக எஞ்சியிருக்கும் 0.5 புள்ளிகளே ஆபிரிக்காவின் வளர்ச்சியை விளக்கி நிற்கின்றது.

வளர்ச்சியின்மைக்கு கொள்கைகளே காரணம் எனக் குற்றம் சாட்டினால் ஏன் அவற்றை ஏற்றுக்கொண்டனர். ஆபிரிக்காவின் சந்தைக்கெதிரான திசையின் வரலாற்று ரீதியான தோற்றத்தை நுணுகிப் பார்ப்பது மிக இலகுவானது. ஏறக்குறைய ஒரு நூற்றாண்டு கொள்ளை அடித்தலின் பின் ஆபிரிக்க நாடுகள் திறந்த வர்த்தகத்தையும், வெளிநாட்டு மூலதனத்தையும் தேசிய இறைமைக்கான ஓர் அச்சுறுத்தலாக நோக்கினால் அது விளங்கிக் கொள்ளக் கூடியதே. சுகர்னோவின் இந்தோனேசியாவிலும், நேருவின் இந்தியாவிலும், பெரோனின் ஆஜென்டீனாவிலும் இருந்தது போன்று "சுயதேவையும்" "அரச தலைமைத்துவமும்" **(State leadership)** பெரும்பாலான கைத்தொழிலின் அரச உடமையுரிமை உள்ளிட்ட அம்சங்கள் பொருளாதாரத்தின் வழிகாட்டியாக அமைந்தன. இதன் விளைவாக, ஆபிரிக்காவின் பெரும்பாலான நாடுகள் பாரிய அளவில் சுயவிதிப்புக்குட்பட்ட பொருளாதாரத் தண்டனைக்கு **(Self-imposed )** உள்ளாகின. விவசாயத்துக்குரிய சந்தைப்படுத்தும் சபைகள் போன்ற காலனித்துவ நிறுவனங்கள் அதிகளவான அரசாங்கத் தலையீடுகளுக்குரிய கருவிகளாக மாறின. புதிய அபிவிருத்தி உபாயங்களுக்கான ஆர்வமிக்க பங்காளர்களாக சர்வதேச சமூகம் மாறியது.

1980 களின் ஆரம்பத்தில் அரச மற்றும் மூடப்பட்ட பொருளாதார உபாயமானது ஏலவே ஆழ்ந்த பிரச்சினைகளில் சிக்கியிருந்தது. ஆனால் ஒரு தசாப்தத்துக்கு மேலாக வெளிநாட்டு உதவி பலநாடுகளைப் பொருளாதார முறிவிலிருந்து காப்பாற்றி வந்தது. ஆபிரிக்க நாடுகளில் காணப்பட்ட ஊன்றிய நலன்கள் (நகரச் சார்பு மற்றும் சிற்றுடமை விவசாயிகளுக்கு எதிரான) பழைய உபாயங்களையே நிலைபெறச் செய்தன. உதவி அளிக்கும் நாடுகளில் பனிப்போர் சதிகள், சந்தேகம், வெளிநாட்டு உதவியுடன் இணைந்து காணப்பட்ட குறுகிய வர்த்தக நலன்கள் என்பன உதவி வழங்கும் அரசாங்கங்களையும், சர்வதேச நிதி நிறுவனங்களையும் இத்தகைய கொள்கைரீதியான தோல்விகளைக் கண்டும் காணாமலும் இருக்கச் செய்து விட்டன. தற்பொழுது மேற்கு நாடுகளின் உதவிப் பணம் வரட்சியடைய புதிய தலைமுறைத் தலைவர்கள் ஆபிரிக்காவில் தெரியப்பட்டனர். கொள்கைத் தோல்வியை புறக்கணித்தல் தற்பொழுது கடினமானது. எனவே "அவற்றின் இடத்தில் எதனை வைப்பது" என்பதே தற்போதைய கேள்வி.

1955 இல் அடம்ஸ்மித்தின் பிரபல்யமான குறிப்பு "கீழான காட்டுமிராண்டித்தனத்திலிருந்து உயர்மட்ட செழிப்புக்கு ஒரு நாட்டைக் கொண்டு செல்ல வேண்டுமாக இருந்தால் அதற்கான மிகச் சிறிய முன்தேவை - அமைதி, இலகுவான வரிகள், சகித்துக் கொள்ளக் கூடிய நீதியான நிர்வாகம்" எனக் குறிப்பிடுகின்றது. ஒரு வளர்ச்சிக்கான நிரல் நீண்டதாகவும், சிக்கலானதாகவும் இருக்க வேண்டிய அவசியம் இல்லை.

அமைதி இலகுவாக உத்தரவாதப்படுத்தக் கூடிய ஒரு விடயம் அல்ல. ஆனால் அமைதிக்கான நிலைமைகள் ஆபிரிக்கக் கண்டத்தில் தற்பொழுது சிறந்ததாகக் காணப்படுகின்றது. கண்டத்தினைச் சீரழித்த பாரிய அளவிலான பிணக்குகள் இன்று பெரும்பாலும் தீர்ந்து விட்டது. இன ஒதுக்கலின் முடிவு தென் ஆபிரிக்கா பூராகவும் தாக்குதல்களை முடிவுக்குக் கொண்டு வந்துள்ளது. மொசாம்பிக், நமீபியா அமைதியாகக் காணப்படுகின்றன. அங்கோலாவில் சண்டைகள் ஓய்கின்றன.

கடந்த 25 வருடங்களில் இல்லாதவாறு உகண்டா, கெனியா, தன்சானியாவில் உறவுகள் விருத்தியடைந்து வருகின்றன. எரித்திரியாவின் சுதந்திரத்தின் மூலம் எதியோப்பியாவின் 30 வருட உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்தது. லைபீரியா, ருவாண்டா, சோமாலியா ஆகிய நாடுகளில் காணப்படும் பேரழிவுகளை நிறுத்த ஆபிரிக்காவை அடிப்படையாகக் கொண்ட அமைதிகாக்கும் முயற்சிகளுக்கான உதவியை மேற்கு நாடுகள் அளிக்க முன்வந்தால்தான் சிறப்பான முறையில் தடுத்து நிறுத்த முடியும்.

இலகுவான வரிகளும் ஐ.எம்.எவ். மற்றும் உலக வங்கியின் எல்லைக்குட்பட்டதாகவே உள்ளன. ஆபிரிக்க நாடுகளுக்குத் தேவையானது எளிமையான, குறைந்த வரிகள், ஆனால் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பங்காக இலகுவான வருமான இலக்காக இருக்க வேண்டும். சர்வதேச வர்த்தகத்தில் இலகுவான வரிகள் மிகவும் அத்தியாவசியமானவை. உலகின் ஏனைய பகுதிகளுடன் கொண்டிருக்கும் பொருளாதார ஒருங்கிணைந்த தன்மையிலேயே ஒரு வெற்றிகரமான வளர்ச்சி தங்கியிருக்கின்றது. உலக சந்தைகளிலிருந்து ஆபிரிக்காவின் பாரிய அளவான சுய விதிப்புக்குட்பட்ட தண்டனையானது விவசாய உற்பத்திகளின் மீதான ஏற்றுமதி வரிகளை நிறுத்துவதன் மூலமும் இறக்குமதி இறுப்புகளை வெட்டுவதன் மூலமும் மிகவிரைவில் முடிவுக்குக் கொண்டு வரலாம். தற்பொழுது அதிகமாகக் காணப்படும் கூட்டுத்தாபன வரி விகிதங்கள் 40 சத வீதத்தில் இருந்து வெட்டப்பட வேண்டும். கிழக்கு ஆசியப் பொருளாதாரங்களில் காணப்படுவது போன்று 20% - 30% வீதத்துக்குக்கிடையில் காணப்பட வேண்டும். எளிமையான வரித்திட்டங்கள் - குறிப்பாக 10 சத வீதமான தாழ்வான, ஒரே தன்மையான இறுப்பு வீதங்கள் நிர்வாகத்தைப் பெரிதும் இலகுவாக்கும். அரசாங்கத்தின் வருமானங்களை உயர்த்துவதாகவும் அமையும்.

உலக நாணய நிதியம் எப்பொழுதும் இறுப்புக் குறைப்புக்கும், இலகுவாக்கலுக்கும் எதிராகவே காணப்பட்டது. வருமான நோக்கு என்ற ஆவலைத் திருப்திப்படுத்துவதற்கு "முன்னேற்றகரமான வரி நிர்வாகத்துடன்" இணைந்த முறையில் உயர் வரிவிகித திட்டங்களையே ஐ.எம்.எவ். எப்பொழுதும் வலியுறுத்தி வந்துள்ளது. மொசாம்பிக்கின் தலா வருமானம் 100 அமெரிக்க டொலர்கள். மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 23 சத

வீதத்தினை அரசாங்க வருமானமாகத் திரட்டுகின்றன. மோசமான நிர்வாகச் சீர்கேடுகளும், ஊழலும் அங்கும் மலிந்து காணப்படுகின்றன. அமெரிக்க சமஷ்டி அரசாங்கத்தில் கூட இத்தகைய 23 சத வீதமானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சேகரிக்கப்படுவதில்லை.

அடம்ஸ்மித் என்பவர் சகிக்கக் கூடிய நிர்வாக நீதியைப் பற்றிப் பேசவில்லை. சட்டவாட்சியை உறுதிப்படுத்துவதற்கு சந்தையின் தாராள மயப்படுத்தல் ஒரு பிரதான திறவுகோல். சுதந்திர வர்த்தகம், மாற்றத்தக்க நாணயம், தன்னியக்கமான வியாபாரக் கூட்டு என்பன உத்தியோக பூர்வமான ஊழல்களைக் குறைத்து விடும். அத்துடன் அரசாங்கத்தினை மெய் பொதுசன பண்டங்கள் - உள்நாட்டுப் பொதுத்துறை, நீதிமுறைமை, அடிப்படைப் பொதுச் சுகாதாரம் மற்றும் கல்வி, நாணய உறுதிப்பாடு என்பவற்றில் முன்னிலைப்படுத்துவதற்கு அனுமதிக்கின்றது. எனவே ஒரு அரசாங்கத்தின் முன்னேற்றகரமான செயலாற்றுகைக்குப் பரந்த, இலகுவான சீர்திருத்த நிகழ்ச்சி நிரல் மிக அவசியமானது.

எனவே அரசாங்கம் வளர்ச்சி இலகுக்களில் அதிக கவனம் செலுத்த வேண்டும். வர்த்தகத்தைத் திறந்து விடுவதன் மூலம் புதிய, உள்நாட்டு, வெளிநாட்டு ஏற்றுமதியாளர்களுக்கு வசதியான நிலைமைகளைத் தோற்றுவிக்க வேண்டும். இதன் கருத்து என்னவெனின் நாணயத்தை மாற்றத்தக்க நிலையில் வைத்திருக்க வேண்டும். வளர்ச்சியடையும் ஏற்றுமதித் துறைகளின் இலாபங்களைப் பாதுகாப்பதற்கு தேவையான போது இது அவசியம். உலக விலைகளில் மூலதனப் பொருட்களும், இடைத்தரப் பொருட்களும் ஏற்றுமதியாளர்களுக்கு இலகுவாகக் கிடைக்கும் என்பதை வர்த்தகக் கொள்கைகள் உறுதிப்படுத்த வேண்டும். தொழிலாளர் - செறிவுடைய, தயாரிப்புக்களுக்கான ஏற்றுமதி செய்முறை வலயங்கள் விசேடமாக மிக உதவியாக இருக்கும். இதற்கு வரிக்கொள்கைகளும் முதலீட்டாளர்களுக்கு உதவுவதாக இருக்க வேண்டும்.

இவையெல்லாம், அரசாங்கம் தனது சொந்தச் செலவுகளை ஆகக் குறைந்த நிலையில் வைத்திருந்தாலே சாத்தியமாகும். ஆசியப் பொருளாதாரங்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 20 சத வீதம் அல்லது அதற்குக் குறைவாக அரசாங்கச் செலவீட்டுடன் எவ்வாறு செயற்படுகின்றது என்பதைக் காட்டுகின்றன. சீனாவில் இது 13 சத வீதமாகவே இருக்கிறது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) கல்வி 5 சத வீதத்தையும், சுகாதாரம் 3 சத வீதத்தையும், பொதுத்துறை நிர்வாகம் 2 சத வீதம், இராணுவம் மற்றும் பொலிஸ் 3 சத வீதத்தையும் வகிக்கின்றது. அரசாங்க மூலதனச் செலவு 5 சத வீதத்தைக் கொண்டிருக்கலாம். ஆனால் இதுவும் தனியார் துறையானது தொலைத் தொடர்புகள், துறைமுக வசதிகள், சக்தி போன்றவற்றில் உள்ளகக் கட்டுமானங்களை அளிக்கும்படி கோரினால் மாத்திரமே செலவழிக்கப்பட வேண்டும். வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இத்தகைய செயற்றிட்டங்களுக்கு நிதிப்படுத்துவதிலேயே முன்னிற்கின்றனர். ஆனால் இவர்கள் கிராமப் பகுதிகளைத் தேசிய சந்தைகள் மற்றும் சர்வதேச துறைமுகங்களுடன் இணைக்கும் வீதிகளைக் கட்டியெழுப்புவதற்கு ஆபிரிக்க அரசாங்கங்களுக்கு உதவ முடியும். ஆபிரிக்காவைப் பொறுத்தவரையில் ஏற்றுமதி மூலமான வளர்ச்சி விவசாயத்தின் சிற்றுடைமையிலிருந்தே வருவதினால் இவ் வீதி அமைப்பு மிக முக்கியமான ஓர் அம்சமாக விளங்குகின்றது. உதாரணமாக சாகேலில் பருத்தியும், கெனியாவில் தேயிலையும், மாலாவியில் புகையிலையும் கிராமத்தின் தொலைதூரத்திலேயே காணப்படுகின்றன.

அரசாங்கச் செலவினத்தில் இத்தகைய முக்கிய அம்சங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. கல்வி, சுகாதாரத்துக்கு அப்பால் சமூக செலவினத்துக்கு இடம் இல்லை. பொது உரிமைக் கம்பனிகளுக்கு அல்லது சந்தை சபைகளுக்கு மானியம் வழங்கல் நிறுத்தப்பட வேண்டும். நகரத் தொழிலாளர்களுக்கான உணவு மற்றும் வீட்டு வசதிகளுக்கான மானியம் வழங்கப்பட முடியாது. குறிப்பாக, வெளிநாட்டுக் கடன்களுக்கான வட்டிக் கொடுப்பனவுகள் வரவு-செலவில் சேர்க்கப்படவில்லை. ஏனெனில் பெரும்பாலான ஆபிரிக்க அரசுகள் கடன் தீர்க்க வகையற்ற நிலையில் காணப்படுகின்றன. கடன்கள் குறைக்கப்பட்ட நிலையில் புதிய தெம்புடன் மீள ஆரம்பிக்கவே அவை விரும்புகின்றன. ஆனால் தூரநோக்குக் கொண்ட உள்நாட்டுச் சீர்திருத்தங்களுடன் இணைந்த முறையிலேயே இவை அமுல் செய்யப்பட வேண்டும்.

## வளர்ச்சிக்கு வெளிநாட்டு உதவிகள் துணைபுரியுமா?

வெளிநாட்டு உதவிகள் ஆபிரிக்காவைப் பொறுத்த வரையில் எத்தகைய மாற்றங்களையும் ஏற்படுத்தவில்லை. சீர்திருத்தங்களுக்குத் தடங்கலாகவே அவை இருந்துள்ளன, அல்லது சிலவேளைகள் பொருத்தமற்றதாகவும் காணப்பட்டன. ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள் வரையறை கொண்டதாக இருந்தாலன்றி உதவிகளினால் நன்மை ஏற்பட மாட்டாது. அத்துடன் சந்தை மூலமான வளர்ச்சி உபாயத்தின் ஒரு பகுதியாகவே இது காணப்படுகின்றது. இரு நிலைமைகளும் இங்கு காணப்படவில்லை. பல நாடுகளுக்கு வெளிநாட்டு உதவி வாழ்க்கைக்கான வழியாக மாறியது. உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் செயற்றிட்டங்கள் வளர்ச்சி உபாயத்தைப் பெரும்பாலும் கொண்டிருக்கவில்லை.

வெளிநாட்டு உதவிகள் குறிப்பிட்ட தேர்ந்த அம்சங்களில் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். சந்தையை அடிப்படையாகக் கொண்ட, ஏற்றுமதி மூலமான வளர்ச்சியை மேம்படுத்துகின்ற மிகக் கடுமையான நடவடிக்கைகளை எடுக்கின்ற நாடுகளுக்கு மாத்திரமே வெளிநாட்டு உதவி அளிக்கப்பட வேண்டும். வெளிநாட்டு உதவி குறிப்பிட்ட கால எல்லைக்குள் வரையறுக்கப்பட வேண்டும். உதவிகளின் ஒரு பகுதியானது கடன்களை இரத்துச் செய்வதற்கு வழங்கப்பட வேண்டும். இவையும் அடிப்படையான சீர்திருத்தங்களுக்கான முன் நிபந்தனைகளுடன் செய்யப்பட வேண்டும். நிலத்தினால் சூழப்பட்ட நாடுகள் பற்றி உலக வங்கியும், உலக வர்த்தக நிறுவனமும் விசேட கவனம் எடுக்க வேண்டும். பாதுகாப்பான, மிகத் திறமை வாய்ந்த முறையில் துறைமுகங்களை இலகுவில் அடைந்து கொள்வதற்கு உத்தரவாதம் வழங்க வேண்டும். பிராந்திய ரீதியாக அமைதி காக்கும் நடவடிக்கைகளுக்கு சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு நிதி உதவிகளைச் செய்தல் அவசியமானது. அத்துடன் பிராந்திய மட்டங்களில் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் (குறிப்பாக பொதுச் சுகாதாரம் மற்றும் விவசாயக் கைத்தொழிலில்) மிகப் பயனுடைய முறையில் விருத்தி பெறுவதற்கு ஆதரவு அளிக்கப்பட வேண்டும்.

27 ஆம் பக்கத்தில் தொடரும் ......

# உலகப் பொருளாதாரத்தை ஆக்கிரமித்த ஆசியாவின் பலசாலிகள்

"கீழைத்தேயம் கீழைத்தேயமே. மேலைத்தேயம் மேலைத் தேயமே. கீழைத்தேயமும் மேலைத் தேயமும் ஒருநாளும் ஒன்று சேராது" என்பது பண்டைய மேலைத்தேயக் கவிஞனொருவனின் கவிதை வரிகள். கைத்தொழிற் புரட்சியின் பின்னர் மேற்கு நாடுகளில் ஏற்பட்ட பொருளாதார அபிவிருத்தியும் அரசியல் அதிகாரமும் என்றுமே நிலைத்திருக்கும் என்று வெள்ளையர்கள் மத்தியில் நிலவிய எதிர்ப்பையே இக் கவிதை வரிகள் பிரதிபலிக்கின்றன. நவீன அறிவுத் திறன், வளர்ச்சியடைந்த தொழில்நுட்ப முறை என்பவற்றின் மூலம் அப்போதைய மேற்கு நாடுகள் பெற்றிருந்த உன்னத, இணையில்லாத இடத்தை அடைவதற்குப் பண்டைய மானிய முறையிலமைந்த விவசாய சமூக அமைப்புக் காலகட்டத்தைக் கடந்திராத ஆசிய நாடுகளுக்கு வெகுகாலம் செல்லும் என அவர்கள் கருதியிருந்தனர்.

மேற்கு நாடுகளில் நிலவிய சமூக, பொருளாதார முறைமையானது அடிப்படையில் சுயதேவையைப் பூர்த்தி செய்கின்ற விவசாய சமூக, பொருளாதார முறைக்குப் பரிச்சயமற்றதொன்றாக அமைந்தது. எனினும் துரிதமான கைத்தொழில் மற்றும் வர்த்தக அபிவிருத்திக்கு அம்முறையினைப் பயில்வதும், பயிற்றுவிப்பதும் அவசியமென்பதை முதலில் உணர்ந்து கொண்ட நாடு யப்பானாகும். தனது நிலப் பிரதேசத்தினுள் காணப்படும் இயற்கை வளங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து யப்பானுக்கு ஆசியாவின் ஏனைய பெரிய நாடுகளுடனோ அல்லது மேற்கு நாடுகளுடனோ போட்டியிடக் கூடிய வல்லமை இருக்கவில்லை.

இரண்டாம் உலகப் போரின் காரணமாக ஏற்பட்ட உயிர்ச் சேதங்கள் பெருட்சேதங்கள் யாவற்றையும் மீறி, யப்பான் இன்று மேற்குலக நாடுகளையும் மிஞ்சியதாக கைத்தொழிற்றுறையிலும், வர்த்தகத்துறையிலும் முன்னணியில் திகழ்கின்றது. யப்பானில் ஏற்பட்ட இப்பாரிய அபிவிருத்தி அதன் அருகாமையில் அமைந்திருந்த நாடுகளிலும் கடுமையான தாக்கங்களை ஏற்படுத்தியது. யப்பானுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்த தென் கொரியா, தாய்வான், ஹொங்கொங், மலேசியா, தாய்லாந்து, சிங்கப்பூர், இந்தோனேசியா போன்ற "ஆசியான்" அமைப்பைச் சேர்ந்த நாடுகள் பெரும் பொருளாதார வெற்றியை அடைந்தமைக்கான காரணம் இதுவேயாகும். ஆசியான் அமைப்பைச் சேர்ந்த நாடுகளில் பிலிப்பைன்ஸ் மட்டுமே குறிப்பிடத்தக்க பொருளாதார வளர்ச்சியை அடையாத நாடாக இன்று காணப்படுகின்றது.

1975 - 1985 க்கு இடைப்பட்ட இரு தசாப்த காலப்பகுதியில் இந்தோனேசியாவில் வறுமைக் கோட்டில் வாழ்ந்த ஒவ்வொரு 5 பேரிலும் 2 பேர் வறுமையின் பிடியில் இருந்து மீண்டு சிறந்த பொருளாதார நிலையை அடைந்துள்ளனர். இதே காலப்பகுதியில் தென்கொரியாவில் வருமானம் நாலு மடங்கு அதிகரித்தது. தாய்வானின் வெளிநாட்டுச் சொத்துக்களின் அளவு 150 கோடியிலிருந்து 10,000 கோடி அமெரிக்க டொலர்களாக அதிகரித்தது. மொத்தமாகப் பார்க்கும் பொழுது உலக ஏற்றுமதிகளில் ஆசிய நாடுகள் 14.28 சத வீதத்தையே (ஏழிலொரு பங்கு) கொண்டிருந்தது. ஆனால் 1994 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இது 30 சத வீதமாக (மூன்றிலொன்று) துரித வளர்ச்சியைப் பெற்றதைக் காணலாம். இது தவிர உலகின் விசாலமான பொருளாதாரங்கள் 12 இல் சீனா, யப்பான், இந்தியா, இந்தோனேசியா, தென் கொரியா ஆகிய 5 பொருளாதாரங்கள் ஆசியாவில் காணப்படுகின்றன.

உலகின் அதிகளவு சனத்தொகையைக் கொண்டுள்ள நாடாகிய சீனாவின் பொருளாதார வளர்ச்சி வேகம் மேற்குலக நாடுகளை வியப்பில் ஆழ்த்துவதாக இருந்தது. சீனாவின் பொருளாதாரம் 1978-1994 வரையிலும் ஒவ்வொரு வருடமும் 9.5 சத வீத வேகத்திலேயே வளர்ச்சியடைந்தது. இதன் காரணமாக 100 கோடிக்கு மேற்பட்ட மக்களுக்கு முன்பு ஒரு போதுமில்லாத உயர்ந்த வாழ்க்கைத்தரம் கிட்டியது. இக் காலப்பகுதியில் கடுமையான வறுமையில் மூழ்கியிருந்த 25 கோடிக்கு மேற்பட்ட சனத்தொகையை 10 கோடியாக குறைக்க முடிந்தமை அண்மைய வரலாற்றில் சீனா அடைந்த மிகப் பெரும் வெற்றியாகும். இப் பொருளாதாரச் செழிப்பின் விளைவுகள் வெளிநாட்டு வர்த்தகத்தின் ஊடாக அயல் நாடுகளையும் சென்று சேர்ந்தன. இவ்வாறான வர்த்தக நடவடிக்கைகள் 1984 இல் 3,700 கோடி அமெரிக்க டொலர்களாக இருந்து, 1994 இல் 22,300 கோடியாக அதிகரித்தது. வெளிநாடுகளிலிருந்து சீனாவுக்குள் உட்பாய்ந்த வெளிநாட்டு நேர்முதலீடுகளின் பெறுமதி அமெரிக்க டொலர்களில் 3,400 கோடியைத் தாண்டி விட்டது.

ஆசிய நாடுகளில் நடைபெற்றுவரும் இத் துரித பொருளாதார அபிவிருத்தியின் மற்றுமோர் விசேட பண்பு யாதெனில் முன்னர் ஐரோப்பிய மற்றும் அமெரிக்க நாடுகளின் மீது தங்கியிருந்த வர்த்தகம் படிப்படியாக ஆசிய நாடுகளுக்கிடையிலேயே நடைபெறத் தொடங்கியது. 1975 இல் ஆசிய நாடுகளுக்கிடையில் மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதிகள், மொத்த ஏற்றுமதிகளில் 42 சத வீதமாக இருந்தது. 1995 இல் இது 53 சத வீதமாக அதிகரித்தது. இருபது வருடங்களுக்கு முன்பு ஆசிய நாடுகள் பிரதானமாக அமெரிக்க, மற்றும் ஐரோப்பிய நாடுகளிலேயே முதலீடுகளை மேற்கொண்டன. எனினும் 1993 களில் ஆசிய நாடுகளுக்குள் ஏற்பட்ட வெளிநாட்டு நேர் முதலீட்டு உட்பாய்ச்சல்களில் 51 சத வீதம் யப்பான், ஹொங்கொங், தென் கொரியா, சிங்கப்பூர், தாய்வான் போன்ற நாடுகளிலிருந்தே ஏற்பட்டுள்ளது. அத்துடன் ஆசிய நாடுகளுக்குள்ளே நிகழும் சுற்றுலாப் பயணங்களும் அதிகரித்துள்ளன. 1975 இல் ஆசிய நாடுகளுக்கிடையே மேற்கொள்ளப்பட்ட சுற்றுலாப் பயணங்கள் மொத்தத்தில் அரைவாசியாகக் காணப்பட்டன. 1994 இல் இது 85 சத வீதமாக வளர்ச்சியடைந்தது.

இதே காலப் பகுதியிலேயே பாரிய கைத்தொழில் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் ஆசியாக் கண்டம் முழுவதும் வளர்ச்சியடையத் தொடங்கியது. டொயோட்டா, சம்சுங், போர்மோசா பிளாஸ்டிக், ஹொங்கொங் வங்கி, சிங்கப்பூர் எயார்லைன்ஸ் போன்றன ஆசிய நாடுகளை மையமாகக் கொண்ட பேரளவு வர்த்தக நிறுவனங்களில் சிலவாகும். 1975 இல் உலகின் 10 மிகப் பெரிய நிறுவனங்களாக பின்வரும் நிறுவனங்கள் பெயரிடப்பட்டிருந்தன.

1. எக்ஸோன், 2. ஜெனரல் மோட்டோர்ஸ், 3. ரோயல் டச் / ஷெல், 4. டெக்சாசோ, (5) போட் மோட்டர்ஸ், (6) மொபைல் ஒயில், (7) நெஷனல் ஈரேனியன் ஒயில், (8) பிரிட்டிஷ் பெட்ரோலியம், (9) ஸ்டேன்டர்ட் ஒயில் ஒவ் கலிபோர்னியா, 10. யுனிலீவர். இந் நிறுவனங்களில் ஆசிய நிறுவனங்கள் எதுவும் காணப்படவில்லை. எல்லா நிறுவனங்களும் அமெரிக்கா அல்லது மேற்கு ஐரோப்பிய நாடுகளை மையமாகக் கொண்டமைந்த நிறுவனங்களாகும். இந் நிறுவனங்களில் 6 நிறுவனங்கள் கனிய நெய் உற்பத்திகளுடன் தொடர்புபட்டவையாக இருந்தமை மற்றுமொரு சிறப்பம்சமாகும். ஆயினும் இரு தசாப்தங்களின் பின்னர் 1995 இல் உலகின் மிகப்பெரும் நிறுவனங்கள் என்ற பட்டியலில் பின்வரும் நிறுவனங்கள் காணப்பட்டன.

(1) மிட்சுபிஷி கோர்பரேஷன், (2) மிட்சுயி அன்ட் கம்பனி, (3) சிகோசு கோர்ப்பரேஷன், (4) சுமிடோமா கோர்பரேஷன், (5) ஜெனரல் மோட்டோர்ஸ், (6) மறுபாணி கோர்ப்பரேஷசன், (7) போர்ட் மோட்டோர்ஸ், (8) எக்ஸோன், (9) நிஷோ சுயிவாசி கோர்பரேஷன், (10) றோயல் டச் ஷெல். இவ் வரிசையில் முதன் நான்கு நிறுவனங்களும் யப்பானைச் சேர்ந்தவை என்பது தெளிவாகின்றது. அத்துடன் இப் 10 பெரிய நிறுவனங்களில் 6 ஆசியாவைச் சேர்ந்தவை. எஞ்சியவற்றில் 3 மட்டுமே அமெரிக்காவைச் சேர்ந்தவை.

வர்த்தகம் மற்றும் கைத்தொழில் நிறுவனங்களில் மட்டுமன்றி வணிக மற்றும் வங்கி நடவடிக்கைகளிலும் ஆசிய நாடுகள் ஏனைய நாடுகளை மிஞ்சியுள்ளன. 1975 இல் உலகின் மிகப் பெரிய வங்கிகள் பின்வருமாறு: (1) பாங்க் அமெரிக்க கோர்பரேஷன், (2) சிடி கோர்ப்பரேஷன், (3) செஸ்மேன் ஹெடன், (4) பெங்கே நெஷனல் தேபெரிஸ், (5) டாய் இன் காங்கியோ, (6) பார்க்லேஸ், (7) டியூக்ஸே (8) நெஷனல் வெஸ்ட் மினிஸ்டர், (9) கிறெடிட் லியொனெஸ், (10) சுமிடோமோ. இவ் வங்கிகளிடையே ஆசியாவைச் சேர்ந்த (யப்பானிய) இரு வங்கிகள் மட்டுமே காணப்படுகின்றன. ஏனையவை அமெரிக்க அல்லது மேற்கைரோப்பாவைச் சேர்ந்தவையாகும். எனினும் 1995 இல் பின்வரும் வங்கிகள் உலகின் பெரிய வங்கிகளின் வரிசையில் இடம்பெற்றிருந்தன. அவை பின்வருமாறு: (1) சன்வா, (2) டாய் இன் காங்கியோ, (3) ப்யூஜி, (4) சுமிடோமோ, (5) சகூரா, (6) மிட்சுபிஜி, (7) நொரின் சுகின், (8) இன்டஸ்ரியல் பேங்க் ஒவ் யப்பான், (9) லோங் டேர்ம் கிறடிட் பேங்க், (10) டியூக்ஸே. வங்கித்துறையில் ஆசியா அடைந்த உன்னத நிலையை இது எடுத்துக் காட்டுகின்றது.

ஆசிய நாடுகள் கைத்தொழில், வர்த்தகம், நிதித்துறைகளில் இவ்வுன்னதமான நிலையை எய்தியமைக்கு அந்நாடுகளின் மனித வள விருத்தியும் பங்களிப்புச் செய்துள்ளதென்பதில் எவ்வித ஐயமுமில்லை. வருமான மட்டம் அதிகரித்தமை காரணமாக புதிய தலைமுறையினரின் உடல்சார் வளர்ச்சியிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டன. கடந்த சில தசாப்தங்களில் ஆசிய நாடுகளில் ஏற்பட்ட அபிவிருத்தியில் சாதனைகளாகக் கொள்ளத்தக்கவை மட்டுமன்றி பாதகமான பண்புகளும் காணப்படுகின்றன. கைகளில் பணப் புழக்கம் அதிகரித்ததுடன் உணவு வகைகளிலும், வாழ்க்கை முறையிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. காபோகைதரேற்று அதிகமுள்ள உணவுப் பானங்களை விடுத்து கொழுப்புச் சத்துமிக்க உணவு வகைகளில் மக்கள் ஆர்வம் கொண்டுள்ளனர். இதனால் சாதாரணமாக உயரம் அதிகரித்தது போலவே பருமனிலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் இலகுவில் நோய்வாய்ப்படக் கூடிய தன்மையினைத் தோற்றுவித்துள்ளது. முன்னரைவிடக் கூடுதலானோர் நீரிழிவு, இருதய நோய்களால் பீடிக்கப்பட்டுள்ளனர். சயரோகம் போன்ற நோய்கள் இல்லாதொழிந்து போகும் அதேவேளை புற்றுநோய் போன்ற நோய்கள் (எயிட்ஸ் நோயும்) பெருமளவு காணப்படுகின்றன.

துரிதமான கைத்தொழிலாக்கத்தின் காரணமாக காற்றும், நீரும் மாசடைதல் பல நாடுகளில் அவதானிக்கக் கூடிய பொதுவான பண்புகளாக உள்ளது. சில கணிப்பீடுகளின்படி சீனாவில் மட்டும் வருடாந்தம் காற்றுடன் 1.4 மில்லியன் தொன் சல்பர் டையொக்சைட்டு கலப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. இதனால் விண்வெளியில் வலம் வரும் விண்கலங்களினால் சீனாவைப் பார்க்க முடியாமல் போகலாம். பாங்கொக் நகரில் வாழும் குழந்தைகளின் உடலில் உள்ள ஈயத்தின் அளவு உலகின் வேறு எல்லா நாடுகளையும் விட மிக அதிகமாக உள்ளது. இந்நாடுகளின் இயற்கைக் காடுகளின் பாதுகாப்பும் விரைவாகக் குறைந்து செல்கின்றது. அயன மண்டல நாடாகிய இந்தோனேசியாவின் மொத்த நிரப்பரப்பில் அதன் இயற்கை காட்டுப் போர்வை 1 சத வீதம் மட்டுமே எஞ்சியுள்ளது. மலேஷியாவில் இது 1.8 சத வீதமாக உள்ளது. மொத்த நிலப்பரப்பில் இயற்கையான காடுகள் சுமார் 15 - 20 சத வீதமளவில் காணப்பட வேண்டுமென்று சுற்றாடலியலாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். எனவே 21 ஆம் நூற்றாண்டிற்கு வெகு அருகில் வந்துவிட்ட நிலைமையில் ஆசிய நாடுகள் தீர்வுகாண வேண்டியுள்ள தீர்க்கமான, மிகப் பிரதான பிரச்சினை "அபிவிருத்தியடைய வேண்டியது யாருக்காக" என்பதாகும்.

நன்றி **"ஆசியா வீக்"**

**தமிழில்: எம். கணேசமூர்த்தி**
பொருளியல் துறை
கொழும்புப் பல்கலைக்கழகம்

25 ஆம் பக்கத் தொடர்ச்சி

## ஆபிரிக்காவில் ......

உதவி வழங்கும் நாடுகளின் பாரிய அதே வேளையில் மிகவும் மலிவான உதவி மூலாதாரம் ஒன்றுள்ளது. அமெரிக்கா, யப்பான், ஐரோப்பா ஆகியன ஒன்றுசேர்ந்து "ஆபிரிக்காவுக்கான புதிய இணைப்பு" (New Compact for Africa) என்பதை வழிநடத்தி ஆபிரிக்க ஏற்றுமதிகளுக்கான திறந்த சந்தைகளை உத்தரவாதப்படுத்த வேண்டும். அத்துடன் உலகப் பொருளாதாரத்திற்குள் ஆபிரிக்காவினை ஒன்றிணைத்துக் கொள்ளவும் உதவ வேண்டும். இத்தகைய அர்ப்பணிப்பு இருபக்கங்களிலும் "நீண்ட காலப் பொருளாதர எல்லை நிலையை அடைதல்" முடிவடைந்து விட்டது என்பதை உறுதிப்படுத்த உதவும். ஆபிரிக்க நாடுகளைப் புதிய உத்வேகத்துடன் செயலாற்றுவதற்கு இவை உதவும். நடைமுறையில் காணப்படும் தடைகளை வெற்றி கொள்வதற்கு ஆபிரிக்கா பூராகவும் விரைவான வளர்ச்சிக்கான புதிய ஆரம்பம் ஒன்றினை மேற்கொள்ள முடியும்.

தமிழாக்கம் எஸ். அன்ரனி நோபேட்

# விஞ்ஞானமும் சமூகமும்:
# சில விஞ்ஞான சமூகவியல் கருத்துக்கள

**சோ. சந்திரசேகரன்**

விஞ்ஞானம், விஞ்ஞான அறிவு, விஞ்ஞான வளர்ச்சி என்பன சமூகக் காரணிகளுடன் எதுவித தொடர்புமற்றவை என்பது பலருடைய கருத்து. சமூகத்தின் செல்வாக்கு எதுவுமின்றி விஞ்ஞானம் சுதந்திரமாக இயங்குவதுடன், சமூகத்தின் மேம்பாட்டை நோக்காகக் கொண்டு காரணகாரிய அடிப்படையில் ஏற்றுக்கொள்ளக் கூடிய அறிவை விஞ்ஞானம் வழங்குகின்றது என மார்க்ஸ் (Marx), வெபர் (Weber) போன்ற ஆரம்பகால சமூகவியலாளர்கள் கருதினர். அறிவுத் தொகுதியினதும் மனித நம்பிக்கைகளினதும் தோற்றத்துக்கு வரலாற்று மற்றும் கலாசாரக் காரணிகள் உண்டு என்று கருதி அவை பற்றி ஆராய்ந்த சமூகவியலாளர்கள், விஞ்ஞான அறிவைத் தவிர்த்தே இத்துறையில் (sociology of knowledge) ஆய்வுகளைச் செய்தனர். இத்துறையில் ஆய்வு செய்தவர்கள் விஞ்ஞான அறிவைத் தவிர்த்து மதம், மந்திர தந்திரம், வரலாற்று ரீதியான கட்டுக்கதைகள், சமூக நம்பிக்கைகள் என்பவற்றையே ஆராய்ந்தனர். விஞ்ஞான அறிவு சமூகச் சூழலுக்கு அப்பாற் பட்டதொன்று என்றே கருதப்பட்டது.

1940களில் இத்துறையில் செய்யப்பட்ட ஆய்வுகள் முன்னேற்றமடைந்து விஞ்ஞானம் என்பது ஒரு சமூக நிறுவனம் என்ற முறையில் ஆய்வுக்குட்படுத்தப்பட்டது. அதிலும் கூட விஞ்ஞான அறிவு வளர சமூகக் காரணிகள் வழங்கிய பங்களிப்பு தவிர்க்கப்பட்டது. இத்துறை ஆய்வில் ஆர்வங்காட்டிய மேர்ட்டன் (R. Merton) விஞ்ஞானத்துறை ஒரு நிறுவனமாக இயங்குவது பற்றிச் சில கருத்துக்களைத் தெரிவித்தார்,

* விஞ்ஞானம் என்னும் நிறுவனம் சில நியமங்களைக் (Norms) கடைப்பிடித்து வருகின்றது. விஞ்ஞானிகள் இவற்றைப் பின்பற்றியே ஆகவேண்டும்.
* விஞ்ஞானத்துறைக்குரிய இந்நியமங்களையும் சில பிரமாணங்களையும் விஞ்ஞானிகள் முறையாகப் பின்பற்றும் போது விஞ்ஞானத் துறை ஒரு நிறுவனமாக முறையாக இயங்க நேரிடுகின்றது.
* இந்நியமங்களில் ஒன்று விஞ்ஞானிகள் திறந்த மனதுடன், விருப்பு வெறுப்பின்றி எத்தகைய விஞ்ஞான அறிவையும் (கண்டுபிடிப்புகளையும்) அதன் சிறப்பினைக் (merit) கொண்டே ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.
* மற்றொன்று, விஞ்ஞானிகள் தாம் கண்டறிந்தவற்றை சக விஞ்ஞானிகளுடன் பகிர்ந்து கொள்ளுதல் வேண்டும். இக்கருத்துப் பரிமாற்றம் சுதந்திரமாக நடைபெறல் வேண்டும்.
* மேர்ட்டனின் ஆய்வின்படி, விஞ்ஞானிகள் இத்தகைய நிறுவன நியமங்களை முறையாகப் பின்பற்றியமை -யினாலேயே விஞ்ஞான அறிவு நன்கு வளர்ச்சியுற முடிந்தது.

விஞ்ஞானிகள் ஏன் இவ்வாறு சில நியமங்களைப் பின்பற்ற விரும்பினர் என்ற வினாவுக்கும் அவர் விடையளித்தார். விஞ்ஞானிகள், விஞ்ஞான அறிவை எவ்வகையிலேனும் மேம்படுத்த வேண்டும் என உறதி பூண்டவர்கள், எனவே நியமங்களைப் பின்பற்றினர் என்பது மேர்ட்டனின் வாதம். இவ்வாறான உறுதியுடன் விஞ்ஞானிகள் பணியாற்றக் காரணம் அவர்கள் சக விஞ்ஞானிகளிடமிருந்து தொழில் ரீதியான அங்கீகாரத்தைப் பெறவிரும்பியமையாகும் என மேர்ட்டனின் கருத்து மேலும் விரிவுபடுத்தப்பட்டது.

மேர்ட்டனின் இக்கருத்துக்கள் விமர்சனத்துக்குள்ளான போதிலும் அவரே முதன்முதலாக விஞ்ஞான வளர்ச்சி பற்றிய சமூகவியல் ஆய்வு முறைமையைத் (Sociology of Science) தோற்றுவித்தவராவர். அவருடைய ஆய்வுகள் விஞ்ஞான வளர்ச்சி ஐரோப்பாவில் ஏன் ஏற்பட முடிந்தது என்ற வினாவுக்கான விடையைத் தரவும் முயலுகின்றன. விஞ்ஞானிகள் சுதந்திரமாகப் பணிபுரியவும் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவும் போதுமான வாய்ப்புகளைச் சமூக அமைப்பு வழங்கும் போது விஞ்ஞான வளர்ச்சி ஏற்பட முடியும் என்பதை அவரது ஆய்வுகள் வலியுறுத்துகின்றன.

இவருக்குப் பின்வந்த ஆய்வாளர்கள் (Mulkay, Bourdieu), விஞ்ஞான நிறுவன அமைப்பில், செல்வாக்குப் பெற்றிருந்த விஞ்ஞானிகளின் ஆய்வுப் பணிகளுக்கே நிறைந்த ஆதரவு கிடைத்தது. அவர்களுடைய ஆய்வுப் பணிகளின் தராதரங்களையும் சுயாதீனத் தன்மையையும் விட அவர்களுடைய குழுவின் செல்வாக்கிற்கேற்பவே அங்கீகாரம் கிட்டியது. இதில் நியமங்கள், நியமங்களை முறையாகப் பின்பற்றுதல் போன்றவை உதவுவதில்லை என்ற கருத்தை அவர்கள் முன்வைத்தனர். இவ்வாய்வுகள் யாவும் விஞ்ஞானம் என்பது சமூகத்துக்கு அப்பாற்பட்டது என்ற மரபுவரிச் சிந்தனையை மறுத்தன, அத்துடன் விஞ்ஞான அறிவும் சிந்தனைகளும் சமூகவியல் ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தையும் இவ்வாய்வுகள் வலியுறுத்தின.

1970 களில் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த பல நவ மார்க்சிய ஆய்வாளர்கள் விஞ்ஞான ஆய்வும் நடைமுறையும் எவ்வாறு முதலாளித்தவ அமைப்பின் பொருளாதார, சமூக நலன்களுடன் தொடர்புபட்டிருந்தன என்பதை எடுத்துக் காட்டினர். ஏற்கனவே (1931) சோவியத் வரலாற்றாசிரியர் ஒருவர்(B.Hessen) நியூட்டனின் பௌதீகவியல் விதிகள் எவ்வாறு அப்போதைய முதலாளித்துவ சமூகத்தின் தேவைகளுடன் பொருந்தி அமைந்திருந்தன என்பதை

**பேராசிரியர் சோ. சந்திரசேகரன்**
B.Ed (Hons) Cey.; M.A (Hiroshima)
**சமூக விஞ்ஞானக் கல்வித் துறை**
**கொழும்புப் பல்கலைக்கழகம்**

எடுத்துக் காட்டியிருந்தார். தொழிற் பிரிவு முறை போன்று விஞ்ஞான அறிவுத் தேட்டமும் கைத்தொழில் முதலாளித்துவ நலன்களை நிறைவு செய்வதாகவே அமைந்தது என்றும் ஆய்வாளர்கள் எடுத்துக் காட்டினர். பல இத்தாலிய மார்க்சிய அறிஞர்களும் விஞ்ஞான அறிவு முதலாளித்துவ நலன்களைப் பேணவே உதவின எனக் கருத்துத் தெரிவித்தனர். பிரிட்டனில் விஞ்ஞானத்தினால் ஏற்படும் அழிவுகள் பற்றி "முதலாளித்துவ விஞ்ஞானமும் தொழில் நுட்பமும்" என்ற தலைப்பில் பல ஆய்வுகள் வெளியாயின. இவை தீவிரவாத விஞ்ஞானக் குழுக்களால் வெளியிடப்பட்டவையாகும். விஞ்ஞான அறிவின் தோற்றமும் வளர்ச்சியும் சமூக அடிப்படைகளைக் கொண்டது என்னும் கருத்தை ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த விஞ்ஞான வரலாற்று ஆய்வாளர்களும் தெரிவித்தனர். அவர்களுடைய (Thomas Kuhn) கருத்தின்படி விஞ்ஞானத்தில் ஏற்றுக்கொள்ளப் படுகின்ற கோட்பாடுகளும் உண்மைகளும் விஞ்ஞானிகளுக்கிடையே தொடர்ச்சியாக நிகழும் பேச்சுவார்த்தைகளின் விளைவேயாகும். இவ்வாய்வாளரின் கருத்தின்படி.

* இப் பேச்சுவார்த்தைகளின்போது விஞ்ஞானிகள் வெவ்வேறு ஆய்வு முடிவுகளை மதிப்பீடு செய்ய முயல்கின்றனர். அம்மதிப்பீட்டிற்கு அவர்கள் பயன்படுத்தும் அளவுகோல்கள் விஞ்ஞான நிபுணர்கள் எடுத்துக் கூறிய முறையியலுடன் தொடர்பற்றவை
* விஞ்ஞானிகள் பெருமளவுக்குப் பழமைவாதிகள். பிறருடைய ஆய்வு முடிவுகளைப் பொய்ப்பிக்க அவர்கள் முயல்வதில்லை. முற்றிலும் தெரியாததைக் (Unknown) கண்டறிய முனைவதில்லை. தெரிந்ததை (Known) வெளிக்கொண்டு வரவே அவர்கள் முயல்கின்றனர்.
* விஞ்ஞானிகள் தமது முடிவுகளைப் பிறர் ஏற்றுக் கொள்ளச் செய்யத் தமது வாதத் திறமையையே பயன்படுத்துகின்றனர். உயர் பதவி அந்தஸ்தும் (elite positions) சமூக அந்தஸ்தும் உடையவர்கள் இதனை இலகுவாகச் செய்து கொள்ள முடியும்.

இக் கருத்துக்கள் யாவும் விஞ்ஞான அறிவும் உண்மைகளும் சில சமூக அடிப்படைகளைக் கொண்டிருப்பதைக் கோடிட்டுக் காட்டின. இதனைத் தொடர்ந்து 1970களில் விஞ்ஞானம் பற்றி மேற்கொள்ளப்பட்ட சமூகவியல் ஆய்வுகள், விஞ்ஞானிகளின் நடத்தை மற்றும் அவர்களுடைய சிந்தனைகள் என்பவற்றின் சமூக அடிப்படைகளை ஆராய முற்பட்டன. விஞ்ஞான அறிவு ஒரு குறிப்பிட்ட சமூக நிலைமையிலேயே அங்கீகாரம் பெறுகின்றது. விஞ்ஞானத்திலும் பல வாதப்பிரதிவாதங்கள் உண்டு. விஞ்ஞானத்துறை வெகுமதிகளைப் பெற பழமைவாத குழுக்களுக்கும் அவற்றுக்கெதிரான குழுக்களுக்குமிடையிலே போராட்டம் நிகழுகின்றது. விஞ்ஞானத் துறையில் புத்தாக்கங்களுக்கு எதிர்ப்பு உண்டு. முதலாம் விடயங்களைப் பற்றியனவாய் இவ்வாய்வுகள் அமைந்தன.

இவ் வாதப்பிரதிவாதங்கள் பற்றிய ஆய்வுகள் விஞ்ஞானிகள் தமது அறிவாற்றலுக்கு விடப்பட்ட சவால்களை எதிர்கொள்ள விஞ்ஞான ரீதியான வாதங்களுடன் தொடர்பற்ற சமூகரீதியான, பேச்சாற்றல் உத்திகளையே பயன்படுத்தியதைத் தெரிவிக்கின்றன. இந்த விவாதங்களில் சிறந்த ஆதாரங்கள் கூட ஐயத்துக்கிடமாக்கப்பட்டன. நிபுணத்தவம் வாய்ந்த விஞ்ஞான அறிவும் இவ்வாறு விவாதத்துக்குட்படுத்தப்பட்டது. இதற்கு காரணம் வெவ்வேறு நலன்களைக் கொண்ட சமூகக் குழுக்கள் இவ் விவாதங்களில் ஈடுபடுவதாகும். விஞ்ஞான வாதப்பிரதிவாதங்களின் சமூக அம்சங்களை வளர்க்க ஆய்வாளர்கள் பல உதாரணங்களைக் கூறுகின்றனர். புதிய விமான நிலையம், அணுநிலையம், பெருந்தெருக்கள் என்பவற்றை அமைக்க முயலும்போது சார்பாகவும், எதிராகவும் வைக்கப்படும் வாதங்கள் விஞ்ஞான ஆதாரங்களின் அடிப்படையில் முடிவுக்கு வருவதில்லை. பிரச்சினைக்குரிய விடயங்களுக்கு விஞ்ஞான ரீதியாக வெவ்வேறு விளக்கங்கள் அளிக்கப்படுகின்றன. வாதம் செய்யும் ஒவ்வொரு குழுவினரும் தத்தமது அரசியல், பொருளாதார கருத்துக்களுக்கமைய விஞ்ஞான, தொழில்நுட்ப அறிவைப் பயன்படுத்தி வாதிடுகின்றனர்.

பழமைவாத, மரபுவழிச் சிந்தனையுடன் இணங்கிச் செல்லாத புதிய அறிவுத் துறைகள் எதிர்ப்புக்குள்ளாக நேர்ந்தது. ஐக்கிய அமெரிக்காவிலும் ஐரோப்பிய நாடுகளிலும் மாற்று மருத்துவமாக சீன அக்குபங்சர் முறை அறிமுகம் செய்யப்பட்ட போது அதனை மேலை நாட்டு மருத்துவர்கள் எதிர்த்தனர். இவர்களுடைய எதிர்ப்பு முறைகள் யாவுமே முற்றிலும் பக்கச் சார்பற்ற விஞ்ஞான அறிவுடனும் மருத்துவ ஆய்வுகளுடனும் தொடர்பற்றனவாக இருந்தன. சீன மருத்துவமுறை நீதிமன்றக் கட்டுப்பாட்டுக்குள் வந்த பின்னரே இவ்வெதிர்ப்பு அடங்கியது.

பௌதீகவியலாளர்கள் தமக்குள்ளேயே எது உண்மையான விஞ்ஞானக் கண்டுபிடிப்பு என வாதிட்ட சம்பவங்களின் அடிப்படையில் விஞ்ஞான அறிவின் சமூக அடிப்படையைப் பல ஆய்வாளர்கள் இனங்கண்டுள்ளனர். சில விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்புக்கள் அவர்கள் கையாண்ட பரிசோதனை முறைகள் காரணமாக மட்டுமன்றி விஞ்ஞானிகள் சமூகத்தில் அவர்களுக்குரிய பெயர், அந்தஸ்து என்பவற்றின் அடிப்படையிலும் நிராகரிக்கப்பட்டன. ஐன்ஸ்ட்டைனின் கொள்கையில் எடுத்துக் கூறப்பட்ட "ஈர்ப்பு அலை"களைத் (gravitational waves) தாம் கண்டறிந்ததாக ஒரு விஞ்ஞானி எடுத்துக் கூறியபோது இவ்வாறான எதிர்ப்புத் தோன்றியது. விஞ்ஞான அறிவு ஆகக் கூடிய அளவுக்குப் பகுத்தறிவு ரீதியாகக் காரண காரியத் தொடர்புடையது, நம்பகத்தன்மை கொண்டது என்பதில் ஐயமில்லை, ஆயினும் விஞ்ஞானிகள் இவ்வறிவை உருவாக்கப் பின்பற்ற வேண்டிய திட்டவட்டமான விதிமுறைகள் இல்லாத நிலையில், விஞ்ஞானம் சமூகக்காரணிகளால் உருவாக்கப்படும் ஒரு அறிவுத் தொகுதி, ஒரு சமூக நிறுவனம் என்ற கருத்தை இச்சமூகவியல் ஆய்வுகள் நிலைநிறுத்தி உள்ளன.

அண்மைக்கால சமூகவியல் ஆய்வுகளும் முன்னைய விஞ்ஞான வரலாறு, விஞ்ஞான தத்துவம் பற்றிய ஆய்வுகளும் விஞ்ஞானிகள் அவர் தம் சிந்தனைகள் என்பன சமூக செல்வாக்குக்குட்படாத, சுதந்திரமான தன்மை கொண்டவை என்ற கருத்தை நிராகரித்தன. பிற அறிவுத்துறைகள் போன்று விஞ்ஞானமும் சமூகத் தொடர்புகள், கருத்துப்பரிமாற்றம், கலந்துரையாடல் என்பவற்றால் பெற்றுக் கொள்ளப்பட்ட ஓர் அறிவுத்துறையே என்ற கருத்தை இவ்வாய்வுகள் நிலைநாட்டின. பிற அறிவுத் துறைகள் போன்றே விஞ்ஞானமும், விஞ்ஞான அறிவும் ஒரு

குறிப்பிட்ட காலப்பகுதியினாலும் அதற்குரிய கலாசாரத்தினாலும் நிர்ணயிக்கப்படுகின்றது. அல்லது குறிப்பிட்ட கலாசாரத்தில் வேரூன்றி நிற்கின்றது. இதனை epistemic relativism என இவ்வாய்வாளர்கள் வர்ணித்தனர். மேலும், அறிவு என்பது இயற்கையின் பிரதிபலிப்பும் (mimic) அன்று. விஞ்ஞான அறிவு முடிந்த முடிவு, திட்டவட்டமாக முடிவு செய்யப்பட்டது என்றும் கொள்வதற்கில்லை. சமூகவியலாளர்களின் நோக்கில் விஞ்ஞானம் என்பது தொடர்ச்சியாக உருவாக்கப்பட்டுவரும் ஒரு சிந்தனைத் தொகுதியாகும். சுருங்கக் கூறின், விஞ்ஞான அறிவித்துறையின் வளர்ச்சி என்பது தனிமனித விவேகம், ஆற்றல் என்பவற்றின் விளைவு அல்ல. இத்துறையின் வளர்ச்சியை நிர்ணயிக்கும் காரணிகள் சமூக அமைப்பிலும் கலாசார இயல்புகளிலும் காணப்படுகின்றன என்பதையே விஞ்ஞானம் பற்றிய சமூகவியல் ஆய்வாளர்கள் கண்டறிந்து வெளியிட்டனர்.

## தீவிரவாத விஞ்ஞான இயக்கங்கள்

விஞ்ஞானத்தின் பயன்பாடு மனிதர்களுக்குப் போரையும் அழிவையும் தந்து துன்புறச்செய்ததமையால் விஞ்ஞானத்தின் பயன்பாட்டில் அடிப்படை மாற்றங்களைக் கோரி எழுந்த இயக்கங்களுள் ஒன்று தீவிரவாத விஞ்ஞான இயக்கமாகும். சில காலப்பகுதிகளில் இவ்வியக்கம் நன்கு இயங்கிற்று. முதலாவது, 1930, 1950 வரையுள்ள இரண்டாம் உலகப்போர் நடந்த காலப்பகுதி, இரண்டாவது, 1960 - 1975க்கு இடைப்பட்ட வியட்னாம் போர் நடந்த காலப்பகுதி. இவ்விரு காலப்பகுதிகளிலும் விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் இராணுவ நோக்கங்களுக்குப் பயன்படுத்தப் பட்டதை எதிர்த்து விஞ்ஞானிகள் இவ்வாறான இயக்கங்களைத் தோற்றுவித்தனர். முதலாவது காலப்பகுதியில் யப்பானில் அணுக்குண்டும், இரண்டாவது காலப்பகுதியில் வியட்னாமில் நேபாம் குண்டுகளும் பயன்படுத்தப்பட்டன. இச்சம்பவங்கள், அரசாங்கங்கள் விஞ்ஞானத்தை அழிவுநோக்கிப் பயன்படுத்தியமையால் அது தொடர்பான அரசியல், ஒழுக்க நெறிப்பிரச்சினைகள் தோன்றின.

1930களிலும் 1940களிலும் ஐக்கிய அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலுமிருந்த ஏராளமான விஞ்ஞானிகள், விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் அதிகாரத்தில் உள்ளோரால் தவறாகப் பயன்படுத்தப்படுவதையும் சமூகத்தில் ஆதிக்கம் செலுத்த முற்படுவதையும் கண்டித்தனர். விஞ்ஞானம் பொருளாதார வீழ்ச்சி, போர் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்க்காது அவற்றை மேலும் மோசமடையச் செய்யப் பயன்பட்டது என அவர்கள் முற்றாக காட்டினர். 1939 இல் ஜே.பேனால் என்ற அறிஞர் தமது நூலில் முதலாளித்துவ அமைப்புக்குள் விஞ்ஞானம் என்னும் நிறுவனம் பொதுநலனுக்கும் விஞ்ஞான முன்னேற்றத்துக்கும் எதிராகச் செயற்படுகின்றது. விஞ்ஞான அறிவின் மேம்பாடு முதலாளித்துவ பொருளாதாரச் சிந்தனையால் தடைப்பட்டு நிற்கின்றது. பொருளாதார நன்மைக்கு மட்டுமே விஞ்ஞானம் பயன்படுத்தப் படுகின்றது எனக் கண்டனம் தெரிவித்தார். இவரது கருத்தை ஏற்ற சர்வதேச விஞ்ஞானிகள் சமூகம் சோவியத் யூனியனிலாவது விஞ்ஞானம் சுதந்திரமாகச் செயற்படும் என எதிர்பார்த்தனர். ஆயினும் ஸ்டாலின் காலப்பகுதியில் அந்நாட்டில் இவ் விஞ்ஞானிகள் எதிர்பார்த்த சோஷலிஸ, சனநாயக விஞ்ஞானம் எதுவும் தோன்றவில்லை.

இந்நிலையில் 1950 களிலும், 1960களிலும் செயலிழந்த தீவிரவாத விஞ்ஞான இயக்கம் 1960 களின் இறுதியில் மீண்டும் களைகட்ட முதாலாளித்துவம், வியட்னாம் போர் பற்றிய கண்டனங்கள் காரணமாயின. 1970 களில் இவ்வியக்கம் தீவிர, அதிதீவிரவாத இயக்கங்களாகப் பிரிந்து இயங்கிற்று. விஞ்ஞானிகளும், சந்தர்ப்பவாதிகளாய், ஊழலில் ஈடுபடுவோராய் விளங்க முடியும், இப்போக்குகளைத் தளர்த்தி விஞ்ஞானிகள் சமூகப் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும். முதலாளித்துவ அமைப்பில் இடம்பெறும் விஞ்ஞான ஆய்வுகளை விவேகம், உயிரியல், இனவேறுபாடு போன்ற எவ்விடயத்தில் செய்யப்பட்டாலும் அவை சுரண்டலையும் வர்க்கச் சார்பான சித்தாந்தங்களையுமே மேம்படுத்துகின்றன. எனவே விஞ்ஞானம் முதலாளித்துவ விஞ்ஞானம், சோஷலிஸ விஞ்ஞானம் என இருவகையாகப் பிரிக்கப்பட்டு, அவை சமூகம், இயற்கை பற்றிய வெவ்வேறு கோட்பாடுகளை முன்வைக்க வேண்டும், அவை இருவகையான சமூகங்களுக்கு (முதலாளி, தொழிலாளி) சேவையாற்ற வேண்டும். வெவ்வேறு நோக்கங்களை நிறைவேற்ற வேண்டும் என்று பல கருத்துக்களை இவ்வியக்கத்தினர் முன்வைத்தனர்.

## பெண்ணியல் வாதிகள் கருத்து

விஞ்ஞான வளர்ச்சி பற்றி ஆராய்ந்த பெண்ணியல்வாத ஆய்வாளர்கள் பெண் விஞ்ஞானிகளின் தொகை குறைவாகக் காணப்படுவது பற்றிய ஆய்வுகளுக்கு முக்கிய இடமளித்தனர், இவர்களுடைய நோக்கில் நீண்ட காலமாகப் பெண்கள் விஞ்ஞான ஆய்வில் ஈடுபட்டிருந்த போதிலும் இவ்விடயம் முக்கியத்துவம் பெறவில்லை, இயற்கை விஞ்ஞான ஆய்வுகள் பெண்களைச் சித்தரித்த முறை எதிர்க்கப்பட வேண்டியதொன்று. விஞ்ஞான ஆய்வில் பயன்படுத்தப்படும் விஞ்ஞான முறையியல் ஆண்வர்க்கச் சார்புடையது என்பதால் அதனையும் கண்டனம் செய்தல் வேண்டும். தொழில்நுட்பம், அதன் வளர்ச்சி, பயன்பாடு என்பன ஆண்வர்க்கத்தினாலேயே நிர்ணயிக்கப்படுகின்றன, தொழில் நுட்ப மாற்றத்தின் தன்மையையும் அது எத்தகைய தேவைகளுக்குப் பயன்பட வேண்டும் என்பதையும் அவர்களே தீர்மானிக்கின்றனர், இனப் பெருக்கம் தொடர்பான தொழில் நுட்பம் அவர்களுடைய ஆதிக்கத்துக்குட்பட்டதொன்று என்று பெண்ணியல் வாதிகள் இதுவரை காலமும் ஏற்பட்டு வந்த விஞ்ஞான வளர்ச்சியைக் குறை கூறினர். மாரியா கியூரி, புளோரன்ஸ் நைட்டிங்கேல் போன்ற ஒரு சில பெண் விஞ்ஞானிகள் தவிர விஞ்ஞான கலைக் களஞ்சியத்தில் இடம்பெறும் மற்றவர்கள் அனைவரும் ஆண் விஞ்ஞானிகளேயாவர். அண்மைக்காலத்தில் பெண்ணியல் விஞ்ஞான வரலாற்று அறிஞர்கள் மேரி சோமர்வில், ஹேர்தா அயிர்ட்டன், ரோசலின்ட் பிராங்ளின் போன்ற பெண் விஞ்ஞானிகளின் வாழ்க்கை வரலாற்றை வெளியிட்டு இக்குறையை நிவர்த்தி செய்துள்ளனர். மேலைநாட்டு விஞ்ஞானத்துறையில் பெண்களின் தொகை இன்றும் கூட அருகியே காணப்படுகின்றது. மருத்துவ பீடங்களில் 9 வீதமானவர்களும் பொறியியல் பீடங்களில் 2 வீதமானவர்கள் மட்டுமே பெண் ஆய்வாளர்களாவர். 1945 வரை லண்டன் றோயல் கழகத்தில் பெண் ஆய்வாளர்கள் அனுமதிக்கப்படவில்லை. பரிஸ் நகர விஞ்ஞான ஆய்வாளர் கழகம் 1970 வரை பெண்களை அனுமதிக்கவில்லை.

1980களில் பெண் விஞ்ஞானிகளின் தொகை ஐரோப்பாவில் கணிசமாக அதிகரித்தாலும் அவர்களுக்குக் கிடைத்த சம்பளங்களும் அங்கீகாரமும் ஆண்களைவிடக் குறைவாகவே இருந்தது. பெண்கள் விஞ்ஞானத்துறையில் உயர் அந்தஸ்துப் பெறுவதற்கு சில அதிகாரபூர்வ (சட்ட) தடைகள் இருந்தன. அத்துடன் சில கலாசாரக் காரணிகளும் அவர்களுடைய பங்களிப்பிற்குத் தடையாக இருந்தன. ஆய்வாளர் கருத்தின்படி ஆய்வு கூடங்கள் ஆண்களின் கூடங்களாகவே விளங்கின. அங்கு பணிபுரியும் பெண்கள் தனிமைப்படுத்தப்பட்டனர். ஆய்வுத்துறையில் பங்களிப்புச் செய்யப் போதிய வாய்ப்பும் இருக்கவில்லை. ஆண் விஞ்ஞானிகளுடன் ஆய்வாளர் என்ற முறையில் சிறந்த தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளவும் முடியவில்லை. தமது ஆய்வுப் பணிகளில் வெற்றியீட்டிய பெண்களும் தமது தொழில் நீடிக்க ஆண் விஞ்ஞானிகளிலேயே தங்கியிருக்க வேண்டியுள்ளது. உயர் மத்திய வகுப்பைச் சேர்ந்த பெண் ஆய்வாளர்கள் வீட்டுப் பணிக்கு ஊழியர்களை நியமித்து தமது ஆய்வுப் பணியைச் செய்ய முடிகிறது. வசதியற்ற பிற பெண்கள் ஆய்வாளர்கள் வீட்டுப்பணி காரணமாக ஆய்வுப்பணியைக் காலப்போக்கில் கைவிட நேரிடுகிறது. மேலை நாட்டுப் பெண் ஆய்வாளர் நிலை பற்றிய பெண்ணியல்வாத அறிஞர்களின் கருத்துக்களே இவையாகும்.

இவர்களுடைய மற்றொரு முறைப்பாடு விஞ்ஞானம் என்னும் நிறுவனம் பெண்களை ஒதுக்கிவைத்து அவர்களைச் சுரண்ட உதவுகின்றதென்பதாகும். விஞ்ஞான ஆய்வு முறையியல் ஆண்வர்க்கச் சார்பானது என்று கூறிய இவ்வாய்வாளர்கள் இயற்கையை ஆராய பெண்ணிலைவாத முறையியலொன்றையும் உருவாக்க முற்பட்டனர். இம்முறையியல், இயற்கை பற்றிய பல புதிய விளக்கங்களைத் தரும் என அவர்கள் வாதாடினர். மருத்துவத் துறையிலும் உயிரியல் துறையிலும் பெண் விஞ்ஞானிகள் முக்கிய பங்களிப்புகளைச் செய்துள்ளனர். இவர்களுடைய ஆய்வுகள் முக்கியமாக இன விருத்தித் தொழில்நுட்பத்துறை சார்ந்தவையாகும். இத்தொழில்நுட்பம் பெண்களுக்கு எதிரானது என்றும் ஆண் ஆதிக்கத்தின் விளைவே இத்தொழில்நுட்பம் என்றும் பல பெண் ஆய்வாளர்கள் எழுதியுள்ளனர். ஆண் விஞ்ஞானிகள் உருவாக்கிய இத்தொழில்நுட்பங்கள் பெண்களின் இனவிருத்திக்கான உடற்கூற்றில் சில குறைபாடுகள் உண்டென்றும் அவை உயிரியல் ரீதியாகச் சீரமைக்கப்படல் வேண்டும் எனக் கூறுகின்றன. அதாவது இநுட்பங்களின் உட்பொருள் பெண்மையின் முழுமையில் குறைபாடு காணுவதும் அது மருத்துவரீதியாகக் கையாளப்பட வேண்டியதொன்று என்று வலியுறுத்துவதுமாகும். இனவிருத்தி பற்றிய புதிய விஞ்ஞான சிந்தனை என்ற பெயரில் ஆண் விஞ்ஞானிகள் பெண்களின் உடலை ஆய்வுகூடமாக மாற்றப் பார்க்கின்றனர். இத்தொழில் நுட்பங்களின் இறுதி நோக்கம் இனவிருத்தி மீதான கட்டுப்பாட்டை மட்டுமன்றி பெண்களின் இனவிருத்தித் தொழிற்பாட்டை அகற்றுவதேயாகும் என்று பெண்ணியல் அறிஞர்கள் பல்வேறு கண்டனங்களை விடுத்தனர். அவர்களுடைய இத்தகைய கண்டனங்கள் புதிய மருத்துவ, உயிரியல் தொழில்நுட்ப நோக்கங்கள் பற்றிய பல அடிப்படையான வினாக்களை எழுப்பின. தீவிரவாத விஞ்ஞான இயக்கத்தினர் போன்று பெண்ணியல் அறிஞர்களும் விஞ்ஞான அறிவு, தொழில்நுட்பங்களின் பிரயோகம் என்பனவற்றை நுணுகி ஆராயக்கூடிய சில புதிய அணுகுமுறைகளைத் தந்தனர். நவீன விஞ்ஞானம் பற்றிய இவர்களுடைய நிலைப்பாடும், கருத்துக்களும், விஞ்ஞானமும், தொழில்நுட்பமும் ஆய்வுகூட விடயம் மட்டுமன்றி அவற்றில் சமூகம் சார்ந்த இயல்புகளும் உண்டு என்பதை வலியுறுத்துகின்றன.

## வளர்முக நாடுகளுக்கான இடைநிலைத் தொழில்நுட்பம்

விஞ்ஞானம் பற்றிய மரபுவழிச் சிந்தனையின்படி விஞ்ஞான அறிவு பக்கச்சார்பற்றது, பகுத்தறிவின் அடிப்படையிலானது, பரந்த சமூகக் காரணிகளாலும் நிலைமைகளினாலும் பாதிக்கப்படாதது. ஆயினும் விஞ்ஞான அறிவின் வளர்ச்சி பற்றி ஆராய்ந்த ஆய்வாளர்கள் விஞ்ஞானம் சமூகக் காரணிகளின் செல்வாக்குக்கு உட்படுவது பற்றி விரிவான கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். விஞ்ஞானம் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ சமூகத்தின் தேவைகளுடன் தொடர்புள்ளதால் விஞ்ஞானம் நடுநிலையானது, சமூக செல்வாக்குக்கு உட்படாதது, சுயாதீனமானது என்ற கருத்து மறுக்கப்பட்டது. நன்கு வளர்ச்சியடைந்துள்ள நவீன விஞ்ஞானம் வளர்முக நாடுகளின் சமூக நிலைமைகளுக்குப் பொருத்தமற்றது ஆதலின் விஞ்ஞானத்தில் மாற்றச் சிந்தனையொன்று தேவை என்ற கருத்தும் வலியுறுத்தப்பட்டது. இப்பின்னணியில் வளர்முக சமூகங்களுக்குப் பொருத்தமான, இடைநிலை விஞ்ஞானம் பற்றிய கருத்து முன்வைக்கப்பட்டது. இக்கருத்தினை முதன் முதலாக வெளியிட்டவர் பிரிட்ஸ் ஸ்க்கூமாச்சர் என்ற அறிஞராவார். இவர் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தின் இறுதிக் காலகட்டத்தில் இந்தியாவில் பொறியியல் ஆலோசகராகப் பணிபுரிந்தவர். சுரங்கக் கைத்தொழிலை இந்தியாவில் நிறுவும் பணியில் ஈடுபட்டவர். இதற்காக பிரித்தானியாவிலிருந்து செலவு மிக்க தொழில் நுட்பத்தை இறக்குமதி செய்வதை அவர் எதிர்த்தார். இந்திய பொருளாதாரத்தை நவீனமயப்படுத்த உயர்நிலை தொழில்நுட்பம் பொருத்தமற்றது. செலவுமிக்கது, மூலதனச் செறிவுமிக்கது, பேணிப் பராமரிப்பதும் கடினம். மேலும் இந்திய கிராமிய பொருளாதார முறைக்கு முற்றிலும் பொருத்தமற்றது. எனவே இந்தியாவுக்கும் ஏனைய வளர்முக நாடுகளின் சமூக பொருளாதார முறைக்குப் பொருத்தமாக பேணிப் பராமரிக்கக் கூடிய ஒரு மாற்றுத் தொழில் நுட்பம் தேவை என ஸ்க்கூமாச்சர் வலியுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து அவர் 1973ஆம் ஆண்டில் "Small is beautiful" என்னும் நூலை வெளியிட்டார். அதில் முக்கியமாக பொதுமக்களுக்கான தொழில் நுட்பமொன்றை உருவாக்குவதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி ஆராய்ந்தார். மலிவான, இலகுவில் பராமரிக்கக்கூடிய அதிக ஊழியர்களை வேலைக்கு அமர்த்தக்கூடிய, தொழில்நுட்பம் பற்றிய ஆய்வாக அந்நூல் அமைந்தது. உள்ளூர் வளங்களையும், திறன்களையும் பயன்படுத்தி உள்ளூரில் சந்தைப்படுத்தக் கூடிய சிறு தொழில் முயற்சிகள் உருவாக்கப்படல் வேண்டும் என அவர் வலியுறுத்தினார். இவருடைய கருத்துக்களின் விளைவாக இங்கிலாந்தில், வளர்முக நாடுகளைக் கருத்திற் கொண்ட மாற்றுத் தொழில் நுட்பங்களை உருவாக்கும் நோக்குடன் இடைநிலைத் தொழில்நுட்ப விருத்தி நிலையமொன்று உருவாக்கப்பட்டது. 1970களில் இவ்வறிஞரின் கருத்துக்கள் மேலைநாட்டு கைத்தொழில் முதலாளித்துவத்தை வெறுத்த இளந் தலைமுறையினரைப் பெரிதும் கவர்ந்தன. அவர்களுடைய

நோக்கில் இராணுவமயமும் வேலையின்மைப் பிரச்சினையும் சூழல் மாசடைதலும் இம் முதலாளித்துவத்தின் விளைவுகளாகும், விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் இராணுவ கைத்தொழில் ஆதிக்கத்துக்கு உட்பட்டுவிட்டமையால் அவை சமூக, கலாசாரப் பிரச்சினைகளைத் தீர்க்கப் பயன்படமாட்டா என அவர்கள் கருதினர். இன்றைய காலகட்டத்தில் முதலாளித்துவ அமைப்புக்கு எதிரான மாற்று ஏற்பாடுகளை நியாயப்படுத்துவதில் பல பிரச்சினைகள் உண்டு. எனினும் இடைநிலைத் தொழில்நுட்பத்தை வளர்க்கும் முயற்சியில் வளர்ச்சியடைந்த முதலாம் உலகநாடுகளும் ஈடுபட்டுவருகின்றன. மூன்றாம் உலக நாடுகளிலும் இம்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கைத்தொழில் நாடுகளில் பல சுய உதவி, மாற்றுத் தொழில்நுட்ப அமைப்புகள் உருவாகியுள்ளன. பிரித்தானியாவில் சமூகப் பயனுள்ள நுகர் பொருட்களை உருவாக்கவும் வேலைவாய்ப்புகளை முழுமையாக வழங்கவும் மாற்றுத் தொழில்நுட்ப நிலையமொன்று உருவாக்கப்பட்டது. 1970களில் நெதர்லாந்தில், தீவிரவாத விஞ்ஞான இயக்கத்தினர் விஞ்ஞானக் கடைகளை நிறுவினர். இவை பொதுமக்களுக்கு சமுதாயப் பாங்கான விஞ்ஞான அறிவுரைகளை வழங்கின. பொதுமக்களுக்கும் பல்கலைக்கழக விஞ்ஞான ஆய்வாளர்களுக்குமிடையே தொடர்புகளை ஏற்படுத்தின.

இம்முயற்சிகளின் நோக்கம் விஞ்ஞானத்தை சமூகம் பயன்படும் முறையில் புதிய பாதைகளில் அதனைத் திசை திருப்புவதாகும். ஆயினும் இம்முயற்சிகள் ஒரு அளவுக்கே வெற்றியைத் தந்தன. ஸ்க்கூமாச்சர் கூறிய எளிமை அழகானது மட்டுமல்ல சாத்தியமானது என்ற நோக்கில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆயினும் இம்முயற்சிகளின் தாக்கம் போதுமானதல்ல. இதற்கு முக்கிய காரணம் மாற்றுத் தொழில்நுட்பச்சிந்தனை, உற்பத்தி முறையினை முழுமையாக நோக்கத் தவறியமையாகும். இந்நிலையில் மாற்றுத் தொழில்நுட்பம் பயனுள்ளதாயினும் உற்பத்தித்துறையில் ஆதிக்கம் செலுத்தும் முதலாளித்துவ, உயர் தொழில்நுட்ப உற்பத்தி முறைக்கு இரண்டாமிடத்திலேயே இது இருக்க வேண்டியுள்ளது. மாற்றுத் தொழில் நுட்பம் நடைமுறையிலுள்ள சமூக அமைப்புக்கு ஒரு சவாலாக இல்லை. மாற்று தொழில்நுட்ப வல்லுனர்கள் உற்பத்திப் பொருள், உற்பத்தி முறை என்பவற்றிலேயே கூடிய கவனம் செலுத்தினர். தொழில் நுட்பத்துடன் சம்பந்தப்பட்ட சமூக உறவுகளை அவர்கள் கருத்திற் கொள்ள வில்லை. இதனால் பல மாற்றுத் தொழில் நுட்ப செயற்திட்டங்களின் நோக்கங்கள் நிறைவேறவில்லை. உதாரணமாக, மூன்றாம் உலக நாடுகளில் அறிமுகம் செய்யப்பட்ட குழாய் கிணறுகள் ஏழை விவசாயிகள் நன்மை பெறுவதை நோக்கமாகக் கொண்டவை. அந்த அளவுக்கு அவை மலிவானவை, சிக்கனமாகவும் இலகுவாகவும் அவற்றைப் பராமரிக்கலாம். இவை செல்வந்த விவசாயிகளுக்கு ஒரு பயமுறுத்தலாகவும் அமைந்தன. ஆயினும் இறுதியில் இத் தொழில்நுட்பத்தை அவர்களே கட்டுப்படுத்துபவர்களாகவும் அதனை ஏழை விவசாயிகளுக்கு விற்பவர்களாகவும் மாறினர். மூன்றாம் உலக நாடுகளின் பசுமைப்புரட்சியுடன் தொடர்புடைய புதிய தொழில் நுட்பங்களினால் நன்மையடைந்தவர்கள் பெருநில விவசாயிகளே என்பது ஆய்வாளர் கருத்து. இந்நிலையில் எத்தகைய புதிய தொழில்நுட்பமும் சமூகத்தின் வகுப்பு அமைப்பில் ஐக்கியமாகி விடுகின்றது. இதனால் புதிய தொழில்நுட்பங்கள் நிலப்பிரபுத்துவச் சார்புடையதாகி விடுகின்றது. பல ஆய்வாளர்கள் உள்ளூர் விவசாயிகள் புதிய இடைநிலைத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தத் தவறிவிடுவதாகக் குற்றம் சாட்டுவர். எவ்வாறு உள்ளூர் சமூக அமைப்பு இதற்குத் தடையாக அமைகின்றது என்பதை ஆராய அவர்கள் தவறிவிடுகின்றனர். இத் தொழில் நுட்பங்களின் பயன்பாடு பற்றிய மற்றொரு கண்டனம் தேசிய அரசாங்கங்களும் சர்வதேச நிறுவனங்களும் இடைநிலைத் தொழில்நுட்பத்துக்கு ஒரு பொதுநல சேவை என்ற முறையில் மட்டுமே ஆதரவு தருகின்றன என்பதாகும். இத் தொழில்நுட்பங்கள் பொருளாதார அபிவிருத்திக்கு உதவுவன என்ற கருத்து பெரிதும் வலியுறுத்தப்படவில்லை. இந்நிலையில் இடைநிலைத் தொழில்நுட்பங்கள் பெரும் முக்கியத்துவம் பெறுவதற்கில்லை. மேலும், பொருளியல் நிபுணர்களின் நோக்கில் இடைநிலைத் தொழில்நுட்பங்கள் பொருளாதாரத் திட்டங்களில் முக்கிய இடம் பெற்றாலும் அவை பொருளாதார உற்பத்திப் பெருக்கத்துக்கும் வேலை வாய்ப்புகளை விரிவு செய்யவும் உதவுமா என்பது சந்தேகமே. சமூகவியல் ரீதியாக நோக்குமிடத்து பொருத்தமான இடைநிலைத் தொழில்நுட்பம் என்பதைத் தொழில் நுட்பரீதியாக மட்டும் வரையறை செய்வது போதாது. உதாரணமாக, பாராமரிக்க இலகுவானதே பொருத்தமான தொழில்நுட்பம் என்று கொள்வது சரியல்ல. சமூகத்தில் அதிகாரம் வகிப்போர் புதிய தொழில்நுட்பத்தைத் துரிதமாகக் கைப்பற்றித் தமதாக்கிக் கொள்வர் என்ற அம்சமும் கருத்திற் கொள்ளப்படல் வேண்டும். சாதாரண, பின்தங்கிய விவசாயிகளை விட நில உடைமையாளர்களான செல்வந்த விவசாயிகளே மாற்றுத்தொழில் நுட்பத்தைத் தமது தேவைகளுக்கேற்பப் பயன்படுத்தும் ஆற்றல் மிக்கவர்களாவர். இந்நிலையில் சில வகையான தொழில்நுட்பங்கள் சமூக அமைப்பின் அம்சங்களுடன் தொடர்புறுத்தப் படுவதுடன் அவற்றினால் புதிய வடிவங்களையும் பெற வாய்ப்பு உண்டு. இப்பின்னணியிலேயே விஞ்ஞான அறிவுத்துறையில் தீவிரவாத விஞ்ஞான இயக்கங்கள் தோன்றின. இவை மாற்றுத் தொழில்நுட்ப இயக்கங்களின் இலட்சியங்களுக்குப் பல படிகள் மேலே சென்று புதிய, பொருத்தமான விஞ்ஞானம், தொழில்நுட்பம் பற்றி பிரசாரம் செய்தன. அடிப்படையான சமூக மாற்றத்துக்கு, மக்களுக்காகவே விஞ்ஞானம் என்ற நிலைமை தோன்ற வேண்டும் என்பது இத் தீவிரவாத இயக்கத்தின் முக்கிய இலட்சியமாகும்.

## உசாத்துணைகள்


1. Ben-David, Joseph (1972): The Profession of Science and its Powers. Minerva 10
2. (1964) : Scientific Growth : A Sociological view. minerva.
3. Crowther, J.G. (1967) : Science in modern society. Gresset press, London.
4. Halmos, Paul, (ed) (1972) : The Sociology of Science. The Sociological Review. Monograph, No 18.
5. Kuhn, Thomas, S. (1962) : The Structure of Scientific Revolution. University of Chicago press.
6. Morton, Robert, K. (1974) : The Sciology of Science. Chicago University Press. Chicago.
7. Webster, Andrew (1991) : Science, Technology and Society. Mac millan, London.


* * *

# உலக மீன்பிடி : பரம்பலும் உற்பத்தி பாங்குகளும்

**எஸ். அன்ரனி நோபேட்**

மனித வரலாறு கடல் வளங்களுடன் தொடர்புடையது. இக் கடலோர மீன்பிடியைப் பயன்படுத்தியே பலதனிப்பட்ட சமூகங்கள் வளர்ச்சியடைந்தன. உணவு வளமாக, மிக முக்கியமானதாகக் கருதப்படும் மீன் புவியியல், கலாசாரக் காரணிகளுக்கு ஏற்ப பரந்த வேறுபாட்டைக் கொண்டுள்ளது. சமய நம்பிக்கைகள் நுகர்வு மட்டத்தைக் கட்டுப்படுத்தினாலும், இம் மீன் வளங்களை இலகுவில் அடையக்கூடிய தன்மையினால் (proximity) கரையோரங்களில் வாழும் சமூகங்கள் இவ்வளங்களை அதிகமாகச் சுரண்டுகின்ற நிலை காணப்படுகின்றது. பூகோள ரீதியாக நோக்கினால் 1988 இல் மிருகங்களின் புரத உள்ளெடுப்பில் சராசரியாக மொத்தம் 16 சத வீதத்தை மீன் வளங்கள் கொண்டிருந்தன. வளர்முக நாடுகளில் இதுமேலும் சிறப்பானதாகக் காணப்படுவதுடன் கானா, வடகொரியா ஆகிய நாடுகளில் 1988இல் விலங்குகளின் புரத உட்கொள்ளலில் (animal protein) 60 சத வீதத்துக்கு மேலான பங்கினைக் கொண்டிருந்தது.

வளர்ச்சியடைந்த நாடுகளில் யப்பானில் மட்டுமே தேசிய உணவு முறையில் மீன் முக்கிய இடத்தைக் (50.6%) கொண்டுள்ளது. வட அமெரிக்காவில் இதன் பங்கு 6.6 சத வீதமாகவும், மேற்கு ஐரோப்பாவில் 9.7 சத வீதமாகவும் காணப்படுகின்றது. உலக சனத்தொகையில் குறிப்பிடத்தக்க விகிதத்தினர் கடலோர மீன்பிடியில் (marine fishing) பெரிதும் தங்கியுள்ளனர்.

### இடஞ்சார்ந்த பரம்பல் (Spatial distribution)

மீன்கள் அதிகளவில் அலைந்துதிரியும் இயக்கத்தன்மை கொண்டவை. சமன் (Salmon), ரியூனா (Tuna) போன்ற மீனினங்கள் தமது வாழ்க்கை வட்டத்தில் நீண்டதூரங்களுக்குச் செல்லக் கூடியவை. பல்வேறு மீனினங்களின் உயிரியல் கட்டுப்பாடுகள் அவற்றின் சூழல் எல்லைகளை வரையறுப்பதாக இருந்தாலும் மீனினங்களில் காணப்படும் நகர்வுகள் உலக சமுத்திரங்களில் அவற்றின் சமனற்ற பரம்பலுக்குக் காரணமாகி விடுகின்றன. சில பகுதிகளில் மீன்கள் அதிகமாகக் காணப்பட, சில பகுதிகளில் மிகக் குறைவாகக் காணப்படுகின்றது. சமுத்திரங்களின் உயிரியல் உற்பத்தித்திறன் (biological productivity) இடத்துக்கிடம் வேறுபடுவதும் இதற்குக் காரணமாகும். உலக சமுத்திரங்களின் உயிரின உற்பத்தியின் பரம்பல் **வரைப்படம் 1** மூலம் எடுத்துக்காட்டப்படுகின்றது.

வட அத்திலாந்திக், வட பசிபிக் பகுதிகளில் அதிகளவான கண்டமேடைகள் (continental shelves) நீரின் கீழ் காணப்படுகின்றன. 100 மீற்றர் படையில் சூபிளாங்ரனின் பரம்பல் (distribution of zooplankton) இடத்துக்கிடம் வேறுபடுவதை வரைபடத்தில் அவதானிக்கலாம். இதற்குப் பல காரணங்கள் உள்ளன.

(1) சமுத்திரங்களின் கீழ் உள்ள நிலஅமைப்பின் இடையீட்டுச் செயற்பாடுகள் (interaction)
(2) உவர்த்தன்மை (salinity)
(3) நீர் வெப்பநிலை (water temperature)
(4) சூரியஒளியும் நீரோட்டங்களும் (sun light and currents)

இங்கு சூரிய ஒளியும் நீரோட்டங்களும் மிக முக்கியமானவை. கரையைக் கடந்து செல்லும் காற்றுக்களினால் மேற்பரப்பு நீரோட்டங்கள் உருவாகும் பொழுது அதன் தாக்கத்தினால் ஆழமான, ஊட்டச்சத்து நிறைந்த நீர் மேற்பரப்புக்குக் கொண்டு வரப்படுகின்றது. கண்டங்களின் மேற்குக் கரைகளிலேயே இவை நிகழ்வதுடன் பேரு, சிலி, போன்ற நாடுகளின் மீன்பிடி உற்பத்தியில் பிரதான செல்வாக்கைக் கொண்டிருக்கின்றன.

உலக மீன்பிடிப் புவியியலானது சூபிளாங்ரனின் பரம்பலை நிர்ணயிக்கின்ற சூழலியல் மாறிகளின் முக்கியத்துவத்தினையே பிரதிபலிக்கின்றது. உலக விவசாய ஸ்தாபனம் (FAO) பரந்தளவில் வரையறை செய்யப்பட்ட பகுதிகளினடிப்படையில் வருடாந்த மீன்பிடியை மதிப்பீடு செய்து வருகின்றது. இப்பகுதிகள் **வரைபடம் 2** இல் எடுத்துக்காட்டப்படுகின்றது. இப்பகுதிகளுக்கிடையில் மொத்த மீன்பிடியின் பரம்பல் எவ்வாறு காணப்பட்டதென்பதை **அட்டவணை 1** விளக்குகின்றது. உலக மொத்த மீன்பிடியில் பசிபிக் பகுதியே முன்னிலையை வகிப்பதுடன் 1990 இன் மொத்த மீன்பிடியில் 64.1 சத வீதத்தைக் (52.92 மில்லியன் தொன்) கொண்டிருந்தது. இதே ஆண்டில் அத்திலாந்திக் பகுதிகள் உலக மொத்த மீன்பிடியில் 26.1 சத வீதத்தைக் (21.76 மி.தொன்) கொண்டிருந்தன. இந்து சமுத்திரப் பகுதிகள் (மேற்கு, கிழக்கு) 7.4 சத வீதத்தைக் கொண்டிருந்தன. உலகின் பிரதான மீன்பிடி 16 இடங்களிலேயே அதிகளவில் செறிந்து காணப்படுகின்றது.

**உலகின் பிரதான மீன்பிடிப் பகுதிகள் பின்வரும் பகுதிகளில் காணப்படுகின்றன.**

(1) அத்திலாந்திக் பிரதேசம் (வடமேற்கு, வடகிழக்கு, மேற்கு மத்திய பகுதி, கிழக்கு மத்திய பகுதி, தென் மேற்கு, தென் கிழக்கு)
(2) மத்தியதரைக் கடற் பகுதிகளும் கருங்கடலும்.
(3) இந்துசமுத்திரப் பகுதிகள் (மேற்கு, கிழக்கு)
(4) பசிபிக் பிரதேசம் (வடமேற்கு, வடகிழக்கு, மேற்குமத்திய பகுதி, கிழக்கு மத்திய பகுதி, தென்மேற்கு, தென்கிழக்கு)
(5) அன்ரார்டிக்கா.

**எஸ். அன்ரனி நோபேட்**
B.A. (Hons); M.Sc; M.Phil (Madras)
**புவியியல் துறை**
**கொழும்புப் பல்கலைக்கழகம்**

**அட்டவணை 1: உலகின் பிரதான மீன்பிடிப் பகுதிகளும் அவற்றின் உற்பத்தியும் (1990)**

| பகுதிகள் | உற்பத்தி | |
|---|---|---|
| | (ஆயிரம் தொன்னில்) | (மொத்தத்தின் சத வீதம்) |
| அத்திலாந்திக், வடமேற்கு | 3221 | 3.9 |
| அத்திலாந்திக், வட கிழக்கு | 9183 | 11.1 |
| அத்திலாந்திக், மேற்கு மத்திய பகுதி | 1697 | 2.0 |
| அத்திலாந்திக், கிழக்கு மத்திய பகுதி | 4098 | 4.9 |
| அத்திலாந்திக், தென் மேற்கு | 2029 | 2.4 |
| அத்திலாந்திக், தென்கிழக்கு | 1530 | 1.8 |
| மத்திய தரைக்கடலும் கருங்கடலும் | 1489 | 1.8 |
| இந்து சமுத்திரம், மேற்குப் பகுதி | 3376 | 4.1 |
| இந்து சமுத்திரம், கிழக்குப் பகுதி | 2828 | 3.4 |
| பசிபிக், வடமேற்குப் பகுதி | 25,688 | 31.0 |
| பசிபிக், வட கிழக்கு | 3428 | 4.1 |
| பசிபிக், மேற்கு மத்திய பகுதி | 7311 | 8.8 |
| பசிபிக், கிழக்கு மத்திய பகுதி | 1519 | 1.8 |
| பசிபிக், தென் - மேற்கு | 1031 | 1.2 |
| பசிபிக், தென் - கிழக்கு | 13,945 | 17.2 |
| அன்ரார்டிக்கா | 428 | 0.5 |
| மொத்தம் | 82,801 | 100.0 |

Source : FAO (1992)

உலக சமுத்திரங்களில் சமனற்ற பரம்பலைக் கொண்டுள்ள மீன்பிடி வளங்கள் தொடர்பான சில அம்சங்கள் கவனத்துக்குரியவையாக உள்ளன.

(1) மரபு ரீதியான மீன்பிடி அனுபவங்களின் மூலம் மூலவளத்தின் அடிப்படையை விரிவாக்கமுடியாது.

(2) வளங்களின் அருமை காரணமாக இடஞ்சார்பான விரிவாக்கத்தைப் பெறுவதற்கான சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. ஆனால் சமுத்திரங்கள் பரந்து விரிந்ததாக இருந்த போதிலும் வரையறைகளும் காணப்படுகின்றன.


(3) வளங்களுக்கான அடைகையில் (access) பிணக்குகள் காணப்படுகின்றன. இப் பிரச்சினைகள் அயலிலுள்ள கரையோர அரசுகளில் மாத்திரமின்றி ஏனைய நாடுகளின் ஆழ்கடல் மீன்பிடி வள்ளங்களுடன் தொடர்பானவையாகவும் காணப்படுகின்றன.

## உற்பத்தியின் பாங்குகள் (Trends in Production)


உலக மீன்பிடியின் நீண்ட காலமதிப்பீடுகள் பற்றிய ஊகங்கள் பலவாறாக இருந்தபோதும் 20 ஆம் நூற்றாண்டிலேயே மீன்பிடியின் பயன்பாட்டு வீதம் விரைவுபடுத்தப்பட்டது. "கவுல்" (Coull, 1993) என்பவர் ருஷிய மூலாதாரங்களை அடிப்படையாகக் கொண்டு கருத்துக் கூறும் போது உலக மீன்பிடி 1850 இல் 1.5–2.0 மில்லியன் தொன்னாகக் காணப்பட்டதுடன் 1900 இல் 4 மி.தொன்னாகவும், 1913 இல் 9.5 மி.தொன்னாகவும் உயர்வடைந்தது எனக் குறிப்பிடுகின்றார். 1938இல் இது 22 மி.தொன்னை எட்டியது.

**வரைபடம் 1 : உலக சமுத்திரங்களின் உயிரியல் உற்பத்தி.**
**100 மீ. மேற்படையில் குளோரபில் பரம்பல்**

Source : Times Books, 1983



**வரைபடம் 2 : உலக மீன்பிடிப் பகுதிகள்**
Source: FAO, 1992





உலகின் பிரதான மீன்பிடிப் பகுதிகளுக்கிடையிலான வேறுபாடுகளினால் பூகோளப் பாங்குகளும் தெளிவற்றதாகக் காணப்படுகின்றன. பசிபிக்கின் (வடமேற்கு, தென் கிழக்கு) பிரதான மீன்பிடிப்பகுதிகள் 1980 காலத்தில் தொடர்ந்து உற்பத்தி அதிகரிப்பைக் கொண்டிருந்தன. பேரு, சிலி ஆகிய நாடுகளில் மீன்பிடி அதிகரித்துக் காணப்பட்டாலும் சிலவேளைகளில் தரங்குறைந்த மீனினங்களே பிடிக்கப்படுகின்றன. வட அத்திலாந்திக் பகுதிகளில் மீன்பிடி வர்த்தக ரீதியாகச் செறிவான பயன்பாடு கொண்ட நீண்ட வரலாற்றைக் கொண்டு காணப்படுகின்றதுடன் 1970 களின் நடுப்பகுதியிலிருந்து உற்பத்தியில் குறைந்து செல்லும் போக்கு தென்படுகின்றது. தொடர்ச்சியான பயன்பாட்டினால் சில மீனினங்களும், குறிப்பிட்ட சில பகுதிகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

இவ் வரலாற்றுப் போக்குகளின் அடிப்படையில் நோக்கும் பொழுது 1950 இலிருந்து ஆரம்பிக்கும் இரு தசாப்த காலங்களில் சராசரியாக வருடத்துக்கு 6 சத வீத வளர்ச்சி காணப்பட்டது. **(வரைபடம் 3)**. 1971 – 1990 வரைப்பட்ட 20 வருடங்களில் உலக மீன்பிடி உற்பத்தியின் வளர்ச்சி 2.3 சத வீதமாகவே காணப்பட்டது. உலக மீன்பிடி 1990 மற்றும் 1991 இல் உண்மையில் வீழ்ச்சியை அடைந்தது. அண்மையில் வெளிடப்பட்ட பெரும்பாலானான தரவுகளின் முழு அம்சங்களினதும் முக்கியத்துவத்தைப் பரிசீலிப்பது கடினமெனினும் பூகோள மீன்பிடி தொடர்ந்து விரிவடையும் என்பதற்கான காரணங்களை நம்புவதற்குப் போதிய காரணங்கள் இல்லை. அத்துடன் மரபுரீதியான மீன்பிடிமுறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் (உள்நாட்டு மீன்பிடி உட்பட) பெறப்படும் 100 - 200 மில்லியன் தொன் வருடாந்த உற்பத்தி அதன் உச்ச நிலையை அடைந்து விட்டது எனக் கருதப்படுகின்றது.

மத்திய காலப்பகுதியில் இருந்து வட அத்திலாந்திக்கில் வர்த்தக ரீதியான மீன் பிடிப்போரின் பிரதான கவனம் "கொட்" (Cod) வகையின் மீதே காணப்பட்டது. ஆனால் 1960களில் இவ்வளங்களின் மீதான அழுக்கம் முதன் முதலாகக் கடுமையான பிரச்சினையாக மாறியது. மீன்பிடிப் பகுதிக்கு அருகிலுள்ள கனடா, ஐஸ்லாந்து, நோர்வே போன்ற அரசுகளின் ஆள்புல விரிவாக்கத்துக்கான உரிமை கோரலின் விளைவால் எழுந்த பாரிய கட்டுப்பாடுகளினால் அத்திலாந்திக்கின் மொத்த கொட் மீனின் பிடியில் 1970 இன் பின்பு தொடர்ச்சியான வீழ்ச்சி காணப்பட்டது. பேரு நாட்டில் பிடிக்கப்படும் அன்சோவி (anchovy) இதனை விளக்குவதற்கான சிறந்த உதாரணமாகக் காணப்படுகின்றது. மீன் உணவாக மாற்றப்பட்டு, விருத்தியடைந்த நாடுகளில் விலங்குகளுக்கு உணவாகப் பயன்படும் இவ் அன்சோவி 1950 களில் ஐக்கிய அமெரிக்காவில் முக்கியம் பெற்றிருந்தது. 1960 களின் பிற்பகுதிகளில் பேரு கரைக்கப்பால் ஏறக்குறைய 1400 படகுகள் மீன்பிடியில் ஈடுபட்டிருந்தன. சிம்போட்டா (chimbote) உலகிலேயே முன்னணி மீன் பிடித்துறைமுகமாக மாறியிருந்தது. ஆனால் 1972 இன் பின் மீன்பிடி வீழ்ச்சியடைந்ததுடன் ஆரம்பகால உச்சநிலையை ஒருபோதும் அடையவில்லை.

**வரைபடம் 3 : உலக மீன் உற்பத்தி 1938 - 91**
Source: FAO, 1992




## மீன்பிடியில் அதி உச்ச பேண் - தகு விளைச்சல்
(MSY - Maximum sustainable Yield)

அத்திலாந்திக்கில் அருகிக்கொண்டு செல்லும் கொட் மீனின் உற்பத்தியும் பேருவின் அன்சோவி உற்பத்தியும் மீன்பிடிவளங்களில் பயனுறுதி வாய்ந்த முகாமைத்துவ தேவையின் அவசியத்தை வலியுறுத்துகின்றன. புதுப்பிக்கக் கூடிய எந்தவொரு வளங்களைப் பொறுத்தவரையும் அதன் இருப்பிலிருந்து தற்பொழுது நிலவுகின்ற சூழலியல் நிலைமைகளில் அதிகூடிய

வளர்ச்சிவீதம் அடையப்படவேண்டும். அதிகூடிய பேண்-தகு விளைச்சலானது தொடர்ந்து நிலவும் இயலளவு கருத்துடன் (Notion of carrying Capacity) தொடர்பைக் கொண்டுள்ளது. கிடைக்கக்கூடிய உணவு வழங்கல்களைப் பொறுத்தும் இருப்புக்கள் கட்டுப்படுத்தப்படுகின்றன. மீண்டும் புதுப்பிக்கக் கூடிய வளங்களைப் பொறுத்தவரையில் உத்தம மட்ட அறுவடை என்பதை வரையறை செய்வதுகடினம். ஏனெனில் பௌதீக அல்லது உயிரியல் உத்தமம் (Physical or biological optimum) என்பது பொருளியலை விட வித்தியாசமானது.

மீன்பிடி முகாமைத்துவம் (Fisheries Management) என்னும் பொழுது சில அம்சங்கள் முக்கியமானவையாகக் காணப்படுகின்றன.

(1) வளங்களின் மீதான அழுக்கத்தைக் குறைப்பதற்கு மீன்பிடிப் பகுதிகளுக்கான அடைகையை ஒழுங்குபடுத்தல் ஒரு பிரதான வழியாகும்.

(2) வளங்களின் உயிரியல் எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்காகத் தேவைகருதிச் சில தனிப்பட்ட நாடுகளில் முட்டையிட்டு மீன் குஞ்சுகள் வளரும் காலத்தில் (Spawning and nursery) மீன்பிடியை கட்டுப்படுத்தலாம்.

(3) சமுத்திரங்கள் மீது சில நாடுகள் கொண்டிருக்கும் விரிபுபடுத்தப்பட்ட ஆள்புல நியாயாதிக்கம் (territorial Jurisdiction) இந் நடவடிக்கைகளுக்கு ஓர் ஊக்குவிப்பாக இருந்தாலும் மீன்கள் சர்வதேச உடன்படிக்கைகளை ஏற்றுக் கொள்வதில்லை. அவற்றின் இயக்கம் சட்டத்திற்கு உட்பட்டதாக இராது. உதாரணமாக, வடமேற்கு அத்திலாந்திக்கில் கனடாவினால் அதன் 200 மைல்களுக்குள் கொட் மீனின இருப்புக்கள் மீதான அழுக்கத்தைக் குறைப்பதற்கு முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டபோது இக்கடல் எல்லைக்கு வெளியே இவ்வளங்களைச் சுரண்டுகின்ற ஸ்பெயின், போர்த்துக்கல் ஆகிய ஏனைய நாட்டு மீன்பிடிப்போருடன் பிரச்சினைகள் உருவாகின.

(4) மீன்பிடி முறைகளினாலும், மீனினங்களின் அமைவிடத்தைக் கண்டுபிடிக்கும் தொழில்நுட்பத்தில் ஏற்பட்ட முன்னேற்றங்களினாலும் இருப்புக்களின் மீது அதிக அழுத்தம் அதிகரித்தது. இத்தகைய தொழில்நுட்ப மாற்றங்களின் திசையை மாற்றுதல் சாத்தியமற்றது. ஆனால் அரசாங்கங்களும், சர்வதேச நிறுவனங்களும் மீன் பிடிப்பதற்கான இயலளவு அதிகரிப்பதினால் ஏற்படும் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்குப் பல்வேறு ஒழுங்கு நடவடிக்கைகளை (regulatory measures) எடுத்துள்ளன.

(5) பெரிய வலைகள் (larger nets), மிகவும் சக்திவாய்ந்த இழுவை இயக்கிகள் (hauling gear) என்பன மீனினங்களைப் பாரபட்சமற்ற முறையில் பிடிப்பதற்கான உள்ளார்ந்த தன்மையில் அதிகரிப்பை ஏற்படுத்தியது. மிகவும் குஞ்சு நிலையிலுள்ள, அளவிற் சிறிய (under size) மீன்களை எடுத்துச் செல்வதைத் தடுக்கும் நோக்குடன் வலைக் கண்ணியின் அளவுகளில் (mesh size) ஒழுங்கு விதிகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

(6) மீன்பிடிக் கப்பல்களுக்கு, மீன்பிடியில் ஈடுபட்டுள்ள மீனவர்கள் படகுகளின் எண்ணிக்கை என்பவற்றின் இயலளவு அடிப்படையிலேயே அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

(7) மீன் வளங்களை அறுவடையும் செய்யும் முறைகளிற் காணப்படும் மறைமுகக் கட்டுப்பாடுகளை விட, கிடைப்புப் பங்கு (imposition of Quotas) என்பது பிடிக்கப்படவேண்டிய மீனின் அளவு மீது நேரடிக் கட்டுப்பாடுகளை விதித்தது. இவ் அணுகுமுறையின் கீழ், பிடிக்கப்படவேண்டிய மீனின் அளவு பற்றிய எல்லை வருடத்துக்கு வருடம் அல்லது பருவகாலத்துக்கு அதி உச்ச பேண்-தகு விளைச்சல் (MSY) பற்றிய விஞ்ஞான ரீதியான மதிப்பீட்டின் அடிப்படையில் கணிப்பிடப்படுகின்றது. பிடிப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள அளவு (TAC - Total Allowable Catch), 1970ஆம் ஆண்டின் நடுப்பகுதியிலிருந்து ஐரோப்பிய சங்கத்தின் பொது மீன்பிடிக் கொள்கையின் (Common Fisheries Policy) ஓர் அடிப்படையாக அமைந்துள்ளது. ஒவ்வொரு அங்கத்துவ அரசுகளில் பதியப்பட்ட கப்பல்களுக்கு ஒதுக்கப்பட்டதன் படி தேசிய கிடைப்புப் பங்கினளவு பிரிக்கப்பட்டு, பிடிக்கக் கூடிய மீனினளவு தீர்மானிக்கப்படும். இத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டபோதும் கொள்கை உருவாக்கத்தில் அதனை அமுல் நடத்தும் போது பிரச்சினைகள் ஏற்பட்டன. கண்காணித்தலும், நடைமுறைப்படுத்தலும் மிகவும் கடினமானது. இத்தகைய உயர் செலவுமிக்க நடவடிக்கைகளினால் வளர்முக நாடுகளில் கடல் எல்லைகளைப் பற்றிய கொள்கை உருவாக்கம் அனுகூலமற்றதாக மாறியது. அளவுக்கு மீறிய மீன்பிடியைத் தடுத்தலும், வளத்தின் பேண்-தகு தன்மையை உறுதிப்படுத்துவதற்குமான கொள்கைகள் குறிப்பிட்ட சில சமூகங்களின் மீது பாதகமான தாக்கங்களை ஏற்படுத்தின. கடுமையான எதிர்ப்புக்களினால் நீண்டகாலத் தீர்மானங்கள் அரசியற் சூழலுக்குச் சாதகமாகப் பின்தள்ளிப் போடப்படும் நிலை காணப்படுகின்றது. பொதுவாக, கடந்த 25 வருடங்களாக உருவாக்கப்பட்ட முகாமைத்துவ முறைகள் "பூகோள மீன் பிடிவளங்களின் நிலைமைகள் குறிப்பான கவனத்திற்குரியவை" என்ற விடயத்தை விளக்கத் தவறிவிட்டது.

## பிரதான மீன்பிடித் தளங்கள் (Major fishing grounds)

உலகின் பிரதான மீன்பிடிப் பகுதிகள் எல்லாம் இடைவெப்பப் பிரதேசத்திலேயே அமைந்துள்ளன. கரையிலிருந்து சிலமைல் தூரத்தில் ஆழமற்ற கடல் பரப்பில் இவை காணப்படுகின்றன. இவற்றுட் சில மீன் பிடித்தளங்கள் பற்றி இங்கு விபரிக்கப்படுகின்றது.

### (1) வடமேற்கு அத்திலாந்திக் பிரதேசம் (Atlantic, North - West region)

வடமேற்கு அத்திலாந்திக் பிரதேசங்களின் கரைகளுக்கு அப்பால் காணப்படும் மேடைகள் உலகில் மிகப் பிரதான மீன்பிடித்தளங்களாகக் கருதப்படுகின்றன. இப் பகுதிகள்

நன்ருக்கட் (Nantucket) இலிருந்து நியூபவுண்லாந்து கிழக்குக் கரைவரை 1100 மைல்கள் நீளத்திலும் 50-250 மைல் அகலத்திலும் பரந்துள்ளன. இங்கு பல அமிழ்ந்த மேடைகள் (submerged platform) காணப்படுகின்றன. கண்ட ஓடுகள் அகலமாக இருப்பதினால் மேடைகள் பல உருவாகியுள்ளன.

நியூபவுண்லாந்தின் தென் கிழக்கிலுள்ள கிராண்ட் மேடைகள் (Grand Banks) 37,000 சதுர மைல் பரப்பையும், நோவாஸ்கோஷியாவுக்கு தென் கிழக்கில் காணப்படும் சபிள் தீவு மேடை 7000 சதுர மைல் பரப்பையும், கொட் முனைக்குக் கிழக்கிலுள்ள ஜோர்ஜ் மேடை 8500 சதுர மைல் பரப்பையும் கொண்டுள்ளதுடன் இம் மேடைகள் கொட், ஹாடெக் (haddock), மக்ரல், கெரிங் மீனினங்களின் முக்கிய பிரதேசமாக விளங்குகின்றன.

பிரான்ஸ், பிரித்தானியா, போத்துக்கல், இத்தாலி ஆகிய நாடுகளைச் சேர்ந்த கப்பல்கள் இப்பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்டுள்ளன. அதிகூடிய மீன்பிடி நியூபவுண்லாந்து, நோவாஸ்கோஷியா கரைகளிலேயே இடம்பெறுகின்றது. இங்கு கனடா, ஐக்கிய அமெரிக்க நாடுகளைச் சேர்ந்த மக்களே பெரிதும் மீன்பிடிக்கின்றனர். சென் ஜோன், ஹலிபக்ஸ், போட்லாந்து, குளோசெஸ்டர், நோவாஸ்கோஷியா, புரோவிடன்ஸ், பொஸ்டன், நியூயோர்க் ஆகிய முக்கிய துறைமுகங்களூடாகவே இம் மீன்பிடி நடைபெறுகின்றது.

### (2) வடகிழக்கு அத்திலாந்திக் பிரதேசம்
(Atlantic, North - East region)

வடமேற்கு ஐரோப்பியக் கரைகளை உள்ளடக்கிய உலகின் பிரதான மீன்பிடிப் பகுதிகளில் ஒன்றான வட - கிழக்கு அத்திலாந்திக் பிரதேசத்தில் பிரித்தானியா, பிரான்ஸ்,ஹாலண்ட், நோர்வே ஆகிய நான்கு முன்னணி நாடுகள் பாரிய அளவில் மீன்பிடியில் ஈடுப்படுகின்றன. பெல்ஜியம், டென்மார்க், ஸ்பெயின் என்பனவும் ஈடுபட்டுள்ளன.

வட கடலில் நெதர்லாந்தின் சிறப்பான, இயற்கையான அமைவிடம் காரணமாக ஹெறிங் இன மீன்பிடியில் அந்நாட்டு மக்கள் அதிகம் ஈடுபட்டுள்ளனர். நெதர்லாந்தின் அபிவிருத்தியே கெரிங் மீனில்தான் தங்கியுள்ளது எனக் கூறப்படுகின்றது. வட கடல் அமிழ்ந்த நிலத்தினையும், ஆழமற்ற கடற்பரப்புடன் கூடிய மேடைகளையும் (டொகர் மேடை, பெரிய பிஷர் மேடை) கொண்டுள்ளது.

சூடான குடா நீரோட்டத்தின் செல்வாக்கினால், கடல் பனிக்கட்டியின் பாதிப்புக்கு உட்படுவதில்லை. இதனால் வருடம் முழுவதும் மீன் பிடிக்கப்படுகின்றது. பிஸ்கே குடாவிலிருந்து நோர்வீஜிய கரைகளுக்கு அப்பால் காணப்படும் லெபோரன தீவுகளுக்கு அப்பாலும், ஐஸ்லாந்தினைச் சூழவுள்ள நீர்ப்பரப்பையும் சேர்த்து ஆழமற்ற கரைகள் விரிவடைந்து காணப்படுவதினால் உலகின் பிரதான மீன்பிடித்தளங்களில் ஒன்றாக விளங்குகின்றது. உலக மொத்த மீன் உற்பத்தியில் இப்பிரதேசம் 25 சத வீதத்துக்கு மேல் கொண்டுள்ளது. மீன் உணவாகக் கருதப்படும் பிளாங்ரன் இப்பிரதேசத்தில் அதிகளவில் காணப்படுகின்றது. இதற்குப் பல காரணங்கள் உள்ளன.

(1) குடா நீரோட்டத்தின் பாச்சலினால் நீர்ப்பகுதிகள் பொதுவான குளிர்ச்சியைக் கொண்டதாக மாறுகின்றது.

(2) கடலின் ஆழமற்றதன்மை.

(3) பல நதிகளின் நன்னீரும், போல்ரிக் பகுதியிலிருந்து வரும் குறைவான உவர்தன்மை கொண்ட நீரும் இப்பகுதிகளில் சேருகின்றன.

நோர்வேயின் கரைகளில் காணப்படும் நுழைகழிகள் மீன்பிடிக்குச் சிறப்பானது. துரோண்கைம், சோக்னே ஆகிய நுழைகழிகள் 100 மைல் நீளமானவை. பிரித்தானியாவில் வடகடற் பக்கமாக உள்ள கிழக்குக் கரைகளிலேயே மீன்பிடி அதிகளவில் செறிந்துள்ளது. இக் கிழக்குக் கரை அத்திலாந்திக் புயல்களினால் பாதிக்கப்படமாட்டாது. கிறிம்ஸ்பி, ஹல், பேர்கன், பெலிங்ஸ்கேட், அபர்டீன், யாமவுத் என்பன பிரதான மீன்பிடி மையங்கள். உலகிலேயே பாரிய மீன்பிடித்துறைமுகமாக விளங்கும் கிறிம்ஸ்பியினூடாகப் பல்வேறு வகையான மீனினங்களும், பெறுமதிமிக்க மீன்களும் பிடிக்கப்படுகின்றன. கொட், கெரிங், கலிபட், சாடின்ஸ் என்பன பிடிக்கப்படும் மீன்வகைகளிற் பிரதானமானவை.

### (3) வட மேல் பசிபிக் பிரதேசம்
(Pacific, North - west region)

யப்பான் கரைகளை இப்பகுதி விசேடமாக உள்ளடக்கியுள்ளது. இரு நீரோட்டங்களான குறோசியோ சூடான நீரும், ஓயாசியோ குளிர் நீரும் கலப்பதினால் தீவுகளுக்கிடையிலுள்ள குடாக்களிலும், கடல்களிலும், அயலிலுள்ள ஆழம் குறைந்த நீர்களிலும் மீனினங்களின் வளர்ச்சி அதிகமாகக் காணப்படுகின்றது. உலக மொத்த மீன் உற்பத்தியில் யப்பான் 20-25 சத வீதத்தை வகித்து முன்னணியில் காணப்படுகின்றது. யப்பான் கரையோரங்கள், யப்பானின் கிழக்கிலுள்ள பசிபிக் நீர்ப்பகுதி, மஞ்சள் மற்றும் சீனக் கடல்கள், கொரியக் கரைகள், கராபூட்டோ (Karafuto), ஒக்ரொக்ஸ் (Okhtosk) கரையோரங்கள் என்பன பிரதான மீன்பிடிப் பகுதிகளாகும்.

யப்பான் 17,000 மைல் நீளமான கரையோரத்தைக் கொண்டது. கரையோர மீன்பிடித் தளப் பகுதிகள் 9 லட்சம் சதுர மைல்கள் கொண்டவை. இத்தகைய பரந்த, பாரிய மீன்பிடிப் பகுதிகளில் பல்வேறுவகை கொட், கெரிங், சமன், மக்ரல், ரவுட், பொனிற்றோ, ரியூனா, லோப்ஸ்ரர் முதலிய மீனினங்கள் காணப்படுகின்றன. பிடிக்கப்படுபவற்றில் பெரும்பாலனவை உள்ளூரிலேயே நுகரப்படுகின்றன. யப்பானைத் தவிர சோவியத் யூனியன், கொரியா, சீனா ஆகிய நாடுகள் தமது கரையோர எல்லையில் காணப்படும் நீர்ப்பகுதிகளில் முக்கியமான மீன்பிடியாளர்களாக உள்ளனர்.

### (4) வடகிழக்குப் பசிபிக் பிரதேசம்
(Pacific, North - East region)

வட அமெரிக்காவில் மேற்குக் கரைகளை உள்ளடக்கிய வடகிழக்குப் பசிபிக் பிரதேசம் அலாஸ்காவிலிருந்து கலிபோர்ணியா வரை

46 ஆம் பக்கத்தில் தொடரும்....

# தலைமைத்துவமும் தந்திரோபாயச் சிந்தனையும்

செல்வி. நித்தியலக்ஷ்மி சண்முகம்

## 1. அறிமுகம்

தொடர்ச்சியான மாற்றங்கள், அளவற்ற முன்னேற்றங்கள் என்பவற்றைச் சந்திக்கும் இன்றைய உலகில் சவால்களும், போட்டிகளும் தவிர்க்க முடியாதவை என்பது கண்கூடு. காலங்காலமாக இயங்கி வந்துள்ள நிறுவனங்களில் சில வெற்றியடைந்துள்ள வேளையில் இன்னும் சில எதிர்பாராத தோல்விகளைச் சந்தித்துள்ளன. சில நிறுவனங்கள் சரியாக வரையறை செய்யப்பட்ட நோக்கங்கள், வழிகாட்டல்கள் என்பவற்றுடன் இயங்கி வந்துள்ள போதிலும் இன்னும் சில சூனியமான ஒரு சூழலில் இயங்கியுள்ளன. சில நிறுவனங்கள் சந்தர்ப்பங்களை வசமாக்கிக் கொண்டு வெற்றிவாகை சூடுகின்றபோது இன்னும் சில அவற்றை நழுவ விட்டுக் கொண்டிருக்கின்றன. இவ்வேறுபாடுகளைக் களைந்து கொள்வது எப்படி? இதற்கான அடிப்படைக் காரணம் என்ன? நிறுவனத்தின் சிறந்த செயற்பாட்டுக்கு யார் பொறுப்பானவர்? இத்தகைய வினாக்கள் தெளிவாக விடையளிக்கப்பட வேண்டியவையாகும்.

நிறுவனங்கள் வெவ்வேறுபட்ட துறைகளில் போட்டிகள், சவால்களுக்கு மத்தியில் சாதனைகளை நிலைநாட்டுவதற்காக முயற்சி செய்து கொண்டிருக்கும் வேளையில், ஒவ்வொரு நாடும் வளர்ச்சியை நோக்கி ஆவலோடு அடியெடுத்து வைத்துக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் இச்சாதனைகளை அடைவதற்கான அத்திவாரம் எங்கே ஆரம்பிக்கின்றது? எவ்வாறு கட்டியெழுப்பப்படுகின்றது? என்பதனை அறிந்து கொள்வதும் அவசியமாகும். அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் இன்றைய அகராதியில் அடிக்கடி முணுமுணுக்கப்படும் ஒரு அம்சம் புதிதாக கைத்தொழில் மயமாக்கப்பட்ட நாடு (Newly Industrialized Country) என்பதாகும். இலங்கை கூட இந்த வரிசையில் பல்லாயிரக்கணக்கான தடவைகள் இந்த வார்த்தைகளை உச்சரித்திருக்கின்றது. உச்சரித்துக்கொண்டு இருக்கின்றது. பத்திரிகைகள் முக்கியத்துவத்தோடு அதனைப் பிரசுரம் செய்கின்றன. ஆனால் இந்த நிலையை அடைந்து கொள்வது எப்படி என்பது இன்னும் கேள்விக் குறியாகவேயுள்ளது.

ஒரு நிறுவனமாக இருந்தாலும் சரி, நாடாக இருந்தாலும்சரி தனது உயர்தரத்தை அடைவதில் மூன்று அடிப்படைச் சவால்களை எதிர்நோக்குகின்றன. **முதலாவதாக,** ஒரு நிறுவனம் வெற்றிகரமாக இயங்க வேண்டுமாயின் அந்நிறுவனம் செலவுகளை விட உயர்ந்த மட்டத்தில் நன்மைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். செலவுக்குறைப்பு என்பது கடினமானது. விலையை அதிகரித்தல் என்பது இலகுவானது. ஆனால் உண்மையான வெற்றிக்கான நடைமுறையாக இது அமையமாட்டாது. இன்று யப்பானியர்கள் தரத்தை உயர்த்தி செலவுகளைக் குறைக்கும் முயற்சிகளை ஒன்றிணைத்துள்ளார்கள். இது வெற்றிக்கான ஒரு வழியாகும்.

நிறுவனத்தினை விருத்தி செய்தலும், உயர்ந்த கூட்டு விளைவுமட்டம் (A high level of Synergy) ஒன்றினை நோக்கி மாற்றுதலும் நிறுவனம் ஒன்று கொண்டிருக்கும் **இரண்டாவது** சவாலாகும். உயர் கூட்டு விளைவு என்பது (synergy) தனிநபர்கள் தனித்தனியாக இயங்கிப் பெற்றுக் கொள்ளும் விளைவுகளை விட அத்தனிநபர்கள் ஒன்றிணைந்து செயற்படும் போது கூடுதலான விளைவுகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதை விளக்குவதாகும். இது எமது நாட்டில் விளங்கிக் கொள்ளப்பட்ட ஒரு கருத்தாக, கோட்பாடாகக் காணப்படவில்லை. இதற்கான முயற்சிகள் எடுக்கப்படவோ, முக்கியத்துவம் வழங்கப்படவோ இல்லை. இது சூழ்நிலையுடன் தொடர்புடையது (situational) என்றே கருதப்படுகிறது. ஆனால் நாம் நெருக்கடிகளைச் சந்திக்கும் போது மட்டும் பெருமளவு உயர்கூட்டுவிளைவு நிலைமைகளைச் சந்திக்கின்றோம். நாம் நிறுவன முகாமையாளர்களாகச் செயற்படுவதை விட சிறந்த நெருக்கடி முகாமையாளர்களாகவே (better crisis Managers than organization managers) செயற்படுகின்றோம்.

**மூன்றாவதாக,** நிறுவனங்கள் புதுமை புனைவனவாக இருக்க வேண்டும் என்பதாகும். புதுமைக்கான நிச்சயமான பாதையில் (in the sure path of innovation) வளர்ச்சி என்பது சாதிக்கப்பட முடியும். நிலை நிறுத்தப்பட முடியும். இது மற்றுமொரு சவாலாகும். ஏனெனில் இலங்கையில் பயனுள்ள கண்டுப்பிடிப்புக்கள் என்பதே சவால்களின் மத்தியிலான வெளிப்பாடுகளே. இம் மூன்று சாவால்களையும் எதிர்கொண்டு முன்னேற்றம் அடைவது என்பதே முக்கியமான பிரச்சினையாகும். இத்தகைய சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை தனிநபர், நிறுவனம், தொழில், நாடு என ஒவ்வொரு மட்டத்திலும் காணப்படுகின்றது. இவற்றைச் சமாளிப்பதற்கான ஆரம்பச் சிந்தனை எங்கு உருவாக வேண்டும்? எவ்வாறு உருவாக வேண்டும்? என்ற வினாக்களுக்கு விடையளிக்க முயற்சி செய்வதாக இக்கட்டுரை அமைகின்றது. முகாமைத்துவ செயற்பாடுகள் என்ற அடிப்படையில் திட்டமிடல், ஒழுங்கமைத்தல், கட்டுப்படுத்தல், ஊழியரிடல், வழிநடத்தல், தொடர்புகொள்ளல் எனப் பல்வேறு செயற்பாடுகள் பற்றி நாம் கொள்கை ரீதியாக நோக்குகின்றோம். ஆனால் இவற்றுக்கும் மேலாக சில அர்த்தமுள்ள, புத்திசாலித்தனமான செயற்பாடுகள் பற்றிச் சிந்திக்க மறந்து விடுகின்றோம் என்பதையும், அத்தகைய சிந்தனையொன்று அவசியம் என்பதைச் சுட்டிக்காட்டுவதாகவும் இக்கட்டுரை அமைகின்றது. எனவே இச்சிந்தனைப் போக்கிற்கான ஓர் ஆரம்ப அத்திவாரமாக இது அமையும் என்பதில் ஐயமில்லை.

**செல்வி. நித்தியலக்ஷ்மி சண்முகம்**
BBA (Jaf.), MBA (Sri.J.)
**விரிவுரையாளர்**
**முகாமைத்துவத் துறை**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

## 2. தந்திரோபாயம் : வரைவிலக்கணம்

சாதாரண நடைமுறை வாழ்க்கையில் இடம்பெறும் போட்டிகளும் அவற்றின் வெற்றி தோல்விகளும் நாம் நாளாந்தம் பார்த்தும், கேட்டும் அறிந்து கொள்பவை. எந்தவொரு போட்டியிலும், அது விளையாட்டாக இருந்தாலும் சரி, தொழிலாக இருந்தாலும் சரி வெற்றியென்பது திறமையான முறையில் சிந்தித்து, திட்டமிட்டு, எதிராளிகளைக் கவனித்துச் செயற்படுகின்றவருக்கே சொந்தமாகின்றது. இவ்வாறான ஒரு சிந்தனை, திட்டமிடல், அமுல்படுத்தல் என்பன தந்திரோபாயம் என்பதற்கான வரைவிலக்கணத்தினை வழங்கக் கூடியவையாகும். ஒரு சிறந்த "ரெனிஸ்" (Tennis) விளையாட்டு வீரர் முன்னரே வரையறை செய்யப்பட்ட ஒரு திட்டத்தினடிப்படையில் விளையாட்டை உணர்ந்து, தொடர்ச்சியான இலக்குகளைத் திட்டமிட்டு விளையாட்டைக் கட்டுப்படுத்த முயற்சி செய்கின்றார். இதே செயற்பாடுகள் விளையாட்டு வீரருக்கு மட்டுமன்றி ஒரு நிறுவன நிர்வாகிக்கும் பொருத்தமானவையாகும். வரலாற்று ரீதியாகத் தந்திரோபாயம் என்பது வெற்றிக்குத் துணைசெய்துள்ளது. பண்டைய கிராமங்கள், நாடுகள், இராணுவங்கள், வியாபாரக் குழுக்கள் என்பன தமது இலக்குகளை அடையும் பொருட்டு எதிராளிகளைத் தோல்வியுறச் செய்வதற்கான புதிய வழிகளைக் கண்டு கொள்வதற்கு முயற்சித்துள்ளன. இவ்வாறான ஒரு செய்முறையையே தந்திரோபாயம் என்பது விளக்குகின்றது.

தந்திரோபாயத்திற்கான தேவை என்பது போட்டியிலிருந்தே உருவாகின்றது என்பது பொதுவான கருத்தாகும். Kenichi Ohmae என்பவர் இதனை வலியுறுத்தும் வகையில் பின்வருமாறு கூறுகின்றார். **"போட்டியாளர்கள் இல்லாத நிலையில் தந்திரோபாயத்திற்கான தேவை ஒன்று இருக்க மாட்டாது."** எனவே போட்டிச் சூழல் ஒன்றின் வெற்றிக்குக் காரணமாக இருக்கின்ற ஒரு வலுவே (success causing power) தந்திரோபாயம் எனக் கூறிக் கொள்ளலாம். தற்காலத்தில் தந்திரோபாயம் என்பதன் முக்கியத்துவம் நிர்வாகிகளால் உணரப்பட்டுள்ளது என்பதற்கு உதாரணமாக Digital Equipment Corporation இன் தலைமை நிர்வாக உத்தியோகத்தர் என்பவரது கூற்று அமைகின்றது. **"கம்பனியானது தந்திரோபாயம் ஒன்றைக் கொண்டுள்ளது என்பதனையும் ஒவ்வொருவரும் அதனைப் பின்பற்றுகின்றார்கள் என்பதனையும் உறுதி செய்து கொள்வதே எனது வேலையாகும்."** - Kenneth H.Olsen.

இங்கு தந்திரோபாயம் என்பது ஒரு நிறுவனத்தின் பிரதானமான கொள்கைகள், இலக்குகள், செயற்பாட்டுத் தொடர்கள் என்பவற்றை ஓர் முழுமைக்குள் ஒன்றிணைக்கின்ற ஒரு திட்டம் அல்லது வடிவம் எனக் கூறலாம். போட்டியிலான நன்மை என்பது (competitive advantage) போட்டிச் சந்தைகளின் விளைவுகளிலேயே பெற்றுக்கொள்ளப்படுகின்றது. இங்கு சந்தையில் போட்டியிடலென்பது ஒரு யுத்தம் போன்றதாகும். இதில் காயங்கள், இழப்புக்கள், சிறந்த தந்திரோபாய வெற்றிகள் என்பவை ஏற்படலாம். இதில் தந்திரோபாயம் என்பது தொழிற் சமநிலையைக் குழப்புவதற்கான சந்தர்ப்பங்களைத் தேடுகின்றது. தொடரும் தந்திரோபாயங்கள் தொழில் நிகழ்வுகளின் சாதாரண நிலைமைகளைக் குழப்பவும், போட்டியாளர்களுக்குத் தீமை பயக்கும் வகையிலான புதிய தொழில் நிலைமைகளை உருவாக்கவும் வழி வகுக்கின்றன. இங்கு சாதாரண, நிறுவன முகாமைத்துவம் என்பதனை விடுத்து தந்திரோபாய முகாமைத்துவம் (Strategic Management) என்பது முக்கியத்துவம் பெறுகின்றது.

முகாமையாளர்கள் நிறுவனமொன்றின் நீண்டகாலக் குறிக்கோளை (Mission) உருவாக்கி அதற்கேற்ப செயற்பாட்டு நோக்கங்களை நிர்ணயம் செய்து, தொடர்புடைய உள்ளக, வெளியக சூழலில் இந்நோக்கங்களை அடையும் பொருட்டு தந்திரோபாயங்களை விருத்தி செய்தலும், செயற்பாட்டுத் திட்டங்களை (Action plans) மேற்கொள்வதுமான ஒரு செயன்முறையே தந்திரோபாய முகாமைத்துவம் எனலாம். நீண்டகால நோக்கில் நிறுவனமொன்று அதன் சிறந்த பெறுபேற்றை அடைவதற்கான அடிப்படையாக இது அமைகின்றது. சந்தர்ப்பங்கள் தாமாக அமைபவையல்ல. வெற்றிக்கான சந்தர்ப்பங்கள் தாமாகவே வந்து கிடைப்பவையல்ல. சந்தர்ப்பங்களை அவதானித்து அவற்றைச் சரியான முறையில் பயன்படுத்துபவனே எப்போதும் வெற்றியடைகின்றான். புத்திசாலித்தனமான திட்டமிடலும் சரியான அத்திவாரமுமே நீண்டகால நோக்கங்களை நிறைவேற்றுகின்றன. எனவே தந்திரோபாய முகாமைத்துவச் செயன்முறையானது இத்தகையதோர் வெற்றியின் வழிகாட்டி எனக் கொள்ள முடியும். இச்செயன்முறையினை விரிவான முறையில் ஆராய்வது பொருத்தமானதாகும்.


## 3. தந்திரோபாய முகாமைத்துவச் செயன்முறை

நீண்டகாலத் திட்டமிடல் தொடர்பான கருத்துக்களில் பின்வரும் கூற்று ஒன்று காணப்படுகின்றது. **"நீ எங்கே போகின்றாய் என்பது உனக்குத் தெரியாவிட்டால் எந்தப்பாதையும் பொருத்தமானதே."** உண்மையில் நாம் எதனைச் செய்ய வேண்டும் என்பது நாம் எதனை அடைய விரும்புகின்றோம் என்பதிலேயே தங்கியுள்ளது. ஒரு நிறுவனம் எப்படி இருக்க வேண்டும் என்பதையும், அதற்காக என்ன செய்ய வேண்டும் என்பதையும் நிர்ணயிப்பதில் தந்திரோபாயம் ஒரு முன் நிபந்தனையாக அமைகின்றது. பேராசிரியர் James Brian Quinn என்பவரது கருத்தின்படி தந்திரோபாயம் என்பது நிறுவனம் ஒன்றின் பிரதானமான இலக்குகள், கொள்கைகள், தொடர்புச் செயற்பாடுகள் என்பவற்றை ஒரு முழுமையான ஒன்றிணைப்புக்குள் இணைக்கின்ற ஒரு வடிவம் அல்லது திட்டமாகும்.

நன்றாக உருவாக்கப்பட்ட ஒரு தந்திரோபாயமானது நிறுவனமொன்று தனது உள்ளக பலங்கள், பலவீனங்கள், எதிர்பார்க்கப்படும் சூழல் மாற்றங்கள், திறமை வாய்ந்த எதிராளிகளின் அசைவுகள் என்பவற்றின் அடிப்படையில் தமது வளங்களைச் சரியான முறையில் ஒதுக்கீடு செய்து கொள்வதற்கு உதவுகின்றது. தந்திரோபாயச் செயன்முறை ஒரு தொடர்ச்சியான வட்டமாக இருப்பதுடன் சிறந்த தந்திரோபாயக் கருத்துக்களையும் வேண்டி நிற்கின்றது.

தந்திரோபாய முகாமைத்துவத்தின் ஒவ்வொரு அலகும், தொடர்ந்து செயற்பாட்டினை ஏற்கனவேயுள்ளவாறு மேற்கொள்வதா அல்லது மாற்றங்களை ஏற்படுத்துவதா என்பதனைத் தீர்மானிப்பதனால் தந்திரோபாய முகாமைத்துவமானது ஓர் இயங்கும் செயன்முறையாகக் (a dynamic process) காணப்படுகின்றது.

படம் 1 : தந்திரோபாய முகாமைத்துவச் செயன்முறை




அதாவது ஒவ்வொரு தந்திரோபாயத் தீர்மானமும் எதிர்கால மாற்றங்களுக்கு உட்படக் கூடியவையாகும். நிறுவனத்தின் சூழலில் ஏற்படும் மாற்றங்களும் நிதி நிலைமைகளில் ஏற்படும் உயர்வு தாழ்வுகளும் தொடர்ச்சியான தந்திரோபாய மாற்றங்களுக்கு வழி வகுப்பவையாகும்.

இத்தந்திரோபாயச் செயன்முறையில் நிறுவனம் என்ன தொழிலைச் செய்து கொண்டிருக்கின்றது என்பது முக்கியத்துவம் வாய்ந்ததாகும். நிறுவனம் ஒன்று சரியான சந்தர்ப்பத்தில், சரியான முறையில் தனது தொழிலை வரையறை செய்யாமை நிறுவனத்தின் தோல்விக்கான முக்கியமான ஒரு காரணி என முகாமைத்துவ அறிஞரான Peter Drucker உறுதியாகக் கூறுகின்றார். நிறுவனமொன்று அதன் பெயராலோ, சட்டங்களாலோ முன் விபரணங்களாலோ வரையறை செய்யப்படுவதில்லை. உண்மையில் ஒரு நிறுவனம் வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் சேவைகளின் அடிப்படையிலேயே வரையறை செய்யப்படுகின்றது. வாடிக்கையாளரது தேவையைத் திருப்தி செய்தலே ஒவ்வொரு நிறுவனத்தினதும் நோக்கமும் குறிக்கோளும் ஆகும். இது மூன்று அம்சங்களை உள்ளடக்குகின்றது.

(1) வாடிக்கையாளர் (யார்)
(2) வாடிக்கையாளர் தேவைகள் (எவை)
(3) நுட்பங்கள் (எப்படித் திருப்தி செய்வது)

இம் மூன்று வினாக்களுக்குமான சிறப்புப் பதில்கள் ஒன்றிணையும் போது நிறுவனம் என்ன தொழிலைச் செய்து கொண்டிருக்கின்றது என்பதற்கான விடையினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இரண்டாவது அம்சம் குறிக்கோள் என்பதாகும். குறிக்கோள் என்பது நிறுவனம் நீண்டகால நோக்கில் எதை அடைய விரும்புகின்றது என்பதனை விசாலமான ஒரு நோக்கில் எடுத்துக் கூறுவதாகும். இதன் முக்கிய நோக்கம் நிறுவனம் எதை அடைய விரும்புகின்றது. என்பதற்கான திசையினைக் காட்டுவதாகும். எங்கே போக வேண்டும் என்பது தெளிவுபடுத்தப்படும் போது மட்டுமே எப்படி போக வேண்டும் என்பதனைத் தீர்மானித்துக் கொள்ள முடியும். குறிக்கோளினை அடிப்படையாகக் கொண்டே இலக்குகள் (Goals), நோக்கங்கள் (Objectves) என்பவை உருவாக்கப்படுகின்றன. இவை குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் நிறுவனம் அடைய விரும்பும் எல்லைகளை வரையறுத்துக் கூறுவதன் மூலம் நீண்டகாலக் குறிக்கோள் சாதிக்கப்படுவதனை உறுதிப்படுத்துகின்றன.

தந்திரோபாய முகாமைத்துவத்தின் மூன்றாவது அம்சமாக மாற்றுவழிகளை அடையாளம் காணல் என்பது அமைகின்றது. நாம் ஒரு இடத்தைச் சென்றடைய வேண்டுமானால் அதற்குப் பல்வேறு வழிகள் காணப்படலாம். இவை ஒவ்வொன்றிலும் வெவ்வேறுபட்ட நன்மை, தீமைகளைச் சந்திக்க நேரிடலாம். எந்தப்பாதையினால் நாம் போக வேண்டும் என்பதைத் தீர்மானிப்பதற்கு முன்பு எங்கெங்கே பாதைகள் காணப்படுகின்றன என்பதனை அடையாளம் காணவேண்டியது அவசியமாகும்.

செயன்முறையின் அடுத்த அம்சம் போட்டியாளர்களை ஆராய்தல் என்பதாகும். எந்த ஒரு நிறுவனமும் தனது தீர்மானத்திற்கேற்ப ஒவ்வொரு அம்சமும் எவ்வாறு இருக்க வேண்டும் என வரையறை செய்ய முடியாது. ஏனெனில் எல்லா நிறுவனங்களுமே எப்போதும் மாறிக் கொண்டிருக்கும் போட்டி நிறைந்த ஒரு சூழலில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. எனவே தாம் இயங்கும் சூழல் பற்றிய அறிவு என்பது நிறுவனத்திற்கு அவசியமாகும். சூழல் பற்றிய கவனம் என்பது மாற்றங்கள் தொடர்பான எச்சரிக்கை உருவாகும் போது மட்டுமே கருத்திற் கொள்ளப்பட வேண்டிய ஒரு விசேட திட்டம் அல்ல. இது தொடர்ச்சியாக இடம்பெற வேண்டியதாகும். சூழலின் முக்கியமான காரணி போட்டியாளர்கள் என்பதாகும். போட்டி நிலைமைகளைக் கருத்தில் கொண்டு, வெற்றிக்கான பாதையைக் கண்டு கொள்வதே தந்திரோபாய முகாமைத்துவத்தின் இரகசியமாகும்.

அடுத்த முக்கியமான அம்சம் தந்திரோபாயத்தைத் தெரிவு செய்தல். நாம் அடையவேண்டிய குறிக்கோள் என்ன? ஒவ்வொரு பாதையிலும் நாம் சந்திக்கப் போகும் தடைகள் என்ன? சாதகமான சந்தர்ப்பங்கள் யாவை? என்ற வினாக்களின் அடிப்படையில் எமது குறிக்கோளை அடைவதற்கான சிறந்த வழி எது எனத் தீர்மானித்துக் கொள்ளலே தந்திரோபாயத்தைத் தெரிவு செய்தல் என்பதாகும். தெரிவு செய்யப்பட்ட தந்திரோபாயத்தைச் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் விளங்கிக் கொள்வதன் மூலமே சிறந்த விளைவொன்றை நோக்கி நடைபோட முடியும். எனவே தந்திரோபாயத்தை ஏனையோருக்கு விளக்குதல் அல்லது அளித்தல் என்பது அடுத்த முக்கியமான அம்சமாகும். இப் படிமுறையின் இறுதி அம்சமாக அமைவது தந்திரோபாயத்தை அமுல் செய்தல். தெரிவு செய்யப்பட்ட தந்திரோபாயத்தை நடைமுறைப்படுத்தி குறிக்கோளை நோக்கிச் செயற்படலை இது குறிக்கின்றது. நிறுவனம் அடையும் விளைவுகளின் அடிப்படையில் இதே சுற்றுவட்டம் மீண்டும் மீண்டும் இடம்பெறுகின்றது. இச்செயற்பாட்டில் தலைமைத்துவத்தின் பங்கு என்ன? தந்திரோபாயச் சிந்தனையின் முக்கியத்துவம் என்ன? என்பதனை ஆராய்ந்தறிவது பொருத்தமானதாகும்.

## 4. தலைமைத்துவம்

நிறுவனமொன்றின் வெற்றிக்குத் துணைபுரியும் முக்கியமான காரணிகளில் ஒன்று தலைமைத்துவமாகும். ஒரு சிறந்த தலைவரின்றி நிறுவனத்தின் நோக்கம், இலக்குகள் நோக்கிய செயற்பாட்டில் நிறுவனமானது வினைத்திறனுடன் இயங்க முடியாது. Burn Echoes Selznick என்ற அறிஞர் தலைமைத்துவத்தினைப் பின்வருமாறு வரையறை செய்கின்றார். ***"தலைவர்கள், பின்பற்றுவோர் ஆகிய இரு சாராரினதும் ஊக்கங்கள், விருப்பங்களும், தேவைகளும், ஆற்றல்கள், எதிர்பார்ப்புகள் என்பவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற குறிப்பிட்ட சில இலக்குகளை நோக்கி பின்பற்றுவோரைச் செயற்படத் தூண்டும் ஒரு செயற்பாடே தலைமைத்துவமாகும். இங்கு தலைமைத்துவத்தின் சிறப்பென்பது ஒரு தலைவர் தன்னுடையதும்,பின்பற்றுவோரதும் விழுமியங்களையும், (Values) ஊக்கங்களையும் (Motivations) நோக்குகின்ற பார்வையிலேயே தங்கியுள்ளது."***

ஒரு வெற்றிகரமான தலைமைத்துவமென்பது பின்வரும் வினாக்களுக்கான விடைகளிலேயே தங்கியுள்ளது.

1. ஒரு நிறுவனம் என்னவாக இருக்க வேண்டும்? அதை நோக்கி எவ்வாறு எடுத்துச் செல்ல வேண்டும் என்பது தொடர்பாக தலைவர் தொலைநோக்கு ஒன்றினை உருவாக்கியுள்ளாரா?

2. இத்தொலைநோக்கினை அடைவதற்கான நிறுவன ஆற்றல், விருப்பம் (Organizatonal ability and willingness) என்பவற்றை அவர் விருத்தி செய்துள்ளாரா?


3. சரியான நேரத்தில் சரியான செயற்பாடுகள் (Timely and proper actions) இடம்பெறுவதை உறுதிப்படுத்தியுள்ளாரா?

இப்பரந்த செயற்பாடுகளைப் பூர்த்தி செய்வதன் மூலம் நிறுவனத்தின் நோக்கத்தினை அடைவதனைத் தலைவர் உறுதிப்படுத்துகின்றார். உயர்ந்த மட்ட வெற்றியினை அடைதலென்பது ஏனையோரின் ஆதரவையும், ஒத்துழைப்பையும் வேண்டி நிற்கின்றது. இத்தகைய ஆதரவையும், ஒத்துழைப்பையும் பெற்றுக்கொள்ளல் என்பது தலைமைத்துவத்தின் ஆற்றலைப் பொறுத்ததாகும். இச்சந்தர்ப்பத்தில் தந்திரோபாயத் தலைமைத்துவம் (Strategic Leadership) என்பது முக்கியத்துவம் பெறுகின்றது. இது நிறுவனத்தின் உள்ளகச் செயற்பாடுகள், வெளியகச் சூழல் ஆகிய இரண்டையும் கருத்திற் கொள்வதாகும். இச்செயற்பாடானது தெளிவின்மை, சிக்கல் தன்மை, அதிகளவான தகவல்கள் என்ற குணாதிசயங்களைக் கொண்ட பல்வேறு செயற்பாட்டுப் பகுதிகளை (Multiple functional areas) ஒன்றிணைத்தலுடன் தொடர்புபடுகின்றது.

## 5. தலைமைத்துவத்தின் முக்கியத்துவம்

இன்றைய நிறுவனங்களில் தலைமை நிர்வாக உத்தியோகத்தர்கள் (Chief Executive Officers) தந்திரோபாயத் தலைவர்கள் என்ற பங்கினை வகிக்கின்றார்கள். தலைமை நிர்வாக உத்தியோகத்தர் என்பவர் நிறுவனத்தின் முழுமையினைத் திறனுடன் நோக்குகின்ற, அதன் உள்ளகச் செயற்பாடுகள் தொடர்பான கூடிய அறிவுள்ள நபராவார். தொழில் உலகின் அதிகரித்துச் செல்லும் கடுமையான போட்டி இத்தலைமை நிர்வாக உத்தியோகத்தர்களை உலகப்பிரசித்தி பெற்ற விளையாட்டு வீரர்களாக மாற்றியுள்ளது. மாறிச் செல்லும் தொழில் வடிவங்கள் தலைமைத்துவத்தினை மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு காரணியாக மாற்றியுள்ளன. பலவீனமான தலைமைத்துவமானது மிகச்சிறந்த ஒரு தந்திரோபாயத்தைக்கூடப் பாழாக்கி விடக் கூடும். பொதுவாக நிலைமைகளை அடையாளம் கண்டு, அதனைக் கையாளும் பொருட்டு பல்வேறு மாற்று வழிகளில் ஒன்றைத் தெரிவுசெய்தலே தந்திரோபாயத் தலைமைத்துவத்தின் பிரச்சினையாகும். ஒரு முகாமையாளரின் செயற்பாட்டுத் திட்டத்தில் நான்கு தலைமைத்துவ அம்சங்கள் முன்னுரிமை வகிக்கின்றன.

**படம் 2 : தலைமைத்துவத்தினை முக்கியத்துவப்படுத்திய காரணிகள்**



1. ஒரு தந்திரோபாயத்தைச் செயற்படச் செய்யும் வகையிலும், உயர்ந்தளவான விளைவினைப் பெறும் வகையிலும் நிறுவனச் சூழல், கலாசாரம் என்பவற்றை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

2. மாறும் நிபந்தனைகளுக்கேற்ப பொறுப்புடன் செயற்படல், புதிய சந்தர்ப்பங்களைத் தொடர்ந்து அவதானித்தல், புதுமைத்தன்மையுடைய கருத்துக்களைக் கொண்டிருத்தல், இவற்றுக்கேற்ற வகையில் நிறுவனத்தை வைத்திருத்தல்.

3. தந்திரோபாயத்தை உருவாக்கல், அமுல்படுத்தல் என்பவற்றைத் திறமையுடன் கையாளல், வலுத்தேவையுடையோருடன் இணைந்து செயற்பட்டு ஒற்றுமைத் தன்மையை உருவாக்கல்.

4. தந்திரோபாய அமுலாக்கலையும், தந்திரோபாய விளைவுகளையும் உறுதிசெய்யும் வகையில் சரியான நேரத்தில், சரியான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

## 6. தந்திரோபாயச் சிந்தனை

தந்திரோபாயச் சிந்தித்தலென்பது பழையனவற்றை பழைய முறைகளில் செய்வதேயன்றி புதிய அம்சங்களை வித்தியாசமான வழிகளில் செய்வதினைக் குறிக்கின்றது. தந்திரோபாய முகாமைத்துவத்தின் முக்கிய அம்சம் தந்திரோபாயச் சிந்தனை என்பதாகும். தொடர்புள்ள தந்திரோபாயச் சிந்தனையென்பது சாத்தியமான ஒன்றைக் கண்டுகொள்வதை மட்டுமன்றி நிறுவனத்தின் வெற்றியில் செல்வாக்குச் செலுத்தும் சக்திகளை விளங்கிக் கொள்வதிலும் கவனம் செலுத்துகின்றது.

தந்திரோபாயச் சிந்தனையின் முக்கியமான ஆரம்பம் தந்திரோபாய ஆய்வாகும். வினைத்திறனுள்ள தந்திரோபாயச் சிந்தனையானது தொடர்புள்ள முக்கியமான எடுகோள்களை அடையாளம் கண்டு இவ்வாறு இருந்தால் என்ன நடக்கும்.......? (What would happen if ........?) என்ற வினாவைத் தொடர்ச்சியாக எழுப்புகின்றது. இன்றைய உலகில் முகாமைத்துவ நடத்தையின் முக்கியமான ஓர் அம்சம் போட்டிச் சூழலை விளங்கிக் கொள்ளலாகும். இத்தகைய ஓர் ஆழமான விளக்கமானது நிறுவனம் தனது சொந்தத் தந்திரோபாயத்தை உருவாக்கிக் கொள்வதற்கோ அல்லது போட்டியாளர்களிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கான தந்திரோபாயத்தை உருவாக்குவதற்கோ வசதியளிக்கின்றது.

சிறந்த தந்திரோபாயக் கருத்துக்களை விருத்தி செய்தலென்பது ஒரு புதுமையான செயற்பாடாகும். சில சமயங்களில் இது திடீரென எழுகின்ற ஓர் உள்ளகச் சிந்தனை வெளிப்பாடாக அமையலாம். ஆனால் பெரும்பாலும் இது நிறுவன நிலைமை, நிறுவனம் கையாளக்கூடிய சாத்தியமான வழிகள் என்பவை தொடர்பான மிகக் கவனமான சிந்தனையின் வெளிப்பாடாகவே அமைகின்றது.

## 7. தந்திரோபாயச் சிந்தனைக்கான தேவை

இன்றைய தலைவர்கள் மாற்றமுறும் நிலைமைகளின் தாக்கங்களையும் நிறுவனத்தின் நிலைமையையும் பற்றி தந்திரோபாய ரீதியில் சிந்திக்க வேண்டியவர்களாகின்றனர். தந்திரோபாய மாற்றங்களை எப்பொழுது, எங்கே, எப்படி ஏற்படுத்த வேண்டும் என்பதனை அவர்கள் அறிந்து வைத்திருத்தல் வேண்டும். ஒரு முதல்தர தந்திரோபாயச் சிந்தனையானது:

நிறுவனமொன்று எதனை அடையவும், அதன் பொருட்டு என்ன நடவடிக்கைகளை மெற்கொள்ளவும் விரும்புகின்றது, முயற்சி செய்கின்றது என்பதில் முழு நிறுவனத்திற்குமான வழி காட்டலை அளிக்கின்றது.

மாற்றங்கள், புதிய சந்தர்ப்பங்கள், விருத்தியடையும் அச்சுறுத்தல்கள் என்பவை தொடர்பாக முகாமையினை எப்போதும் அவதானத்துடன் இருக்கச் செய்கின்றது.

உயர்ந்த விளைவொன்றைப் பெறும் நிறுவனமாக இருக்க வேண்டுமெனில் அது சரியாக முன்னெடுக்கப்பட்டு வழிநடத்தப்பட வேண்டும். சாதாரணமாக தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் நிலைமையிலும், எதிர்த்தாக்கங்களை மட்டும் வெளிப்படுத்து -வதுமாக இல்லாது போட்டியிலான நன்மையினைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக ஒரு நிறுவனம் இருக்க வேண்டியது அவசியமாகும். இந்நிலையிலேயே தந்திரோபாயச் சிந்தனை என்பது முக்கியத்துவம் பெறுகின்றது. எமது பலவீனங்களை அடையாளம் கண்டு போட்டியாளன் எம்மை வெற்றி கொள்ளாத வகையில் தந்திரோபாயங்களை உருவாக்கிக் கொள்ள வேண்டியது அவசியமாகும். எமது பலவீனங்களை நாமே உணர்ந்து கொள்வதே வளர்ச்சிக்கான முதற்படியாகும். இதனையே ஜீன் வேனியர் என்பவர் பின்வருமாறு கூறுகின்றார்.**"எமது சொந்தப் பலவீனங்களை நாம் எப்பொழுது ஏற்றுக்கொள்ள ஆரம்பிக்கின்றோமோ அப்போது வளர்ச்சி ஆரம்பமாகின்றது."** எனவே வெற்றியை உறுதிசெய்யும் பொருட்டு இப்பலவீனங்களை உணர்வது மட்டுமன்றி அவற்றை நிவர்த்தி செய்யும் வகையிலும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தந்திரோபாயச் சிந்தனை என்பது அவசியமாகின்றது.

## 8. தலைமைத்துவமும் தந்திரோபாயச் சிந்தனையும்

சிறந்த தந்திரோபாயம் ஒன்றை விருத்தி செய்தலென்பது தந்திரோபாயம் என்பதனை விளக்கிக் கொள்ளும் ஆற்றலுடைய, பலமான ஆய்வுத் திறன்களையுடைய, சிறந்த தொழிற்தீர்மானங்களை மேற்கொள்ளக்கூடிய ஒரு நபர் அல்லது நபர்களை வேண்டிநிற்கின்றது. வெற்றியின் இரகசியம் என்பது சந்தர்ப்பங்களும், பிரச்சினைகளும் உருவாகும் போது அவற்றுக்கு முகம் கொடுக்கத் தயாராக இருத்தலாகும். இதன் அடிப்படையிலேயே Citi Corporation நிறுவனத் தலைவர் John Read என்பவர் பின்வருமாறு கூறுகின்றார். **"இன்று காணப்படுபவை நிரந்தரமானவையென்றும், எப்பொழுதும் உண்மையானவையென்றும் நீங்கள் நினைக்கின்றீர்களா -யிருந்தால் உங்கள் தலையைக் கைகளுக்குச் சாய்த்துக் கொள்வது உங்களால் தவிர்க்க முடியாததாகும்."** எனவே மாற்றங்களுக்கு முகம் கொடுக்கும் வகையில் செயற்பட வேண்டியது முக்கியமானதாகும். இது தலைமைத்துவத்தைச் சார்ந்த செயற்பாடாகும். சிறந்த, வெற்றிகரமான தலைவர்களது ஆளுமைப்பண்புகள் வேறுபடலாமெனினும், அவர்கள் சில பொதுவான தன்மைகளைக் கொண்டுள்ளதை அவதானிக்க

முடியும். Bill Slian என்ற அறிஞர், தலைமை நிர்வாக உத்தியோகத்தர்கள் கொண்டிருக்கக் கூடிய நான்கு பொதுவான குணாதிசயங்களை விளக்குகின்றார்.

1. உடனடிக்கருத்தாளர் (Intuiter) : கருத்துக்கள், கொள்கைகள், புதுமைத்தன்மை என்பவற்றைக் கையாளுகின்ற கலைத்தன்மை, கற்பனை வளம் கொண்ட ஒரு நபர்.
2. சிந்தனையாளர் (Thinker) : உயர்ந்தளவில் ஒழுங்குபடுத்தப்பட்ட, திறனுள்ள, கணிப்பொறிபோன்ற மூளையொன்றைக் கொண்ட ஒரு நபர்
3. உணர்வாளர் (Feeler) : உணர்வுள்ள, விசுவாசமான, உயர் விசுவாசமான("True blue") தனிநபர் நல்லுறவுகளில் வளர்ச்சியடைகின்ற ஒரு நபர்.
4. நுண்ணறிவாளர் (Sensor) : ஓய்வற்ற, எப்பொழுதும் இயங்கிக் கொண்டிருக்கின்ற, பெரும்பாலும் பொறுமையற்ற, களைப்படையாத ஒரு போட்டியாளர்.

மேற்கூறிய பண்புகள் ஒரு சிறந்த தலைவரைப் பிரதிபலிப்பன எனக் கருதப்படுகின்றன. பண்புகள் இயல்பாக அமைந்தவையாகவோ அல்லது அனுபவத்தினடிப்படையில் வளர்ச்சி பெற்றவையாகவோ இருக்கலாம். எவ்வாறாயினும் இப்பண்புகள் தனித்துவமான ரீதியில் ஒரு தந்திரோபாயத் தலைவரை வெளிக்காட்டுகின்றன எனக் கூற முடியாது. தந்திரோபாய விருத்திச் செயன்முறையில் நிலைமைகளை விளங்கிக் கொள்ளும் இயலுமை, ஈடுபாடு ஆகிய இரண்டு அடிப்படை மூலங்களும் ஆற்றல், விருப்பம் எனப்படுகின்ற இரண்டு மனித குணாம்சங்களும் காணப்படுகின்றன. தந்திரோபாயச் சிந்தனையூடாக தந்திரோபாயத்தை விருத்தி செய்வதை இயலச் செய்கின்ற இந்நான்கு நிபந்தனைகளினுடைய ஒன்றிணைப்பினைப் படம் 3 காட்டுகின்றது.

அனுபவமும், அறிவும் ஒரு தலைவரின் பெறுமதி வாய்ந்த சொத்துக்கள். ஆனால் இவையே பொறுப்புக்களாகவும், புதுமைவாய்ந்த சிந்தனையைத் தடை செய்பவையாகவும் அமையக்கூடும். இங்கு தந்திரோபாயச் சிந்தனையின் முக்கியமான ஆரம்பமாக ஆய்வு என்பது காணப்படுகின்றது. தலைவர்கள், நிறுவனம் எதனை அடைய விரும்புகின்றது, முயற்சி செய்கின்றது என்பதனை வெளிப்படுத்தும் வகையில் குறிக்கோளை வரையறை செய்து ஊழியர்கள் தாங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதனைத் தாமாகவே தீர்மானிக்கும் வகையிலான சூழல் ஒன்றை உருவாக்க வேண்டும். எப்பொழுதும் சிந்தனைக்கு முக்கியத்துவம் கொடுப்பவராக இருப்பது தந்திரோபாய தலைமைத்துவத்தின் முக்கிய பண்பாகும். YTL கூட்டுத்தாபன முகாமைத்துவ இயக்குனர் Francis Yeoh Sock Ping என்பவர் தந்திரோபாயத் தலைமைத்துவத்தின் முக்கியத்துவத்தினை வலியுறுத்தும் வகையில் பின்வருமாறு கூறுகின்றார்.

**படம் 3 : தந்திரோபாயத் தலைமைத்துவத்தின் நிபந்தனைகள்**

செயற்படுபவரின் குணாம்சங்கள்
(Performer's attributes)

செயற்பாடு

| | ஆற்றல் | விருப்பம் |
|---|---|---|
| நிலைமைகளை விளங்கிக் கொள்ளும் இயலுமை | புதிய கோட்பாடுகளை உருவாக்கும் இயலுமை | புதிய கோட்பாடுகளை உருவாக்கும் விருப்பம் |
| ஈடுபாடு | புதிய கோட்பாடுகளை மதிப்பீடு செய்யும், வளங்களை ஈடுபடுத்தும் இயலுமை | புதிய கோட்பாடுகளை மதிப்பீடு செய்யும், வளங்களை ஈடுபடுத்தும் விருப்பம் |

**"என்னைப் பொறுத்தளவில் ஒரு தலைவரானவர் வெற்றிக்கான விருப்பத்துடன் ஆரம்பிக்க வேண்டும். தனது சிந்தனைகளில் கூடிய கவனம் செலுத்துபவராக இருக்க வேண்டும். தன்னை ஒழுங்குபடுத்துபவராகவும், ஏனையோரை விட கடுமையாக வேலை செய்பவராகவும் இருத்தல் வேண்டும். ஒரு தலைவர் தொலைநோக்கு ஒன்றையும், நீண்டகாலக் குறிக்கோள் ஒன்றையும் கொண்டிருப்பதுடன் புதுமை புனைபவராகவும், அவ்வப்போதுள்ள நிலைமைகளுக்கேற்ப எப்போதும் சவால் விடுபவராகவும், எப்போதும் "ஏன்"? என்ற கேள்வியைக் கேட்டுக் கொண்டிருப்பவராகவும் இருத்தல் வேண்டும்."**


இக்கூற்றானது தந்திரோபாயச் சிந்தனைக்கும், திறனுள்ள தலைமைத்துவத்திற்கும் இடையிலான தொடர்பினைக் கூறுவதாக மட்டுமன்றி தந்திரோபாய தலைமைத்துவத்தின் நிபந்தனைகளை வெளிக்காட்டுவதாகவும் அமைகின்றது. அடுத்து, இங்கு கவனத்தில் கொள்ளக்கூடியதாக இருக்கும் ஒரு அம்சம் புதுமைத்தன்மை என்பதாகும். இது பெரும்பாலும் எல்லா முகாமைத்துவ அறிஞர்களாலும் முன்வைக்கப்படும் ஒரு கருத்தாகக் காணப்படுகின்றது. புதுமைத்தன்மையென்பது தலைமைத்துவத்துடனும், தந்திரோபாயச் சிந்தனையுடனும் எங்கே, எவ்வாறு தொடர்புபடுகின்றது என்பதனை விளங்கிக் கொள்ளுதல் இங்கு அவசியமானதாக அமைகின்றது.

1993 இல் இடம்பெற்ற முகாமைத்துவப் பட்டப்படிப்புகள் நிறுவனத்தின் (Post-graduate Institute of Management) முகாமைத்துவ மகாநாட்டின் போது Lalith C.N.Grero என்பவரால் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரையில், புதுமைத்தன்மை என்பது சிறியதாகவோ, பெரியதாகவோ எவ்வாறு இருந்தாலும் பிரச்சினைகள், சந்தர்ப்பங்கள், அல்லது சவால்கள் என்பவற்றுக்கான சிறந்த, பயனுள்ள தீர்வுகளை அளிக்கின்ற எதுவாகவும் இருக்கலாம் எனக் குறிப்பிடப்பட்டது. முகாமைத்துவ அகராதியின்படி புதுமைத்தன்மையென்பது புதிய சிந்தனைகள், கொள்கைகள், உற்பத்திகள், சந்தைகள், பங்கீடுகள், வியாபாரங்கள் என்பவற்றை அறிமுகம் செய்தல் அல்லது எல்லாப் பொருட்களும் சமமானவை, எல்லாம் ஒரே புள்ளியில் உள்ளவை, அவற்றின்

பயன்பாடுகள் வீழ்ச்சியடையும் என்ற கருத்திலான பாரிய மாற்றம் ஒன்றை ஏற்படுத்தல் என்பதாகும்.

நிறுவனங்கள் நிகழ்காலத்தில் மட்டுமன்றி எதிர்காலத்திலும் போட்டியடிப்படையிலான நன்மை ஒன்றைச் சாதிப்பதற்கான வழிகளைக் காண்பதிலேயே கவனம் செலுத்துகின்றன. போட்டித் தன்மையைப் பேணுவதற்கு புதுமைத்தன்மை முக்கியமானதாகும். அவ்வாறான புதுமைத்தன்மை வாய்ந்த செயற்பாடானது தந்திரோபாய ரீதியிலான சிந்தனையின் தேவையை வலியுறுத்துகின்றது. வாடிக்கையாளர்களைக் கவர்தல், நிறுவனத்திற்குள் கொண்டுவரல், தொடர்ந்து வைத்திருத்தல் (attracting, locating and holding) என்ற நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான புதுமைத்தன்மையுள்ள திசைகளை உருவாக்குவதில் தந்திரோபாயச் சிந்தனையென்பது முக்கிய பங்கினை வகிக்கின்றது. புதுமைத்தன்மையென்பது நிறுவனத்தில் தன்னியக்கமாக உருவாகும் ஒன்றல்ல. இது தந்திரோபாயச் சிந்தனையூடான ஒரு வெளிப்பாடாகும். இத்தொடர்புகளைக் காட்டுவதற்கு Grero பின்வரும் அமைப்பினைப் பயன்படுத்துகின்றார்.

**படம் 4 : புதுமைத்தன்மையின் விருத்தி**




ஒரு நிறுவனமானது புதுமைத்தன்மையுடையதாக இருக்க வேண்டுமெனில் அது புதுமை புனையும் இயலுமையை, குறிப்பாக சிறந்த தந்திரோபாயச் சிந்தனையையுடைய தலைவர்களைக் கொண்டிருக்க வேண்டியது அவசியமாகும். அவ்வாறாயின் எவ்வாறு தந்திரோபாய ரீதியில் சிந்திப்பது? துரதிஷ்டவசமாக, வாடிக்கையாளர்களைக் கவர்தல், நிறுவனத்திற்குள் கொண்டுவரல், தொடர்ந்து வைத்திருத்தல் என்பவை சாதாரணமாகச் சிந்திப்பது போல இலகுவானவையல்ல. தந்திரோபாயச் சிந்தனையுடன் உயர்தரமொன்றை (excellence) உருவாக்குவதற்கு மூன்று முக்கிய அம்சங்கள் பற்றிய பூரண அறிவினைக் கொண்டிருத்தல் அவசியமாகும். அவையாவன : வாடிக்கையாளர்கள், போட்டியாளர்கள், சொந்த நிறுவனம்.

**படம் 5: வெற்றிகரமான தந்திரோபாயங்களுக்குரிய தேவைகள்**

| தந்திரோபாயப் பகுதிகள் | எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் |
|---|---|
| வாடிக்கையாளர்கள் | வாடிக்கையாளர்களைத் திருப்தி செய்தல், வெவ்வேறு வாடிக்கையாளர்கள் வெவ்வேறு தேவைகளைக் கொண்டுள்ளார்கள் என்பதை அறிந்து கொள்ளல். |
| போட்டியாளர் | உற்பத்தி வேறுபடுத்தலை (Product differentiation) மனதில் வைத்துக்கொண்டு போட்டியிலான நன்மை ஒன்றைப் பெற்றுக்கொள்ள முயற்சி செய்தல் |
| நிறுவனம் | நிறுவனத்தின் பலம் எங்கு இருக்கின்றதோ அவற்றின் மீது முதலீடு செய்தல், அவற்றை விருத்திசெய்வதற்குக் காலம் எடுக்கும் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளல் |

வழமையாக நிறுவனங்களில் பின்பற்றப்படுகின்ற திட்டமிடல் செயன்முறைகள் தந்திரோபாயச் சிந்தனைக்கு இடமளிக்காது இறுக்கமானவையாகக் கணப்படுகின்றன. திட்டமிடல் மீது கொண்ட தவறான நம்பிக்கையே இதற்குக் காரணமாகும். வெற்றிகரமான தந்திரோபாயங்கள் என்பவை திட்டங்கள் (plans), சமன்பாடுகள் (equations) அல்லது முறைமைகள் (Systems) என்பவற்றின் வெளிப்பாடுகளல்ல. மாறாக வாடிக்கையாளர் தேவைகளைத் திருப்தி செய்யக்கூடிய, போட்டியிலான நன்மைகளை உருவாக்கக் கூடிய, நிறுவனத்தில் காணப்படுகின்ற பலங்களைப் பயன்படுத்தக்கூடிய வழிகளில் அமைகின்ற, தலைவர்களது சிந்தனையின் வெளிப்பாடுகளே. அவ்வாறாயின் ஒவ்வொருவரும் இதனை விருத்தி செய்து கொள்ள முடியுமா? ஆம். தந்திரோபாய ரீதியான சிந்தித்தலை விருத்தி செய்து கொள்வதற்கு வேறுபட்ட பார்வைகளைக் கொண்ட பல்வேறு அம்சங்களைப் பயிற்சி செய்வதன் மூலம் ஆற்றலை உருவாக்க முடியும். இச்செயன்முறை ஒழுங்காக மேற்கொள்ளப்படுமானால், எவருமே ஒரு தந்திரோபாயச் சிந்தனையாளராக உருவாக முடியும் என்பது அறிஞர்களின் கருத்தாகும்.

## தந்திரோபாயச் சிந்தித்தலின் பார்வைகள்

**வாடிக்கையாளர் தேவைகளைத் திருப்தி செய்தல்**

1. வாடிக்கையாளர் துண்டங்கள்.
   (Customer Segments)

உங்களால் இயலுமான வரையில் வாடிக்கையாளர்களைப் பல்வேறு குழுக்களாக துண்டங்களாக்குங்கள். வாடிக்கையாளர்களைத் துண்ட மாக்குவதற்கு புதிய வழிகளைக் கண்டுகொள்ள முயலுங்கள்.

2. வாடிக்கையாளர் புலனுணர்வுகள்
   (Customer Perceptions)

உங்களது நிறுவனத்தை வாடிக்கையாளர்கள் உணர்ந்து கொள்ளக்கூடிய சகல, வேறுபட்ட வழிகளையும் கருத்திற் கொள்ளுங் கள். முன்னெப்போதும் கருத்திற் கொள்ளப்படாத வாடிக்கையாளர் புலனுணர்வுகளையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.

3. திருப்தி செய்யப்படாத வாடிக்கையாளர் தேவைகள்
(Unsatisfied customer Needs)

வாடிக்கையாளரது திருப்தி செய்யப்படாத சகல தேவை களையும் மனதில் கொண்டுவர முயற்சி செய்யுங்கள். அவ்வாறான ஒரு தேவையை யாவது அடையாளம் காணும் வரையில் திருப்தியடையாதீர்கள்.

4. எதிர்கால வாடிக்கையாளரது தேவைகள்
(Future Customer Needs)

சாத்தியமான சகல எதிர்கால வாடிக்கையாளரது தேவை களையும் அடையாளம் காணுங்கள். சாதாரணமாக நீங்கள் திருப்தி செய்யக்கூடிய தேவை களை விட நீங்கள் உருவாக்கக் கூடிய தேவைகளைக் கருத்திற் கொள்ளுங்கள்.

**போட்டியிலான நன்மையினைப் பெற்றுக் கொள்ளல்.**

5. போட்டித்தலையீடு
(Competitive Interference)

உங்களது ஒவ்வொரு போட்டி யாளரும் சந்தையில் எவ்வளவு பகுதியினைப் பயன்படுத்துகின்றார் என அறியுங்கள். அவர்களது எடுகோள்கள் என்ன என்பதை அடையாளம் காணுங்கள். ஒவ்வொரு நேரடி, மறைமுக போட்டியாளரையும் ஆய்வு செய்யுங்கள்.

6. போட்டியாளர் இடைவெளிகள்.
(Competitor Gaps)

உங்களது தொழிலில் போட்டி யாளர்களால் நிரப்பப்படாத எந்தவொரு இடைவெளியையும் பிடித்துக் கொள்ளுங்கள். உங்களால் அதனை நிரப்ப முடியுமா எனச் சிந்தியுங்கள். முதற் தடவையாக நீங்கள் சந்தையில் நுழைவதாகப் பாவனை செய்யுங்கள்.

7. பெறுமதியும் செலவும்
(Value and Cost)

உங்களது வாடிக்கையாளருக்கு நீங்கள் வழங்கும் பெறுமதியை அடையாளம் காணுங்கள். நிறுவன முறைமையில் எந்த மட்டத்தில் அது ஏற்படுகின்றது? போட்டியாளர்கள் என்ன பெறுமதியை வழங்கு கின்றார்கள்? அது எந்த மட்டத்தில் ஏற்படுகின்றது? தெளிவான, மறைந்துள்ள செலவுகளையும், சகல பெறுமதிகளையும் அடையாளம் காணுங்கள்.

8. போட்டியாளரது எதிர் நடவடிக்கைகள்.
(Competitor Reactions)

உங்களது நிறுவனத்தின் சாத்தியமான நடவடிக்கைகளுக்கு போட்டியாளர் எடுக்கக் கூடிய எதிர் நடவடிக்கைகள் பற்றி அனுமானியுங்கள்.

**நிறுவனத்தின் பலங்களைப் பயன்படுத்தல்**

9. பலங்களும் பலவீனங்களும்
(Strengths and Weaknesses)

உங்களுடைய நிறுவனத்தின் ஒவ்வொரு பலத்தையும் பலவீனத்தையும் நிரற்படுத்துங்கள். உண்மைத்தன்மையுடையவராக இருங்கள். முன்னொருபோதும் கருத்திற் கொள்ளாத பலன்கள், பலவீனங்கள் என்பவற்றை நோக்குங்கள்.

10. புதிய பிரயோகங்கள்.
(New Applications)

உங்களுடைய பலங்களைப் புதிய உற்பத்திகள், சந்தைகள், அல்லது அணுகுமுறைகள் என்பவற்றுக்குப் பிரயோகிக்கக் கூடிய எல்லாப் புதிய வழிகள் பற்றியும் சிந்தியுங்கள். உங்களுடைய பலவீனங்களை எவ்வாறு நிவர்த்தி செய்ய முடியும்? மூளையை உருட்டல் (Brain storming) செயற்பாட்டில் உள்ளது போன்று அந்நியமான, எதிர்கால நோக்குடைய, சகல சாத்தியங் களையும் கருத்திற் கொள்ள வேண்டும்.

11. தொழிலின் பல்வேறு முதலீட்டுச் சேர்வைகள்
(Business Portfolios)

உங்களுடைய நிறுவனத்திலுள்ள உற்பத்திகள், சேவைகள் அல்லது தொழில்கள் அனைத்தையும் அவை பல்வேறு முதலீடுகளின் சேர்வை ஒன்றில் (a portfolio of investment) இருந்தால் எவ்வாறு இருக்கும் என மதிப்பீடு செய்யுங்கள். உங்களுடைய பணத்தின் முதலீட்டிற்கு எது சிறந்ததாக இருக்கும்.? நிறுவனத்தின் மிக வழமையான அம்சத்தைக் கூடக் கவனிக்கத் தவறக்கூடாது.

12. சந்தர்ப்பங்களும் அச்சுறுத்தல்களும்
(Opportunities and Threats)

உங்களுடைய பலங்களை மேலும் பலப்படுத்தக்கூடிய சந்தர்ப்பங்கள் அனைத்தையும், உங்களுடைய பலவீனங்களைச் சாதகமாக்கிக் கொள்ளக்கூடிய அச்சுறுத்தல்கள் அனைத்தையும் பற்றிச் சிந்தியுங்கள். அடையாளம் கண்டு கொள்ளப்படாத சந்தர்ப்பங்கள், அச்சுறுத்தல்கள் என்பவற்றைத் தேடுங்கள்.

---

மேற்கூறிய அம்சங்கள் தந்திரோபாயத் தலைமைத்துவத்திற்கான வழிகாட்டிகளாகும். ஒரு வெற்றிகரமான தலைவர் என்பவர் ஒரு தந்திரோபாயத் தலைவராகின்றார். சிக்கல்கள், மாறும் நிபந்தனைகள் என்பவற்றைக் கையாளும் பொருட்டு இவர்கள் தந்திரோபாய ரீதியில் சிந்திக்க வேண்டியது அவசியமாகின்றது. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நடவடிக்கை மேற்கொள்வதற்கு முன்னர் சிந்தித்தல் என்பது மிக முக்கியமான ஒரு அம்சமாகும். இதன் அடிப்படையிலேயே அறிஞர்கள் பின்வருமாறு கூறுகின்றார்கள்.

**"உங்களுடன் நீங்களே ஆலோசனை நடத்துவதற்கும் (to confer with yourself), உங்களுடைய அதியுயர் சிந்தனைச் சக்தியைப் பயன்படுத்துவதற்கும் நேரம் ஒதுக்குங்கள். உங்களுடைய கீழ் ஊழியர்கள் எவ்வாறு சிந்தித்து, கதைத்து, செயற்பட்டு, வாழவேண்டுமென்று விரும்புகின்றீர்களோ அவ்வழியில் நீங்கள் சிந்தியுங்கள், கதையுங்கள், செயற்படுங்கள், வாழுங்கள். அவர்களும் அவ்வாறே செய்வார்கள்."**

**"சிந்திப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள், அது சக்தியின் மூலம். வேலை செய்வதற்கு நேரம் ஒதுக்குங்கள். அது வெற்றியின் விலை."** இவ்விலையையும், சக்தியின் மூலத்தையும் ஒன்றிணைத்ததே தந்திரோபாயத் தலைமைத்துவமாகும்.

## 9. முடிவுரை

தலைமைத்துவம் என்பது ஒரு இயங்கும் செயன்முறையாகும். பல தலைவர்கள் தமது வெற்றிக்குக் காரணம் அதிஷ்டம் என்றோ, சரியான நேரத்தில் சரியான இடத்தில் இருந்தமை என்றோ அல்லது சரியான முறையில் செயற்பட்டமை என்றோ கூறுகின்ற வேளையில் அவர்களில் எவருமே செயற்படாமலோ, விதி அவர்கள் மீது புன்னகை செய்யும் வரையிலோ காத்திருந்ததில்லை. தலைமைத்துவம் என்பது சவால்கள் நிறைந்த ஒரு விளையாட்டாகும். வெற்றியோ, தோல்வியோ அது தலைவர்களின் சிறப்பு, வினைத்திறன் என்பவற்றிலேயே

தங்கியுள்ளது. நேர்மை, முன்னோக்கிய பார்வை, தூண்டுதல், ஆற்றல் என்பன யாவும் சிறந்த தலைமைத்தவத்தின் அம்சங்களாகும். இவை தனித்தனியாக தலைமைத்துவப் பண்புகளைப் பிரதிபலிக்காவிடினும் இவை யாவும் ஒன்றிணையும் போது சிறந்த தலைமைத்துவம் வெளிப்படுகின்றது.

தலைவர்களும் எதிர்காலத் தலைவர்களும் தமது விழுமியங்களைக் கருத்திற்கொண்டு செயற்பட வேண்டும். மிக முக்கியமான அம்சங்களாவன :

- தலைவர்கள் எவ்வாறு தமது நேரத்தைச் செலவிடுகின்றார்கள்
- என்ன வினாக்களைக் கேட்கின்றார்கள்.
- தமது சிந்திக்கும் சக்தியை எவ்வாறு பயன்படுத்துகின்றார்கள்
- கீழ்மட்டங்களிலிருந்து வரும் புதுமைத் தன்மையான கருத்துக்களுக்கு எவ்வாறு பிரதிபலிப்பை வெளிப்படுத்துகின்றார்கள்.
- முக்கியமான சம்பவங்களின் போது எவ்வாறு செயற்படுகின்றார்கள்
- எதனை வெகுமதியாக வழங்குகின்றார்கள்.

குழுவாக இயங்கல், ஊழியர்களின் ஒத்துழைப்பு என்பவற்றில் கூடிய கவனம் செலுத்துதலும் முக்கியமான சம்பவங்களின் போது நேர்முகமாக (Positively) இயங்குதலும் புதுமைத்தன்மையான கருத்துக்களை வரவேற்றலும், வாடிக்கையாளரைத் திருப்தி செய்யும் பொருட்டு தமது சிந்தனைச் சக்தியை உபயோகித்தலும் ஒரு சிறந்த தலைவரை அடையாளம் காட்டும் காரணிகளாகும். ஒரு தலைவரின் பிரதானமான வேலை சிந்தித்தலாகும். தலைமைத்துவத்திற்கான சிறந்த தயார்படுத்தல் என்பது சிந்தித்தலே. போட்டிச் சூழல் ஒன்றில் வெற்றியினை அடையும் பொருட்டு ஆரம்பமாகும் சிந்தனையே தந்திரோபாயச் சிந்தனையாகும். இது வெற்றிக்கான அத்திவாரம் என்பதில் ஐயமில்லை.

**உசாத்துணைகள்**


1. Adair, John (1991), : **Effective Leadership : A Modern Guide to Developing Leadership skills,** Rupa & Co, India.
2. Aguliar, B.J. (1988),: **General Managers in Action,** Oxford University Press.
3. Arthur, A.Thompson., Jr., and Stickland, A.J. (1994):, **Strategic Management : Concepts & Cases,** Richard D. Irwin Inc.
4. Asian Manager, Vol. VII, No.3, July 1994.
5. James, M.Kouzes., Barry, Z.Pasner. (1990): **The Leadership Challenge,** Jessey - Bass Publishers.
6. Melvin, J.Stanford. (1983): **Management Policy,** 2nd Ed., Prentice Hall of India (Pvt) Limited, New Delhi.
7. Peter, W., and Others (1992): **Strategic Management,** Library of Congress Cateloging.
8. **Senior Management,** A Journal of Reprints of Significant Business Topics for Executives, Vol. VI, No.5,May 1988.


* * * * *

## உலக மீன்பிடி......

37 ஆம் பக்கத் தொடர்ச்சி

பரந்துள்ளதுடன் சமன், மில்சாட், ரியூனா மீனினங்கள் நிறைந்த பகுதியாகக் காணப்படுகின்றது. ஐக்கிய அமெரிக்காவில் பிடிக்கப்படும் சமன் மீனின் பெறுமதி வருடாந்தம் 75 மில்லியன் டொலருக்கு மேல் உள்ளது. கட்டுப்பாடற்ற முறையில் அமைந்த இம் மீன்பிடியினால் மீனினங்களின் மீன் உற்பத்தியிலும் மீன் குஞ்சுகளின் உருவாக்க நிலைமைகளிலும் ஏற்பட்ட பாதிப்புக்கள் நிரம்பலில் கடுமையான பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளன. இதனால் சர்வதேச ஒப்பந்தங்களின் மூலம் இவற்றைப் பேணிப் பாதுகாப்பதற்கான முறைகள் அண்மையில் எடுக்கப்பட்டுள்ளன.

கலிபோர்ணியாவில் ரியூனா, சாடின்ஸ், மக்ரல் போன்ற மீன் வகைகளைத் தகரத்தில் அடைக்கும் முறை விருத்தி பெற்றுள்ளது. மாரிகாலத்தில் பில்சாட்டும், கோடைகாலத்தில் ரியூனாவும் பெருமளவில் காணப்படுகின்றதுடன் இரு மீன் வகைகளும் வருடம் பூராகவும் தகரத்தில் அடைக்கப்படுகின்றது. அலாஸ்கா, பிரிட்டிஷ் கொலம்பியாவுக்கு அப்பால் கண்ட ஓட்டில் காணப்படும் ஆழமான நீர்ப்பகுதிகள் உலகிலேயே கலிபட் மீன் வகைக்கான சிறந்த பகுதியாக விளங்குகின்றது.

### அயனப் பிரதேசத்தில் மீன்பிடித் தொழில்

அயன பிரதேசங்களில் வர்த்தகரீதியான மீன்பிடித் தொழில் அதிகளவில் விருத்திபெறவில்லை. இத்தகைய விருத்தியின்மைக்குப் பல காரணங்கள் உள்ளன. அவையாவன :

(1) அயன நீர்ப்பகுதிகள் ஆழமாக இருப்பதுடன் மேடைகளையும் கொண்டிருக்கவில்லை.

(2) சூடான கடற் பகுதிகள் பிளாங்ரனின் வளர்ச்சிக்கு சாதகமானது அல்ல. இதனால் மீன் உணவினைப் பற்றாக்குறையாகக் கொண்ட பிரதேசமாக உள்ளது. பிளாங்ரனின் உற்பத்தி பெரும்பாலும் சூரிய வெளிச்சம், சமுத்திர நீரோட்டங்கள், சமுத்திர நீரோட்டங்களின் குத்தானகலப்புத்தன்மை, நீரின் இரசாயன உள்ளடக்கங்கள் ஆகியவற்றிலேயே தங்கியுள்ளது. இக்காரணிகள் இடைவெப்ப வலய நீர்ப்பகுதிகளில் சாதகமாகக் காணப்படுகின்றது.

(3) குறைவருமானம் கொண்ட அயனப் பிரதேச மக்களிடையே கடல்வாழ் உணவுக்கான கேள்வி மிகக் குறைவாகக் காணப்படுகின்றது. பெரும்பாலும் மீன்பிடி இங்கு இரண்டாம் நிலைத் தொழிலாகவே விளங்குகின்றது.

* * * * *

# அரசியல் பன்மைவாதம்

**அ. வெ. மணிவாசகர்**

## ஒருமைவாதமும் பன்மைவாதமும்

மரபுரீதியான இறைமைக்கோட்பாட்டை ஒருமைவாதம் (Monism) என்றும், நவீன இறைமைக் கோட்பாட்டைப் பன்மைவாதம் (Pluralism) என்றும் அழைப்பர். ஒருமைவாதமானது, அரசினையே இறைமையுள்ள ஒரேயொரு அமைப்பாகவும், அதன் இறைமையை எல்லையற்றதாகவும், பிரிக்க முடியாததாகவும் காண்கிறது. பன்மைவாதமானது, அரசுக்கு முதன்மை வழங்க மறுத்து, அதனைச் சமூகத்தின் ஏனைய சங்கங்கள் போலவே கருதி, அதன் இறைமையை மட்டுப்படுத்தவும், பல்வேறு சங்கங்களுடன் பகிர்ந்துகொள்ளவும் முற்படுகிறது.

பதினாறாம் நூற்றாண்டில் ஜீன் வோடின் என்ற பிரான்சிய அறிஞரின் கருத்துக்களில் தொனித்த ஒருமைவாதம், பின்னர் பல அறிஞர்களால் முன்னெடுக்கப்பட்டு, இறுதியாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் இங்கிலாந்தின் சட்ட அறிஞராகிய ஜோன் ஒஸ்ரின் என்பவருடைய ஆக்கங்களில் உச்சக் கட்ட வளர்ச்சியைக் கண்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக் காலப்பகுதியில் தோன்றி இருபதாம் நூற்றாண்டில் வளர்ச்சி கண்ட பன்மைவாதத்தின் சிந்தனையாளர்களில் ஒட்டோ வி.ஹீர்க்கே, எப்.டபிள்யூ.மெயிற்லண்ட், ஜே.என்.பிக்காஸ், எமில் டுர்க்கிம், போல் வொன்கர், லியோன் டியூகிற், ஹியூகோ கிறப்வே, ஏ.டி.லின்ட்சே, எர்னெஸ்ட் பார்க்கர், ஜி.டி.எச்.ஹோல், ஹறோல்ட் ஜே.லஸ்கி, ஆர்.எம்.மைக்ஐவர், றொபேட் ஏ.டால் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

நான்கு நூற்றாண்டு காலமாக நிலைத்திருந்த ஒருமைவாதத்துக்குப் பெரும் சவாலாகப் பன்மைவாதம் அமைந்தது. சட்டமே இறைமையின் ஆணை என்றும், சட்டம் இயற்றி அமுல்படுத்தும் அதிகாரம் இறைமை கொண்ட அரசுக்கு மட்டுமே உண்டு என்றும், சட்டங்கள் அரசினைக் கட்டுப்படுத்துவதில்லை என்றும், ஆனால் சமூகத்திடமிருந்து சட்டம் பலவந்தமாக அடிபணிவைப் பெற்றுக் கொள்கிறது என்றும், ஒருமைவாதத்தின் சிற்பியான ஒஸ்ரின் முன்வைத்த வாதங்களைப் பன்மைவாதிகள் ஒட்டுமொத்தமாக நிராகரித்தார்கள். ஒஸ்ரினின் கருத்துக்கள் அநாவசியமாக அரசுக்கு அவப்பெயரை ஏற்படுத்துவதாகவும், அரசை வெறும் சட்ட உருவகமாகக் காண்கின்றதேயன்றி அதன் அரசியல், சமூக, பொருளாதாரப் பரிமாணங்களைக் கருத்திற் கொள்ளவில்லை என்றும், சர்வாதிகாரத்தை நிலைநாட்டவும், நியாயப்படுத்தவும் துணைபோகிறது என்றும், தனிநபர்கள், குழுக்கள், சங்கங்கள் போன்றவற்றின் முக்கியத்துவத்தையும், நலன்களையும் புறக்கணிக்கிறது என்றும் பலமான மறுவாதங்களை முன்வைத்த பன்மைவாதிகள், ஒருமைவாதத்தைத் தவறானதாகவும், தீங்கானதாவும், காலத்துக்கொவ்வாததாகவும் காட்ட விளைந்தனர். ஒருமைவாதத்தை **"வணக்கத்துக்குரிய மாயை"** என்றும் வர்ணித்த பிக்கிஸ், **"தெய்வீக உரிமைக் கோட்பாடு போலவே அதுவும் ஒரு வரட்டுத் தத்துவமாக முடிவடையும்"** என்றார். லஸ்கி மேலும் ஒருபடி சென்று முழு இறைமைக் கோட்பாடும் கைவிடப்பட்டால் அரசறிவியலுக்கு நீடித்த நன்மை உண்டாகும் என்றார்.

அரசை மையமாகக் கொண்ட ஒருமைவாதத்தை மறுக்கும் பன்மைவாதம், சமூகத்தைத் தனிநபர்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற சுதந்திரமான பல்வேறு குழுக்கள், சங்கங்களைக் கொண்ட ஒரு வலைப்பின்னல் அமைப்பாகவே விளங்குகிறது. பல்வேறு நோக்கங்களுடன் இயங்கிவரும் பல்வேறு அரசியல் சமூக, பொருளாதார, கலாசார, தொழில்சார்ந்த குழுக்கள், முழுச் சமூகத்தினதும் கூட்டுமொத்தமான நன்மைகள் பூரணமடையப் பேருதவியாக இருப்பதாகவும் இதனால் அரசைப் போலவே இவ்வமைப்புக்களும் இன்றியமையாதவையாக உள்ளன என்றும், அரசிடம் இறைமை என்ற பெயரில் மேலதிகமாகக் குவிந்துள்ள அதிகாரங்கள் இவ்வமைப்புக்களுக்குப் பரவலாக்கப்படும் போதே சமூகத்தின் சமநிலையும், முன்னேற்றமும் உறுதிப்படுத்தப்பட முடியும் என்றும் பன்மைவாதிகள் வாதிட்டனர்.

பெரும்பாலான பன்மைவாதிகளின் சிந்தனைக்கு மூலமாக மத்தியகால ஐரோப்பாவின் **ஹில்ட்** அமைப்புக்களே இருந்தன. அரசு வளர்ச்சி அடையாத இக்காலப்பகுதியில் முதலீட்டாளர்களையும், கைவினைஞர்களையும், வர்த்தகர்களையும் உள்ளடக்கி, உள்ளூரில் சுதந்திரமாக இயங்கிய ஹில்ட் அமைப்புக்கள் சமூக அபிவிருத்திக்குப் பக்க பலமாக இருந்தன. ஹில்ட் அமைப்புகள் போன்ற சுதந்திரமும், அதிகாரமும், அந்தஸ்தும் கொண்டதாக நவீன சமூக அமைப்புக்களையும் காணப் பன்மைவாதிகள் விரும்பினர்.

## பன்மைவாதத்தின் நிலைப்பாடுகள்

பன்மைவாதிகளின் கருத்துக்களிலும் அழுத்தங்களிலும் வேறுபாடுகள் சில உண்டு. இருப்பினும் அரசின் இறைமையைக் கண்டிப்பதிலும், அதனைச் சமூக அமைப்புக்களிடையே பகிர்ந்தளிக்க வேண்டும் என்பதிலும், அவர்களிடையே பொதுவான ஒற்றுமை நிலவுகிறது. இவ்வகையில் பன்மைவாதத்தில் முக்கிய நிலைப்பாடுகளைப் பின்வரும் அம்சங்களில் நாம் கண்டுகொள்ளலாம்.

(i) சமூக அபிவிருத்தியின் குறிப்பிட்ட கட்டத்தின் பின்னர் தோன்றியதே அரசு. சமூகம் ஒரு திறந்த அமைப்பாக இருக்கையில் அரசு மூடப்பட்ட அமைப்பாக உள்ளது. இவ்வகையில் சமூகத்துள் அரசு அடங்குமே தவிர அரசுக்குள் சமூகம் அடங்காது என்கின்றனர் பன்மைவாதிகள். மேலும் அரசின் சட்டங்கள் போலவே பல சமூக மரபுகளும், வழமைகளும் வலிமை வாய்ந்தவையாக உள்ளன. ஒருமைவாதிகள் கூறுவது போல அரசின் சட்டங்களுக்கு

**கலாநிதி அ.வெ. மணிவாசகர்**
**முதுநிலை அரசறிவியல் விரிவுரையாளர்**
**பொருளியல் துறை**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

சமூகம் அடிபணிவது தண்டனைக்குப் பயந்து அல்லவென்றும், சமூக நன்மையைக் கருதியே அடிபணிவு வழங்கப்படுகிறது என்றும் பன்மைவாதிகள் வலியுறுத்துகின்றனர்.

(ii) சட்ட அடிப்படை கொண்ட ஒருமைவாதத்தில் பல குறைபாடுகளைப் பன்மைவாதிகள் காண்கின்றனர். இறைமைவாய்ந்த அரசு தானே உருவாக்கிய அரசியல் யாப்புச் சட்டங்களுக்கு அடங்கி நடக்கிறது. சர்வதேச சட்டங்களும் அரசுகளைக் கணிசமான அளவு கட்டுப்படுத்துகின்றன. மேலும் அரசுகளின் சட்டங்கள் நீதிமன்றுகளால் நிராகரிக்கப்படுகின்றன. தமக்குத் தேவையான சட்டங்களைத் தாமே இயற்றித் தொழிற்படும் சுதந்திரமான உள்ளூர் சங்கங்களும் அரசின் சட்டங்கள் பற்றி அக்கறைப்படுவதில்லை. சமஷ்டி முறைகளில் இறைமை மத்திய-மாநில அரசுகளுக்கிடையே பிரிந்து காணப்படுகிறது. மாநிலங்கள் பிரிந்து புதிய அரசுகள் உருவாகும் போதும் இறைமை மேலும் கூறுபட நேரிடுகிறது. எனவே அரசின் இறைமை பற்றிய மீளாய்வு அவசியமாகிறது.

(iii) பன்மைத்தன்மை கொண்ட நவீன சமூகத்தில் அரசைப் போலவே பல்வேறு குழுக்களும், சங்கங்களும் சேவையாற்றி வருகின்றன. சுதந்திரமான இந்நிறுவனங்கள் அரசின் சட்டங்களினால் உருவாக்கப்படுவதோ அல்லது கட்டுப்படுத்தப்படுவதோ அல்லது அரசில் தங்கியிருப்பதோ இல்லை. அதே சமயம் இந்நிறுவனங்கள் தமக்குத் தேவையான சட்டங்களைத் தாமே இயற்றித் தாமே அங்கத்தவர்களை வழிப்படுத்துகின்றன. இவ்வகையில், அரசும் சமூகத்தின் சங்கங்களின் ஒன்றேயன்றி தனி முதன்மையான-சர்வவல்லமை கொண்ட சங்கமாக இருக்கத் தகுதியில்லை என்பது பன்மை வாதிகளின் வாதமாகும்.

(iv) ஏகபோக அதிகாரம் படைத்த அரசினைப் பரிந்துரைக்கும் ஒருமைவாதம் தனிநபர்களின் உரிமைகள், நலன்களைப் பாதுகாக்க முடியாது என்பதும் பன்மை வாதத்தின் அபிப்பிராயமாகும். அரசில் அங்கத்துவர்களாக இருப்பது போலவே தனிநபர்கள் சமூகத்தின் சங்கங்களிலும் அங்கத்தவர்களாக உள்ளனர். மேலும் சேய்மையில் உள்ள அரசைவிடத் தமக்கு அண்மையில் உள்ள சங்கங்களுடனேயே மக்கள் நெருக்கமாக இணைந்தும், நன்மைகளைப் பெற்றும் வருகின்றனர். அத்துடன் அரசைப்போல சமூக அமைப்புக்கள் பலவந்தமான அடிபணிவையும் தம் அங்கத்தவர்களிடமிருந்து பெற்றுக்கொள்வதில்லை. இக்காரணிகளினால் அரசைவிட சமூக அமைப்புக்களே மக்களின் அபிமானத்துக்குரியவையாக இருக்கின்றன.

(v) தேசியவிடயங்களைக் கவனிக்கும் அரசுக்கு இறைமை இருக்க வேண்டியது போல் உள்ளூர் விடயங்களைக் கவனிக்கும் குழுக்கள் சங்கங்களுக்கும் இறைமை இருக்கவேண்டும். இறைமையென்ற பெயரால் அரசு பெற்றிருக்கும் மிதமிஞ்சிய அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டு உள்ளூர் சனநாயக அமைப்புக்கள் பலப்படுத்தப்படல் வேண்டும். அரசு மதிப்படையவும், சமூகம் சிறப்படையவும் அதிகாரப் பரவலாக்கம் ஓர் அரியசாதனம் என்பது பன்மைவாதத்தின் கருத்தாகும்.

(vi) பன்மைவாதிகள் தாம் அரசை வெறுக்கவோ, விரோதிக்கவோ, ஒழிக்கவோ முற்படவில்லை என்கின்றனர். மாறாக, அதனைக் கௌரவமானதும், தார்மீக அடிப்படை கொண்டதுமான ஒரு ஸ்தாபனமாக்கவே விரும்புவதாகக் கூறுகின்றனர். அரசானது ஆதிக்கமும், தலையீடும் செய்வதைத் தவிர்த்து, சமூகத்தை ஒழுங்குபடுத்தி வழிநடத்தினால் போதுமானது. இவ்வகையில் அரசின் பணி முழுச் சமூகத்துடனும் தொடர்புபடுவதால், அதனைச் சமூகத்தின் ஏனைய சங்கங்களைவிடச் சற்று உயர்வாகக் கருதப் பன்மைவாதிகள் பின்னிற்கவில்லை. மேலும், ஏனைய குழுக்கள், சங்கங்களுடன் போட்டியிட்டுக் கொண்டு அரசு சமூகத்துக்குச் சிறந்த சேவையை ஆற்றமுடியும் என்ற நம்பிக்கையையும் அவர்கள் கைவிடவில்லை.

## பன்மைவாதத்தின் பிரச்சினைகள்

ஒருமை வாதத்துக்கு எதிராகக் கடுமையான கண்டனங்களை வெளியிட்ட பன்மைவாதமும் பிரச்சினைகளைக் கொண்டிருக்காமல் இல்லை. தேசிய அரசுகளின் தோற்றமும், அவை நாளடைவில் நலன்புரி அரசுகளாக மாற்றம் கண்டமையும் சிக்கலடைந்து வரும் தேசிய, சர்வதேசப் பிரச்சினைகளும், அரசுகளிடம் அதிகாரங்கள் குவிந்து வருவதைத் தவிர்க்க முடியாததாகவும் சில சமயங்களில் அவசியமானதாகவும், நியாயமானதாகவுமே தென்பட வைக்கிறது. இந்நிலையில் அரசின் இறைமை வெகுவாக மட்டுப்படுத்தப்படல் வேண்டும் என்ற பன்மைவாதிகளின் சிந்தனை, வரலாற்று மாற்றங்களையும், நடைமுறை யதார்த்தங்களையும் கருத்திற் கொள்ளாத வெறும் இலட்சியவாதமாகவும், கற்பனைவாதமாகவுமே திரிபடைய வழிபிறக்கின்றது. அன்றியும், அரசின் இறைமை பலவீனம் அடையும்போது சமூகத்தின் ஸ்திரத்திற்கும், பாதுகாப்புக்கும் பலத்த சோதனை ஏற்படும் என்றும் கூறப்படுகின்றது. இன்னும், ஒருமைவாதம் சட்டத்துக்குச் சமூகத்தின் அடிபணிவை வேண்டி நின்ற போதிலும், சட்டங்களை விமர்சிக்கவும், எதிர்க்கவும் மக்களுக்குள்ள உரிமையை மறுக்கவில்லை. சில அரசுகளில் மக்களின் அபிப்பிராயத்தை சனநாயக முறைகளூடாக அறிந்தே சட்டம் இயற்றப்படுகிறது. இதனால் அரசுகள் இறைமையைத் துஷ்பிரயோகம் செய்யாமல், மக்கள் சக்திக்கு மதிப்பளித்து, சமூக ஏற்புடைமையுள்ள சட்டங்களையே இயற்ற முற்படும் எனலாம்.

பன்மைவாதிகள் அரசைப் பூரணமாக ஏற்கவோ அல்லது பூரணமாக மறுக்கவோ விரும்பவில்லை. இடைப்பட்ட ஒரு நிலையில் நின்று, ஆகக்கூடுதலான அதிகாரப் பரவலாக்கத்தை அவர்கள் சிபார்சு செய்கின்றனர். ஆனால், அதற்கான அதிகார வரையறைகள், அணுகுமுறைகள், உபாயங்கள் எதனையும் அவர்கள் உறுதியாகவும், தெளிவாகவும் முன்வைக்கவில்லை. இது தொடர்பாகப் பன்மைவாதிகளிடமும் ஒத்த கருத்துக்கள் நிலவவில்லை. பன்மைவாதிகள் ஆய்வின் பலவீனமான அம்சம் இதுவேயென்று எப்.டபிள்யூ. ஹோக்கர் குறிப்பிடுகின்றார். அல்பிரட் சிம்மெர்ன் என்ற அறிஞர் பன்மைவாதிகள் அரசினுடைய சர்வாதிகாரம் பற்றிப் பேசும்போது, சமூகக் குழுக்கள், சங்கங்களின் சர்வாதிகாரத்தை மறந்துவிட்டார்கள் என்றும், சேய்மையில் உள்ள அரசைவிட அண்மையில் உள்ள சமூகக் குழுக்களும் அங்கங்களுமே மக்களை அதிகம்

கட்டுப்படுத்திக் கண்காணிப்பதாகவும் பெரிய அரசைவிட சிறிய சமூக நிறுவனங்களே இறுக்கமான அமைப்பைக் கொண்டு இருப்பதாகவும் குறிப்பிடுகின்றார்.

மேலும் பன்மைவாதிகள், வளர்ச்சியடைந்த நவீன சமூகத்தின் பிரச்சினைகளுக்கு, வளர்ச்சி குன்றிய மத்தியகால சமூகத்தின் ஹில்ட் அமைப்புக்களில் இருந்து பரிகாரம் தேட முற்படுதலானது பொருத்தமற்ற ஒரு பின்னோக்கிய பாய்ச்சலாகவே கருதப்படுகின்றது. பலமான அரசுகள் நிலவாத மத்தியகால சமூகம் அடிக்கடி கண்ட குழப்பங்களையும், ஹில்ட் அமைப்புக்களிடையே காணப்பட்ட சுயநலம், பொறாமை, சச்சரவுகள் போன்றவற்றையும் பன்மைவாதிகள் உணரத் தவறிவிட்டதாகவும் கண்டிக்கப்படுகின்றது. நவீன காலத்தில் பன்மைவாதத்துக்கு வாய்ப்பான களங்களாக சுதந்திரமான குழுக்களும், சங்கங்களும் தொகையிலும், பலத்திலும், முக்கியத்துவத்திலும் இருந்து காணப்படுகின்ற - (சந்தைப் பொருளாதாரமும், தாராண்மை சனநாயகமும் நடைமுறையில் உள்ள) சில மேற்கு நாடுகளே விளங்க முடியும். மூன்றாம் உலக நாடுகளிலும், சோசலிச நாடுகளிலும் காணப்படும் நிலைமைகளில் பன்மைவாதம் சோபிக்க முடியாது.

**பன்மைவாதத்தின் பங்களிப்பு**

பன்மைவாதத்தின் முக்கிய பங்களிப்பு யாதெனில், நவீன சமூகத்தின் முக்கிய இயல்பான குழுக்கள், சங்கங்களை மையப்படுத்தியும், சட்டக் கட்டுமானத்துள் அடங்கிக் கிடந்த இறைமைக் கோட்பாட்டிற்குச் சமூகப் பிரக்ஞையை வழங்கியும் புதிய சிந்தனைகளை வெளியிட்டு அரசியல் கோட்பாட்டை அபிவிருத்தி செய்தமையாகும். கடந்த நூறு ஆண்டுகளில் இறைமையைப் போல அதிகம் விவாதிக்கப்பட்ட வேறு அரசியல் எண்ணக்கரு இல்லை என்று சி.எச்.மக்இல்வெயின் குறிப்பிடுவதிலிருந்து பன்மைவாதிகள் முன்னெடுத்த பணியின் தாக்கம்புரிகிறது. பெரும் இயக்கமாகப் பன்மைவாதம் வளர்ச்சியடையாத போதிலும், அரசுகளின் சர்வாதிகாரப் போக்கைத் தடுத்து நிறுத்தும் ஒரு சித்தாந்தமாகவும், அதிகாரப் பரவலாக்கத்துக்கான உள்ளூர் இயக்கங்களுக்கு ஓர் உந்துசக்தியாகவும் அது இருந்து வந்துள்ளது. சமகாலத்தின் முக்கிய பன்மைவாத அறிஞராகிய றொபேட் ஏ.டால், அமெரிக்க அரசியல் பற்றி எழுதிவரும் புகழ்பெற்ற நூல்கள், பன்மைவாதத்தின் ஆய்வுச் செழுமையை எடுத்துக் காட்டுகின்றன. அரசின் விரிவை விரும்புகின்ற அதிதீவிரவாதமாகிய பாசிசத்தின் கருத்துக்களுக்கும், அரசின் மறைவை விரும்பும் தீவிரவாதங்களாகிய அனார்க்கிஸம், சிண்டிக்கலிஸம், கம்யூனிசம் போன்றவற்றின் கருத்துக்களுக்கும் இடையில் ஒரு மிதவாதமாக விளங்கி அரசைச் சீர்ப்படுத்த முற்படுகின்ற பன்மைவாதத்தின் கருத்துக்கள், அரசியல் கோட்பாட்டிற்குப் புதியதோர் பரிணாமத்தை வழங்குகின்றன.

**உசாத்துணைகள்**

1. H.E. Cohen (1967): Recent theories of Sovereignty, 4th edition, (Chicago: Chicago University Press), p.85.

2. F.W. Coker (1964): Recent political Thought, 5th edition, (New York: Appleton Century Crofts), Chap. viii.

3. R.A. Dhal (1956): A Preface to Democratic Theory, (Chicago : Chicago University Press), pp.137, 140, 142 & 164.

4. F.H. Hinsley (1985): Sovereignty, (London : Cambridge University Press), pp. 219 & 224.

5. K.Hsiao (1957): Political Pluralism, 2nd edition, (New York : Harcourt Brace & Co.), pp.8, 248 - 249.

6. H.J.Laski (1955): A Grammar of Politics, 10th edition, (New Haven : Yale University Press), pp. 52 - 65.

7. R.M.MacIver (1956): Fhe Modern State, 2nd edition, (New York : Oxford University Press), pp.22 & 160 - 161.

* * * * *

**வெளிவந்துவிட்டது**

1. இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில் திட்டமிடல் செய்முறை ( Rs. 100/- )
2. சனநாயகம் என்றால் என்ன? ( Rs. 75/- )
3. சந்தைப் பொருளாதாரம் என்றால் என்ன? (Rs. 75/-)
4. பொருளாதாரக் கொள்கை ( Rs. 100/- )
5. அபிவிருத்தி மாதிரிகள் ( Rs. 100/- )
6. சனநாயக அரசின் மாதிரிகள் ( Rs. 100/- )
7. கிழக்கு ஆசியாவின் அற்புதம் ( Rs. 100/- )
8. சனநாயகச் சிந்தனைகள் ( Rs. 100/- )
9. பல்லினச் சமூகத்தில் சனநாயகம் ( Rs. 100/- )
10. பொருளாதாரச் சிந்தனைகள் ( Rs. 100/- )
11. சனநாயக நிறுவனங்கள் ( Rs. 100/- )

மேற்படி நூல்களைப் பெற விரும்புபவர்கள் மணிஓடரை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். மணிஓடர் **Newton Fernando** என்பவரின் பெயருக்கு **Havelock town (Colombo - 5)** தபாற்கந்தோரில் மாற்றக் கூடியதாக எடுக்கப்படல் வேண்டும்.

மணி ஒடர் அனுப்பவேண்டிய முகவரி:

**Newton Fernando**
**Publication / Communication division**
**Marga Institute**
**93/10, Dutugemunu Road**
**Colombo - 6**

# யாழ்ப்பாணத்துக் கலை கைவினை பற்றிய ஓர் அறிமுக ஆய்வு

**ஏ. என். கிருஷ்ணவேணி**

## அரிமுகம்

கலை மனிதனாற் படைக்கப்படுவது. மனிதப் பண்பாட்டின் வெளிப்பாடாகவும் அதன் உருவாக்கங்களாகவும் அமையும் கலைகள் மனிதனைப் பற்றிய ஓர் அறிகை முறையாகவும், சமூகப்பிரக்ஞையின் வெளிப்பாடாகவும் விளங்குகின்றன. இத்தகைய கலைவடிவங்கள் எவை? கைவினை வடிவங்கள் எவை? அவற்றின் உருவாக்கம், தொழில்நுட்பம், அவை ஒவ்வொன்றினதும் தனித்துவமான தன்மைகள் யாவை? என்பன போன்ற விடயங்களை அறிதல் வேண்டும். குறிப்பாக இலங்கையின் வடபகுதியாகிய யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வாழும் மக்களது பண்பாட்டை வெளிப்படுத்தி நிற்கும் கலை, கைவினைப் பொருட்கள் யாவற்றையும் கண்டுபிடித்து இனங்காணுதலையும் அவற்றை வெளிப்படுத்துதலையும் நோக்கமாகக் கொண்டது இக்கட்டுரை.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை இத்தகைய ஆய்வு இன்னும் முழுமையாக இடம்பெறவில்லை என்றே கூறவேண்டும். கலாநிதி. ஆனந்த குமாரசுவாமி அவர்களால் எழுதப்பட்ட இடைக்காலச் சிங்களக் கலை (Medeival Sinhalese Art) எனும் நூல் இலங்கையிற் சிங்கள மக்களது கலை, கைவினைப் பொருட்களை வகைப்படுத்தி அவற்றின் அணி அலங்கார வேலைப்பாடுகள், பயன்பாடு, அழகியற் கூறுகளை இந்தியக் கலைப்பாரம்பரியத்தை அடிப்படையாகக் கொண்டு விளங்கும் வகையில் எழுதப்பட்டுள்ளது. சிங்கள மக்களது பண்பாட்டில் இன்று பல்வேறு பொருட்கள் பாவனையில் இடம்பெற்ற போதும், அவை ஆனந்த குமாரசுவாமியின் வகைப்பாட்டிற்குள் இடம்பெறவில்லை. ஆனால் இத்தகைய ஒரு வகைப்பாட்டை மாதிரியாகக் கொண்டு யாழ்ப்பாணத்துக் கலை, கைவினைப் பொருட்கள் பற்றி மேற்கொண்ட ஓர் ஆய்வினையே இக்கட்டுரை வெளிப்படுத்துகிறது. கலாநிதி ஆனந்த குமாரசுவாமி அவர்களால் எடுத்துக் கூறப்பட்ட பல கைவினைப் பொருட்கள் யாழ்ப்பாண மக்களது பண்பாட்டில் இடம்பெறாமற் போய்விட்டமையையும் இங்கு குறிப்பிடுதல் வேண்டும். குறிப்பாக தந்தம், கொம்பு, மெழுகு போன்ற மூலப் பொருட்களைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட பல கைவினைப்பொருட்கள் சிங்கள மக்களது கைவினைத்திறன், அழகியல் உணர்வை வெளிப்படுத்துவனவாக உள்ளன. இத்தகைய பொருட்கள் யாழ்ப்பாணத்துக் கலைஞர்களினால் உருவாக்கப்படவில்லை என்றே கூறவேண்டும். அவர்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டில் தமக்குக் கிடைக்கக்கூடிய மூலப் பொருட்களைப் பயன்படுத்தியே அன்றாட வீட்டுப்பாவனைக்கு வேண்டிய பொருட்களையும், கோயிற் பாவனைக்கு வேண்டிய பொருட்களையும் உருவாக்கியுள்ளனர். யாழ்ப்பாணப் பண்பாட்டில் எமக்குக் கிடைக்கும் கலை, கைவினைப் பொருட்கள், அவை கோயிற் பாரம்பரியம் சார்ந்த கலை, கைவினைப் பொருட்களாக இருந்தாலும் சரி, வீட்டுப்பாவனைப் பொருட்களாக இருந்தாலும் சரி அவையாவும் யாழ்ப்பாணத்துக் கைவினைஞர்களினால் உருவாக்கப்பட்டவை எனக் கூறவும் முடியாது. ஏனெனில் இங்கு பாவனையில் உள்ள பொருட்களிற் பல இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்டவையாகவும், காலத்திற்குக் காலம் இலங்கைக்கு வந்த, வரவழைக்கப்பட்ட கைவினைஞர்களினால் உருவாக்கப்பட்டவையாகவும் இலங்கையின் ஏனைய பிரதேசங்களிற் குறிப்பாகக் கண்டியைச் சேர்ந்த கைவினைஞர்களினால் உருவாக்கப்பட்ட பொருட்களாகவும் காணப்படுகின்றன. இத்தகைய விடயங்களின் பின்புலத்தில் கலை, கைவினை பற்றிய பகுப்பாய்வு, அவற்றின் உருவாக்கம், சமய,சமூக பண்பாட்டு ரீதியாக அவை பெறும் முக்கியத்துவம், யாழ்ப்பாணத்தில் இக்கலைகளில் ஈடுபட்டுள்ள கைவினைக் கலைஞர்களின் சமூக அந்தஸ்து, தொழிற்திறன் போன்றவற்றை, அக் கைவினைக் கலைஞர்களைச் சந்தித்துப் பெற்றுக் கொண்ட தகவல்களின் அடிப்படையிலும், அவர்களது தொழில் முறைமை பொருட்களின் உருவாக்கம் ஆகியவற்றை நேரடியாக அவதானித்ததன் விளைவாகவும் பெற்றுக் கொண்ட அநுபவத்தின் அடிப்படையிலும் இக்கட்டுரை முன்வைக்கப்படுகின்றது.

## கலை, கைவினை பற்றிய பகுப்பாய்வு

கலை எனப்படுவது மனிதத்திறன் அல்லது மனித ஆற்றல் வழியாகப் படைக்கப்படுவது. ஆங்கிலத்தில் 'Art' என வழங்கப்படும் சொல்லின் தமிழ் பதமாகவே கலை எனும் சொல் பயன்படுத்தப்படுகின்றது. லத்தீன் மொழியில் இடம்பெறும் 'Ars' எனும் பதமே ஆங்கிலத்தில் 'Art' என அழைக்கப்படுகிறது. 'Ars' எனும் சொல் லத்தின் மொழியில் சிறப்புவகையான தொழிற் தேர்ச்சியினைக் குறித்து நிற்கிறது. தமிழிற் கலை எனும் சொல் மனிதத்திறன் (Human Skillness) வழியாக உருவாக்கப் பெறும் பொருட்களைச் சுட்டிநிற்பதுவும் குறிப்பிடத்தக்கது. சென்னைப் பல்கலைக்கழக ஆங்கில - தமிழ் அகராதியும் Art' - என்பதற்கு கலை, கலைத்திறன், கலைத்திறன் அமைந்த வேலைப்பாடு, கலைப்பொருள், அறிவார்ந்த திறமை, செயற்துறை நூலறிவு, விஞ்ஞானத் தொழிற்துறை, தொழில், கைவினை, தந்திரம், மந்திரசாலம் போன்ற பொருளைத் தருகிறது. இந்திய நூல்கள் கலைபற்றி விளக்குகையில், செயற்திறன் மிக்கனவும், சுவை பயக்க வல்லனவுமான படைப்புக்களே கலை என்று கூறுகின்றன. அவை கலைகள் அறுபத்து நான்கு என்று கூறுவதும் குறிப்பிடத்தக்கது. ஆனால் சில பொருட்கள் கலை என்ற பெயரினாலும், வேறுசில நுண்கலை (Fine Art) என்ற பெயரினாலும் அழைக்கப்படுகின்றன.

**ஏ.என். கிருஷ்ணவேணி**
B.A (Hons); M.A; M.Phil (Madras)
**விரிவுரையாளர், நுண்கலைத்துறை**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**


33829

கலை என்பது மனித ஆற்றல் வழியாகப் படைக்கப்பட்ட அனைத்துப் பொருட்களையும், அம்மி முதல் அம்மன் சிலை வரை, சிறிய கைக்குட்டை முதல் பெரிய தளவிரிப்புவரை யாவும் கலைகளாகவே கொள்ளப்படுகின்றன. கலைகளில் இருந்து நுண்கலைகள் எவ்வாறு வேறுபடுகின்றன, அவற்றின் இயல்புகள் யாவை, அவை நுண்கலைகளாகக் கொள்ளப்படுவதற்குரிய காரணங்கள் எவை என்பதனையும் அறிந்து கொள்ளுதல் வேண்டும். நுண்கலைகள் மிக நுட்பமாகச் செய்யப்படும் பொருட்களைக் குறித்து நிற்கிறது. அவை அழகு பளிச்செனப் புலப்படும் வகையில் மோடி செய்யப்பட்டவை. இத்தகைய பொருட்களின் உருவாக்கத்தில், அதனை ஆக்குவோன் அதன் பயன்பாட்டு நிலையுடன் மட்டும் நின்றுவிடாமல், அதற்கும் மேலே ஒருபடி சென்று, அதனை நுண்ணிதாக ஆக்கும் தன்மையும் உண்டு. இத்தகைய நுண்ணிதான ஆக்கத்தில் ஆக்குபவர் தனது கற்பனையையும், தான் அழகு என்று கருதுபவற்றையும், மற்றவர்கள் அழகு என்று கருதுபவற்றையும் அதனுட் செலுத்தி, தானே அதில் லயித்து, தானே அதில் ஈடுபட்டு அதனை உருவாக்குகிறார். அப்பொழுது அந்த ஆக்கத்தில் உருவமும் (Form), உள்ளாக்கமும் (Content) ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாத அளவிற்கு இணைத்து நிற்கும். இத்தகைய கலைப்படைப்புக்களே நுண்கலை என்று வழங்கப்படுகிறது. நுண்கலைகளாகக் கொள்ளப்படுபவை : கட்டடம், சிற்பம், ஓவியம், இசை, நடனம், நாடகம் போன்றனவே.

இந்த நுண்கலை வடிவங்களில் கட்டடம், சிற்பம், ஓவியம் ஆகிய மூன்றும் கட்புலக் கலைகள் (Visual Arts) ஆகவும், இசை, நடனம், நாடகம் போன்றவை ஆற்றுகைக் கலைகளாகவும் (Performing Arts) கொள்ளப்படுகின்றன.

அழகை வெளிப்படுத்துவதை முதன்மை நோக்கமாகக் கொண்ட நுண்கலை வடிவங்கள் மீளுருவாக்கம் செய்ய முடியாதவையாகவும், குறியீட்டுத்தன்மை கொண்டவையாகவும் உள்ளன.

கைவினைப்பொருட்கள் பெரும்பாலும் பயன்பாட்டு நோக்கத்திற்காகச் செய்யப்படும் பொருட்களாகவே காணப்படுகின்றன. அவை பயன்பாடு (Utility) கருதி மீண்டும் மீண்டும் உருவாக்கம் பெறுகின்றன. இக் கைவினைப் பொருட்களை அவற்றைச் செய்யப் பயன்படுத்தப்படும் மூலப் பொருட்களின் அடிப்படையில் வகைப்படுத்துவதே பொருத்தமானதாகும்.

1. **கல் வேலைப்பாடுகள்** - கட்டடம், சிற்பம், கல்லுபகரணங்கள்
2. **மர வேலைப்பாடுகள்** - கட்டடம், சிற்பம், தேர், மஞ்சம், சப்பறம், சகடை, வாகனம், மரத்தளபாடங்கள், மர உபகரணங்கள்.
3. **உலோக வேலைப்பாடுகள்** - சிற்பங்கள், ஆபரணங்கள், ஆயுதங்கள், அலங்காரப் பொருட்கள், பாவனைப்பொருட்கள்.
4. **மண் வேலைப்பாடுகள்** - கட்டடம், சுடுமண் சிற்பங்கள், மட்பாண்டங்கள், சாடிகள்
5. **பூ வேலைப்பாடுகள்** - சாந்துப்படி, தண்டிகை சப்பறம், மணவறை, பூச்செண்டு, பூமாலை
6. **மணி வேலைப்பாடுகள்** - கிரீடம், சப்பறம், மணவறை, அலங்காரப் பொருட்கள்
7. **பன்ன வேலைப்பாடுகள்** - அலங்காரப் பாயிளைப்பு, பெட்டி வகைகள், கடகம், கூடை வகைகள், நீத்துப்பெட்டி, அலங்காரப் பொருட்கள்
8. **ஆடைநெய்தல்** - நெசவுத்தொழில்
9. **சாயம் போடல்** - மேசை விரிப்புக்கள், திரைச்சீலைகள், கொடிச்சீலைகள், தோரணங்கள்
10. **தும்பினாலான வேலைப்பாடுகள்** - தும்புத்தடி, கால்மிதி தளவிரிப்பு

மேற்கூறப்பட்டவையில் மேல் எழுந்தவாரியாக கைவினைப் பொருட்களுக்குப் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களின் அடிப்படையில் யாழ்ப்பாணத்துக் கைவினைப் பொருட்களை அவற்றின் பயன்பாட்டு அடிப்படையில் கோயிற் பாரம்பரியம் சார்ந்தவை, வீட்டுப் பாவனைக்குரியவை என்று வேறுபடுத்தி, அவற்றின் தனித்துவமான பண்புகளை அறிந்து கொள்ளலாம். மேலும் வீட்டுப்பாவனைப் பொருட்களிலும்கூட சுவாமியறைப் பொருட்கள் சமயஞ்சார் கைவினைப் பொருட்களாகக் கொள்ளத் தக்கவை.

## வீட்டுப்பாவனைப் பொருட்கள்

### 1. தளபாடங்களும், தட்டுமுட்டுச்சாமான்களும் (Furniture and accessory furnishings)

மேசை, நாற்காலி, அலுமாரி, கட்டில், பெட்டகம், தைலப்பெட்டி, கோர்க்காலி, பந்தாயம், இரும்புப்பெட்டி, அலங்காரப் பொருட்கள் வைக்கும் அலுமாரி, சாய்மனைக் கதிரை போன்றவை.

### 2. சமையலறைத் தளபாடங்களும், பாவனைப் பொருட்களும்.

முக்காலி, பலகை, அரிவாள், துருவலை, குடம், செம்பு, மூக்குப் பேணி, கரண்டி, அகப்பை (Ladle), மத்து (Churner), அம்மி, குழவி, ஆட்டுக்கல், திரிகை, உரல், உலக்கை, சமையற் பாத்திரங்கள், அண்டாக்கள், பானை சட்டிகள், கூஜா, சாடிகள் பெட்டிகள், நீத்துப்பெட்டிகள், உறி, திருகணி போன்றவை.

### 3. சுவாமியறைப் பொருட்கள்

வழிபாட்டிற்குரிய படங்கள் அவற்றை வைப்பதற்கான மரச்சட்டங்கள், குத்துவிளக்குகள், நிறைகுடம், செம்பு, லோட்டா, பன்னீர்ச்செம்பு, சந்தனக்கும்பா, குங்குமச்சிமிழ், தட்டம், தாம்பாளம், தூபக்கால், ஊதுபத்திதாங்கி, விபூதிக் கொட்டு, தீபத் தட்டுக்கள், புராண நூல்கள் வைப்பதற்குப் பயன்படுத்தப்படும் புத்தகந்தாங்கி.

## கோயிற் பாவனைக்குரிய பொருட்கள்

சிற்பங்கள், கல், உலோக, மரச்சிற்பங்கள், தேர், மஞ்சம், சப்பறம், சகடை, வாகனங்கள், மரப்பலகைகள், புத்தகந்தாங்கி, மரக்கரண்டிகள், தட்டங்கள், தாம்பாளங்கள், தீபத்தட்டுக்கள், காளாஞ்சி, சாமரை, குடை, கொடி, ஆலவட்டம், திருவாச்சி, தண்டிகை, அடுக்கு விளக்குகள் உபசாரப் பொருட்கள் போன்றவை.

கைவினைப் பொருட்களை வீட்டுப் பாவனைப் பொருட்கள், கோயிற் பாவனைப் பொருட்களாகப் பாகுபடுத்தி அவற்றின் சமூக, பண்பாட்டு, அழகியல் ரீதியான பெறுமானங்களை அறிந்து கொள்ளல் அவசியமாகும்.

## கலையும் - பண்பாடும்

யாழ்ப்பாணத் தமிழ் மக்களது பாவனைப்பொருட்கள் யாவும் அவர்கள் காலங்காலமாக, பாரம்பரியமாகப் பயன்படுத்திவரும் பொருட்கள் என்ற வகையில் கலை வடிவங்களைப் போன்று அக்குறிப்பிட்ட பிரதேசத்தில் வாழும் மக்களது பண்பாட்டின் குறியீடாக விளங்குகின்றன. இப்பொருட்கள் அன்றாடப் பாவனைப் பொருட்களாக விளங்குவதுடன், அம்மக்களது வீட்டுச் சடங்குகள், சம்பிரதாயங்களின் வழியாகவும் உருவாக்கம் பெற்றவை, வடிவமைக்கப்பட்டவை என்பது அவற்றின் தனித்துவமான பண்பாகும். தமிழ் மக்களது, சடங்குகள் சம்பிரதாயங்கள் இன்றைவரை பேணப்பட்டு வருவதைப் பறைசாற்றி நிற்கும் பாவனைப் பொருட்களில் செம்பு முதன்மையான இடத்தைப் பெறுகிறது. ஒரு திருமணச்சடங்கில், உணவு பரிமாறப்படும் போது அக்குடும்பத்தில், அக்குடும்ப உறவினரில் வயது முதிர்ந்த ஒருவரிடம் செம்பில் நீர் கொடுக்கப்படுவதை இன்றும் காணலாம். நாகரீக வளர்ச்சியில் நாம் புல்வேறு பொருட்களைப் பயன்படுத்தினாலும் திருமணச் சடங்குகள் நடைபெறும் இடங்கள், தமிழர் பண்பாட்டிற்கு அந்நியப் பட்டவையாக இருந்தாலும் செம்பின் பயன்பாடு இற்றைவரை எமது மக்களின் பண்பாட்டில் பெறும் முக்கியத்துவம் அதன் உருவாக்கம் ஆகியவற்றை வெளிப்படுத்தி நிற்கிறது.

யாழ்ப்பாணத் தமிழர் பாரம்பரியத்தில், மங்கலச்சடங்குகளில் முக்கியத்துவம் பெறுவது பூப்புனித நீராட்டுச் சடங்காகும். இச்சடங்கில் பருவமடைந்த பெண்ணின் கையில் மரக்கொத்தில் நெல்நிரப்பி, காம்புச் சத்தகத்தைத் தலைகீழாகக்குத்தி அதன் காம்பில் எலுமிச்சைப் பழமொன்றைக் குற்றிக் கொடுப்பது மங்கலச் சடங்கின் ஓர் அம்சமாகும். இதனை நிறைநாழி என்று அழைப்பர். மக்களது வாழ்வியலோடு இணைந்த பண்பாட்டின் வழிவந்த பாவனைப் பொருட்கள் இன்னும் பயன்பாட்டில் இடம்பெறுகின்றமையை இச்சடங்குகள் புலப்படுடத்தி நிற்கின்றன.

ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் வாழும் மக்கட் கூட்டத்தினரின் பண்பாடு, மதம் பற்றி அறிந்து கொள்வதற்கு கலைகள் மட்டுமல்ல மனிதனால் உருவாக்கப்படும் கைவினைப் பொருட்களும் பெரிதும் உதவுகின்றன. மனித வாழ்வின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், அவ்வப் பிரதேசங்களிற் கிடைக்கும் மூலப்பொருட்களில் வடிவமைக்கப்பட்ட பொருட்களே இக்கைவினைப் பொருட்கள். கைவினைக்கலை கைத்தொழில் உற்பத்திமுறையாகவும், கலைத்துவமான வேலைப்பாடாகவும் விளங்குகின்றது. தொழில்திறன் மிக்க ஒரு கைவினைக் கலைஞனது கையில் இருந்து சிருஷ்டிக்கப்படும் ஒரு படைப்பு கலைப்படைப்பாகவே பரிணமிக்கிறது. ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியிற் பயன்பாட்டுப் பொருளாக இருந்த ஒரு செம்பு அல்லது ஒரு தாம்பாளம் இன்னொரு காலப்பகுதியில், அதன் கலைத்துவமான வேலைப்பாடு கருதி கலைப்படைப்பாகவும் போற்றப்படலாம். எனவே கலை, கைவினை என்ற பாகுபாடு கலை பற்றிய ஆய்வுப்பரப்பை மேலும் அகலப்படுத்தும் ஓர் முயற்சியே.

## முடிவுரை

கைவினைக் கலைபற்றிய ஆய்வானது மக்களது பண்பாட்டை அறியும் திறவுகோலாகவே விளங்குகிறது. சமூகத்தில் கைவினைக் கலை வரலாற்றை நோக்கும் போது குறிப்பிட்ட சில தொழிற்திறன்களும், தொழில்நுட்பங்களும், குறிப்பிட்ட சில குடும்பங்களின் வாயிலாகப் பரம்பரை பரம்பரையாக வளர்க்கப்பட்டு வருகிறது. இன்றும் கூட இத்தகைய தொழிற் பயிற்சியானது தந்தைவழி தனயன் பெறுவதாகவே உள்ளது. தொழிற் துறையில் இயந்திர மயமாக்கலுடன், கைவினைக் கலையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டபோதும், இற்றைவரை சிலபொருட்கள் இயந்திர உற்பத்தியைவிட கலைத்துவத்திற் சிறப்புடைய ஸ்கவினைத் திறன் மிக்க பொருட்களாக விளங்குகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

* * * * *

21 ஆம் பக்கத் தொடர்ச்சி ....

Ramanujam, P. (1986): 'Supply Functions of Perennial Crops Re-Examined: The Case of Tea', Upanathi (The Journal of the Sri Lanka Association of Economists) 1(2): 157-96.

Rasaputra, W. (1986): 'Public Policy: An Assessment of the Sri Lanka Experience' (mimeo). Helsinki: World Institute for development Economics Research.

Ravallion, M. (1986):'Growth and Equity in Sri Lanka: A Comment', Working Paper in Trade and Development 86/12. Canberra: Australian National University.

Sen, A.K. (1981): 'Public Action and the Quality of Life in Developing Countries', Oxford Bulletin of Economics and Statistics 43(4): 287-319.

Sen, A.K. (1985) :Commodities and Capabilities. Amsterdam: North-Holland.

Sen, A.K. (1988): 'Sri Lanka's Achievements: How and When?' in T.N. Srinivasan and P.K.Bardhan (eds) Rural Poverty in South Asia, PP. 549-56. New York: Columbia University Press.

Snodgrass, D.N. (1966): Ceylon: An Export Economy in Transition. Homewood, III: Richard D. Irwin.

Srinivasan, T.N. (1993): 'Development Economics: then and Now', paper presented at the Symposium on Economic Reform in the Developing Countries: Issues for the 1990s. Washington DC: World Bank.

Streeten. P., S.J.Burki, M. Haq, N. Hicks and F.Stewart (1981): First Things First: Meeting Basic Needs in Developing Countries. New York: Oxford University Press.

UNDP (1991): Human Development Report 1991. Oxford University Press.

World Bank (1978): 'The Relationship between basic Needs to Growth. Income distribution and Employment: The Case of Sri Lanka' (mimco). Washington DC, World Bank.

தமிழாக்கம் எஸ். அன்ரனி நோபேட்

Printed By Unie Arts (Pvt) Ltd.